# தமிழர் பிறந்தகம்



க.ப.அறவாணன்

# THE ORIGIN OF THE TAMILS

PROF. K. P. ARAVAANAN

# தமிழர் பிறந்தகம்

அறிவியல் தமிழராகும்
நெடுங்காலத் தோழரும்
மொழி, இனப் பற்றாளரும் ஆகிய
[illegible] முனைவர். ச. [illegible]
வாழ்த்துகளுடன்

அறவாணன்
21.9.03


**க. ப. அறவாணன்**

முன்னைத் துணைவேந்தர்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்



**விற்பனை உரிமை**

**தாயறம்**

11/3, வயலூர் நெடுஞ்சாலை

திருச்சிராப்பள்ளி - 620 017

✆ 95431 - 2770024

Title : The Origin of the Tamils

First Edition : 9-8-2003

Copy Right : Dr. K. P. ARAVAANAN
Former Vice - chancellor
Tamil koottam
II second street,
Mohan Nagar,
Pondicherry - 605 005
✆ : 95 413 - 2273795

Selling Rights : Thaayaram
11/3, Vayalur Salai
Thiruchirappalli - 620 017
✆ . 95 431 - 2770024

Pages : 192

Price : Rs. 100

---

Typeset by : K.P.Senthamarai Kannan
11/1, Vayalur Main Road
Thiruchirappalli - 620 017.
✆ · 95431 - 2771862

Printed by · United Bind Graphics
101-D, Rayapettai High Road
Mylapore, Chennai - 600 004
✆ 9544 - 24984693, 24661807

# எழுதுவது எல்லாம் எழுத்து அன்று; என்றும் நிற்பதே எழுத்து

ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன் 1984-இல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அறக்கட்டளைக்காக உருவாக்கப்பட்ட "தமிழரின் பிறந்தகம்" புதிய வடிவிலும், புதிய செய்திகளுடனும் உங்கள் கைகளில் தவழுகிறது

அரும்பாடுபட்டு உருவாக்கிய இந்நூலிற்கு அந்நாளைய தமிழக அரசு 1984-இல் வெளிவந்த சிறந்த 'மானுடவியல் நூல்' எனத் தெரிவு செய்து முதற்பரிசை வழங்கிப் பாராட்டியது.

தமிழர், அயல் நாடுகளிலிருந்து தமிழக நிலம் போந்த குடியேறிகள் அல்லர்; இந்தத் தமிழ் மண்ணின் மைந்தர் என்பதுதான் இந்நூல் ஆராய்ந்து முடிவுரைக்கும் கருதுகோள். இம்முடிவு அடையப்பட்ட தன்று நில இயல், தொல்பொருள் இயல், மானுடவியல், வரலாற்றியல் ஆதாரங்கள் அனைத்தையும் தேடித் துருவிப் படித்து ஒப்பிட்டு எடுக்கப்பட்ட ஒருதலைச் சார்பற்ற முடிவு.

இந்நூல் உருவாகக் காரணர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முன்னை இயக்குநரும், என் மிகுந்த அன்பிற்குரிய பேராசிரியரும், உழைப்பில் தேனீயுமான ச. வே. சுப்பிரமணியம் ஆவார்.

இந்நூலை உருவாக்கும்போது நான் சென்னை இலயோலா கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராக இருந்தேன். நான் பணியாற்றிய கல்வி

நிறுவனங்களிலேயே நான் மிக விரும்பும் நிறுவனம் அது அப்போதைய கல்லூரி முதல்வர் குரியாகோசு அடிகளார் என்னிடம் இருந்த திறன் அறிந்து என்னை மதித்தவர்; ஊக்கப்படுத்தியவர்.

என்னிடம் பயின்ற இலயோலா கல்லூரி மாணாக்கர்களும் என்றும் நினைக்கத்தக்கவர்கள்; போட்ட கோட்டைத் தாண்டமாட்டார்கள்.

நான் எழுதிய நூல்களுள் நானே நேசிக்கும் நூல்கள் சில உண்டு அவற்றுள் ஒன்று '**தமிழரின் பிறந்தகம்**'. என் கல்விக் கடமைகளில் காலத்தை வறிதாகக் கடத்தாமல் பெரிதாகப் போற்றியுள்ளேன் என்பதற்கு இந்நூலும் ஒரு சான்று. கல்லூரிப் பணியில் இருந்து கொண்டே அரியன ஆற்ற முடியும் என்பதற்கும் இது சான்று.

காசு நிற்காது; கட்டிய வீடு நிற்காது; உதவி பெற்ற உறவும் நிற்காது. கலைஞனின் படைப்பு நிற்கும், அறிஞனின் அறிவு நிற்கும்; எழுத்து நிற்கும் நிற்க வேண்டும். நிற்கும் படியாக அவன் படைப்பு இருத்தல் வேண்டும்.

இந்நூல் இந்த உருவில், உங்கள் கைகளில் தவழக் காரணர் திருச்சிராப்பள்ளி பிஷப் ஈபர் கல்லூரித் தமிழ்த் துறை விரிவுரையாளர் திரு. இரா. அறவேந்தன் ஆவார். மெய்ப்புப் பார்த்தலில் துணைபுரிந்தவர் இளைஞர் திருமா. அன்புச் செல்வன் ஆவார். இவர்களுக்கும் உதவிய அனைவர்க்கும் என் நன்றிகள்.

*9-8-2003*
*அறுபத்து*
*மூன்றாம் பிறந்தநாள்*

*அன்பு*
***க. ப. அறவாணன்***

# உள்ளே

எழுதுவது எல்லாம் எழுத்து அன்று, என்றும் நிற்பதே எழுத்து

விருப்பம் உழைப்பு விழுப்பம்

பக்கம்

## 1. தமிழ், தமிழர் எனும் பெயர்கள் 19

1. மொழி வழங்கும் நாட்டின் பெயர் 19
2. மக்கள் பெயர் மொழிக்கு ஆவது 20
3 தன்மை பற்றிப் பெயர் பெறுவன 20
4 திசை அடிப்படையில் பெயர் பெறுவன 20
5 இடம் பற்றிப் பெயர் பெறுவன 20
6. நூல் அடிப்படையில் பெயர் பெறுவன 20

## 2. தமிழர் என்ற பெயர் 22

## 3. தமிழ்நாடு என்ற பெயர் 23

3.1. தமிழகத்தின் வட எல்லை 23
3.11. வேங்கடத்தின் இயற்கை அமைப்பு 24
3 1.2 திருப்பதி என்னும் வேங்கடம் புகழ் எய்தியது பிற்காலமே 26
3.1 3. வேங்கடம் - பெயர்க்காரணம் 28
3 1.4. வேங்கடத்தை ஆண்ட வேந்தர்கள் 31
1 மாவண்புல்லி 31
2. திரையன் 33
3. ஆதனுங்கன் 34
3.2.எருமை நாடு அல்லது மைசூர் மாநிலம் 34
3.3 செந்தமிழ் நாடாம் குடநாடு 36
3.4 வேங்கட எல்லை கிருட்டிணை ஆறுவரை 37
3.5.பன்னிரு நாடுகளும் அவற்றின் இருப்பிடமும் 39
வேணாடு 40
குட்டநாடு 41
கற்காநாடு 41
குடநாடு 41
பூழிநாடு 41
தென்பாண்டி நாடு 41
பாண்டி நாடு 41
பன்றிநாடு 42

புனல்நாடு 42

அருவாநாடு 42

அருவா வடதலை நாடு 42

சீதநாடு 42

மலாடு 43

3.6.மொழிவழிச் சான்றுகள் 43

## 4. தமிழர் இனம் என்ற பெயர் 47

4.1. இனத்தை அறிவதற்குரிய அடையாளங்கள் 47

4.1.1. நீக்ரோய்ட் இனம் 50

4 1 2. காகேசிய இனம் 50

4 1 3 மங்கோலிய இனம் 51

4.2 கலப்பு ஏற்பட்டதன் காரணம் 52

4 2.1 நாயர் திருமண முறை 53

4.2.2. மருமக்கள் தாய முறை 54

## 5. தமிழர் பிறந்தகம் பற்றிய கொள்கைகள் 57

5.1. குமரிக் கண்டததினர் 57

5.2.வடஇந்தியாவிலிருந்து வந்தவர் 58

5 3 நடு ஆசியாவிலிருந்து வந்தவர் 58

5.4 மேற்கு ஆசியப் பகுதியினர் 58

5.5 நடுநிலக் கடல் பகுதியினர் 61

5.6 ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவர் 62

5.6.1 திராவிட ஆப்பிரிக்கத் தொடர்புகள் 63

5.6.1.1.தொல்லியல் சான்றுகள் 69

1. சிற்பங்கள் 70

2 வெண்கலப் படிமங்கள் 70

3. வெண்கலப் படிமம் செய்யும் முறை 70

4. மெறோ கண்டு பிடிப்புகள் 71

5. நடுகல் 73

5.6.1 2.மாணிட இயல் சான்றுகள் 78

1. தாய்த் தெய்வ வழிபாடு 79

2. மருமக்கள் தாயம் 79

3. முருக வழிபாடு 80

4. நாக வழிபாடு 80

5. பல்லாங்குழி ஆட்டம் 82

6. கும்மியாட்டம் 83

7. கோலாட்டம் 83

8. குடவோலை முறை 84
9 கண்ணன் கதை 85
10 மீன் சின்னம் 90
5 7. ஆஸ்திரேலியப் பழங்குடியினர் 92
1 சீப்பு அன்பளிப்பு 93
2. முன்பல் உடைத்துக் கொள்ளுதல் 93
3. சாதிப் பிரிவு 94
4 நாகமும் ஞாயிறும் குலக்குறியீடாதல் 94
5 ஆஸ்த்ராலாய்ட் எலும்புக் கூடுகள் 95
6. திருமணத்துக்கு முற்பட்ட காலம் 95
7. ஆடும் பெண் 96
8. தாய்மாமன் தலைமை 96
9. விருந்து புரத்தல் 96
10 மாமன் - அத்தை மகளை மணந்து கொள்ளுதல் 97
11 ஓவிய ஒற்றுமை 97
12. ஒத்த கற்கருவிகள் 97
13 பூமராங் என்ற வளைதடி 98
14. குருதிக் குழு ஆராய்ச்சி 98
15. மண்டையோட்டு ஆய்வு 99
16. ஆஸ்திரேலியப் பழங்குடியினர்தம் மொழியும், தமிழும் 99
17 ஆஸ்திரேலியாவைக் கண்டுபிடித்தவர் தமிழர்? 100
5 8. கடல் வழியாக வந்தவர் 102
5.8 1. எகிப்தில் கிடைத்த கல்வெட்டு 103
5 8 2. கடல் வழிக் குடி பெயர்வு 103
1 கடல் கண்டு அஞ்சியது 105
2 நெய்தலே சோகம் 105
3 கடல் வழி நெடும் பிரிவு 105
4. கடற்படை இன்மை 106
5 கடல் பிரிவு குற்றமாகக் கருதப்பட்டமை 106

## 6. தமிழர் பிறந்தகம் பற்றிய பலவேறு கொள்கைகள் - ஓர் ஆய்வு 107

6.1. தமிழர் தமிழகத்தைப் பிறந்தகமாகக் கொள்ளாதவர் 107
1. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட சான்றின்மை 107
2. மனித முன்னேற்றம் எலும்புக் கூடுகள் தமிழகத்தில் கிடைக்காமை 108
3. செம்பொன் காலம் இன்மை 108

4 தொல் பழம் எழுத்து முத்திரைகள் இன்மை 108
5 வடக்கிருந்து தெற்கு நோக்கிய வரவு 109
6 சிந்துவெளி நாகரிக இருப்பிடம் 109
7 பிராகுவி - பேசப்படும் இடம் 109
8 வட இந்தியத் திராவிட மொழிகள் 109
9 பழங் கற்காலக் கருவிகள் தெற்கில் கிட்டாமை 110
10 மேற்காசிய நடுநிலக்கடல் நாடுகளோடு ஒற்றுமை 110
11 தமிழர் - ஆஸ்திரேலியப் பழங்குடியை ஒத்திருத்தல் 110
6 2 இந்தியாவுக்கு அப்பாலிருந்து வந்தவர் அல்லர் தமிழர் 111
1 உலக மக்கள் அனைவரும் பிறந்த இடம் ஒன்று 111
2 நிடுநிலக் கடல் - நெடுந்தெலைவு 112
3 தட்ப வெப்ப வேறுபாடு 113
4 தமிழர்க்குத் தாயக உணர்வு மிகுதி 114
5 சில வரலாற்று நிகழ்ச்சிகள் 114
6 3.வட இந்தியாவிலிருந்து தென் இந்தியாவுக்கு வந்தவரா தமிழர்? 116
6 3 1 சிந்துவெளி திராவிடர்தம் தொல் இடம் 116
1. தமிழிலக்கியச் சான்றின்மை 116
2. சிந்து ஆறு பற்றித் தமிழிலக்கியம் பேசாமை 116
3 அயற்புலத்தார் என்ற குறிப்பின்மை 116
4 குளிர்காலப் பயிர் பற்றிய குறிப்பின்மை 117
5 தமிழ்த் திசைப் பெயாகள் வடமேற்கு இந்தியாவிற்குப் பொருந்தாமை 117
6 மழை தரும் கொண்டல் 118
7 வடதிசை பற்றித் தமிழர் கருத்துகள் 119
8 தென்திசை பற்றி வடவர் - தமிழர் கருத்துகள் 119
9. தென்னையின் தோற்றம் 120
தென்னை - பெயர் விளக்கம் 121
தென்னையின் காலம் 121
6.3 2. சிந்துவெளியில இருந்து வந்தவர் 121
1. தமிழகத்தில் சிந்துவெளிக் கட்டடத் தொடர்ச்சி இல்லாமை 123
2 சிந்துவெளிக் குளியல் அறை தமிழகத்தில் இல்லாமை 123
3. சாய்க்கடை அமைப்பு 124
4. மக்கள் முத்தர நிலை 125

6 4.தமிழரின் பிறந்தகம் தமிழகமே 126

1 தெற்கும் வடக்கும் 126
2. உத்தரப்பிரதேசத்தில் மீனக் கொடி 127
3 கிள்ளி குடியினர் 127
4 சோழர் - சோடர் 128
5 போண்டோ பழங்குடியினர் 128
6 வட இந்தியாவில் வாழ் கூய் என்ற திராவிடப் பழங்குடி 129
7 வடபுலம் வாழ் குருக் என்ற பழங்குடியினர் 129
8. சோவியத் அறிஞர் கருத்து 129
9 பிராகுவி பிறந்தகம் 130
10 திசைப் பெயர்களின் பொருத்தம் 130
11 நாகர் வரலாறு 131
1. நாகப்பெயர் பெற்ற புலவர்கள் 132
2 நாகர் பெயரில் ஊர்கள் 133
3. பாம்படம் 134
12 தமிழக அகழ்வாய்வு முடிவுகள் 135
13. வளை நா (ழகர) ஒலிவட்டம் 136

## 7. குமரிக் கண்டம் 139

7.1 குமரிமுனைக் கள ஆய்வு 141
71.1. நாட்டுப்புற இலக்கியச்சான்று 142
71.2. மேய்ப்பு நிலங்கள் 142
7.13 நாடோடிக் கதை 142
714. கல்லா? கட்டடமா? 142
71.5. சரவணப் பாறை 142
7.16. குமரியாறும், பஃறுளியாறும் 143
71.7. நன்னீர் ஊற்றுகள் 143
71.8 கடல் நடுவே தெரியும் கதவம் 144
71.9. இடிந்த கரையா? இழந்த கரையா? 144
71.10. ஏடுகளும், பிறவும் 144
7 2.குமரிக்கண்டம் அழிந்தமை 145
7 2.1 உயிரியல் ஒற்றுமைகள் 145
7.2 2. குமரியில் நாகரிக மாந்தர் 145
7.2.3. விடுபட்ட உயிரினம் 146
7.2.4. முக்கண்ட இணைவுப் பிரிவும் 146
7.2.5. தமிழ் இலக்கியச் சான்றுகள் 146
7 2 6. புதிய சான்றுகள் 147

1. இந்தியாவில் 147
2 தெலுங்கு வேளமர்களின் வரலாறு 147
3. சந்தால் பழங்குடி மக்கள் 148
4. பில்மக்கள் நம்பிக்கை 148
5. திரைவழி வந்த இனம் 149
6. நேபாளில் குமரி வழிபாடு 150
7 இருளர் நம்பிக்கை 152
8 தமிழ்ச்சொல் வழக்காறு 152
7.2.7 அயல்நாட்டுச் சான்று 153
1. எதியோப்பியா 153
2 சூடான் 153
3 குமரித்தீவுகள் 154
4 கீல்வா 156
5 செனகால் 156
6. ஆஸ்திரேலியா 157
7 பிஜித்தீவு 158
8 சுமத்ரா 158
9 இந்தோ - சீனா - கம்போச்சியா 158
10. இலங்கை 159
இராஜாவழியில் வரும் செய்தியாவது 159
மகாவம்சம் காட்டுவது 159
7.2 8 கடல்கோள் வரைபடம் 160

## 8. தமிழ் இனம் தோன்றிப் பரவிய வரலாறு 167

8.1. திராவிடர் கறுப்பு நிறத்தினர் 168
1. தலைமுடி 168
2. கண் 169
3. உதடுகள் 169
4 கொங்கைகள் 169
5. உடல் நிறம் 169
8.2 எகிப்தியச் சுருளேட்டில் பாம்பரசன் வரலாறு 171
8.3. மணிமேகலையில் இடம் பெற்றுள்ள
சாதுவன் வரலாறு 172
8.4. சிந்துவெளி நாகரிகம் 175
8 5. சிந்துவெளிக்கு அப்பால் 176

## 9. பின் இணைப்புகள்

முதன்மை நூற்பட்டியல் 179
பொருளடைவு 184

# விருப்பம் உழைப்பு விழுப்பம்

வரலாற்றுப் பழைமையும் பெருமையும், இலக்கியப் பழைமை-யும் பெருமையும், பழக்கவழக்கப் பண்பாட்டுப் பழமையும் பெருமையும், பெற்ற இனம் - தமிழர் இனம். எனினும், இப்பெருமைக்கு உரியதாக இன்று இவ்வினம் விளங்குகிறதா என்பது வினாவுக்கு உரியதாக உள்ளது.

தமிழகத்தில் மட்டும் அன்றி இலங்கை, மலேசியா, மொரிசியசு, தென் ஆப்பிரிக்கா முதலான நாடுகளிலும், சிங்கப்பூர், இலண்டன், பாரிசு முதலான நகரங்களிலும் வாழும் தமிழ் இனம், நிகழ்காலப் பெருமை எதுவும் இன்றி இருப்பதால் தமிழ் இனத்தின் பழங்காலப் பெருமையும், பழைமையும் ஐயத்திற்கு உள்ளாகி விட்டன. இதற்கான காரணங்கள் அறிவியல் பார்வையில் ஆராயப்படவேண்டும்.

பொதுவாக, பழம்பெருமை பெற்றிருந்த உயர் இனங்கள், தற்போது, தாழ்ந்து, வீழ்ந்து கிடக்கின்றன. உலகத்தையே ஆட்டிப் படைத்த உரோம இனம் இன்று ஐரோப்பாவில் முன்னணி இனமாக இல்லை. இத்தாலியர் (ரோமானியர்) இன்று, ஜெர்மனி, பிரான்சு, போன்ற பக்க நாடுகளுக்குக் கூலிகளாகச் சென்று பிழைக்கின்-றனர். நாகரிகத்துக்கு உரிமை படைத்த எகிப்தியர் தற்போது தவித்துக்கொண்டிருக்கின்றனர். பாபிலோனிய, சுமேரிய, மெசபடோமிய சிந்துவெளி நாகரிகங்களைத் தோற்றுவித்தவர்களை அந்த மண்ணிலிருந்து (பெரும்பாலும்) விரட்டி விட்டுச் செமித்திய இனத்தினரான இசுலாமியர் கைக்கொண்டு விட்டனர்.

பழைய பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும் உரியவரான சீனரும், யூதரும் தற்போது விதிவிலக்காக ஓரளவு உலகில் உயர்ந்து நிற்கின்றனர். தமிழர் மட்டுமே பேரளவு, தம் பெருமையை இழந்து தாயகங்களில் நிற்பதுடன், வெளிநாடுகளிலும் இழந்து வாடுகின்றனர். சீனர், யூதரைப் போன்று அன்றித் தம் மொழி,

இனப் பண்பாட்டு அடையாளங்களை அங்கங்குக் காப்பாற்றத் தவறி, அங்காங்கு உள்ள அரசியல், ஆதிக்கப் பெரும்பான்மையான சமூகத்தைச் சார்ந்தும், தம் பண்பாட்டு அடையாளங்களை இழந்தும் தமிழர் துன்புறுகின்றனர். தம்மைத் தமிழர் என அடையாளங் காட்டத் தயங்கும் தமிழரே மிகுதி. 'இந்தியராகவும்', ஸ்ரீலங்காவின ராகவும், மலேயர்களாகவும், ஆப்பிரிக்கர்களாகவும், ஐரோப்பியர் களாகவும், நடப்போரே அல்லது நடிப்போரே மிகுதி. இதற்கான காரணங்கள் எண்ணத் தகுந்தன.

தமிழர்தம் வரலாறு ஒரு பக்கம் பெருமை உடையது. மறு பக்கம் சிறுமையும் உடையது. அதனை அறிந்து சிறுமைகளை அகற்றிக் கொண்டால் அன்றித் தமிழின வருங்காலம் சிறப்புற அமையாது. தமிழர் கங்கைவரை சென்றதாகவும்; இமய நெற்றியில் தம் சின்னங்களைப் பொறித்ததாகவும், இலக்கியங்களில் பேசிடி னும், தமிழர் வடபுலத்தை வென்று ஆண்டதற்கான கண்கூடான சான்றுகள் இன்றுவரை வட இந்தியாவில் கிடைக்கப்பெற வில்லை. மாறாக, மாவீரர் வர்த்தமானரை நினைவுபடுத்தும் சைன சமயச் சிலைகள், கோயில்கள், கல்வெட்டுகள், சித்தார்த்தர் புத்த ரையும், புத்த சமயத்தையும் நினைவுறுத்தும் சிலைகள், கற்றூண் கள், கல் எழுத்துகள், அசோக மன்னனையும், மௌரிய வேந்தர்களை யும், தில்லி நகர் இசுலாமியப் பேரரசர்களையும், அவர் தம் தென்புல நீட்சிகளையும் காட்டும் சின்னங்கள் ஆயிரக்கணக்கில் தென்னக ஊர்களிலும், இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் பரந்து கிடக் கின்றன. இராமாயண, பாரத வடபுலக் கதைகளுக்குத் தென்னகம் எங்கும் கோயில்கள், பெயர்கள், விழாக்கள் இன்னபிற! தமிழர்தம் தேசிய சமயம் மறைக்கப்பட்டு அதன் கல்லறைமேல் எழுப்பப்பட்ட வேறு வேறு சமயங்கள்! சங்க காலத் தமிழ் மன்னர் தம் வீழ்ச்சிக்குப் பிறகு ஐரோப்பியர்தம் வரவுக்கு முன்பு வரை, தனித்தமிழர் தலை யெடுத்ததற்கான சான்று ஒன்றிரண்டுதான். இராசராச, இராசேந்திர சோழ மன்னர்தம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் எழுச்சி

ஒன்றே, பொன் எழுத்தால் பொறிக்கத்தக்கது. அதுவும் தமிழ் எழுச்சியா என்பது வினாவிற் குரியது.

1947-இல் சுதந்தரம் பெற்ற போதும், 1950இல் அரசியல் சாசனம் உருவாகிக் குடியரசு ஆனபோதும், தமிழர் தமக்குரிய மொழி நலன்களையும் இன நலன்களையும் அரசியல் சட்டப்படி காப்பாற்றிக் கொள்ள வில்லை. ஒவ்வொரு நாடும் சுதந்தரம் பெறும் போது அந்தந்த நாடுகளில் உள்ள மொழிச் சிறுபான்மையினர் தம் உரிமைகளைக் காத்துக் கொண்டது சுதந்தரம் பெற்ற உலக நாடுகளின் வரலாறு.

தமிழர் தாம் சிறந்த பிறப்பினர் என்பதைவிடத் தம்மினும் வெள்ளையர், சீனர் ஆகியோர் சிறந்த பிறப்பினர் என்று நம்பினர்; நம்புகின்றனர். தம்மொழியைக் காட்டினும் ஆங்கிலம், பிரஞ்சு, சீனம் ஆகியவை சிறந்தவை என்று நம்பினர்; நம்புகின்றனர். அவர் தம் பண்பாட்டு, நாகரிகமே சிறந்தது என்று நம்பினர்; நம்புகின்றனர். அனைத்திற்கும் காரணம் தமிழரிடம் உள்ள தாழ்வு மனப்பான்மையே ஆகும். பல தலைமுறை தலைமுறையாகத் தாழ்ந்து கிடந்த இனம் என்பதால் பிற இனம், மொழி, பண்பாடு ஆகியன உயர்வானவை என்று நம்புகின்றனர். எனவே தான், தமிழ் தோன்றிய நாட்டிலும், தமிழர் வாழும் நாடுகளிலும் தமிழ், கல்வி மொழியாகவும் இல்லை; அரசியல் ஆட்சி மொழியாகவும் இல்லை; இறைமொழியாகவும் இல்லை.

சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் எதிர் நிற்காமல் வளைந்து போகும் நாணல் இனம் தமிழ் இனம். போராட்டம், எதிர்ப்பு ஆகியன வரும்போது எதிர்நிற்கும் துணிவு பொதுவாகத் தமிழரிடம் இல்லை.

தமிழர், கட்சி, சாதி, மதம் இவற்றால் பிளவுண்டு கிடக்கின்றனர். மொழி நலம், இன நலம் ஆகியவற்றை விடத் தன் நலம் பெரிது என்று கருதுகின்றனர். தமிழ் நலத்தைவிடத் தம் நலமே பெரிது எனப் போற்றுகின்றனர்.

தலை ஆடு போனால் எல்லா ஆடும், பின் ஓடும் ஆட்டு இயல்பு தமிழர் வீட்டு இயல்பாகவும் ஆகி விட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக, அரசியல், சமூக, பொருளாதார நடப்புகளை ஆய்ந்து அறிந்து வருங்காலத் தமிழ் நிலை, தமிழ் இன நிலை, தமிழ் நாட்டு நிலை எனத் தொலை நோக்கோடு பார்க்கும், வருமுன் அறிதிறன், வருமுன் காத்துக் கொள்ளும் செயல்திறன் தமிழரிடம் குறைவே.

இந்நிலையில் இந்திய சுதந்தர இயக்கத்தில் இறவாத தமிழ் உணர்வை இழவாமல் காத்துத் தமிழரையும் காத்தவருள் தலைமையாகக் கருதத் தக்கவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் ஆவார்கள்.

இந்திய தேசியக் கடலுள் தமிழ்த் தேசியப் பெருங்காயத்தைக் கரைத்து விடாமல் இந்தியத் தேசியமும் தமிழ்த் தேசியமும் தமிழரின் இரட்டைக் கண்கள் என்று எடுத்துக்காட்டி, எடுத்துக்காட்டாகவே வாழ்ந்தவர் சிலம்புச் செல்வர். எனவேதான் அவர் பார்வை - எங்கும், எதிலும் தமிழ்ப் பார்வையாக, தமிழர் பார்வையாக இருந்தது; இருக்கிறது, 'சுதந்திரப் போரில் தமிழரின் பங்கு' என்று அவரைப் புது நூல் புனைய வைத்தது. மொழிக்கும், இனத்துக்கும் காந்திய ம.பொ.சி. எழுதியவை கல் எழுத்துகளாகும். அவர் எழுத்துகளின் நெஞ்சக்குவை தமிழும் தமிழரும்தான். ஆகவேதான், சிலம்புச் செல்வர் பெயரில் அமைக்கப்பட்ட அறக்கொடைக்குத் தமிழ் இனத்தின் பிறந்தகம் பற்றிய சிக்கலை ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்ளுமாறு பணித்தார்கள் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியம் அவர்கள்.

தமிழரின் பிறந்தகம் பற்றிய அனைத்துக் கருத்துகளும் ஆராயப்பட்டுச் சில புதிய கருத்துகளும் புதிய பார்வைகளும், புதிய செய்திகளும் இவ்வாராய்ச்சியில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. இன்று உலகெல்லாம் பரவிக் கிடக்கும் தமிழர் வாழ்வில் மண்டிக்

கிடக்கும் சிக்கல்களுக்கு மூலங்கள் எவை என்பதை இவ்வாராய்ச்சி தொட்டுக் காட்டுகிறது.

1. போர்க்குணம் இன்மை
2. தாழ்வு மனப்பான்மை
3. அயலாரைக் கண்மூடி வரவேற்றுப் போற்றுகின்றமை
4. தொலை நோக்கு இன்மை

என்ற இவை நான்கும் ஆதிக்குறையாக அமைந்து அவரை நூற்றாண்டு நூற்றாண்டாகத் தொடர்ந்து சீரழித்து வருகின்றன. இவற்றை அகற்றி அப்புறப்படுத்தினால் அன்றிச் சிலம்புச் செல்வர் கனவு காணும் தமிழர் உலகம் உருவாகாது; உலகத் தமிழர் உருவாகார். தேய்வுப் பொருளாகி மாய்வுப் பொருளாக மடிந்து முடிந்து விடலாம். அந்நிலைமை வாராது இருப்பதாகுக.

கடந்த எட்டு ஆண்டுகளாக இனம் பற்றி ஆராயும் மானிட இயல் துறையைப் பயின்று வரும் நான் கடந்த ஓராண்டாகத் தமிழரின் பிறந்தகம் பற்றிப் பலவேறு கொள்கைகளை ஆராய்வதில் ஆழ ஈடு பட்டிருந்தேன். பல நூல்களையும் கட்டுரைகளையும் இதன் தொடர்பாகக் கற்றபோது ஒருசில புதிய பார்வைகளும், தெளிவுகளும் எனக்குப் புலப்பட்டன. அவற்றைக் கற்ற அறிஞர் அவையில் எடுத்துச் சொல்வதற்கு ஒரு களத்தைப் புதுச்சேரி தனித்தமிழ்க் கழகத் தலைவர் திரு. தமிழமல்லன் ஏற்படுத்திக் கொடுத்தார். 19-2-84-இல் ஞாயிற்றுக்கிழமை புதுவையில் நிகழ்ந்த ஆய்வரங்கில் 'தமிழர் தோன்றிய இடம்' என்னும் தலைப்பில் ஆய்வுரை வழங்கினேன். அப்போது அவ்வரங்கில் கலந்துகொண்ட அறிஞர்கள் எழுப்பிய வினாக்களும், எடுத்துரைத்த விளக்கங்களும், டாக்டர் முத்து சண்முகம் போன்றோர் அளித்த ஊக்க உரைகளும் அவ்வாய்வு மேலும் செழுமைபெற வைத்தன. புதுவை தனித்தமிழ்க் கழக அன்பர்கள் அனைவருக்கும் நன்றி.

நூல்களிலிருந்தும், கட்டுரைகளிலிருந்தும், என் சிந்தனையிலிருந்தும் இந்த ஆய்வு பற்றிய உருவம் சில மாதங்களுக்கு முன்பே என் மனத்தில் புனையா ஓவியமாக இருந்தது. அதனை வரைய முடியாமல் கல்லூரிக் கடமைகள் என்னை இழுத்து நிறுத்திக் கொண்டிருந்தன. கல்லூரிக் கடமை செவ்வனே முடிந்த பிறகு இந்நூலை எழுதுவதற்கு முனைந்தேன். என் எழுத்து முயற்சிக்கு அருந்துணையாக இருந்து பெருந்துணை புரிந்த என் நன் மாணாக்கர் சிங்கப்பூர் திரு. ப. பாலகிருஷ்ணனுக்கு, என் நெஞ்சார்ந்த நன்றி.

எழுதி முடித்த கையேட்டுப் படியை முழுதும் படித்து உதவிய சட்டக் கல்லூரிப் பேராசிரியர் திரு. மனோகர், வேண்டிய நூல்களை எல்லாம் வேண்டிய வேண்டியாங்குத் தந்துதவிய கழக இயக்குநர் திரு. இரா. முத்துகுமாரசாமி ஆகியோர்க்கு என் நன்றி.

ஒரு சில நாள்களில் (17-5-84) வெளிநாட்டு ஈரோப்பிய நாடுகளுக்குப் பயணம்; அதற்கான முன்னேற்பாடுகள்; மே 4,5,6 ஆகிய நாள்களில் அமைப்பாளராக இருந்து தமிழ்மொழிப் பாடம் பற்றிய கருத்தரங்கை நடத்தும் பணி; இவற்றின் ஊடே கல்லூரித் தேர்வுக் கடமை! எனினும் ஆய்வை நிறைவு படுத்தியே தீரவேண்டும் என்ற நெடுமொழியை என் நெஞ்சில் விதைத்தவர் டாக்டர். ச.வே.சு. அவர்கள்!

அவர்கள் இன்றி, இவ்வாய்வும் இல்லை; இவ்வாய்வாளனும் இல்லை!

விரும்பிய அளவிலேயே குறிக்கோள்கள் செயலுருவம் பெற்று விடுவதில்லை; குறிக்கோளை நோக்கிய உழைப்பே விழுப்பத்தைத் தரும்; தருகின்றது.

விருப்பம் உழைப்பு விழுப்பம் !

17-5-84
(பிராங்க்பர்த் பயண நாள்)

அன்பன்
**க.ப. அறவாணன்.**

# 1
# 'தமிழ்' 'தமிழர்' எனும் பெயர்கள்!

தமிழ் மொழியைப் பேசுபவர் என்பதால், தமிழர் என்ற பெயர் வந்ததா? அன்றித் தமிழரால் பேசப்படும் மொழி என்பதால், 'தமிழ்' என்ற பெயர் எய்தியதா? தெளிவாக முடிவுரைக்கும் அள விற்குப் போதிய சான்றுகள் கிட்டவில்லை.

'அமிழ்' என்ற வினையடியாகவே தமிழ், தமிழர் என்ற சொற்கள் தோன்றியிருத்தல் கூடும். அடுத்தடுத்த கடல்கோளால் தமிழர் அல்லலுற்றனர்; கடலில் மூழ்கினர், மீண்டனர். கடலுள் அமிழ்ந்து, அமிழ்ந்து மீண்டு தப்பி வாழும் இனத்தை **'அமிழ்ந்தோர்'** என்று முன்னையோர் குறித்திருத்தல் கூடும்.

திருநெல்வேலி, குமரி, கேரளம் ஆகிய பகுதிகளிற் கடலோர மக்கள் 'முக்குவர்' என்றே அழைக்கப்படுகின்றனர் (மரமேறும் இனமக்கள் 'மரமேறி' என்றே அழைக்கப்படுகின்றனர்). முக்குதல் என்றால், மூழ்குதல் என்று பொருள். கடலில் (முத்துகளுக்காக) மூழ்குவோரை முன்னோர் முக்குவர் என்றனர் - போலும். மூழ்குதல் என்ற வினையடியாக, 'முக்குவர்' என்ற இனப்பெயர் வழங்குதல் போல, 'அமிழ்ந்தோர்' என்ற சொல் படிப்படியாக,

த் + அமிழ் = தமிழ்
த் + அமிழ் + அர் = தமிழர்

எனத் தமிழ், தமிழர் ஆகிய சொற்கள் உருவாகியிருக்கலாம்.

ஒரு மொழிக்குப் பெயர் பல்வேறு அடிப்படையில் இடப் படும். மொழியைப் பேசும் மக்களே தம் மொழிக்குப் பெயரிட்டுக் கொள்வது இல்லை; அயலாரே குறிப்பிட்ட மொழி பேசும் மக்க ளைப் பார்த்து மொழிக்கோ மக்களுக்கோ பெயரிடுவர். எனவே, பெயரிடுவது அயலாரே. இப்பெயர்கள் பின்வரும் அடிப்படையில் அமையலாம்.

**1. மொழி வழங்கும் நாட்டின் பெயர்**

மொழி வழங்குகின்ற இடத்தின் பெயரை மொழிக்கு இட்டு வழங்குவர். 'கருநடம்' என்ற இடத்தின் பெயர் 'கன்னடம்' என்ற மொழிக்கு ஆயிற்று. தம் நாட்டிற்கு மேற்கே உள்ள 'குடகு' என்ற

இடப்பெயரை அங்குப் பேசப்படும் மொழிக்குக் 'குடகு' என்று இட்டனர். 'சிந்து' என்ற ஆற்றின் பெயர் அக்கரையை ஒட்டி வாழும் மக்கள் பேசும் மொழிக்கு வழங்கப்பட்டது.

**2. மக்கள் பெயர் மொழிக்கு ஆவது**

மலைவாழ் மலை ஆள்கள் (மலையாளிகள்) பேசும் மொழி மலையாளம் எனப்பட்டது. இங்கிலீஷ் என்ற மக்கள் பெயர் மொழிக்கும் ஆயிற்று.

**3. தன்மை பற்றிப் பெயர் பெறுவன**

'செவ்வைப்படுத்தப்பட்டது' என்ற பொருளில் சமஸ்கிருதம் என்ற பெயரும், 'செவ்வைப் படுத்துவதற்கு முன்புள்ள மொழி' என்ற பொருளில் பிராக்கிருதம் என்ற பெயரும் இடப்பட்டன.

**4. திசை அடிப்படையில் பெயர் பெறுவன**

வடமொழி, தென்மொழி என்ற பெயரீடுகள் திசை அடிப்படையில் வைக்கப்பெற்றன.

**5. இடம் பற்றிப் பெயர் பெறுவன**

போர் மறவர்கள் தங்கியிருக்கும் பாடி வீடுகளில் - பாளை யங்களில் பேசப்படும் மொழி என்பதால் உருது (உருது பாளையம்) என்று ஒரு மொழி பெயர் பெறலாயிற்று.

**6. நூல் அடிப்படையில் பெயர் பெறுவன**

வேதத்தை அடிப்படையாக வைத்து, வேதத்தில் கையாளப் பட்ட சமஸ்கிருத மொழியை 'வேதமொழி' என்றனர்.

மேற்கண்ட வழி முறைகளில் தமிழுக்கு அப்பெயர் எதனால் இடப்பெற்றது என்பதை அறிய முடியவில்லை. தமிழ் நாட்டு வணிகர் வடக்கில் உள்ள வேற்று நாடுகளுக்குச் சென்றிருந்த போது அந்நாட்டார் தமிழ் வணிகர் தம்முள் பேசும் பேச்சைத் தம்மில் மொழி (தம் + இல்) என்று குறித்திருக்கலாம். 'தம்மில்' என்பதே 'தமில்' எனத் தொக்கு 'தமிழ்' என்று திரிந்திருக்கலாம் என்பர்[1].

வட இந்தியர் தமிழைத் 'திரமிட' என்றும் 'திரமிள' என்றும் குறித்தனர். திரமிள என்பதே சமஸ்கிருதச் சான்றுகளில் பரவ

1 தேவநேயப் பாவாணர், 'தமிழ் வரலாறு', ப. 36

லாகக் காணப்படுகிறது[1]. கி.மு. 169 இல் வெட்டப்பட்ட கார வேலனின் பிராகிருதக் கல்வெட்டு **'திரமிள தேசம்'** என்று குறிப்பிடுகிறது. 'அவந்தி சுந்தரி கதை' என்னும் தண்டி எழுதிய வடமொழி இலக்கியம் தொண்டை நாடு, 'திரமிள தேசம்' என்று குறிப்பிடுகிறது. நந்திவர்மப் பல்லவனின் உதயேந்திரம் செப் பேட்டில், 'திரமிலர்' என்று தமிழர் குறிக்கப்பட்டுள்ளனர். தோடர்கள் தமிழைத் 'தொபில் (Tobi)' என்றும், கன்னடர் 'தமிழ' 'தம்பழ' என்றும், 'துளுவர்' 'தமுணா, தமுளு, தம்புளு' என்றும் பெயரிட்டு வழங்குவர். [2]தமிழ்ப் பற்றித் தமிழில் உள்ள மிகப் பழைய எழுத்துச் சான்று தொல்காப்பியத்தில் உள்ளதாகும்

"வண்டமிழ் மூவர் தண்பொழில் வரைப்பு"

(தொல். 1336)

'தமிழ்' என் கிளவியும் அதனோ ரற்றே

(தொல். 386)

கி.பி.470-இல் வச்சிரநந்தி என்ற சமணர் 'திரமிளசங்கம்' என்ற ஒன்றைத் தோற்றுவித்தார். திரமிள என்பது தமிழைக் குறிப்பதாகும். கிரீக்கில் கி.மு.2-ஆம் நூற்றாண்டில் 'தமிரிகே' என்றும், ரோமானியர் கி.மு. முதல் நூற்றாண்டில் 'தமிரிசி' என்றும், ரேவண்ணா என்ற உலக நூல் ஆசிரியர் கி.பி.முதல் நூற்றாண்டில் 'தமிரிக்கா' என்றும், செங்கடல் பயணக் கையேடு கி.பி. 75-இல் 'தமிரிக்கா' என்றும் தாலமி கி.பி.140-இல் 'தமிரிக்கே' என்றும், யுவான்-சுவாங் கி.பி.7-ஆம் நூற்றாண்டில் 'தெகிமோலோ' (Tehimolo) என்றும், ஐரோப்பியர் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் தமோலிக்கா என்றும் வழங்கினர்.[3]

மேற்கண்ட சான்றுகளைப் பார்க்கிறபோது தமிழ்மொழியின் பழைய பெயர் 'தமிழ்' என்றே இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. தமிழ் என்பதே திரமிள, திரவிட என்று அயலவரால் பிறழ ஒலிக்கப்பட்டது போலும்.

---

1 கமுக - கரமுகம, பவளம - பராவளம எனறு ஆகினமை போலத தமிழ எனபது திரமிள எனச சமஸகிருததகில வழஙகபபடுகிறது

2 D E D No 2508

3 'தமிழ நாடடு வரலாறு' ப.71

# 2
# தமிழர் என்ற பெயர்

*'தமிழர்' என்ற பெயர் 'தமிழ்' என்ற மொழிப்பெயர் அடிப் படையில் தோன்றியது ஆகும். தமிழ் மொழியைப் பேசுபவர் தமிழர் என அழைக்கப்பட்டனர். பேசுபவர் என்பது, இங்கே தமிழைத் தலைமுறை தலைமுறையாகத் தம் தாய்மொழியாகக் கொண்டு பேசுபவரைக் குறிக்கும்.*

# 3
# தமிழ்நாடு என்ற பெயர்

தமிழ் மொழி பேசப்படும் பகுதி தமிழ்நாடு எனப்பட்டது. 'தமிழ் கூறும் நல்லுலகம்' என்று பனம்பாரனாரரும், 'வையகம் வரைப்பின் தமிழகம்' எனப் புறநானூறும், (168) 'இமிழ்கடல் வரைப்பின் தமிழகம்' என்று இளங்கோவும் (காட்சிக் காதை, அடி: 37) தமிழ்நாட்டைக் குறிப்பர். தமிழ்நாட்டின் வடஎல்லை திருப்பதி என்ற வடவேங்கடமும், தென் எல்லை குமரியாகவும் இருந்தன. இவ் எல்லையுள் இன்றைய ஆந்திரப்பிரதேசப் பகுதியும், முழுக் கேரளமும் அடங்கும். சிலர் வடக்கே உள்ள வேங்கடம் என்பதை வேம் + கடம் என்று வெப்பத்தால் வேக வைக்கும் பாலை நிலம் எனப் பொருள் கூறுவர். இப்பாலை நிலம், வடக்கே 'அயிரி யாறு' (அகம். 289) வரை அகன்றிருந்தது என்றும், தெற்கே இன்றைய தென்குமரிக்கு அப்பால், அழிந்த குமரி நாடுவரை விரிந்திருந்தது என்றும், இவ்விரிந்த தமிழகமே பண்டைய தமிழர் வாழ்ந்து தமிழ்ப் பேசிய பகுதியாக இருந்தது என்றும் அறிஞர் கருதுவர்.

### 3.1. தமிழகத்தின் வட எல்லை

'வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்'.

எனப் பனம்பாரனாரின் பாயிரம், தொல்காப்பியர் கால மொழி வழங்கிய எல்லையைக் குறிக்கிறது. இவ்வெல்லையே தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் உரிய எல்லை என்ற கருத்தில் காக்கைபாடினி யார், சிகண்டியாசிரியர், இளங்கோவடிகள், கம்பர், சிவப்பிர காசர், பாரதியார் ஆகியோரும் பாடியுள்ளனர்.[1] பாயிரத்தில் குறிக்கப்படும் வடஎல்லை இன்றுள்ள திருப்பதி மலை என்பது

---

1. காககை பாடினியம, சிவபபிரகாசா, சிகணடியாா சிலமபு அடியாாககு நலலாா் உரை, இளங்கோவடிகள-சிலமபு வேனிறகாதை 1-2 கமபா, நாடா விடட படலம 29, பாரதியாா் - செநதமிழ நாடு - 5

பலரது கருத்து. தொல்காப்பியர் இத்திருப்பதி மலையைத்தான் வட எல்லையாகக் கொண்டாரா என்பது ஆய்வுக் குரியது.

### 3.1.1. வேங்கடத்தின் இயற்கை அமைப்பு

தரை மட்டத்திலிருந்து 1000-2500 அடி உயரம் உள்ள திருப்பதி மலையும், அதனைச் சார்ந்த குன்றுகளும், இம்மலை பற்றியும் மலை சூழ்ந்த தொடர்ச்சி பற்றியும் பழம் புலவர்கள் கூறுஞ் செய்திகள் கருதத்தக்கன. பாயிரத்தில் வடவேங்கடம் எனக் குறிக்கப்பட்டது தவிர, தொல்காப்பிய நூலுள் அம்மலையைப் பற்றிய பிற குறிப்புகள் ஏதும் இல்லை. ஆனால் தொல்காப்பியர்க்குப் பின் வந்த சங்க இலக்கியப் புலவர்கள் வேங்கடத்தைப் பற்றி மிகுந்த செய்திகள் கொடுத்துள்ளனர். அவருள மாமூலனார், கல்லாடனார், மதுரைக் கணக்காயனார், அவர் மகனார் நக்கீரனார், காட்டூர் கிழார் மகனார் கண்ணனார், தாயங்கண்ணனார், நன்னாகனார், கள்ளில் ஆத்திரையனார் ஆகியோர் குறிப்பிடத்தக்கோராவார். அவர் கூறிய செய்திகளை ஈண்டுத் தொகுத்து நினைத்தல் பின் நிகழும் ஆராய்ச்சிக்குத் துணைபுரியும்.

வேங்கடம் குறிஞ்சியும், முல்லையும் மயங்கிய இடமாகை யால் அங்கே யானைகள் நிறைய இருந்தன. 'வடவயின் வேங் கடம் பயந்த வெண்கோட்டு யானை' எனவரும் அகநானூற்றுப் பாடலாலும் (அகம்.27), பிற பாடல்களாலும் (அகம்-61, 85, 211, 213, 265, 369, நற்-14, புறம்-389) இச்செய்தி உணரப்படுகின்றது. மற்றும் வேங்கை மரம் (அகம்-85, 141), நரந்தை என்னும் நாரத்தை மரம் (அகம்-141), மராமரம் (அகம்.211, 265), காந்தள் (நற்.14), குருந்து (அகம்.85), மயில் (அகம்-85), முசுக்கலை (அகம்-141), கோவலர் (அகம்-311, 393), ஆ (அகம்-393), தேன் (அகம்-318) முதலிய வளங்கள் இருந்தன. வேங்கடத்தில் அருவி ஒழுகியது என்பதை 'ஒலி வெள்ளருவி வேங்கடம்' (புறம்-381, 389, அகம்-213, 359) என்ற வரி உணர்த்துகிறது. அம்மலையிடத்து மூங்கில்கள் செறிந்திருந்தன என்பதைக் 'கரம்புடை நெடுவரை வேங்கடம்' என வரும் புறநானூற்றுப் பாட்டால் (புறம்-385) அறிகிறோம். அங்கே குளிர்ந்த சோலைகள் பல இருந்தன என்பதைப் 'பனிபடு சோலை வேங்கடம்' எனவரும் மாமூலனார் பாட்டு உணர்த்து கிறது (அகம்-211).

**வேங்கடவரை**

வேங்கட மலையைப் பற்றிக் குறிப்பிட்டுக் காட்டும் சங்கப் பாடல்கள், வேங்கடமலை என்று சுட்டுவதைக் காட்டிலும் வேங்கடவரை என்றே பெரும்பாலும் சுட்டுகின்றன. இது ஆராயத் தக்கது.

தேங்கமழ் நெடுவரைப் பிறங்கிய வேங்கடம் (அகம்-141)
தேன் தூங்கு உயர்வரை நன்னாடு (அகம்-393)
நெடுவரை வேங்கடம் (அகம்-209)
வேங்கட நெடுவரை (அகம்-85)
வேங்கட விறல்வரை (புறம்-385)
நெடுங்கோட்டு வேங்கடம் (அகம்-213)

மேற்கண்ட இலக்கியச் சான்றுகளில் இறுதிச் சான்று தவிர ஏனையன 'வரை' ஒன்றைக் குறிப்பிடுகின்றன. வரை என்பதற்கு நேர்பொருள் கீற்று அல்லது வரி என்பதாம். மலையை வரை என்ற சொல் ஆகுபெயராய் நின்று உணர்த்துகின்றது. வரிபோல் நெடுக நீண்டு நிற்கும் மலைத்தொடர்ச்சி என்பதே கருத்தாகல் வேண்டும். சங்கப் புலவர்கள் உள்ளது உள்ள படியே புனையும் இயற்கைக் கலைஞர்கள். ஆதலின் வரை என்ற சொல்லும் நெடு வரை என்ற தொடரும் நீண்டு தொடர்ந்து நிற்கும் மலைத் தொடரையே உணர்த்துதல் வேண்டும். 'வேங்கடநெடுவரை' என்று குறிக்கப்பட்டிருத்தலால், மேலைக் கடலின் எல்லை தொடங்கி, கீழைக் கடல் எல்லை வரையில் தொடர்ந்து நிற்கும் மலைத் தொடரையே 'வேங்கடம்' எனக் குறித்தனராதல் வேண் டும். மலைக் குவியலாய் ஒரிடத்து நிற்கும் திருப்பதி மலையை, வேங்கடம் என்ற சொல் குறிக்க வாய்ப்பில்லை. வடவேங்கடம் என்பதற்கு நச்சினார்க்கினியர், 'நிலங்கடந்த நெடுமுடி அண் ணலை நோக்கி உலகம் தவஞ்செய்து வீடுபெற்ற மலையாத லானும், எல்லாராலும் அறியப் படுதலானும் வேங்கடத்தை எல்லையாகக் கூறினார்.[1] என்றுரைப்பர். நச்சினார்க்கினியர் குறிக்கும் பழங்கதை மிகப் பிற்காலத்தது. பிற்காலக் கதையைத் தொல்காப்பியப் பாயிர ஆசிரியர் அறிந்திருந்தார், அறிந்துரைத்

1 தொலகாபபியம, பாயிர உரை நசசினாாககினியா பேரா. கு சுநதரமூாததி, பதிபபு ப 7

தார் என்பது பொருந்தவில்லை. மேலும் வேங்கடம் அனைவ ராலும் அறியப்படும் திருநிலமானது எப்போது ?

### 3.1.2. திருப்பதி என்னும் வேங்கடம் புகழ் எய்தியது பிற்காலமே

கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டு வரை, வேங்கடக் கடவுள் சைவ, வைணவப் பொதுக் கடவுளாகவே விளங்கி இருக்கிறார்.

முதலாழ்வார்களான பொய்கையாழ்வாரும் பூதத்தாழ் வாரும் பாடிய பாடல்கள் இதனை உறுதி செய்கின்றன.

"தாழ்சடையும் நீள் முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்னாணும் தோன் றுமால் - சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து"
(இயற்பா - மூன்றாந் திருவந்தாதி. 63)

என்ற ஆழ்வார் பாடல் திருப்பதி வேங்கடவன் தாழ் சடையையும், பாம்பையும், மழுப்படையையும் கொண்டிருந்ததாகக் குறிக்கிறது. இவை சிவனுக்குரியன. திருப்பதியில் உள்ள இறைப் படிமத்தைச் சிவனுக்கும், மாலுக்கும் சார்த்திக் கூறும் பிறபாடல்களும் உள்ளன[1]. திருப்பதிப் படிமம் முருகனே என்றும், பின்னர்தான் இராமானுசர் அந்தப் படிமத்தைச் சங்கு, ஆழி ஏந்த வைத்துத் திருமாலாக மாற்றிவிட்டார் என்ற கருத்தும் உண்டு[2]. மிகப் பிற் காலத்தவரான கபிலதேவர் என்ற சைவ சமயத்தாரும் வேங்கட மலையானைப் பாடியிருக் கின்றார்[3], வேங்கடவரின் படிமத்தை ஆராய்ந்த தற்காலப் படிம இயல் வல்லாரும், வேங்கடவன் சைவ அடையாளங்களோடு இருப்பதை உறுதி செய்கின்றனர். ஆத லின் வேங்கடம் வைணவத் திருப்பதியாகப் புகழ் பெற்ற காலம் மிகப் பிற்காலமே.

சிலப்பதிகாரத்தில் மாடல மறையோன் கூற்றாகத் திருப்பதி மலையானின் திருமால் கோலம் பேசப்படுகிறது.

1. பொயகையாழவாா, 5, 28, 38, 74, பேயாழவாா 61, 62, 68, ஆகியன பாாகக
2. சிவஞான முனிவா, தொலகாபபியப பாயிர விருததி நாவலர் பதிபபு. ப. 4 தொ. மு பாசுகரத தொணடைமான், வேஙகடம முதல குமரி வரை ப 11
3 பனனிருதிருமுறை . திருவநதாதி - 15

"வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை
............ ............ ............ ............ ............
செங்கண் நெடியோன் நின்ற வண்ணம்"
(காடுகாண் காதை - 41-51)

எனவரும் பகுதி சங்ககாலத்திலேயே வேங்கட மலையின் சிறப்பையும, அதில் உறைந்திருந்தவன் திருமால் என்பதையும் காட்டவில்லையா என்று சிலர், தடை எழுப்பக் கூடும்.

கி.பி. 7- ஆம் நூற்றாண்டில் முதலாழ்வார் காலத்தும், அதற்குப் பின்பு கபிலதேவர் காலம் வரை, திருப்பதி இறைவன், சைவ வைணவக் கலப்புக் கடவுளாகக் காட்டப்பட்டிருக்கின்றான் என்பது முன்னே நிறுவப்பட்டது. இச்செய்தி தற்காலப் படிம நூலாராலும் உறுதிப் படுத்தப்பட்டது என்பதும் காட்டப்பட்டது. அங்ஙனமிருக்க இளங்கோவடிகள் காலத்து மட்டும் இம்மலை எங்ஙனந் திருமால் ஒருவரையே பெற்ற இடமாக இருந்திருக்க முடியும்? ஆதலின் 'வீங்கு நீர் அருவி - நின்ற வண்ணம்' வரை உள்ள பதினொரு வரிகளும், பிற்கால வைணவ அடியாரின் இடைச் செருகலாய் இருத்தல் கூடும் என்று அறிஞர் கருதுகின்றனர்[1]. அவ்வாறு கொள்ளாமல் அப்பகுதியைச் சான்றாகக் கொண்டாலும், சிலப்பதிகாரக்காலம், தொல்காப்பியர் காலத்திற்கு மிகப்பிற்பட்ட காலமாகும். சமயக் காளான் முளைத்துச் செழித்த காலம் சிலம்பு,மணிமேகலை காலமாகும். தொல்காப்பியர் காலமோ சமயக்களையே முளைவிடாத காலமாகும்.

வேறுசிலர் "விழவுடை விழுச்சீர் வேங்கடம்" என்று அகநானூறு (61) குறிப்பிடுகின்றதே, சங்க இலக்கியத்திலேயே வேங்கடத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் குறிக்கப்படுவதால், அம்மலையின் தொன்மையும், சீர்மையும் துலங்கவில்லையா என வினவுவர்[2]. திருப்பதி என்னும் திருமலையில் மட்டுந்தான் சிறப்புடை விழா நடக்கிறது என்பது போல இக்கருத்து அமைந்துள்ளது. ஆனால் விழாக்கள் பண்டைத் தமிழக ஊர்களில்

1 K Kothandapani Pillai Tamil culture, vol. IX No Jan, Mar 1961 PP 71-74

2 D M A Dorai Rangaswami, Vedavengadam, Annals of Oriental Research, vol XV III Part II 1963, P-16

நடக்கும் பொதுவான நிகழ்ச்சிகளே என்பது சங்க இலக்கியச் செய்திகளால் புலனாகின்றது.

சாறு அயர் மூதூர் (பட்டினப்பாலை 215)
சாறு அயர் மூதூர் (சிறுபாணாற்றுப்படை 206)
அழியா விழவின் அஞ்சுவரு மூதூர் (அகம். 215)
விழவு அகலூங்கட் சிறூர் (புறம். 65)
மாடந் தேறும் மைவிடை வீழ்ப்ப நீ யாங்குக்
கொண்ட விழவினும் பலவே (புறம். 33)
மடியா விழவின் பாணர் நன்னாட்டு (புறம். 212)

மேற்கண்ட இலக்கியச் சான்றுகள் ஊர்களில் விழா நடப்பது பொதுவான நிகழ்ச்சி என்பதையும், அது கடவுள் விழாவாகத் தான் இருக்க வேண்டும் என்ற உறுதிப்பாடு இல்லை என்பதையும் தெளிவு படுத்துகின்றன. ஆதலின் திருப்பதி என்பதால் 'வட வேங்கடம்' என்று வடதிசையை -மங்கல திசையை முதற்கண் கூறினார் என்னும் நச்சினார்க்கினியர் கருத்து பொருத்த மற்றதாகிறது.

## 3.1.3. வேங்கடம் - பெயர்க்காரணம்

வேங்கடமலை என்று குறிக்காமல் 'வேங்கடவரை' எனக் குறித்தலாலும், திருப்பதி என்னும் வேங்கடம் புகழ்பெற்றது பிற்காலமே என்பதாலும், விழா நிகழ்ச்சிகள் வேங்கடமலைக்கே உரிய சிறப்பு நிகழ்ச்சிகள் அல்ல என்பதாலும், தொல்காப்பியம் பாயிரத்தில் வரும் வடவேங்கடம் என்பது தற்போதைய திருப்பதியைக் குறிக்கவில்லை என்பது தெளிவு. மாறாக 'வேங்கடம்' என்று பெயர் பெற்றதன் காரணத்தை ஆராய்தல் வேண்டும்.

(அ) வேங்கடம் என்பதற்குத் தன்னை அடைந்தவர்களுடைய கரிசுகளை எல்லாம் போக்குவது என்பது ஒரு பொருள்.

(ஆ) வேம் - அழிவின்மை, கடம் - செல்வம் எனப் பகுத்துக் கொண்டு, தன்னை அடைந்தவர்கட்கு அழிவில்லாத செல்வத்தைக் கொடுப்பது என்பது பிறிதொரு விளக்கம்*.

சமய உணர்வை மூலமாகக் கொண்டு கூறப்பட்ட பெயர்க் காரணங்கள் இவை சங்க காலத்தில் வேங்கடம் சமயச் சிறப்புப்

* B R Purushothaman Naidu, Thiruvengadam, Annals of Oriental Research vol XVI 1959 - 60 Part I P - 1

பெற்றிருக்கவில்லை என நிறுவப்பட்டதால் இக் காரணங்கள் ஏற்பதற்குரியன அல்ல.

(இ) 'காம்புடை நெடுவரை வேங்கடம்' (புறம். 385) (காம்பு-மூங்கில்) என்று வருவதால் 'வேய்' என்னும் மூங்கிலைக் கொண்ட கடத்தற்கரிய காடடர்ந்தியங்கிய காரணத்தால் வேய் + கடம் - வேய்ங்கடம் = வேங்கடம் என்று ஆயிற்று என்பர்.

(ஈ) வேங்கை மரங்களை நிரம்பக் கொண்டிருந்த காடாக இருந்ததால் வேங்கை + கடம் - வேங்கடம் என்றாயிற்று என்பர்.

(உ) வடக்கில் இருந்த மொழி பெயர் தேயங்களை அடை தற்கு விழவுடை விழச்சீர் வேங்கடமே கடத்தற்கினிய காடாக இருந்ததால் அது வேம் (விரும்பும்) + கடம் = வெங்கடம் = வேங் கடம் எனவாயிற்று என்பர்.

(ஊ) கொடிய காடு எனும் பொருளில் வெம் (கொடுமை) + கடம் = வெங்கடம் - வேங்கடம் என்றாயிருத்தல் கூடும் என்பர்.*

இக்கருத்துகள் ஓரளவு பொருத்த முடையனவாயினும் வேங்கடமலைத் தொடர்ச்சியின் இயற்கை அமைப்பைக் கொண்டே அதன் பெயரை ஆராய்தல் வேண்டும். அதுவே தக்கது.

சங்க இலக்கியத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து திணைக்குட்பட்ட பாடல்களும் உள்ளன. தொல்காப்பியர் பாலைத் திணையை,

'நடுவண் ஐந்திணை நடுவணது' (தொல் - அகம். - 2)

என்று குறிப்பார். அகத்திணைப்பனுவல்களில் பாலைப் பாடல் களே பெரும்பான்மை. பண்டைத் தமிழர் பொருள் தொகுப்பிற்காக வேண்டி, மணம் முடித்த தலைவியரை விட்டுப் பிரிந்து செல்வதும் வழியில் பாலை நிலத்தின் வெம்மையால் அவலமுறுவதும். அதனை எண்ணித் தலைவி துயரமுறுவதும் சங்கப் பாடல்களில் காட்டப் பெறுகின்றன. அப்பாடல்கள் குறிக்கும் பாலைநிலம் தமிழகத்து யாண்டு இருந்தது என்பதும் ஆராய்ச்சிக்குரிய தன்றோ? தமிழகத்தில் சகாரா போன்ற நிலைத்த பாலை நிலங் கள் இல்லை. எனினும் முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்த பாலை நிலம் இருந்திருத்தல் வேண்டும். தமிழ் நாட்டில்

* Annals of Oriental Research, vol XVIII Part II 1963 PP 53, 54

நிலத்தாற் பாலை இலதேனும், காலத்தாற் பாலையுண்டு, நிலையான சுரம் இன்றேனும் வந்து போம் சுரம் உண்டு. கோடை என்னும் காலப் பாலை குறிஞ்சி முல்லைப் பகுதிகளை ஓரிரு திங்கள் நீரற்ற களமாக, வெப்பம் வீசும் சுரமாக, யாதுந் தோன்றாப் பாலை நிலமாக, கடுங் கதிர் ஞாயிற்றின் விருந்தில்லமாக மாற்றி விடுகின்றது. இரண்டு திங்கட் பாலையேயாயினும், இது விளைக்கும் வெம்மைக்கு அளவின்று என்று தமிழ் நாட்டுப் பாலை நிலம் பற்றி டாக்டர் வ. சுப. மாணிக்கம் குறிப்பிடுவதும் ஈண்டு எண்ணத் தகுந்தது[1] சங்கப் பாடல்கள் காட்சிப்படுத்தும் கொடிய பாலை. சேர, சோழ, பாண்டிய நாடுகளில் இல்லை என்பது வெளிப்படை. கொடிய வெப்பமும், விலங்குகளும் கள்வரும் நடமாடும் இடமாகப் புலவர்கள் வேங்கடமலைத் தொடர்ச்சியைக் குறிப்பிடுகிறார்கள்.

செந்நுதல் யானை வேங்கடம் தழீஇ
வெம்முனை அருஞ்சுரம் இறந்தோர் (அகம். 295)

வாணிணப் புகவின் வடுகர் தேஎத்து
நிழற்கவின் இழந்த நீரில் நீளிடை
அழலவிர் அருஞ்சுரம் - (அகம். 213)

(வடுகர் தேஎம் - வேங்கடத்தை உள்ளிட்ட எருமைக் குட நாடு - இன்றைய மைசூர்)

வேங்கடமலைத் தொடர்ச்சிப் பகுதிகள்தாம் பண்டைய தமிழகத்தின் பாலையாக இருந்திருத்தல் வேண்டும். ஆதலின் வேங்கடம், என்பது வேம் + கடம் எனப் பிரிந்து வேகுஞ்சுரம் - வெப்பத்தால் வேக வைக்கும் பாலை நிலம் என்ற பொருட் குறிப்புடையதாகும்.[2]

கடம் - என்னுஞ் சொல் பாலை என்ற பொருள் தருவதை,

பெய்மழை துறந்த புலம்பறு கடத்துக்
கவைமுட் கள்ளிக் காய்விடு கடுகொடி
துதைமென் தூவித் துணைப்புற விரிக்கும்
அத்தம்,

எனவரும் குறுந்தொகைப் பாட்டாலும் (174)

---

1 தமிழக காதல, ப 180

2 Rao Sahib K Kothandapani Veda Vankadam, Tamil culture, vol IX No I Jan Mar 1961 P 77

'கடம் பல கிடந்த காடுடன் கழிந்து' எனவரும் சிலப்பதிகார அடியாலும் உணர்ந்து கொள்ளலாம். 'கடம்' என்பதற்கு உரைகாரர் அருஞ்சுரம் என்று உரை வகுப்பதும் கருதத் தகுந்தது[1]. 'காணேம் அல்லேம் கண்டனம் கடத்திடை' எனவரும் பாலைக் கலியில் (கலி.-3), கடம்-பாலை என்ற பொருளில் ஆளப்பட்டிருத்தல் காண்க. வடக்கே கிருட்டிணை ஆற்றையும், மேற்கே துங்கபத்திரை ஆறுகளையும், தெற்கே வடபெண்ணை யாற்றையும், அதனை அடுத்த குன்றுகளையும் (இன்றைய திருப்பதிவரை) அடக்கிய பகுதி தென்னிந்தியாவிலேயே மிக வெப்பமுடைய பகுதியாகும். கோடைக் காலத்தில் 120° - 150° வரை வெப்பம் இருக்குமெனத் தற்கால வானியலாளர் கூறும் கூற்றும் இக் கருத்தை உறுதிப் படுத்துகிறது. இந்தப் பெரிய மலையும், காடும் மயங்கிய வெளியைத்தான் பண்டைப் பாவலர்கள் வேங்கடம் என்று குறித்தனராதல் வேண்டும். தொடக்கத்தில் காட்டப்பட்ட இயற்கைவளன் பெரும்பகுதி துங்கபத்திரை ஆற்றை ஒட்டிய வளமையாகும். அதுவும் கோடை நீடிய காலத்தில் வெவ்விய பாலை நிலமாகக் கிடக்கிறது. ஆதலின் வேங்கடம் என்பதற்குக் காட்டப்பட்ட ஏனைய காரணங்களைவிட வெவ்விய பாலை நிலம் என்ற பொருள் பட்ட காரணமே மிகப் பொருத்தம் என்பது உறுதியாகிறது.

### 3.1.4. வேங்கடத்தை ஆண்ட வேந்தர்கள்

#### 1. மாவண்புல்லி

திருப்பதி தொடங்கி, கிருட்டிணை ஆறுவரை நீண்டு கிடந்த வேங்கடத்தை மூன்று மன்னர்கள் ஆண்டுள்ளதாகப் பாடல்கள் தெரிவிக்கின்றன. இம்மூவருள் வேங்கடத்தின் கிழக்குப் பகுதியை ஒருவனும், மேற்குப் பகுதியை ஒருவனும், நடுப்பகுதி அல்லது வடக்குப்பகுதியை மற்றவனும் ஆண்டிருத்தல் வேண்டும் என்று இராவ் சாகேப் கு. கோதண்டபாணி கருதுகிறார்[2]. இவ்வாறு ஆண்ட வேந்தருள் ஒருவனாகப் 'புல்லி' என்பவனை அகநானூறும், புறநானூறும் குறிக்கின்றன.

1 சிலபபதிகாரம, காடுகாண காதை - வரி 90

2 Tamil Culture, Ibid PP 81

"கல்லா இளைஞர் பெருமகன் புல்லி
வியன்றலை நன்னாட்டு வேங்கடம்" (அகம். 83)
"மா அல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடம்" (அகம். 209)
"கழல் புனைதிருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம்" (அகம். 61)
"திரை பல குழீ இய நெடுமொழிப் புல்லி
தேன் தூங் குயர்வரை நன்னாட்டும்பர்
வேங்கடம் ... .... ... " (அகம். 393)
"... ... புல்லிய
வேங்கடம் விறல் வரை" (புறம்.385)

என் று இலக்கியங்கள் புல்லி வேந்தனின் வலிமையையும், அவன் நாட்டின் வளமையையும் எடுத்துப் பேசுகின்றன. 'களப்பிரர்' குலத்தில் தலைவேந்தன் இவனே யாதல் வேண்டும். 'களவர் கோமான்' என்றிருக்க வேண்டிய பாடமே 'கள்வர்' கோமான் எனப் பிழை பட்டு விட்டது என்பாரும் உண்டு.[1] களப்பிரர் இடை யீடு தமிழ் - நாட்டில் ஆரியரை எதிர்த்து நடத்திய முதற் புரட்சி என்பதும் அப்புரட்சிக்குக் காரணமானோர் அயல் நாட்டினர் அல்லர் என்பதும், அவர் தன்மானங்காத்த தமிழ் மறவரே என்பதும் ஆராய்ச்சியால் விளக்கமாகின்றன[2]. அந்த முதற் புரட்சிக்குத் தலைமை தாங்கியவன் வேங்கட வேந்தனான புல் லியே ஆவான். வேங்கடப் பேரெல்லையின் மேற்குப் பகுதியைப் புல்லி ஆண்டான். அவனது நாட்டில் யானைகள் மிகுந்திருந்தன.

"செந்நுதல் யானை வேங்கடம்" (அகம். 265)
ஓங்கல் யானை உயங்கிமதம் தேம்பிப்
பன்மர ஒருசிறைப் பிடியோடு வதியும்
புடையலங் கழற்காய் புல்லிக் குன்றம் (அகம். 295)
ஞாலவாய்க் களி று பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத் தஞ்சுபிழப் பூசல்

1 Dr S. Krishnaswami Ancient India and South Indian History and Culture PP 480-82

2 முதற்புரட்சி: தென்மொழி, 1967 சனவரி இதழ பக 37, 38.

நெடுவரை விடரகத் தியம்பும்
கடுமான் புல்லி காடிறந் தோரே. (நற். 14)

எனவரும் சங்கப்பாடல்கள் இச்செய்தியை உணர்த்துகின்றன. இவனது வேங்கட நாடு எவ்வாறு வெவ்விய பாலையாக இருந்தது என்பதை அகம். 295 ஆம் பாடல் படம் பிடித்துக் காட்டுகிறது.

'நிலத்தில் நீர் அற்றுவிட்டது. சுனைகளும் வற்றிவிட்டன; மலையிலே உள்ள மரக்கிளைகள் வெம்மையால் எரிந்து விட்டன; கதிரவனின் கடுங்கதிர் வீச்சால் மூங்கில்கள் தெறித்தன; வேங்கைப்புலியை வென்ற யானை வெம்மையால் வருந்தி வாடி, நிலாப்போலும் நிறத்தினையுடைய கொம்பிலே பெரிய கையை அனைத்துப் பல மரங்களையுடைய ஒரு பக்கத்தே தன் பிடி யானையோடு தங்கும்; அத்தகு நடையருங் கானம் அது!'

## 2. திரையன்

வேறு சில பாடல்கள் தொண்டையர் குலத்தினனான 'திரையன்' என்பான் வேங்கடத்தை ஆண்டதாகக் குறிப்பிடுகின்றன.

"வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை" (அகம். 85)
"தொண்டையர் அடுக்கம்" (குறு. 260)
"வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
ஓங்கு வெள்ளருவி வேங்கடத் தும்பர்" (அகம். 213)

கீழைக் கடற்கரைக்கு அண்மையில் உள்ள 'பவத்திரி' என்னும் நகரை இவன் தலைநகராகக் கொண்டிருந்தான் போலும்.

செல்வா நல்லிசைப் பொலம் பூண் திரையன்
பல் பூங் கானல் பவத்திரி (அகம். 340)

இந்நகரம் 'கூடூரு' (Gudur) க்கு அண்மையில் இருந்திருத்தல் வேண்டும். கூடூர், ஆந்திர நெல்லூர் மாவட்டத்தில் உள்ளது. இச்செய்தி கூடூரில் கிடைத்துள்ள 88-105 ஆம் கல்வெட்டுகளால் புலனாகின்றது. ஆனால் இந்தப் பவத்திரி நகரம் கடலால் அழிக்கப் பட்டு விட்டது. இச்செய்தியைக் 'கடல் கொண்ட பவத்திரி கோட்டம்' என்ற வழக்கு உறுதிப்படுத்துகிறது. திரையன், பவத்திரி கடலால் கொள்ளப்பட்டு அழிக்கப்பட்ட பின்னர்தான் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டான் போலும்.

### 3. ஆதனுங்கன்

குறுநிலத்தலைவனும், வள்ளலுமான ஆதனுங்கன் வேங்கடமலைக்குத் தலைவனாயிருந்தான் என்பது புறம். 389 ஆம் பாடலால் தெரியவருகிறது. அப்பாடலின் படி ஆதனுங்கன் என்பான் வேங்கடமலைத் தலைவருள் முதியவன் ஆதல் வேண்டும்.

கல்லிழி அருவி வேங்கடக் கிழவோன்
செல்வுழி எழாஅ நல்லேர் முதியன்
ஆதன் நுங்கன் போல நீயும்

என்று குறிக்கப்படுகிறான். வேங்கட நாட்டின் வட பகுதியை இவன் ஆண்டிருத்தல் வேண்டும். இவன் தொடர்பான கல்வெட்டுச் செய்தி ஒன்று நமக்கு வியப்பையூட்டுகிறது. கிருட்டிணை ஆற்றை ஒட்டிய பகுதியை 'நுங்கன்' என்ற பட்டமுடைய தெலுங்கு மன்னன் ஆண்டதாகக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. 14- ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று நுங்கதேவ மகாராயன், நுங்கராயன் என்னும் பெயர்களைக் குறிப்பிடுகின்றது. 15- ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று ஓங்கோல் வட்டத்தில் 'கனபர்த்தி' எனுமிடத்தில் வீரன் நுங்கன் என்பான் ஆண்டதாகக் குறிக்கிறது[1]. ஆதனுங்கன் என்ற சங்க கால மன்னனது ஆட்சி எல்லை கிருட்டிணை ஆறுவரை நீண்டிருந்தது என்பது இக்கல்வெட்டுச் செய்தியால் உறுதியாகிறது. கிருட்டிணை எல்லைவரை ஆண்ட அம்மன்னனை 'வேங்கடக் கிழவோன்' என்று குறிப்பதன் மூலம் வேங்கட நாட்டெல்லை கிருட்டிணைவரை அகன்றிருந்தது என்பதும் தேற்றமாகும்.

### 3.2. எருமை நாடு அல்லது மைசூர் மாநிலம்

பாண்டி நாட்டின் வடக்கே உள்ள நாடு 'எருமை நாடு' எனப் புலவரால் குறிக்கப்பட்டது. இந்நாட்டின் தொடக்கம், பாண்டி நாட்டின் மேற்கு எல்லையிலேயே தொடங்குவதால் இஃது 'எருமைக் குடநாடு' என்றும் அழைக்கப்பட்டது. நுண்ணிய கலைத்தொழில் வாய்ந்த அணிகளை அணிந்த தலைவி ஒருத்தியின் அழகைப் போன்று எருமைக் குடநாட்டின் அழகு இருந்தது எனப் பாவலர் ஒருவர் போற்றுகின்றார்[2].

1 ஔவை துரைசாமி உரை, புறநானூறு 389
2 அகநானூறு - 16.

அகம்.253 ஆம பாட்டு, காதலன் ஒருவன் எருமை நாட்டில் உள்ள அயிரையாற்றைக் கடந்து பாலை நிலத்தை அடைவதாகக் குறிக்கிறது.

"பேரிசை எருமை நன்னாட்டு உள்ளதை
அயிரியா றிறந்தனர்"

அயிரியாற்றின் அக்கரையிலுள்ள பகுதி காடு, பாலைவெளி என்பதை இன்னொரு பாடலும் காட்டுகிறது.

கழையமல் சிலம்பின் வழைதலை வாடப்
பைங்கொடிப் பாகற் செங்கனி நசைஇக்
கான மஞ்ஞை கமஞ்சூல் மாப்பெடை
அயிரி யாற்று அடைகரை வயின் நாலும்

என்று அப்பாடல் பேசுகிறது (அகம். 177). இந்த அயிரியாறு இன்றைய மைசூர் மாநிலத்தில் அகரி (Hagari) என்ற பெயரோடு ஓடுகிறது. தற்போதைய துங்கபத்திரை ஆற்றின் துணையாறாக (tributary) ஓடிக்கொண்டிருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குச் சாரலில் இவ்வாறு பிறந்து மைசூர் மாநிலத்தின் வடஎல்லை நோக்கிச் செல்லுகிறது*.

சங்கப் பாடல்களில் எருமை நன்னாடு (அகம்.340), எருமையூர் (அகம்.16); எருமை வெளி (அகம். 72,73, புறம். 273, 303), எருமை குடநாடு (அகம்.115) எனக் குறிக்கப்படும் எருமைநாடு என்பது இன்றைய மைசூர் மாநிலமே. இச்செய்தியை மைசூரிலும் (E P Car vol X Cu 20), தமிழ் நாட்டிலும் (A R for 1907 Para) கிடைத்துள்ள கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. எருமை என்னும் தமிழ்ச் சொல்லுக்கு நேரான வடசொல் 'மகிஷம்' என்ப

*. சிலபபதிகாரம (நடுகல - 145) பதிறறுபபதது 21-29, 79-18, 79-26, 88-12- மூனறாம பதிகம ஆகியவறறுள அயிரை என றோா மலையும, அதே பெயருடைய ஆறும சேர நாட்டில இருநதனவாகக குறிககபபட்டிருககினறன (பதிறறுப பதது ஒளவை சு துரைசாமி உரை காணக) இந்த அயிரை, எருமை நாட்டில ஓடும அயிரையாறறினினறு வேறுபட்டது எனபது அறியததககது அயிரை எனனும அயரி ஆறே தமிழநாட்டின வடமேறகெலலை எனபாா உணடு. அயிரியாறறங கரையிலுளள காட்டையும் கடநதுதான மொழி பெயா அயல தேயத திறகுபபோகவேணடும. ஆதலின அயிரியாற றங்கரையே தமிழ்நாட்டெலலை எனக கருதல பொருதத மனறு.

தாகும். புராணப் போக்கின்படி 'மகிஷன்' எனும் அசுரன் வாழ்ந்ததாகவும், அவனைச் சாமுண்டேசுவரி எனும் பெண் தெய்வம் கொன்று விட்டதாகவும், அதனால் அத்தெய்வம் "மகிஷாசுரமர்த்தினி" என அழைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. இப் புராணக்கதை மிகப் பிற்காலத்தது என்பது தெளிந்த செய்தி. திராவிடத்திற்குள் நுழைந்த ஆரியர், தமிழ்ப் பெயர்களை எல்லாம் ஆரிய மொழியாக மாற்றினர் என்பது தமிழகத்தின் ஊரும் பேரும் சாற்றும் உறுதியான செய்தி. ஆதலின் 'எருமை ஊர்' என்பதே ஆரியரின் கைவண்ணத்தால் 'மகிஷனூர்' என்றாகி மைசூர் எனத் திரிந்திருத்தல் வேண்டும்.

## 3.3. செந்தமிழ் நாடாம் குடநாடு

இவ்வெருமை நாடு 'குடநாடு' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. சேர நாட்டினின்று இந்நாடு வேறுபட்டது என்பதை உணர்த்த 'எருமை குடநாடு' என்றே குறித்துள்ளனர் (அகம்.115). இக் குட நாடு உள்ளிட்ட பன்னிரு நாடுகளைத் தொல்காப்பியர் (செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்-சொல்.400) என்று குறிப்பிடுகிறார்;

'தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன் வடக்கு - நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்*.'

---

* யாபபருஙகலம பழைய உரை மேறகோள, நன்னூல விருததி 273, மயிலைநாதா உரை 275, லீலா திலகம் - மா- இளைய பெருமாள மொழி பெயாபபு - ப 21 சேனாவரையததில செநதமிழ சோநத பன்னிரு நிலம பறறிக குறிககுமபோது புனல நாடு, வேணாடு எனபவறறை விடுதது, பொஙகா நாடு, ஒளிநாடு, எனற குறிபபுக காணபபடுகிறது இவ்விரணடு பெயாகளும முனனிரண்டு நாடுகளின வேறறுப பெயர்கள போலும இந்த மாற்றுப பெயாகளைத தருபவாகள சேனா வரையரும நசசினார்ககினியரும மாறாக, நசசினாக்கினியா மடடும தநதாா என்ற செயதி 1800 ஆணடுகடகு முற படட தமிழகம (கழக வெளியீடு 1956) எனும சிறந்த நூலின பககம் - 23 இல அடிககுறிபபாகத தரபபடடுள்ளது இக குறிபபுச சரியான பெயாபபன்று மூல நூலில் (Tamils 1800 years ago) சரியாகக கொடுக்கபபடடுள்ளது ஒளி நாடு பற றிய தமிழ பிராமிக கலவெடடொன்று மதுரை மேலூரில கணடுபிடிக்கபபடடுளளது. The Sunday Standard 26-9-71.

தமிழ்மொழியின் கிளைமொழி (Dialect) பேசப்பட்ட பன்னிரு நாடுகளுள் குட நாடு அல்லது எருமை நாடும் ஒன்று என்பது கருதத் தகுந்தது. இச் செந்தமிழ் நாட்டினின்று எருமை வெளியனார் (புறம்.273, 303, அகம்.73) என்ற புலவரும், அவரது மகனாராகிய கடவனார் (அகம்.72) என்பாரும், பண்டைத் தமிழ்ப் பாவலர்களாக இலங்கியுள்ளனர்.

எருமை நாட்டில் பேசப்பட்ட மொழியை 'வடுகமொழி' என்று குறித்தனர். பழங்காலத்தில் திருப்பதிக்கு வடக்கே இருந்த மக்களும் மைசூர் மாநில மக்களும் 'வடுக' என்ற மொழியையே பேசி இருத்தல் வேண்டும். பின்னர் தான் வடுகமொழி தெலுங்கிற்கே உரிய பெயராக நிலைத்திருக்க வேண்டும்[1]. கன்னடப் (கருநாடகப்) பெண்டிர் பேசிய மொழியை வடுக என்றே கலிங்கத்துப் பரணி ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

மழலைத் திரு மொழியர் சில வடுகும் சிலதமிழும்
குழறித் தரு கருநாடியர் குறுகிக் கடை திறமின்
(கடைதிறப்பு -22)

யாப்பிலக்கண நூலாசிரியரான காக்கை பாடினியார்,

'வடதிசை மருங்கில் வடுகு வரம்பாகத்
தென்திசை உள்ளிட்ட'

என்று குறித்திருப்பதை நோக்குக[2]. வடுக என்பது கன்னடத்தையும், தெலுங்கையும் குறிப்பது என முன்பே விளக்கப்பட்டது. தமிழகத்தின் எல்லை இன்றைய கன்னட நாட்டு எல்லை, தெலுங்கு நாட்டெல்லை வரை நீண்டிருந்தது என்பது இதனாலும் உறுதியாகிறது.

### 3.4. வேங்கட எல்லை கிருட்டிணை ஆறுவரை

தமிழகத்தில் வடமுனையில் உள்ள நாடுகள் அருவா நாடு என்றும்; அருவா வடதலை நாடென்றும் பகுக்கப்பட்டிருந்தன. இந்நாடுகளே 'தொண்டை நாடு' எனப் பேசப்பட்டன. அருவா நாடுகளில் வாழ்ந்த மக்கள் 'அருவர்' எனக் குறிக்கப்பட்டனர். 'அருவர்' என்றும் அந்நாட்டுத் தமிழர் அழைக்கப்பட்டனர். அருவர் என்பதே தமிழர்க்கு வழங்கும் பெயர்களுள் ஒன்றாயிற்று.

---

1 1800 ஆணடுகடகு முறபடட தமிழகம், ப - 56

2 செயயுளியல நூறபா, 1 உரை

'அருவர்! அருவர்! எனா இறைஞ்சினர்' எனவரும் கலிங் கத்துப்பரணி கண்ணியில் 'அருவர்' என்ற சொல் தமிழரையே குறித்தல் காண்க[1].

அருவர் எனும் தமிழர் வாழ்ந்த தொண்டை நாடு வட பெண்ணைக்கும், தென்பெண்ணைக்கும் இடைப்பட்ட பகுதி யாகும்[2]. வடபெண்ணையாறு மைசூரில் பிறந்து முழுக்க முழுக்க ஆந்திர மாநிலத்தில் ஓடுகிறது. இவ்வடபெண்ணையாறு வரை அருவாநாடு நீண்டிருந்தது என்பது தெளிவாயிற்று. தொல் காப்பியத்தின் மொழியெல்லை வடவேங்கடம் வரை இருந்தது என்பது பாயிரக் கூற்று. கிருட்டிணை ஆறு வரை இவ்வேங்கடம் பரவியிருந்தது என்பது, முன்னே இலக்கியச் சான்றுகளாலும் ஆதனுங்கன் கல்வெட்டுச் சான்றுகளாலும் நிறுவப்பட்டது. பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டின் வட எல்லை கிருட்டிணை ஆறுவரை இருந்தது என்பதைச் சிற்ப சாத்திரம் கூறுகிறதென்று கேட்டிருக்கின்றேன் என்று டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் குறிப்பிடுகிறார்[3].

"நள்ளிகைக்கு 16 ஆம் பாகையில் உள்ள கிருட்டிணை யாற்றின் ஊற்றுக்கண் தொடங்கி அவ்ஆறு கடலோடு கலக்கும் இடம் முடிய நீண்டு விளங்கும் நிலப்பகுதியைப் பாண்டிய மக்கள் தொகுதியின் வாழிடத்து வட எல்லையாகக் குறிக்கின்றார் பிளைனி". என்கிறார் கொலென்தென்பார் எனும் அறிஞர்[4]. இவற்றை எல்லாம் நோக்கத் தமிழகத்தின் பண்டைய வட எல்லை கிருட்டிணை ஆறுவரை நீண்டிருந்தது என்பது உறுதிப்படும்.

'தொல்காப்பியஞ் செய்கின்ற காலத்தில் நெல்லூர் மாவட் டத்தின் தென்கோடியும், சித்தூர், வடார்க்காடு, செங்கற்பட்டு,

1. காளிகருக கூளி கூறியது கலிஙகததுபபரணி, 141 (மர்ரே பதிபபு)

2. the river South Pannar where began the division known as Aruvanadu, which extended north wards along the coast of almost as far as Northern Pennar This constituted theThondainadu ... .. . .. . Dr S.K. Ayyangar Introducation to the Pallavas of Kanchi P 2

3 சங்கத்தமிழும பிறகாலத் தமிழும, 1934, ப 10

4 மேனாட்டறிஞா கணட தமிழகம, ப. 2

தென்னார்க்காடு, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மலையாளம், நீலகிரி, என்னும் மாவட்டங்களும் தென் கன்னட மாவட்டத்தின் முக்காற்பங்கும், மைசூர் மாநிலத்தின் தென்பாதியும், திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை மாநிலங்களும் கடலின் வாய்ப்பட்ட பெரியாற்றோடு கூடிய பனை நாடுகளும் தமிழ வழங்கு நிலங்களாகவே இருந்தன என்பதும் அக்காலத்து இந்நிலங்களில் வேறு மொழிகள் வழங்கிற்றில என்பதும் நன்கு விளங்குகின்றன' என்ற அறிஞர்களுடைய கருத்தும் தொல்காப்பியர் காலத் தமிழ் எல்லை இன்றைய திருப்பதி மலையோடு ஒடுங்கி விட்டதன்று என்பதைத் தெளிவுபடுத்தும்[1].

## 3.5. பன்னிரு நாடுகளும் அவற்றின் இருப்பிடமும்

தொல்காப்பியர் குறிப்பிடும் 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்' என்பதற்குச் செந்தமிழ் நாடு அல்லாமல் அதனைச் சார்ந்த மற்றப் பன்னிரு நாடுகளை எடுத்துக் காட்டுவார் தெய்வச் சிலையார் என்னும் உரைகாரர். இக்குறிப்பை எடுத்துக்காட்டி இக் கருத்தையே சார்ந்துரைப்பர் சேனாவரையப் பதிப்பாசிரியர் அறிஞர் பாவாணர்[2]. அரசஞ் சண்முகனார் 'செந்தமிழ் நிலமென்றது செந்தமிழ் இயற்கையும் திரிபுஞ் சேர்ந்த பன்னிரு நாடாகலானும் அவ்வுரை பொருந்தாது என்ப' என்று தெய்வச் சிலையார் உரையை மறுத்துரைப்பர். தென் பாண்டிகுட்டம் .......... 'முதலாய பன்னிரண்டு நாடுகள் தாம் செந்தமிழ் சேர்ந்த நிலங்கள் என்பது அரசஞ் சண்முகனார் கருத்து[3].' யாப்பருங்கல உரைகாரர், சங்கர நமச்சிவாயர், மயிலைநாதர், வி. கனகசபை, ந.சி. கந்தையா ஆகியோரது கருத்தும் இதுவே. தெய்வச் சிலையார் குறிப்பிடும் பன்னிரு நிலங்களில் 'கலிங்கமும்' ஒன்றாகக் குறிககப்படுகிறது. கலிங்கம் என்பது இன்றைய ஒரிசா (Orissa) மாநிலமாகும். அம்மாநிலத்தில் பேசப்படும் ஒரிசாமொழி தமிழைச் சார்ந்ததோ, திராவிட இனத்ததோ அன்று, ஆதலின் அதனைச்

1 சங்கநூல கா ர கோவிநதராசன், மேறகோள ந.சி கநதையா, தமிழகம், ப 65
2 சேனாவரையம, கழக வெளியீடு, நூற்பா. 400 அடிககுறிப்பு
3. ந சி கநதைய, தமிழகம், ப 70

செந்தமிழ் சேர்ந்த நிலம் எனக் கொள்ளுதற்கில்லை[1]. இதுபோன்ற தடை இருப்பதால் தென்பாண்டி முதலான நாடுகளையே செந் தமிழ் சேர்ந்த பன்னிரு நிலமெனக் கொள்ளல் நேரிது.

இனி அப்பன்னிரு நாடுகள் அமைந்த இடம் பற்றிய விளக் கங்களை அறிதல் வேண்டற்பாலது. தமிழகத்தின் மேலைக் கடற் கரை யோரத்தின் தெற்குத் தொடங்கி வடக்கு நோக்கி வேணாடு, குட்டநாடு, குடநாடு, கற்காநாடு, பூழிநாடு அமைந்துள்ளன். கீழைக் கடற்கரைப் பகுதியில் தெற்கிருந்து வடக்கு நோக்கித் தென்பாண்டி நாடு , பாண்டி நாடு, பன்றிநாடு, புனல்நாடு, அருவாநாடு, அருவா நாட்டிற்கு மேற்கே மலாடு, சீதநாடு, வடக்கே அருவா வடதலை நாடு ஆகியன அமைந்துள்ளன. அருவா வடதலை நாடு உள்ளிட்ட வேங்கட நெடுவரை கிருட்டிணை ஆறுவரை பரவிக் கிடக்கிறது.

**வேணாடு**

தற்போதுள்ள கோட்டாறு என்னும் பகுதியோடு கூடிய திருவாங்கூர்ப் பகுதியே வேணாடு எனத் திருவாங்கூர்ப் பழம் பொருளாராய்ச்சி வெளியீடு குறிக்கின்றது. குட்ட நாட்டிற்குத் தெற்கிலுள்ள நாடு இது. இப்பகுதியிலுள்ள தாழ்ந்த குன்றுகளும், பள்ளத்தாக்குகளும் வளமான மூங்கில் காடுகளால் மூடப் பெற்றுள்ளன. வேண்நாடு அதாவது மூங்கில் நாடு என்பது இதன் காரணப் பெயராகும்[2]. வேளிர் வாழ்ந்த நாடு, வேள் + நாடு = வேணாடு என்றாயிற்று எனக் கருதுவாரும் உண்டு[3]. பேரா. மு. இராகவையங்கார் வேணாடு என்பது 'கூர்ச்சரம்' அல்லது மகாராட்டிரம் என்பர்[4].

---

1 இககருததுககு மாறாக ஒரிசா நாட்டுக குனறுகளில இனறும் பேசபபடும கூ (K U) மொழி திராவிட மொழி தானே (Dr Caldwell P, 35 1956) எனறு காடடக கூடும. இஃது ஆராயத தககது

2. 1800 ஆணடுகடகு முறபடட தமிழகம, ப. - 29

3 டாகடா - மொ அ துரைஅரஙகசாமி, சஙககாலச சிறபபுப் பெயாகள ப 333

4. வேளிா வரலாறு, ப 17. சஙககாலச சிறபபுப பெயர்கள, மேற்கொள, ப. 333

### குட்டநாடு

கேரள மாநிலத்தைத் சேர்ந்த கோட்டயம், கொல்லம் என வழங்கும் நகரங்களை உள்ளிட்ட பகுதி குட்ட நாடாம். இந் நாட்டின் மக்களும் அவர்கட்குத் தலைமை பூண்ட குடியினரும் 'குட்டுவர்' என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். இந்நாட்டின் மன்னனான சேரன் 'குட்டுவன்' என்று அழைக்கப்பட்டான்.

### கற்காநாடு

தற்போதுள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்து மேற்குத்தொடர்ச்சி மலையின் கிழக்குப்புறத்தில் உள்ள கற்குன்று கள் நிறைந்த பகுதியே கற்கா நாடாகும்.

### குடநாடு

குட என்றால் மேற்கு என்று பொருள். தமிழகத்தின் மேற் குப் பகுதியில் உள்ள நாடு. எருமைநாடு தற்கால மைசூர் மாநிலம் என்பது முன்பே குறிக்கப்பட்டது. குடநாட்டின், ஒரு பகுதி தென் பகுதி இன்றைய கேரளத்தையும், வடபகுதி மைசூரையும் குறிக்கும்.

### பூழிநாடு

பூழி அல்லது 'மணற் பாலைப் பாப்பு' தற்கால அகலப்புழை ஆற்றின் கரையிலிருந்து பொன்னானி ஆற்றின் கடல் முகம் வரை பரவி இருந்ததாதல் வேண்டும். இப்பூழி நாடு நன்னனு டைய நாடாகப் பேசப்பட்டுள்ளது. பூழிநாட்டு மக்கள் கிழக்குப் பக்கமாய்ச் சென்று பாண்டிய நாட்டில் குடியேறி வாழத் தொடங்கிய பின்னர்தான் பாண்டிய மன்னன் பூழியர் கோன் எனப்பட்டான்[1].

### தென்பாண்டி நாடு

குமரிமுனையை ஒட்டிய நாஞ்சில் நாடே இப்பகுதியாகும்.

### பாண்டி நாடு

தமிழ் நாட்டை 13 பிரிவாகப் பிரித்து அவற்றுள் ஒன்று பாண்டி நாடு எனக் கொள்கிறார் அறிஞர் வி. கனகசபை.[2] இப் பாண்டி நாட்டை நடுவாகக் கொண்டே ஏனைய நாடுகள்

1 வேளிா வரலாறு, ப 34

2. 1800 ஆணடுகடகு முறபடட தமிழகம், ப 23

பெயரிடப்பட்டுள்ளன. பாண்டி நாட்டுக்கு மேற்கே உள்ளது தான் குடநாடு என்பதும், அதற்கு நேர் தெற்கே உள்ளது தான் தென் பாண்டிநாடு என்பதும் கவனித்தற்குரியன. அக்காலத்துத் தமிழ் நிலைபெற்ற இடம் பாண்டிய நாடு என்பதாலும் தொல்காப்பியம் பாண்டியன் அவையில் அரங்கேற்றப்பட்டதாலும், இன்ன பிற சிறப்பானும் பாண்டி நாட்டை மையமாகக் கொண்டனர் போலும்.

### பன்றிநாடு

பாண்டி நாட்டுக்கு வடக்கே 'வேட்டுவர் நாடு' அல்லது 'வேடர் நாடு' இருந்தது. பன்றிகள் நிறைந்த நாடு எனுங் கருத்தில் இவ்வாறு அழைக்கப்பட்டது[1]. பழனி மலையைச் சுற்றி இருந்த பகுதியே 'பன்றி நாடு' எனப்பெயர் பெற்றதென்று தமிழ்ப் பேரகர முதலி காட்டுகிறது.

### புனல்நாடு

நீர் நிறைந்த, வளம் மிகுந்த நாடு என்பது புனல் நாடு என்பதன் பொருளாகும். இது சோழ நாட்டைக் குறித்ததாதல் வேண்டும். சேனாவரையர் பொங்கர் (சோலை நாடு) எனக் குறிப்பிட்டதும் இந் நாட்டையே யாதல் வேண்டும்.

### அருவாநாடு

புனல் நாட்டுக்கு வடக்கிலுள்ளது இந்நாடு. கொள்ளிடத்திற்கு வடக்கே உள்ள தென்னார்க்காடு மாவட்டத்தின் பெரும் பகுதி 'அருவாநாடு' எனக் கருதப்படுகிறது.

### அருவா வடதலை நாடு

இது தற்போதுள்ள செங்கற்பட்டு மாவட்டமே எனத் தமிழ்ப்பேரகர முதலி கூறுகிறது[2]. அருவா வடதலை நாடு உள்ளிட்ட தொண்டை நாட்டின் எல்லை, ஆந்திராவில் ஓடும் வட பெண்ணையாறு வரை என்ற செய்தி முன்னரே விளக்கப்பட்டது.

### சீதநாடு

தற்காலத்துக் கோயம்புத்தூர் நீலமலை மாவட்டப் பகுதிகளைக் கொண்ட நாடு சீத நாடாம்.

1. 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், ப. 46

2 Tamil Lexicon P - 135

### மலாடு

மலைநாடு என்பதன் மரூஉவே 'மலாடு' என்பதாம். தற்காலத்துத் திருக்கோயிலூரும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுமே மலாடு ஆகும். அதனை ஆண்ட மலையமான் நாடே, மலாடு என்று திரிந்தது என்பாரும் உளர்.

அருவா, அருவாவடதலை நாடுகளுக்கு அப்பால் அயிரை ஆற்றின் வடகரைப் பகுதியும் உள்ளிட்டு, கிருட்டிணை ஆறு வரைக்கும் பரந்துள்ள வெப்பம் நிறைந்த மண்டலமே வேங்கடமாகும். இவ்வேங்கடமே தொல்காப்பியப் பாயிரத்தில் வடவேங்கடம் எனச் சுட்டப்பட்டதாதல் வேண்டும். இக்காலத்து இவ்வெல்லைக்குள், தெலுங்கு, கன்னட, துளு மொழிகள் பேசப்பட்டாலும், தொல்காப்பியர் காலத்தில் செந்தமிழின் கிளை மொழிகள் (Dialects) பேசப்பட்ட பகுதியாகவே இருந்திருத்தல் வேண்டும்.

## 3.6. மொழிவழிச் சான்றுகள்

தொல்காப்பிய விதிகளுள் சங்ககாலத் தமிழுக்கும், அதன் பின்னே வந்த தமிழுக்கும், தற்காலத் தமிழுக்கும் பொருந்தாத சில விதிகள் உள்ளன. இத்தகு விதிகள் எல்லாம் வழக்கொழிந்தன என்று தள்ளப்பட்டு வந்தன. ஆனால், அறிஞர் கால்டுவெல்லுக்குப் பிறகு திராவிட மொழிகளின் ஒப்பீட்டாராய்ச்சி வளரத் தொடங்கியது. இவ்வாராய்ச்சியால், சில தொல்காப்பிய விதிகள் புது விளக்கம் பெற்றன. தமிழுக்குப் பொருந்தாதன என விலக்கப்பட்ட தொல்காப்பிய விதிகள், தற்காலத் தெலுங்கு , கன்னட, துளு, மலையாள மொழிகளில் அமைந்து போற்றப்படுவதை அறிஞர்கள் கண்டார்கள். இந்த ஆய்வால் இன்னொரு செய்தியும் உறுதியாயிற்று. தொல்காப்பியர் தம் இலக்கணத்திற்கு எடுத்துக்கொண்ட மொழி எல்லை, தற்காலத் தமிழ் நாட்டெல்லையை மட்டிலும் கொண்டது அன்று; அதனினும் பரந்த தெலுங்கு, கன்னட, மலையாள, துளு மொழிகளும் உள்ளிட்ட பழந்தமிழகமே அவருக்குத் 'தமிழ் கூறு நல்லுலக' மாக இலங்கியிருத்தல் வேண்டும் என்பது உறுதியாயிற்று. சான்றிற்குச் சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

I தா, வா என்னும் வினை அடிகள் முற்றிலும், எச்சத்திலும் தன்மை, முன்னிலை இடங்களில் மட்டுமே வரும்.

(அ) (தொல், சொல், 29)

எ. டு : எனக்குத் தந்தான்
என்னிடம் வந்தான்
உனக்குத் தந்தான்
உன்னிடம் வந்தான்

செல், கொடு என்னும் வினையடிகள், முற்றிலும், எச்சத்திலும், படர்க்கை இடத்திலும் மட்டுமே வரும்.

(ஆ) (தொல். சொல்.301)

அவனிடம் சென்றான்
அவனிடம் கொடுத்தான்.

இவ்வரையறைகள் இன்றைய தமிழில் போற்றப் படுவதில்லை, இலக்கியத் தமிழிலும் வழக்கு மாறிய இடங்கள் உள்ளன.

| | |
|---|---|
| எனக்குத் தந்தான் | (தொல்காப்பியம்) |
| எனக்குக் கொடுத்தான் | (தற்காலம்) |
| உனக்குத் தந்தான் | (தொல்காப்பியம்) |
| உனக்குக் கொடுத்தான் | (தற்காலம்) |

என்று தற்காலத் தமிழில் முரணி வழங்கக் காண்கிறோம். ஆனால் (தொல்காப்பியம் கூறும்) இந்த அமைப்பு இன்றும் சிதையாமல், குலையாமல் தோடர் மொழியில் போற்றப்படுகின்றது. இதனை அறிஞர் எம். பி. எமனோ (Emeneau) எடுத்துக் காட்டியுள்ளார்.

II "முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோள் கிளவி"

(தொல், சொல்.226)

என்ற தொல்காப்பிய நூற்பாப்படி, வியங்கோள் வினை படர்க்கையில் மட்டுந்தான் வரவேண்டும். ஆனால் இந்த நடை முறை சங்க காலத்திலேயே வழக்கிறந்து விட்டது. பிற்காலத் தற்காலத் தமிழிலும் போற்றப் படுவதில்லை. அங்ஙனமாயின் தொல்காப்பியர் விதி செய்தது எம்மொழியைப் பார்த்து என்பது

ஆய்வுக்குரியது. இன்றும் கன்னட மொழியில் கெ (ke), கெ (ghe) என்றும் வியங்கோள் இறுதி நிலைகள் முன்னிலையிலும் தன்மையிலும் வரப்பெறுவதில்லை; படர்க்கையில் மட்டுமே வருகின்றன. தெலுங்கில் எடுன்ன, என்ற வியங்கோள் இறுதி நிலைகளும் இவ்விதிக்கு இலக்கியமாய்த் திகழுகின்றன*.

III தொல்காப்பியர் காலத்துத் தமிழ், மலையாளத்தையும் உள்ளடக்கியது என்பதற்குப் பிறிதொரு சான்று. தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பாக்கள் 241, 242, 287, 378, 402, ஆகியன பனி, வளி, மழை, வெயில், இருள் என்னும் சொற்கள் அத்துச் சாரியை பெற்றே வழங்குகின்றன என்று வலியுறுத்துகின்றன. இயற்கைத் தொடர்பான இச்சொற்கள் அத்துப்பெற்று வர வேண்டும் என்பதைப் பிற்கால இலக்கண நூற்களான நேமி நாதம், வீரசோழியம், நன்னூல், இலக்கண விளக்கம் ஆகியன குறிக்கவே இல்லை. அத்துச் சாரியை பெற்றுவரும் மேற்கண்ட சொல் வழக்கு, சங்க இலக்கியத்திலும் காணப்படவில்லை. ஏனைய பதினெண்கீழ்க்கணக்கு நூற்களிலோ, ஐம்பெரும் காவி யங்களிலோ இவ் வழக்கு வழங்கவுமில்லை. பக்தி இலக்கியங் களான தேவார நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்திலும் காணப் படுமாறில்லை. தற்காலத் தமிழிலும் இல்லை. இங்ஙனம் இலக் கணத்திலும் இலக்கியத்திலும் இல்லாத மொழி வழக்கத்தைத் தொல்காப்பியர் ஏன் வகுத்தார்? இந்த ஆராய்ச்சி மனத்தோடு திராவிட மொழிகளை ஆராயின் உண்மை துலங்கும். மலையாள மொழியில் (பனி, வளி மழை, வெயில், இருள் என்னுஞ் சொற் கட்கு) அத்துச் சேர்த்துச் சொல்லும் வழக்கம் இன்றும் காணப் படுகிறது.

பனியத்துப் போகருது
மழையத்துப் போகருது
வெயிலத்துப் போகருது

என்ற வழக்கு மொழிகளைக் கேரள நாட்டில் இன்றுங் கேட்கலாம்.

---

* A History of Tamil Language, Prof T P M p 51

இதனாலும் தொல்காப்பியர் காலத் தமிழும், தமிழகமும் திருப்பதி தொடங்கி குமரி உள்ளிட்ட மொழியுலகம் மட்டுமன்று என்பது வலியுறும். அது கேரள மாநிலத்தையும் கன்னட மாநிலத்தையும், ஆந்திர மாநிலத்தில் ஒரு பகுதியையும் உள்ளிட்ட ஏறக்குறைய 192238 சதுரக் கற்கள் (Square miles) பரப்புடைய பெரும் பகுதியாகும். இன்றோ அவ்வெல்லை 50132 சதுரக் கற்களாகச் சுருங்கிவிட்டது.

# 4

# தமிழர் இனம் என்ற பெயர்

ஆங்கிலத்தில் Race என்ற சொல்லுக்கு மானிட இயல் கலைச்சொல் அகராதி குறிப்பிடும் பொருளிலேயே இங்கும் 'இனம்'என்ற சொல் கையாளப்படுகிறது . வம்சம் (Descent), இரத்த உறவு, பரம்பரை (hereditary) என்ற மூன்று அடிப்படையில் இணைந்திருக்கும் மக்கள் கூட்டத்தை இனம் என்று குறிப்பிட லாம். உயிரியல் அடிப்படையில் செடி கொடி, மனிதர், விலங்கு ஆகியவற்றை வேறு வேறு இனமாகப் பாகுபாடு செய்வர். இப் பாகுபாட்டில் நாடு, மொழி , பழக்கவழக்கங்கள் ஆகியன அளவு கோலாகக் கொள்ளப்படுவதே இல்லை. எனவே, இனத்தை வரை யறை செய்வது உயிரியல் அடிப்படையிலான உடலியல் கூறு களே. உடலியல் கூறுகள், உடல் தோற்றத்தாலும் ஓடும் குருதி யாலும் பாரம்பரியப் பழக்கவழக்கங்களாலும் முடிவு செய்யப்படு கின்றன. ஆக, சிக்கலான நீண்டகால பரிணாமப் போக்கில் மனித குலத்தில் உண்டான உயிரியல் பாகுபாடே இனம் என்பதாகும்.

## 4. 1. இனத்தை அறிவதற்குரிய அடையாளங்கள்

1. தோல், தலைமயிர், கண்கள் ஆகியவற்றின் நிறம்
2. தலைமயிர், மேல் இமை, மூக்கு, உதடுகள் ஆகியவற்றின் வடிவமைப்பு.
3. முகம், தலை ஆகியவற்றின் அமைப்பு
4. உடலின் நீளமும், தகவுப்பொருத்தமும்

மேற்கண்டவற்றின் அடிப்படையில் உலக இனங்களை மூன்று தலைமை இனங்களாக மானிட இயல் அறிஞர்கள் பிரித்திருக்கிறார்கள். அவையாவன :

**மூக்கு அமைப்பு**



1) காகேசியர் (ஆரியர்) 2) இடைத்தர மானது 3) நீக்ரோ ஆஸ்திரேலியர் (திராவிடர்)

1.


2.


3.


4.


1.மெல்லிய உதடுகள் 2. நடுத்தர உதடுகள்
3. பருத்த உதடுகள் 4. உப்பிய உதடுகள்

# PROGNATHISM




I. Orthognathous




2. Prognathous




**3. Asthitha nallur skull**

**A. Alveolar point FL. Franksfort N. Nasion**

### 4.1.1. நீக்ரோய்ட் இனம்

இது நீக்ரோ, திராவிடர்கள், ஆஸ்திரேலியப் பழங்குடிகளை உள்ளடக்கியதாகும். இவ்வினத்தின் அடையாளங்கள் பொதுவாகப் பின்வருமாறு அமைந்திருக்கும்.

1. தோல், மயிர் , கண்கள் ஆகியன கரிய நிறத்தின.
   (i) தலைமுடி சுருண்ட முடி அல்லது அலை படிந்ததாக இருக்கும்.
   (ii) முகத்தின் மேலும் உடம்பின் மேலும் மிகவும் அருகிய ஆனால் சிலருக்கு அடர்த்தியான மயிர் போர்த்திருக்கும்.
2. முகம், தாடைப்புறம் ஓரளவு அகன்றிருக்கும்.
3. மூக்குக் கூர்மை அற்றதாயும் அகன்ற மடல்களைக் கொண்டதாயும் இருக்கும். மூக்குத் துவாரங்களை இரண்டாகப் பிரிக்கும் தசைத்தண்டு ஓரளவு விட்டவாகுடன் இருக்கும்.
4. மேல் தாடை கொஞ்சம் துருத்தி இருக்கும்.
5. உதடுகள் தடித்திருக்கும், மேல் உதடு முன் துருத்தி இருக்கும்.
6. வாய் பிளவு சற்றே பெரிதாக அகன்று இருக்கும்.
7. கால்கள் உடலுடன் ஒப்பு நோக்கும் போது நீளமாக இருக்கும்.

### 4.1.2. காகேசிய இனம்

தோலின் நிறம் வெள்ளை; மங்கிய வெள்ளை; பழுப்பு வெள்ளையாக அமைந்திருக்கும். முகத்தின் மீது ரோஜா வண்ணச் சாயல் இருக்கும். தலைமுடி வெளிறியோ கருத்தோ இருக்கும். தலைமுடி மென்மையானதாகவும், அலை படிந்ததாகவும் இருக்கும். உடலில் மயிர் படர்ந்திருக்கும். கன்னக் கதுப்புகளில் தாடியும் மீசையும் அடர்த்தியாய் அமைந்திருக்கும். நெற்றி நேராகவோ ஓரளவு சரிந்தோ இருக்கும். கன்ன எலும்புகளும், தாடைகளும் குறைவாகப் புடைத்திருக்கும். முகம் வெகுவாக முன்னே துருத்தியிருக்கும், தாடை நீட்டம் அற்றிருக்கும். கண்களின் ஓரங்கள்

ஒரே மட்டத்தில் அமைந்திருக்கும். பெரும்பாலாருடைய முடிகள் தவிட்டு நிறமானவை. வெளிறிய, சாம்பல் நிற, நீல, இளநீல விழி களும் காணப்படுகின்றன. மூக்குக் கூர்மையானது. மூக்குப் பொருத்து உயரமானது. உதடுகள் மெல்லியவை.

### 4.1.3. மங்கோலிய இனம்

இம்மக்களின் தோல் மஞ்சள். வெளிறியோ ஆழ்ந்த நிறங் கொண்டோ இருக்கும். தலைமயிர் நேராகவும் விறைப்பாகவும் இருக்கும். முடி கருப்பு நிறம். தாடி மீசைகள் காலம் கடந்தே அடர்த்தியின்றி வளரும். உடல்மேல் மயிர்ப்போர்வை இருப்ப தில்லை. பெரிய முகம். நடுத்தரமாக முன்னே நீண்டு இருக்கும். கன்ன எலும்புகள் புடைத்துத் துருத்தி இருப்பதனால் முகம் கணிச மாய்த் தட்டையாய் இருக்கும். விழிகள் தவிட்டு நிறமானவை. கண்மேல் இமை மடிப்பு நன்கு வளர்ந்திருக்கும் . மூக்கு அகல மானது. மூக்குப் பொருத்து தாழ்ந்திருக்கும், உதடுகள் மெல்லி யவை. மேல் உதடு சற்று முன் துருத்தி இருக்கும்.*

இனங்களை மேற்கண்டவாறு உடல் இயல் அடிப்படை யில் பாகுபாடு செய்வதே திட்பமானது, எளிதில் மாறாதது. மொழி, நாட்டு அடிப்படையில் பாகுபடுத்துவது பொருத்தம் அற்றது. ஏனேனில், மொழி, நாடு என்பன எளிதில் மாறக் கூடி யவை. மனித இன வரலாற்றில் இவை மிக அண்மையிலேயே தோன்றியவை. எனவே, திராவிடர், ஆரியர் என்ற பெயர்கள் மொழி அடிப்படையில் எய்திய பெயர்கள் என்று கொள்ளுவதே பொருத்தம். திராவிட இனம், ஆரிய இனம், என வழங்குவது சரியானது அன்று. தமிழ் இனம் என மொழி அடிப்படையில் இனப்பெயர் தருவதும் பிழையானதே.

ஆனால் உடல் இயல் அடிப்படையில் பாகுபட்டு நிற்கும் வேறுவேறு இனங்கள் பல நூற்றாண்டுகளாகக் குறிப்பிட்ட இடங்களில் தங்கிக் கூட்டமாக வாழும்போது மொழியை அமைத்துக் கொள்கின்றன. எனவே, நீண்ட காலம் தலைமுறை தலைமுறையாக உடல் இயலால் ஒன்றுபட்ட ஒரு சில இனங் கள் மொழியை அமைத்துக் கொண்டு வாழ்கிறபோது மொழி

* மேலே உளள இனததின அடையாளஙகள மி நெஸதூாஹ எழுதிய மனித இனஙகள எனற நூலை ஒடடித தரபபட்டு ளளன

அடிப்படையில் இனத்தைப் பெயரிட்டு வழங்குவதையும் ஓரளவு தவிர்க்க முடியாதது ஆகி விடுகிறது.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை குறிப்பிட்ட ஒரே இனம் இருந்ததாகவோ இருக்கின்றதாகவோ கூற இயலாது. எனினும், நீக்ரோயட் இனக் கூறுகளை மிகுதியாகத் தம்மிடம் அமையப் பெற்ற மக்கள் தமிழ்நாட்டில் தலைமுறை தலைமுறையாக மிகுதி யாக வாழ்ந்து வருகின்றனர் எனலாம். தமிழ்நாட்டில் காகேசியர் இனக்கலப்புச் சங்க காலத்துக்கு முன்பே தொடங்கி விட்டது என் பதைச் சங்க இலக்கியங்களும் பின்வந்த இலக்கியங்களும், கதை களும், படையெடுப்புகளும், அயல்மொழிச் செல்வாக்குகளும், ஒரு சில சாதி மக்களும் உறுதிப்படுத்துகின்றனர்.

ஓரளவு கலப்பு இனமாகிவிட்ட தமிழ் மக்களிடையே வேற்று இனத்தின் கலப்புக் குறைவாக இடம் பெற்றுள்ளோர் தமிழகத்துப் பின் தங்கிய மக்களும், ஆதி திராவிடர்களும், மலை யிலும் காடுகளிலும் வாழ் பழங்குடி மக்களுமே ஆவர்.

### 4.2. கலப்பு ஏற்பட்டதன் காரணம்

காகேசிய இனமக்களான ஆரியர்$ கி.மு. 1500-இல் ஆப்கானிஸ்தான் வழியாக இந்துகுஷ் மலைகளைக் கடந்து சிந்து பள்ளத்தாக்கின் வடக்குப் பகுதியில் குடியேறினர். பின்னர், கங்கையின் மேற்பகுதியில் பரவினர் . பிறகு, நர்மதை ஆற்றைக் கடந்து தெற்கு நோக்கி நடந்தனர். மேற்கே உள்ள கேரளத்தின் வழியாகத் தமிழகத்தில் ஊடுருவினர். இவ்வூடுருவலில் சில சில போர்களும் ஆங்காங்கே நிகழ்ந்திருக்கக் கூடும். சிந்து வெளியில் நடந்த போர் இவற்றுள் தலைமை ஆனது. போர்க் கூட்டம் என்ப தால் ஆரியருள் பெரும்பாலோர் (தலைவர்களைத் தவிர) தம்முடன் பெண்களை அழைத்து வந்திருக்க வாய்ப்பில்லை. எனவே, வெள்ளை நிற ஆரிய ஆடவருக்கும் கறுப்பு நிற இந்தியப் பெண் களுக்கும் இடையே தொடர்புகள் ஏற்பட்டிருக்கும். இதனால், வடமேற்கு இந்தியா தொடங்கி தென் இந்தியா வரை ஒரு கலப்பு இனம் உருவாக ஆரியர் வித்திட்டனர். இது மிக அண்மைக்காலம்

$ ஆரியா என்றால் ரிக வேதப்படி அயல நாட்டார் என்று பொருள் வேத காலத்தில இந்தச சொலலுககு 'வெளிநாட டான்' 'வேற்றான்' என்று பொருள இந்தியாவின வரலாறு - முனனேற்றப பதிப்பகம், மாஸகோ 1979, ப 42

வரை தொடர்ந்து நீடித்தது என்பதைக் கேரளநாயர் வரலாறு எடுத்து உணர்த்துகிறது.

### 4.2.1. நாயர் திருமண முறை

நாயர் பெண்களுக்குத் திருமணம் நேர்ந்தால் திருமணம் முடிந்தபின் தத்தம் மாப்பிள்ளையருடன் முதல் உடல் உறவு கொள்வது தடுக்கப்பட்டுள்ளது. மணப்பெண் திருமணமான தொடக்க முதல் மூன்று நாள்களிலும் உள்ளூர் நம்பூதரி பிராமணப் புரோகிதரோடு உடல் உறவு கொள்வது கட்டாயம் ஆக்கப் பட்டிருந்தது.

மக்கள் தாயமுறை




மருமக்கள் தாயமுறை



## 4.2.2. மருமக்கள் தாயமுறை

கேரளம் வாழ் நம்பூதிரி பிராமணக் குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்பிள்ளைகள் பிறந்திருக்குமாகில் மூத்த ஆண் பிள்ளை மட்டுமே நம்பூதரி பிராமணக் குடும்பத்திலே திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டான். எஞ்சிய ஆண்பிள்ளைகள் உள்ளூர் நாயர் குடும்பத்திலேயே திருமணம் செய்து கொள்ள வேண்டும். மருமக்கள் தாயம் என்ற நாயர்களிடம் வழங்கிய சொத்துரிமைப் படி குடும்பச் சொத்து தாய்வழிப் பெண்ணுக்கு இணங்கி இருக்கும். இதனால், நம்பூதிரி பிராமணருக்கு நாயர் வீட்டுப் பெண்ணும் கிடைத்தாள்; அவளோடு சேர்ந்து அவள் சொத்தும் கிடைத்தது. கொச்சின் ஜமின்தார் பரம்பரை சேர்ந்த பெண்கள் கூட இவ்வாறு நம்பூதிரி பிராமணக் கணவர்களைக் கொண்டிருந்தனர்.†

வெளிநாட்டு மக்களை அதுவும் குறிப்பாக வெள்ளை நிறத் தோரை உயர்வாகக் கடவுளுக்கு நிகராகக் கருதும்பழக்கம் ஆசிய ஆப்பிரிக்க, ஆஸ்திரேலியப் பழங்குடிகளிடம் இருந்தது. அறிமுகம் இல்லா விருந்தினர்களை அகமும் முகமும் மலர விருந்தோம்ப வேண்டும். என்பதும் இப்பழங்குடிமக்களின் பழக்கமாகும். இந்தக் கருத்தும், பழக்கமும் ஆரிய - திராவிடக் கலப்பை மிக எளிதாக்கி விட்டன.*

---

† K.P Aravaanan · Anthropological Studies of the Dravido Africans. P. 81.

* அறிமுகம இலலாப புதிய விருநதினருககுத தன மனைவி யையே அளிககும பழககம ஆபபிரிககப பழங்குடிகளிடம இருநதது பெரிய புராணததில வரும இயறபகைநாயனாா தம மனைவியையே வநத விருநதினருககு அளிததார் எனபதும இஙகே இணைதது எண்ணத தககது

திராவிடத் தொடர்புள்ள பழைய நாகரிக இருப்பிடங்கள்



# 5
# தமிழர் பிறந்தகம் பற்றிய கொள்கைகள்

தமிழர் பேசும் மொழி அவர்தம் தோற்றம், அவரிடம் காணப் படும் பழக்கவழக்கங்கள், அவர்தம் உணவு, உடை முதலான வற்றைக் கொண்டு தமிழரின் பிறந்தகம் பற்றிப் பலவேறு கொள்கைகள் தோன்றியுள்ளன. தமிழ் மொழியுடன் மெசப டோமிய - சுமேரிய மொழிகளுக்கிடையே உள்ள தொடாபு, ஆப் பிரிக்க மொழிக்களுக்கிடையே உள்ள தொடர்பு, ஆஸ்திரேலிய மொழிகளுக்கிடையே உள்ள தொடர்பு, சித்தியன் பாஸ்க் முத லான ஐரோப்பிய மொழிகளுக்கு இடையே உள்ள தொடர்பு ஆகியன தமிழர்தம் தோற்றத்தை மொழி அடிப்படையில் தீர்மானிக்க உதவுகின்றன. தமிழருடைய தோல், தலைமயிர், கண்கள் ஆகியவற்றின் நிறம், தலைமயிர் மேல் இமை, மூக்கு, உதடுகள், ஆகியவற்றின் வடிவம், முகம், தலை, ஆகியவற்றின் அமைப்பு, உடலின் நீளம் தகவுப் பொருத்தம் (Stature) ஆகியன இடத்துக்கு இடம், இனத்துக்கு இனம் வேறுபடுகின்றன. இவற் றில் காணப்படும் ஒருமைப்பாடுகளையும், ஒற்றுமைகளையும் கொண்டு தமிழ் இனத்தோற்றத்தைச் சிலர் தீர்மானிக்கிறார்கள். வாழும் இடம், சுற்றுப்புறச் சூழல், கிடைக்கும் பொருள்கள், சமூகப் போக்கு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மனித இனத்தின் பழக்க வழக்கங்கள் அமைகின்றன. இடம், சூழல், பொருளுக்குத் தக அவை வேறுபடுகின்றன. வேறுபடும் இவற் றிற்கு இடையே தென்படும் ஒற்றுமைகளைக் கொண்டு தமிழர் பிறந்தகம் பற்றிக் கருத்துகள் சொல்லப்படுகின்றன.

மேற்கண்ட அடிப்படையில் தமிழர் பிறந்தகம் பற்றி இது வரை கூறப்படும் கருத்துக்களை ஒன்றன்பின் ஒன்றாகத் தொகுத்துக் காணலாம்.

### 5.1. குமரிக் கண்டத்தினர்

சிலப்பதிகாரம் (11.20-21), கலித்தொகை (104), புறநானூறு (9), குறுந்தொகை (52), இளம்பூரணர் உரை, இறையனார்

களவியல் உரை, அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரை ஆகியவற்றில் குமரிக் கண்டம் பற்றியும் அது இன்றைய தென்னிந்தியாவின் தெற்கே இருந்து அழிந்தமை பற்றியும் கூறப்படும் குறிப்புகளைக் கொண்டு தமிழர் குமரிக்கண்டத்தில் தோன்றினர் என்று தமிழ் அறிஞர்கள் பலர் உய்த்து உரைகின்றனர். இவர்களுள் தலையாயவர் தேவநேயப்பாவாணர், க.த. திருநாவுக்கரசு முதலானோர் ஆவர்.

### 5.2. வட இந்தியாவிலிருந்து வந்தவர்

தமிழர் வடமேற்கு இந்தியா வழியாக ஆரியர் வரும் முன்பு வட இந்தியா முழுதும் பரவியிருந்தனர். திபேத்து, நேப்பாளம் போன்ற இடங்கள் தமிழர்தம் மூல இடங்களாக இருந்தன என்பது ஒரு சிலர் கருத்து. வி. கனக சபை போன்றோர் இக்கருத்தினரே. ஆரியர் சிந்து வெளியை அழித்துப் படையெடுத்த போது வட இந்தியாவில் தங்கியிருந்த திராவிடர் தெற்கு நோக்கிப் பரவினர் என்பது அன்னாரின் கருத்து.

### 5.3. நடு ஆசியாவிலிருந்து வந்தவர்

நடு ஆசியப் பகுதியில் வாழ்கின்ற மாந்தர்களுக்கும் திராவிடர்களுக்கும் இடையேயுள்ள உடல்தோற்ற ஒற்றுமையும் ஒரு சில மொழி ஒற்றுமையும் கொண்டு திராவிடர் நடு ஆசியாவில் இருந்து வந்தவர் என்று ஒருசிலர் கருதினர். இன்றைய ஈரானியப் பகுதியில் அன்று வழங்கிய மொழி, மக்களின் பெயர் 'சித்தியா' (Seythia) என்பதாகும். இந்தமொழிக்கும் திராவிட மொழிக்கும் இடையேயுள்ள ஒரு சில ஒற்றுமைகளைக் கொண்டு திராவிடருடைய மூல இடம் 'சித்தியா' என்ற நடு ஆசியப் பகுதி எனக் கருதப்பட்டது. கால்டுவேல் இக்கொள்கையினர் ஆவார்.

### 5.4. மேற்கு ஆசியப் பகுதியினர்

இன்றைய ஈரான், ஈராக், சிரியா, பாலஸ்தீன், இஸ்ரேல் ஆகிய மேற்கு ஆசிய நாடுகள் பண்டு பழைய நாகரிகங்களின் தொட்டில்களாக இருந்தன. மிகப் புகழ்ப்பெற்ற மெசபடோமிய சுமேரியா, பாபிலோனிய நாகரிகங்கள் தோன்றிய இடம் இங்கு தான் உள்ளது. இந்நாகரிகங்களும் திராவிட நாகரிகம் என்று கருதப்படும்.

சிந்துவெளி நாகரிகத்துக்கும் திராவிடர்க்கும் ஊடே காணப்படும் ஒற்றுமைகளைக் கொண்டு திராவிடர் மேற்கு ஆசியப் பகுதியிலிருந்து வடமேற்கு இந்தியா வந்து வழியில் பலு சிஸ்தானில் தங்கி அடுத்து வடமேற்கு இந்தியாவில் சிந்துவெளி நாகரிகத்தைத் தோற்றுவித்து ஆரியரின் வருகையால் அலைப் புண்டு மேற்குக் கடற்கரை வழியாகத் தெற்கு நோக்கி வந்தனர் என்பது பலர் கருத்து. லிசியர் கிரீத் (Crete) லிருந்து வந்தவர்கள் என்று எரடோடஸ் குறிப்பிடுகிறார். கிரீதில் வாழ்ந்த தொல் இன மக்களின் பெயர் தெர்மிலை (Tarmılaı) என்று கிரேக்கரால் அழைக்கப்பட்டனர்.

மைனர் ஆசியாவில் வாழ்ந்த லிசியன்ஸ் (Lysysns) டிரிம்லே (Trımmlaı) என்று அழைக்கப்பட்டனர். இப்பெயர் தமிழ் திரமிள எனத் தமிழர் பெயரோடு தொடர்பு பெற்றிருக்கிறது. இந்தப் பகுதியில் வழங்கும் சூசியன் (Susıan) மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் அமைப்பளவில் ஒற்றுமை இருக் கின்றது என்பது கால்டுவெல் கருத்து. ஆப்கானிஸ்தான், ஈரான் மேட்டுப் பகுதி, யூப்ரடீசு (Euphrates) டைகிரீஸ் (Trgrıs) ஆற்றுச் சமவெளிகள், மெசபோடோமியா ஆகியவை செமிடிக் இனச் சார்பற்ற (Non - senetıc) ஆரிய சார்பற்ற (Non - Arya) திராவிட சார்புடையவை என்பது பலரின் கருத்து. இப்பகுதியில் வழங்கப் பட்ட அரியன் (Hurrıan), கசித் (Kassıt) ஆகிய மொழிகளுக்கும் சுட்டுப் பெயரில் ஒற்றுமைகள் இருக்கின்றன. திராவிடம், பிராகுவி ஆகியமொழிகளுடன் இப்பகுதியில் வழங்கிய எலாமித் (Elamite) ஆகிய மொழிகளின் இடையே ஒற்றுமைகள் இருக் கின்றன என்பது சிலர்தம் கருத்து.

இம்மொழி ஒற்றுமைகள் அல்லாமல், பழக்க வழக்க ஒற்றுமைகளும் இப்பகுதி மக்களிடையே காணப்படுகின்றன.

(i) தாய்வழிச் சமூக அமைப்பு திராவிடத்தில் காணப்படுவ தாகும். அதனுடைய எச்சத்தை இன்றும், கேரளம், தென் கருநாடகம், கன்னியாகுமரி ஆகிய பகுதிகளில் காணலாம். இதே பழக்கம் எலாமித் (Elamıte) இனத்தவர் இடையேயும் காணப் படுகிறது.

(ii) நாக வழிபாடு திராவிடரிடம் மிகச் செல்வாக்குப் பெற்ற ஒன்றாகும். தென் ஈரானில் சிராஸ் (Shiraz) என்ற பகுதிக்கு

வடகிழக்கே இருந்த 'பெஸ்போலிஸ்' என்ற பண்டைய பாலஸ்தீன தலைநகரில் நாக வழிபாடு வரலாற்றுக்கு முற்பட்ட பழங் காலத்தில் இருந்தது.

(iii) ஊர் என்ற சுமேரியப் பகுதியில், தாய்த்தெய்வம், 'மலை மகள்' என வழிபடப்படுகிறாள். இம்மலைமகள் ஆண்டு திரு விழாவில் திங்களஞ் செல்வனோடு திருமணம் செய்விக்கப்படு கிறாள். இந்நிகழ்ச்சி தமிழகத்துச் சிவன் கோவிலில் மலைமக ளாகிய பார்வதிக்குச் செய்யப்படும் திருக்கல்யாணம் என்னும் நிகழ்ச்சியை அப்படியே நினைவு படுத்துகின்றது. திருச்சி மலைக் கோட்டையிலுள்ள 'அம்மனுக்கும் அப்பனுக்கும்' திருமணவிழா நிகழ்ந்தது. தாலி கட்டுஞ் சடங்கு உட்பட அனைத்துத் திருமணச் சடங்குகளும் (Hindu 9-5-84)* நடத்தப்பட்டன.

(iv) சுமேரியாவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கோவில் அமைப்பு திராவிடக் கட்டட அமைப்பை ஒத்துள்ளது.

(v) தென் இந்தியப் பகுதியில் உள்ள கோவில்களில் மடைப்பள்ளி இடம்பெற்றிருக்கும். அது போல சுமேரியாவில் உள்ள கோவில்களிலும் மடைப்பள்ளி இடம் பெற்றிருந்தது. திராவிடர் கோவில்களில் மடைப்பள்ளி பிரசாதம் கடவுளுக்குப் படைக்கப்பட்டுப் பகிர்ந்து அளிக்கப்படுவது போல சுமேரியக் கோவில்களில் மடைப் பள்ளி பிரசாதம் பகிர்ந்து அளிக்கப்பட்டது.

---

* **Celestial wedding at Rock Fort temple:-**

Tiruchi May.9

Devotees from Tiruchi and neighbourhood saw the celestial wedding of Lord Kalyana Mathrubootheswarar and Goddess Sugunthakunthalamba at the Rockfort temple today.

The Uthsavar idols after exchanging garlands at the foot of the hill, were brought to the 100 - pillar hall where human and other religious rites were performed. At the auspicious time, "Tirumangalyam" was offered to the Goddess by a priest who represented Lord Thayumanavar for the occasion.

The wedding expenses were borne by Sri Mounamadam Kattalai of the Dharmapuram Adheenam Mutt. Vidwan Mouna Mahalinga Tambiran representing Srilasri Guru Mahasannidhanam of Dharmapuram Mutt. organised the celebrations.

(VI) சுமேரியக் கோவில்களில் விழா நாள்களில் இறைச்சி கடவுளுக்குப் படைக்கப்படுவதும் புரோகிதரும் பக்தரும் பகிர்ந்துண்பதும் வழக்கமாகும். இவ்வழக்கம் தமிழகத்துச் சிற்றூர் சிறுதெய்வ வணக்கத்தில் காணப்படுவதாகும். நீலகிரி வாழ் தோடர்களிடமும் இப்பழக்கம் காணப்படுகிறது, மற்ற நாள்களில் இறைச்சி உண்ணாமல் இருக்கும் தோடர்கள் விழா நாள்களில் கடவுளுக்கு எருமையைப் பலியிட்டு இறைச்சியைப் பூசாரியும் பொது மக்களும் பகிர்ந்து கொள்கிறார்கள்.

(VII) ஆண்டவன், இறைவன் என்ற பெயர்கள் தமிழில் அரசனுக்கும், கடவுளுக்கும் பொதுவானவையாகும். கடவுள் வாழ் இடம் 'கோவில்' எனப்படுவதுபோல அரசன் உறைவிடமும் 'கோவில்' என வழங்கப்பட்டதைப் பண்டைய தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன பூசை நாள்களில் கடவுள் படிமத்தை அரசனைப்போல் அலங்கரித்து அரசனுக்குரிய ஒற்றைக் குடை, விசிறி ஆகியவற்றை அமைத்து அரச 'உபசாரம்' செயவது தமிழகக் கோவில் மரபாகும். இது போன்ற முறை சுமேரியரிடமும் காணப்படுகிறது.

மேற்கண்ட ஒற்றுமைகளைக் கொண்டு திராவிடா மேற்கு ஆசியாவில் இருந்து வந்தவா என்று கருதப்படுகிறது. இவ்வாறு கருதுவோர் பலர். அவர்களுள் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடத்தக்கவராவார்.†

## 5.5. நடுநிலக்கடல் பகுதியினர்

ஐரோப்பாவையும், ஆசியாவையும் இடையே பிரிக்கும் கடல் 'நடுநிலக்கடல்' ஆகும். இக்கடலுக்கு வடக்கும் தெற்கும் இருக்கும் நாடுகள் நடுநில நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்நாடுகளில் வாழ்ந்த மக்களின் உடல் தோற்றம், பேசும் மொழி, அவரிடம் காணப்படும் பழக்க வழக்கங்கள் ஆகியன திராவிடத் தமிழர்தம் தோற்றம், மொழி ஆகியவற்றோடு ஒத்து இருக்கின்றன. எனவே இவ்வொற்றுமையைக்கொண்டு தமிழர் நடுநிலக் கடலின் நாடுகளில் இருந்து தென்னிந்தியாவுக்குக் குடியேறி-யிருக்கவேண்டும் என்று பலர் கருதினர்; கருதுகின்றனர். ஐரோப்பிய அறிஞர்கள் பலரும் இக்கருத்தினரே திரு. லாவோரி

† 'A History of South India, 1566 p 64.

(Lahovary) 1963-இல் தான் வெளியிட்ட 'Dravidian Origins and the West' என்ற நூலில் திராவிடர் நடுநிலக்கடல் நாட்டில் பிறந்து பரவியவர்கள் என்ற கருத்தைப் புதிய சான்றுகளுடன் எடுத்துக் கூறி தமிழரின் மூலஇடம் 'பாஸ்க்' மொழிகள் பேசப்படும் பகுதி என்ற முடிவுக்கு வந்தார். சபேனிசைச் சேர்ந்த சைபிரியா முதல் இந்தியாவரை அமைந்துள்ள நாடுகள் அனைத்தும் சமயப் பழக்க வழக்கங்களிலும், கடவுள சார்ந்த நம்பிக்கைகள், செடிகள், மரங்கள், மலர்கள், கொடிகள் இவற்றின் பெயர்கள், பல்வேறு மொழி ஒற்றுமைகள் ஆகியவறறில் ஒன்றோடொன்று நெருங் கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்பது இவர்தம் கருத்து ஆகும்.

## 5.6. ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவர்

ஆப்பிரிக்காவில் தோன்றிய, எகிப்திய நாகரிகத்துக்கும், சிந்துவெளிநாகரிகத்துக்கும் தொடர்புகள் இருந்தன. எகிப்தியர் கலப்பாலேயே தென்னிந்தியாவில் திராவிட இனம் தோன்றி வளர்ந்தது என்பதும் சிலரது கருத்து.

தென்னிந்தியாவில் வரலாற்றுக்கு முற்பட்ட பழங்காலத் தில் நீக்ராயத் மக்களே நிரம்பி இருந்தனர் என்பது மானிட இயலார் தம்கருத்து. பஞ்ச திராவிட மாநிலங்களுள் ஒன்றாகக் கருதப்பட்ட குஜராத்தில் தொல் பழங்காலத்து மனித எலும்புக் கூடுகள் ஏழு கண்டெடுக்கப்பட்டன. இவை அனைத்தும் நீக் ராய்த் வகையினவாகும். தென்னிந்தியாவில் காணப்படும் காடர், பணியர், இருளர், ஊராளி, முல்லைக் குறும்பர், வெட்டுக் குறும் பர் ஆகியோரும் அந்தமானில் காணப்படும் ஓங்கி, செண்டினல், ஜாரவா, ஆகியோரும் நீக்ராய்த் இனத்தினராவர்.

கி.மு. 2000 - 2500 முற்பட்ட சுமேரிய நாகரிகத்தில் 'மகன்', 'மேலுகா' என்ற பகுதிகள் இந்தியப் பெருங்கடலில் இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றன. அப்பகுதிகளில் இருந்து தங்கத்தாதுவும், முத்துவும், நீலக்கற்களும் வரவழைக்கப்பட்டன. அப்பகுதிகளில் கறுப்பு நிறமக்கள் வாழ்ந்தமையால் 'கறுப்பு நாடுகள்' என்று அவை அழைக்கப்பட்டன. இக்கறுப்பு நாடுகள் அன்றைய தென் னிந்தியா என்பது அலெக்ஸாந்தர் கொண்ட்ரடோவ் கருத்தாகும்*

* Alexander Kondratov-The Riddle of Three Oceans - Dravidians - Africans, p.115

கி.மு. 484-425 இல் சேர்ந்த எரோடோடஸ் (Herodotus) தன்னு டைய இந்தியப் பயணக்குறிப்பில் மேற்குக் கடற்கரை ஓரத்தில் ஆசிய நீக்ரோக்களைப் பார்த்ததாகக் குறிப்பிடுகிறார். ரிக்கு வேதத்தில் ஆரிய வர்ண, தாச வர்ண குறிப்புகள் காணப்படு கின்றன. இங்கே தாசவர்ணம் என்று குறிக்கப்படுவது கறுப்பு வர்ண மக்களேயாகும், இதனைப் போன்றே ரிக்கு வேதம் 'அநாச' என்றும் 'கிருஷ்ண' என்றும் குறிக்கும (ரிக்குவேதம் கரண் கர்த 1.10.1). இக்குறிப்புகள் முறையே சப்பை மூக்கான கறுப்பு நிற மக்களைக் குறிப்பதாகும். கி.பி. 320 ஐ ஒட்டிய குப்தர் ஓவி யங்களில் நீக்ரோ இன மக்களின் உருவங்கள் வரையப்பட் டுள்ளன.

தொல்பழங்காலத்தில் வாழ்ந்த நீக்ரோ இனமக்களே வில்லையும், அரசமர வழிப்பாட்டையும், மீன், விலங்குகள், செடி கொடிகள் போன்றவற்றைக் குடிக் குறியீடாகக் கொள்ளுதலை யும், முன்னோர் வழிப்பாட்டையும இந்தியாவில் அறிமுகப் படுத்தினர்.

பழங்காலத்தில் தென்னிந்தியாவில் கிடைத்த கைக்கோடரி தொழில் முறைக்கும், ஆப்பிரிக்கக் கைக்கோடரி தொழில் முறைக் கும் இடையே ஒற்றுமைகள் உள்ளன. தென்னாப்பிரிக்காவில் மேற்கு விக்டோரியாவில் கிடைத்த கற்காலக் கருவிகள் தென் னிந்தியாவில் கிடைத்துள்ள கருவிகளின் உருவை ஒத்துள்ளன. 'வாள்' எனப்படும் நுட்பம் இரண்டு பகுதிகளிலும் ஒத்துள்ளன.

### 5.6.1 திராவிட ஆப்பிரிக்கத் தொடர்புகள்

திராவிடருக்கும் ஆப்பிரிக்கருக்கும் ஏற்பட்ட தொடர்புகள் இன்று நேற்று ஏற்பட்டதல்ல; வாசுகோடகாமாவின் இந்திய வருகைக்கு முன்னரே ஏற்பட்டதாகும். அவருக்கு முன்பே, பல கப்பலோட்டிகளுக்கும், வணிகருக்கும், கிழக்கு ஆப்பிரிக்காவுக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே உள்ள கடல் வழி மிகவும் பழக்க மானதாகவே இருந்தது. சுகிடாக்சுகரியந்தா (Scytax Caryanda) என்ற கிரேக்கக் கப்பலோட்டியே இந்துமாக் கடலைக் கடந்த முதல்வர். அவர் கி.மு. 510க்கு முன்பே செங்கடலைக் கடந்து இந்து மாக்கடல் வழி கப்பலோட்டி வந்தவர். அவர் சிந்துவெளியின் முனைப் பகுதியைத் தொட்டு விட்டுத் திரும்பினார்.

அலெக்சாண்டிரியாவைச் சேர்ந்த கிரேக்கர் ஒருவரால் கிறித்துவிற்குப் பிறகு எழுதப்பட்ட பெரிபுளுசு என்ற நூல் கப்பலோட்டுவதைப் பற்றிய உலகிலேயே பெரிய நூல்.

இந்நூல் ஆப்பிரிக்கா மற்றும் தென்னிந்தியக் கடற்கரையில் உள்ள வாணிக மையங்களைச் சுட்டுகிறது இந்நூல், ஏறக்குறைய 7500 சொற்களில், தமிழ்நாடு, உரோம், ஆப்பிரிக்கா மற்றும் ஏனைய நாடுகளுக்கிடையே உள்ள ஏற்றுமதி, இறக்குமதிகளைப் பற்றி விளக்குகிறது. பெரிபுளுசின் கருத்துக்கு அரணாகக் கீழ்க் கண்ட இரு கருத்துகள் அமைவதைக் காணலாம். கி.பி. 54-68 ஆண்டைச் சேர்ந்த உரோமானியத் தங்க நாணயங்கள் அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப்பட்டன. உரோமானிய அரசர்களுக்குச் சொந்தமான 46 தங்கநாணயங்கள், (கிறித்துவிற்குப் பிறகு 29 ஐச் சேர்ந்தது) கருநாடக நாட்டில் தார்வார் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த இரு நிகழ்ச்சிகளும் பெரிபுளுசின் கருத்துகளுக்கு அரணாக அமைகின்றன.

சுகிடாக்சு கரியந்தா (Seytax Caryanda) என்ற கப்பலோட்டியின் பெயர் , பெரிபுளுசில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அலெக்சாண்டருடைய புகழ்மிக்க மாலுமியான நியார்சு (Nearchus) என்பான், கி.மு. 327-26 இல், சிந்துவெளி வரை கப்பலோட்டித் திரும்பினான்.

இந்திய வணிகர்களுக்கு, ஆப்பிரிக்கத் தந்தம், இரும்பு, தங்கம் இவை மிக விருப்பமாக இருந்தன. எல்மசுதி (Elmasudı) என்பவர், 10 ஆம் நூற்றாண்டில் 'சொபாலா' என்பது தங்கம் இருக்கும் நாடு என்று எழுதியுள்ளார். அவர் குறிப்பிடும் போது, 'சாஞ்ச்' (Zanj) என்ற கிழக்கு ஆப்பிரிக்க நீக்ரோக்கள் வாழும் இடத்தின் முதன்மையான ஏற்றுமதி தந்தமே[†] என்று கூறுகிறார். இந்தத் தந்தம், இந்தியாவிற்கும், சைனாவுக்கும், ஏமன் (Yemen) என்ற தென் அரேபிய நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டது. அபபடிக் கொண்டு வராவிடில் முகமதிய நாடுகளில் (அரேபிய நாடுகளில்) நிறைய தந்தங்கள் இருந்திருக்கும். அவ்வாறில்லாமல் அவை ஏனைய நாடுகளுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டன. இரண்டு நூற்றாண்டுக்குப்பிறகு எட்ரிசி (Edrısı) என்பவர் கிழக்கு

† Basıl Davıdson - Black Mother, P. 166.

ஆப்பிரிக்கக் கடற்கரையினுடைய தலைமையான ஏற்றுமதிப் பொருள் இரும்பாகவே இருந்தது* என்று குறிப்பிடுகிறார். 'சபேலா' என்ற நாட்டின் இரும்பு அளவிலும், தன்மையிலும் இந்திய இரும்பைவிடச் சிறந்ததாக இருந்தது. அதிலிருந்து நல்லவாள் செய்ய உலகிலேயே இந்தியர்கள் மிகவும் பழக்கப் பட்டிருந்தனர். பன்னிரண்டாம் நூற்றாண்டின் நடுவில் எட்ரிசி என்பவர் எழுதுவதாவது: சாவா மக்கள் (Javanesc) ஆப்பிரிக்கா வின் தென் கிழக்குக் கடற்கரை ஓரமாகக் கப்பலோட்டி வந்து அங்குள்ள இரும்புகளை எடுத்து இந்தியாவுக்குள் கொண்டு வருவது வழக்கம். இந்தியாவின் மேற்குக்கரை ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையோடு குறைவாகவோ கூடுதலாகவோ தொடர்பு கொண்டிருந்து. என்ன காரணம் என்றால் , உலகில் விலை மதிப்பிடமுடியாத தங்கம் தென்கிழக்கு ஆப்பிரிக்கக் கரையோர மிருந்துதான் கிடைக்கப்பெற்றது. தென்கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதிகளைத் தவிர மற்றைய ஆப்பிரிக்கப் பகுதிகளில் உலக நாடு களுக்கு ஏற்று மதி செய்யும் அளவுக்குத் தங்கம் கிடைக்கவில்லை. இதனால் தென்கிழக்கு ஆப்பிரிக்கக் கரையோரத்தில் தான் தங்க வணி கத்தை இந்தியா போன்ற அயல்நாடுகள் நடத்தின. பழைய பயண எழுத்தாளர்கள் கருத்துப்படி தங்கமே ஆப்பிரிக்காவிலி ருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட தலைமைப் பொருள். நிறைய அளவு தங்கம், தென் கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதிகளிலுள்ள துறை முகங்களிலிருந்து ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டுகளாகவே இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

ஆப்பிரிக்காவே இன்றும் தங்க ஏற்றுமதியில் முதன்மை யிடம் பெறுகிறது. பழங்காலத்தில் ஈரோப்பிய மக்கள், முகமதிய மக்கள் போன்றோர், ஆப்பிரிக்காவே உலகிலேயே தங்க ஏற்றுமதி யில் புகழ் வாய்ந்தது என்று நம்பினர். ஆப்பிரிக்கத் தங்க நாண யம் பற்றிய கதைகளும் இவர்களிடையே நிரம்ப உள்ளன. அவற் றில் ஒன்று தங்கம் மரத்தில் வளர்வது என்பது. அதனால் தான் ஈரோப்பிய இசுலாமிய வணிகர்கள் தங்கத்தைத் தேடி ஆப்பிரிக்க வழியெல்லாம் பயணம் செய்தார்களாம். ஈரோப்பியர்களால்

* Al-Indrısi, Kılab Nuzhat at Mustag fıkhtırq, at Afaqtrans S.Magbul Ahmed quoted by B.Davidson "can we write African Hıstory" P.13.

அந்தோனியோ மால்பந்த் (Antonio Malfante) என்ற வணிகப் பயணி தங்கம் வரும் வழியைக் கண்டுபிடிக்க ஆப்பிரிக்காவிற்கு அனுப் பப்பட்டார். அவர் இந்திய வணிகர்கள், ஆப்பிரிக்கப் பகுதிகளுக்கு மொழி பெயர்ப்பாளருடன் பயணம் செய்ததாகக் குறிப்பிட்டுள் ளார். அவர் கருத்துப்படி இந்த இந்தியர்கள் கிறித்துவர்கள். ஏனெனில் அவர்கள் சிலுவையை அணிந்திருந்தனர்.[1]

பாசில் டேவிட்சன் (Basil Davidson) என்பவர் ஆப்பிரிக்க கல்வி நிலையை உற்று ஆய்ந்த நிபுணர். அவர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

கதங்காவில் 'பாண்டு' (Bandu) என்ற மொழி பேசும் மாநிலத் தில் உள்ளவர்கள் பெரிய அளவில் செம்பை உற்பத்தி செய்தனர். 'சேம்பியா' என்ற ஆப்பிரிக்கப் பகுதியில் இன்னொரு உலோகத்தை உற்பத்தி செய்திருந்தனர். இக்கனிமத்தால் செய்யப் பெற்ற அணிகலன்களும், செம்பால் செய்யப்பெற்ற அணிகலன்களும் தெற்கு சேம்பசியிலிருந்து வரவழைக்கப் பெற்ற தங்கத்தால் ஆன அணிகலன்களும் சேர்த்துப் புதைக்கப் பட்டிருந்தன. பத்தாம் நூற்றாண்டின் இடைப்பட்டபகுதியில் மசூதி (Mas'udi) என்பவர் சாம்பசி பக்கத்திருக்கும் வாாலினி (Warlini) என்ற நாட்டைப் பற்றி விவரிக்கும் போது மேற்கண்ட செய்தியை விவரிக்கிறார் . இக்காலத்திலேயே தங்க வணிகம் இந்தியக் கப்பல் வாணிகரிடம் தொடங்கிவிட்டது.[2]

தொல் பொருளியல், மானிடவியல், மொழியியல் கல்வி களும் ஆப்பிரிக்க இந்திய உறவுகளை உறுதிப்படுத்தும். கெர்வாசு (Gervase) என்ற ஈரோப்பிய மேலைக் கடலோரத் தொல் பொருளியல் நிபுணர், சஞ்ச் - ஏ-கதி (Sanje-ye-Kati) என்ற தீவில் தென்னிந்தியக் குடியேற்றம் இருப்பதைப் பற்றிக் கண்டுபிடித் துள்ளார். சஞ்ச் -ஏ-கதி (Sanje-ye-Kati) என்ற தீவு , 1950 இல் கீல்வா (Kilwa) என்ற சற்றுப் பெரிய தீவின் பக்கத்துள்ள தீவாகும். ஆராய்ச்சி நிபுணரான கெர்வாசு (Gervase) அங்கே தென்னிந்திய மக்களின் குடியேற்றத்திற்கு அடையாளமான சின்னம் ஒன்றைக் கண்டுபிடித்தார்.

1. Madhu Panikkar, K
The Serpent and the cresent, p. 121.
2. Basil Davidson 'Can we write African History?' p. 12.

சிறு நீள்சதுர வீட்டை, கொத்தன் மிகவும் அழகாகவும் உன்னிப்பாகவும் கட்டியிருக்கிறான். அந்த வீடுகள், பதினாறு அடி உயரமுள்ள கோட்டை மதிற் சுவரின் பக்கத்து இணைந்து இருக்கின்றன. அழிவுற்ற நிலையில் மேற்கண்ட சின்னங்கள் இருக்கின்றன. இச்சின்னமே ஆப்பிரிக்க, இந்திய வணிகத் தொடர்புக்குக் கிடைக்கும் மிகப்பழஞ் சான்றாகும். தெறகு அரேபியருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உள்ள பழம் இசுலாமியருக்கும் முன்பே இரும்பைப் பயன்படுத்திய காலம் இருந்திருக்கலாம். ஒரு வேளை தென்னிந்தியருக்கும் முற்பட்டதாகலாம்.

1950 இல் மேத்யூ என்பவர் தெற்குத் தங்கனிகா (தற்போது தன்சானியா) வினுடைய சோங்கா மாரா என்ற பவழத் தீவை அகழ்ந்தார். இந்த இடத்தில் அவர் இந்தியாவிலிருந்து மணியும் கார்னிலியன்சும் சேர்த்துக் கோர்த்த அணிகலனைக் கண்டு பிடித்துள்ளார். சிம்பாவ்வேயில் தெற்குப் புறத்தில் தொல் பொருளியல் அறிஞர்களால் உடைகற்களும், தங்கத்தால் செய்யப் பெற்ற பொருள்களும் ஏனைய உலோகத்தால் செய்யப் பெற்ற பொருள்களும், கிழக்குக் கரையிலிருந்து கிடைத்த மண்பாண்டப் பொருள்களும், சைனாவிலிருந்து கிடைத்த பீங்கான் பொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தியாவில் மணிகள் எட்டாம் நூற்றாண்டிலேயே மிகுந்த விலை மதிப்புடையதாக இருந்தன.

இந்தியத் துணிகளும் ஆப்பிரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. மெறோ (Meroc) என்ற இடத்திலுள்ள வட செமகட்ரி என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. மெறோ என்ற இடத்தில் நீர்த் தேக்கம் கண்டு பிடிக்கப்பட்டது. இந்நீர்த்தேக்கம் எகிப்தில் இல்லாத ஒன்று. ஆகையால் இது இந்தியாவிலிருந்தே அறிமுகம் ஆகியிருத்தல் வேண்டும்.

திராவிடருக்கும் ஆப்பிரிக்கருக்கும் உடல் இயல் முறைப்படியும் பண்பாட்டியல் படியும் நிரம்ப ஒற்றுமைகள் உள்ளன. இரத்தப் பிரிவும் ஒற்றுமையாகவே உள்ளது. இதே இரத்தப் பிரிவு இந்தோனேசிய மக்களினத்தோடும் மேற்கு ஆப்பிரிக்காவின் ஒரு பகுதி மக்கள் இனத்தோடும் ஒன்று பட்டுள்ளது.*

---

* மது பணிககா, ப 23

சோழிகள் மேற்கு ஆப்பிரிக்காவில் பயன்படுத்தப்படுகின்றன; நாணயங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தச் சோழிகள் தென் இந்தியக் கடற்கரை, கேரளக் கடற்கரைகளிலிருந்து ஆப்பிரிக்காவிற்குக் கொண்டு வரப்பட்டன. மேலை ஆப்பிரிக்க நகைகள் தென்னிந்திய நகை வேலைப்பாடுகளோடு ஒத்துள்ளன. புளோரா சா (Flora Shaw) கருத்துப்படி 'புலாணி' (Fulanie) என்ற ஆப்பிரிக்க மொழி இந்தியாவிலிருந்தே வந்தது.

மேலே கூறிய கருத்துகள் எல்லாம் ஆப்பிரிக்கருக்கும் திராவிடருக்கும் உள்ள உறவை உறுதிப்படுத்தும்.

குசைத் (Kushites) என்பவர் ஆப்பிரிக்கப் பழம்வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருந்தனர் அவர்கள், தென் எகிப்தின் நைல் நதியின் கரையோரங்களில் குடியேறிய ஆப்பிரிக்க வாசிகள். அவர்களை எகிப்தியர்கள் 'நூபியன்கள்' (Nubians) என்று அழைத்தனர்.

குசைத்துகளுக்கும், எகிப்தியர்களுக்கும் உள்ள உறவு அவ்வளவு ஒற்றுமையாக இல்லை. கிறித்துவிற்குப் பிறகு ஒன்பதாம் நூற்றாண்டில், அவர்களே, தங்களுக்கு என்று சிறு மாநிலம் ஒன்றை நிறுவினர். 'நபதா' (Napata) அவர்களின் தலைநகரமாகும். கிறித்துவிற்கு பிறகு 751 இல் குசைத்தியர் எகிப்தியர் மேல் படையெடுத்தார்கள். வெற்றியடைந்து எகிப்தைத் தங்கள் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வந்தனர். நூறு ஆண்டுகளுக்குப் பிறகு அசிரியன் படை, எகிப்தியர்களையும் குசைதுகளையும் வென்றது. அதன் பிறகு குசைதர்கள், நபதா என்ற தலைநகரிலிருந்து மெறோவுக்கு மாறினர். மெறோவில் அவர்கள் இரும்புக் கால நாகரிகத்தை நிலை நாட்டினர்.

20 ஆம் நூற்றாண்டிற்கு நடுவில் மெறோவின் குறிப்பிடத்தக்க நாகரிகம் அறியப்படாமலேயே இருந்தது. இருபது ஆண்டுக்குப் பிறகு ரெய்னர் கிரிப்பித் (Reiner Griffith) கார்சுடாங் (Garstang) மற்றும் சிலர் மெறோவில் அகழ்வாராய்ச்சி நடத்தினார்கள்.

1958 இல் டாக்டர் சீன் வெர்குத்தர் என்னும் பெரிய அறிஞர் மெறோவில் மேலும் அகழ்வராய்ச்சியைக் தொடர்ந்தார். ஆப்பிரிக்காவில் பழைய இரும்பு நாகரிகம் மேலும் விரிவாக்கப் பட்டது.

ஈரோப்பிய தொல்பொருளியலறிஞர், மெறோவை 'பழைய ஆப்பிரிக்காவின் பெர்மிங்காம்' என்று அழைத்தனர். பாசில் டேவிட்சன் என்ற பெரும் அறிஞர் அதை 'ஆப்பிரிக்காவின் ஏதேன்சு' என்று அழைத்தார்.

### 5.6.1.1. தொல்லியல் சான்றுகள்

நடுநிலக் கடல் ஓரம் ஐரோப்பிய, ஆப்ரிக்க நாடுகள் இருப்பன தெளிவு. இந்நாடுகளை, நடுநிலக் கடலோர நாடுகள் என்று அழைப்பர். இந்நாட்டில் வாழ் மக்களுக்கும் திராவிட நாட்டில் வாழ் மக்களுக்கும் இடையே, பல ஒற்றுமைகள் கண்டறியப்பட்டிருக்கின்றன. இவ் வொற்றுமைகளைக் கொண்டு , திராவிடர் நடுநிலக் கடலோரப் பகுதியினின்று இந்தியாவில் குடியேறினர் என்று கருதினர் அறிஞர் சிலர். நீலகண்ட சாத்திரி, சாட்டர்சி, சிலேட்டர் லாவகோரி ஆகியோர் இக்கருத்தினர். இதனை மறித்துக் கருதினால் என்ன வழு ? குமரிக் கண்டப் பகுதியினின்று சிதறிய மக்கள், நடுநிலக் கடலோர மக்கள், ஆப்பிரிக்க மக்கள் என்று கருதுவதில் பிழை ஒன்றும் இல்லை. கிடைக்கப் பெறும் சான்றுகளும் இக்கருத்திற்கு இணைத் துணையாக உள்ளன.

திராவிடர், அயல் நாடுகளுக்கு ஆளுநராக, அந்நாட்டில் உள்ளோரை அடிமைப்படுத்துநராகச் சென்றதில்லை. ஆனால் பன்னாட்டுகளுக்கும் வாழுநராக அன்னோர் சென்றுள்ளனர். பழந்தமிழிலக்கியத்தில், செம்பாதி இலக்கியங்கள் பிரிவைப் பேசுவன; பிரிவு , ஓதல், பகை, தூது என்ற மூன்றன் அடிப்படையில நிகழும். எனினும் பொருள் வயிற் பிரிவிற்காக நாடு கடந்து செல்லும் நல்லோரைப் பாலைப் பாடல்கள் மிகுதியாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அஃது அன்னோர் தம் நாடு கடக்கும் நாட்டத்தைக் காட்டுகின்றன. இன்றும் திராவிடத் தமிழர், மலேசியா, பர்மா, ஆப்பிரிக்கா எனப் பல நாடுகளுக்கும் செல்வதையும் சென்று தங்குவதையும் நடப்பியல் நாட்டும். பண்டும், தமிழர் பல பகுதிகளுக்குச் சென்றனர்; சென்று அங்குள்ள மக்கள் மனத்தை வென்றனர். தம், நாகரிகப் பண்பாடுகளை அங்கங்கே பரப்பினர். ஆப்பிரிக்காவிலும் அவ்வாறு தொண்டாற்றினர். சான்று உண்டா? உண்டு.

**1. சிற்பங்கள்**

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பங்கள் ஆப்பிரிக்கப் பீடபூமியான சோசு (Jos) வில் கிடைத்துள்ளன. இங்குக் கிடைத்துள்ள சிற்பங்களின் அமைப்பும், அமைதியும் இந்தியச் சிற்பங்களை நினைவுபடுத்துகின்றன. குறிப்பாக இங்குக் கிடைத்துள்ள குரங்குச் சிலை ஒன்று (தலை உடைந் தது) அப்படியே தமிழகக் குரங்குச் சிலையமைப்பை எதிரொளி செய்கின்றது.

**2. வெண்கலப் படிமங்கள்**

வெண்கலப் படிமங்களின் தோற்றத்தைக் கொண்டு அவை எப்பகுதியின என்று கண்டறிந்து விடலாம். எகிப்திய, உரோம, வெண்கலப் படிமங்கள், தமிழகப் படிம அமைப்பினின்று முற்றும் வேறுபட்டவை. சோசு பீட பூமியில் கிடைத்துள்ள படிம அழகு அமைதி, தமிழகப் படிம அழகையும் அமைதியையும் எதிரொளிக் கின்றன.

**3. வெண்கலப் படிமம் செய்யும் முறை**

தமிழகத்தில் வெண்கலப் படிமம் செய்யும் முறை புதுமை யானது, தொன்று தொட்டு வருவது. தமிழகச் சிற்பிகள் மெழுகி னால் முதலில் உருவத்தை அமைத்துக் கொள்வர், பின்னர், மெழுகு உருவத்தின் மேல் ஒருவகைக் களிமண்ணைப் பூசுவர்; காய வைப்பர்; களிமண் உருவைச் சுடுவர். உள்ளிருக்கும் மெழுகு உருகி வெளிவந்துவிடும். உள்கூடு உடைய களிமண் உருமட்டும் எஞ்சி நிற்கும். பின்னர், வெள்ளி, பொன், செம்பு, இரும்பு, ஈயம் முதலான ஐந்து உலோகங்களைக் கலந்து உருக்கி, உலோகப் பாகை, களிமண் உருவினுள்ளே ஊற்றுவர். மெழுகுவழி அழ காகச் சமைந்துள்ள, களிமண் உருவ உள் கூட்டை உலோகத் தால் நிறைப்பர். அதன் பின் ஆற வைப்பர் ; ஆறிய பின் களி மண்ணை அகற்றுவர். உள்ளே எழிலார்ந்த உலோக உருவம் இருக்கும் இந்த முறையில் படிமம் அமைப்பது தமிழகத்திற்குரிய சிறப்புத் தொழிற்பண்பாகும். இதனைப் போன்றே படிமம் அமைப்பதை ஆப்பிரிக்க நாடுகளில் காணமுடியும். இந்தக் கலை எங்கிருந்து வந்தது? யாரால் வந்தது? என்ற வினாக்களுக்கு விடை வெளிப்படை.

## 4. மெறோ (Meroe) கண்டுபிடிப்புகள்

கி.பி. யை ஒட்டிய சிலவற்றை மெறோ என்ற மேற்கு ஆப்பி ரிக்கப் பகுதியில் கண்டுபிடித்துள்ளனர். அவற்றுள் தலைமை வாய்ந்த சில இந்தியாவுடன் ஒத்துள்ளன.

**அவற்றுள் குறிப்பிடத்தக்கன : -**

1. சிங்கத் தலையும், மனித உடலும் உடைய தோற்றத்தை நரசிம்ம அவதாரம் என்பர். திருமாலின் பத்து அவதாரங்களுள் ஒன்றாய்ப் போற்றுவர். உருவத் தோற்றத்தை உடைய சிங்கக் கடவுளின் உருவம், மேற்கு ஆப்பிரிக்கப் பகுதியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

2. யானைமேல் அரசன் அமர்ந்து ஊர்வலம் வருவது இந்திய மண் மரபு. பொதுவாக வேறு எங்கும் இல்லாதது. ஆனால் மெறோடிக் வேந்தன் ஆனைமேல் அம்பாரி வருவது போன்ற படம் மெறோவில் கிடைத்துள்ளது.

3. பருத்தித் துணியைப் பொதுவாகப் பண்டை ஆப்பிரிக்கர் அறியார். தோலாடை, பனைஓலை உடை அவர்கள் பழக்கத்தில் இருந்தன. ஆனால் மெறோவில் உள்ள படம் , பருத்தி ஆடையைக் காட்டுகிறது.

4. ஓடி வரும் நீரைக் குட்டையாகவும், குளமாகவும், ஏரியாகவும் தேக்கி வைத்துப் பயன்படுத்துவதை எகிப்தியப் பண்டைய நாகரிகம் அறிந்திருக்கவில்லை. ஆனால் திராவிடப் பகுதிகளில் நீர்த் தேக்கங்கள் அமைவது அரிய ஒன்றன்று. கரிகாலனின் கல்லணை இன்றும் பண்டைய நீர்த்தேக்க அறிவை நினைவுப்படுத்தும். மெறோவில் இது போன்ற நீர்த்தேக்கங்கள் உள்ளன. இவை இந்தியர்களால் அறிமுகப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

பண்டைய நாளில் தமிழகம், உலக மக்களின் கனவுலகக் காணியாக இருந்தது. பல நாட்டு மக்களும், வணிகர்களும், அரசியல் விற்பன்னர்களும் தென்னகத்தை நாடி ஓடி வந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. பிளைனி, தாலமி போன் றோர்தம் குறிப்புகள் , பெரிபுளூசு என்ற நூலில் உள்ள குறிப்பு கள், இன்னும் பல தமிழகத்தைப் பற்றி வெளி நாட்டார் தம்

வேட்கைகளை விளக்கும்.[1] தென்புல மன்னர்கள், மெசபடோமியா, அராபியா, எகிப்து, கிழக்கு ஆப்பிரிக்கா ஆசிய நாடுகளுடன் கடல்வழி நெருக்கத் தொடர்பு வைத்திருந்தனர். அராபியக் கடலோரத்திலும் பாரசீக வளைகுடாவிலும் நிகழ்ந்த தொல்லியல் ஆய்வுகள், திராவிடர் தம் வணிக உறவை உறுதிப்படுத்து கின்றன. திராவிட நாகரிகம் எனக் கருதப்படும் மொகஞ்சோ தரோவிலும், பண்டை எகிப்திலும் கிடைத்திருக்கும் சுட்ட செங் கற்கள் ஒரே அமைப்புடையனவாக உள்ளன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கிரேக்க நாடகத்தில், திராவிட மொழி (கன்னடச்) சொற்கள் இடம் பெற்றுள்ளன. ஐரோப்பாவினின்று, இந்தியாவைத் தேடிப் புறப்பட்டு வந்த வாசுகோடகாமா , கிழக்கு ஆப்பிரிக்க நாடான தன்சானியாவில் உள்ள துறைமுகம்-மொம்பசா (Mombasa)வில், குடியமர்ந்திருக்கும் இந்தியர்களைக் கண்டார். அவர்தம் கப்பலை ஆப்பிரிக்காவைச் சுற்றி, இந்தியா விற்குக் கொண்டு சேர்க்க, அங்கிருந்து ஓர் இந்தியனைக் கப்ப லோட்டியாக அமர்த்தினார். அவனே வாசுகோடகாமாவை இந்தியக் கடற்கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தான். மல்பாண்ட் (Malfante) என்ற பழங்காலப்பயணி, தம் குறிப்பில் இந்திய வணிகர்களைச் சகாராவில் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்[2]. புது சூடான் நாகரிக உருவாக்கத்தில், திராவிடர் தம் வரவும், உறவும் காரணமாக இருந்தன என்பர் அறிஞர் போமான்(Baumann)[3].

இறந்தோரைத் தாழியில் வைத்துப் புதைப்பது பண்டைய தமிழர்தம் வழக்கம். சங்க இலக்கியங்களும், மணிமேகலையும் இந்த உண்மைக்குச் சான்று பகருகின்றன.[4] இலக்கியம் மட்டும் அன்றி அகழ்வாராய்ச்சியும் இச்செய்தியை உறுதி செய்கின்றது.

---

1 விரிவாக அறிய விரும்புவோர் க அ நீலகண்ட சாஸதிரி யார்தம Foreign notices to South India, என்ற நூலையும, 'மேனாட்டறிஞர் கண்ட தமிழகம' என்ற நூலையும பயிலுக

2. Madhu Panikkar, The Serpent and the Crescent, p.22.

3. Baumann, H. et westermann D les peuples er les Civilisations de 1' Afrigue, Paris, Payot. 940.

4. டாக்டர் கே கே.பிள்ளை, தமிழக வரலாறும மக்களும் பண்பாடும், ப 36 தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம், தமிழநாடு.

புதுச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்கமேட்டில் பண்டைய தாழிகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தாழிகளைப் போலவே, மெசபடோமியாவிலும், நடு நிலக்கடலோர நாடுகளிலும் தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை திராவிடர் தம் உலகளாவிய பரவுதலைக் காட்டும்.

### 5. நடுகல்

இறந்த சிறந்த மறவர்க்கு, இருக்கும் மறவோர், கல் நாட்டி வழிபட்டனர். கல்லில் மறவோர்தம் பெயரையும், பெருமையையும் பொறித்தனர். சில இடங்களில் உருவையும் வரைந்தனர். தொல்காப்பியம், சங்க இலக்கியம், புறப்பொருள் வெண்பா மாலை போன்ற நூல்கள் கல்நடும் முறையை விரிவாகப் பேசுகின்றன.[1] கி.பி. 3, 4-ஆம் நூற்றாண்டிளின்று தொடர்ச்சியாக நடுகற்கள் அண்மையில் கண்டு அறியப்பட்டுள்ளன.[2] மிகப் பழைய கால நடுகற்கள் திராவிடப் பழங்குடியினர் வாழ் இடங்களில் கிடைத்துள்ளன. ஏறத்தாழ இவற்றை ஒத்த நடுகற்களை ஆப்பிரிக்கக் கண்டத்தை ஒட்டிய மடகாசுகரிலும் ஆப்பிரிக்க சகாராவிலும் நிரம்பக் காணமுடியும்.

ஆப்பிரிக்க மடகாசுகரில் கல் நடும் முறையிலே, அரிய ஒற்றுமை உள்ளது. பண்டைத் தமிழகத்தில் மானம் அழிவந்த மன்னர்கள், வடக்கு நோக்கி அமர்ந்து, உண்ணாநோன்பு இருந்து உயிர் நீப்பர். வடக்கிருத்தலைச் சைன சமயத்தார் 'சல்லேகனா' என்று அழைப்பர். உண்ணா நோன்பு இருந்து உயிர்நீத்தலுடன் வடக்கு திசை நோக்கி இருப்பானேன்? பல தீர்த்தங்கரர்கள் வடக்கே பிறந்ததாலும், அவர்களுக்குள் பலர் வடக்கே இறந்ததாலும் 'சல்லேகனா' நோன்பு இருப்போரும் வடக்கிலிருந்து உயிர் நீத்தனர் என்பர். எனினும் "வடக்கே நோக்கலின்" காரணம் இன்னும் ஆராயப்பட வேண்டிய ஒன்றேயாம். வியப்பு என்ன

1. For detailed Study: Please Ref Arvaanan's Ph.D. Thesis, 'A Critical Study of the differences in the Commentaries of Tolkappiyam' Madras University, 1977.
2. தமிழ்நாடு அரசு தொலலியல துறை வெளியீடு, செங்கம நடுகறகள, Seminar on hero Stones என்ற இரணடு நூலகளைக காணக.

என்றால், வடக்கு இருந்து உயிர் நீப்போர் தம் நடுகல் வடக்கு நோக்குவதும் (சில இடங்களில் கிழக்கு நோக்குவதும்) எண்ணத் தக்கன. தமிழகச் சிற்றூர்களில் உள்ள வீரன் கோயில்கள் பலவும் வடக்கு நோக்குவன. அவை ஒரு கால நடுகற்களே. அண்மையில் கண்டறியப்பட்டுள்ள பல நடுகற்கள் சிற்றூர் மக்கள் வழிபடும் 'வீரன்சாமி' கல் என்பதை நினைவு கூர்க. பண்டு வீர மறவர்க்கு மட்டுமே நடுகல் எடுக்கப்பட்டது என்பதை 'வீரன்' என்ற பெயர் நினைவூட்டும். ஏறத்தாழ இதற்கு இணையான அமைப்பு, மடகாசுகர் நடுகல் அமைப்பிலும் உள்ளது. தலைவர்கள்தம் (Trano-Vinta) நடுகற்கள் வடக்கு நோக்கியும், மற்றையோர் (Roturiers) நடு கற்கள் கிழக்கு நோக்கியும் அமைக்கப்பட்டுள்ளன. தமிழக வீரன் கோயில்கள், வடக்கையும், கிழக்கையும் நோக்கி அமைக்கப்படு வதன் நுட்பம் ஒப்பிடத்தக்கதாகும்.

மடகாசுகர் நடுகல் நீள்சதுரமாக உள்ளது. அதன் ஒரு மூலையில் மனித அல்லது பறவை உருவம் பொறிக்கப்பட் டுள்ளது. அதற்குப் பெயர் மிசோவா (Mijoa) என்பதாகும். இறந் தவன் ஆவி அவ்வழியே மேலுலகம் செல்லுவதாக நம்பப்பட்டது. தமிழக நடுகற்களிலும் இதுபோன்றதோர் அமைப்பு உள்ளது. நடுகல்லின் மேற்புறம் மனிதன் இறக்கைகட்டிப் பறப்பது போலச் செதுக்கப்பட்டிருக்கும். இதன் பொருள், இறந்த வீரன் 'உயர்ந் தோர் உலகம்' செல்கிறான் என்பதாகும்[1]

பிற்காலத்தில் நடுகற்கள் இறப்போர் அனைவர்க்கும் எடுக்கப்பட்டன. எனினும் பழைய காலத்தில் மறவர்க்கு மட்டுமே எடுக்கப்பட்டது. போர் செய்து களத்தில் மடிவோர்க்கு மட்டுமே நடுகல். தொல்காப்பியர், வெட்சி (கரந்தை) மறவோர்க்கு மட்டுமே 'நடுகல்' என்ற குறிப்புப்பட நடுகல் பற்றிய செய்திகளை, வெட் சித் திணையில் மட்டுமே கூறிவிடுப்பர். மடகாசுகரிலும் நடு கற்கள் வெற்றி பெறும் மறவர்க்கு மட்டுமே எடுக்கப்பட்டன என்பது ஒப்பிடத்தக்கது.[2]

---

1. Vanamamalai N. Hero Stones and Folk Beliefs, Journal of Tamil studies, December 2 International Institute of Tamil Studies, Tamil Nadu.
2. Republique Democratique de Modagascar, p. II.

சகாராவில் நீளமாக நிறுத்தப்படும் நடுகற்கள் கண்டறியப் பட்டுள்ளன. இவற்றின் காலம் 2000 ஆண்டுகட்கு முற்பட்டது. இவையும் வடக்குத் திசை நோக்கி நாட்டப்பட்டுள்ளன.[1] நடுகல் நடுவதன் நோக்கமும், முறையும், அவற்றின் திசையும் தமிழக நடுகற்களோடு, 'வீரன்' கோயில்களோடு ஒத்திருப்பதன் அருமை உணரத்தக்கது.

திராவிட மக்கள் பயன்படுத்தும் படகுகளும், நடுநிலக் கடலோர நாட்டினர் பயன்படுத்தும் படகுகளும் அப்படியே ஒத்துள்ளன.[2] படகின் நீள் வட்ட அமைப்பும், துடுப்பு அமைப்பும் முற்றும் ஒத்தன; சற்றும் வேறுபாடு அற்றன. நைல் ஆற்றங்கரை மக்களும், மெசபடோமியா மக்களும் திராவிட மக்களும், ஒரே உருவப் படகுகளைச் செய்து பயன்படுத்தினர். திராவிட மக்களும், நடுநிலக் கடலோர மக்களும் உருவத்தாலும், பழக்க வழக்கப் பண்பாடுகளாலும் ஒத்தே வாழ்கின்றனர். இருபகுதியினரும், மறு பிறப்பில் நம்பிக்கை உடையவர்கள். பாட்டன் பெயரைப் பேரன்கள் வைத்துக் கொள்ளுவர். சமய நெறி முறைகளில் ஒருமைப்பாடு உடையவர்.[3] இரு பகுதி மக்களும் அணிந்திருக்கும் நகைகளின் அமைப்பும் ஒத்துள்ளது. உலோகக் கனியிலிருந்து நகைகள் செய்யும்போது கடைபிடிக்கும் முறைகள் தமிழகத்திலும், மேற்கு ஆப்பிரிக்க நாடுகளிலும் ஒரே போக்கில் உள்ளன. மைய இந்தியாவில் வாழும் 'கோண்டு' (Gonds) மக்கள் எழுப்பும் வீடுகளின் அமைப்பும், ஆப்பிரிக்காவில் உள்ள சோமாலி நாட்டுக் கள்ளர்கள் (Gallas) எழுப்பும் வீடுகளும் ஒரே அமைப்பின. தொல்லியலார், ஆப்பிரிக்கா நாடுகளிலும், திராவிட நாடுகளிலும் காணப்படும் நடுகற்கள், நினைவுச் சின்னங்கள் ஒத்துள்ளமையை நிலை

1. Paul Huard et Joan Marie Massip Monuments de Sahara negrotendien Bulletin de l, F A.N.T. XXIX Sen. B. Nos. 1-2; 1967 pp.1-27.
2. The origin and the Ethnological Significience of Indian Boat Design - Memory of the Asiatic Society of Bengal Vol. VII No.1 1918 pp. 139-256.
3. Richards, F.J.Some Dravidian affinicies and their Signal, Quarterly Journal of the Mythic Society of Bangalore, July 1917. pp.243-84.

நாட்டுவர். ஐதராபாத்தில் கிடைத்துள்ள நினைவுச் சின்னங் களும், எகிப்தில் கிடைத்துள்ள நினைவுச் சின்னங்களும் ஒரே தோற்றத்தன. ஆதிச்சநல்லூரில் கிடைத்துள்ள பழங்காலப் பொன் நகைகளும், உலோகக் காலத்தை ஒட்டி எங்கோமி, சைப்ரசு நாடுகளில் கிடைத்துள்ள பொன் நகைகளும் ஒரே அழகின; அமைப்பின. சுமேரியாவில் காணப்படும் கோயில்களின் அமைப்பும் ஒத்தவை. அம்மன் வழிபாட்டு முறை அம்மனுக்கும் திங்களுக்கும் ஊடே நடக்கும் மணவிழா போன்றன, தமிழக அம்மன் வழிபாட்டை அப்படியே எதிரொலிக்கின்றன. 'ஊர்' என்னும் சுமேரிய நாட்டுப் பகுதியில் தமிழகத் தேக்கு மரத் துண்டுகள் கிடைத்துள்ளன.

ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடலோர நாடுகளில் 'தங்கனீகா' குறிப்பிடத்தக்கது. இங்கே உள்ள 'மொம்பசாத்' துறைமுகமே, திராவிடம் நோக்கிச் செல்லும் பயணிகளுக்கு இடைத் தங்குமிடமாக இருந்தது. காற்றின் வாய்ப்பான வீச்சிற்குத் தக நிரம்பக் கப்பல்கள், இங்கிருந்து தென்னகம் நோக்கிப் போகுமாம். இங்கிருந்து ஆப்பிரிக்கா நோக்கி வருமாம். வாசுகோடகாமா, தன் கப்பலுக்கு முன் வரிசை வரிசையாக நிரம்பக் கப்பல்கள் தென் னிந்தியா நோக்கிச் செல்வதைக் குறித்துள்ளார். கி.மு.510-இல் வாழ்ந்த கிரேக்க நாவாயோட்டி, சிசிளைச்சு கரியாண்டா (Scylex of Caryanda) என்பவன் இந்தியாவிற்குக் கி.மு. ஆறாம் நூற்றாண் டிலேயே கடல்வழிப் பயணம் செய்தான். இவனைச் சிறந்த பயண நூலான பெரிபுளூசுவும் குறிப்பிடுகிறது. அலெக்சாண்டரின் நாவாயோட்டி நியார்கசு (Nearchus) கி.மு.327-26-இல் இந்தியா விற்குக் கடல்வழிச் சென்றவன். இச்சான்றுகள் கி.மு. பல ஆண்டு களுக்கு முன்பே ஆப்பிரிக்காவும், இந்தியத் தென்பகுதியும் கொண்டிருந்த உறவைக் காட்டுவன.

தென்னகத்திலிருந்து, ஆப்பிரிக்காவிற்கு வந்து திராவிடத் தமிழர் தங்கி இருந்தமைக்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. தங்கனீகாவில், சஞ்சே யா கடி (Sanje-ya-katı) என்ற ஓரிடம் உள்ளது. கி.பி.1950-இல் பிரிட்டன் தொல்லியல் அறிஞர் செர்வாசு மாயயூத் (Gervase Matheu) என்பவர் மேற்கண்ட இடத்தில் அகழ்வாய்வு செய்தார். அங்கே, திராவிட நாட்டைச் சார்ந்த பழங்குடியிருப்பு ஒன்றை மண்ணை அகழ்ந்து

கண்டுபிடித்தார். இக்குடியிருப்பின் அமைப்பு, அழகை எல்லாம் ஆராய்ந்த அவர், இது தென்னிந்தியர் வந்து தங்கிய பகுதி - கட்டிய பகுதி என முடிவிற்கு வந்தார்.[1] அதே அறிஞர், சோங்கோ மனரா (Songa monara) என்ற இடத்தில் பழங்கால நாணயங் களைக் கண்டெடுத்தார். அந்நாணயங்களுள் தென்னிந்திய நாணயங்கள் சிலவும் கிடைத்துள்ளன.[2] ஆப்பிரிக்கத் தென் ரொடீசாவில், பழங்காலப் பொருள்கள் பல கண்டறியப்பட் டுள்ளன. அவற்றுள் தமிழகத்திற்கே உரிய மணிகள் சிலவும், மணி மாலைகள் சிலவும் கிடைத்துள்ளன.[3]

பழங்காலத்தில் தமிழகத்தில் நெய்யப்பட்ட துணிகள், ஆடைகள் பல, ஆப்பிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ளன. ஆப்பிரிக்காவிற்கு இறக்குமதியான தமிழகப் பொருள்களுள் துணி வகைகள் (Textiles) குறிப்பிடத்தக்கன.

திராவிடம் ஆப்பிரிக்காவிற்குப் பல பொருள்களை ஏற்று மதி செய்ததுடன் தங்கம், இரும்பு, தந்தம் ஆகியவற்றை இறக்கு மதி செய்ததாகத் தெரிகிறது. திராவிடர், தம் வாள்களுக்கும், சுத்திகளுக்கும் ஆப்பிரிக்க தந்தத்தால் கைப்பிடிகள் செய்து போட்டுக் கொண்டனர்.[4] பொருள்கள் மட்டுமன்றி, ஆப்பிரிக்க அடிமைகளும் விலைக்கு வாங்கப்பட்டுத் தென்னிந்தியா கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் அரண்மனைகளிலும், மாளிகைகளிலும் வாயில் காவலராக அமர்த்தப்பட்டனர்.[5] தொல் காப்பியர், இளங்கோ, திருவள்ளுவர், 'அடியோர்' என்று குறிக்கும் இன மக்கள் இவராதல் கூடும். தொல்காப்பியர், அடிமைகளுக்குக் காதல் வாழ்வு இல்லை என மறுப்பார்.[6] ஆப்பி ரிக்க அடிமைகள், அகவாழ்வு சுதந்திரமாக அனுமதிக்கப்படுவ தில்லை. அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர் என்ற ஆப்பிரிக்க நாட்டு உண்மைச் செய்தியும், தொல்காப்பியக் குறிப்பும் ஒப்பிட்டு நினைக்கத்தக்கன.

1. B. Davidson, Old Africa Rediscovered, p. 152.
2. Ibid p. 152.
3. B. Davidson, Black Mothee, p. 163.
4. B. Davidson, Old Africa Rediscovered, p. 154.
5. B. Davidson, Black Mothee, p. 165
6. Ref Aravaanan Ph D. (Unpublished) thesis Madras University. 1977.

### 5.6.1.2. மானிட இயல் சான்றுகள்

திராவிடப் பழங்குடிகள், திராவிட நாட்டு ஊர்ப்பகுதி களில் இன்றும் வாழும் தாழ்த்தப்பட்டோர் ஆகியோர் தம், தலை, நெற்றி, கண், புருவம், காது, மூக்கு அமைப்பும், ஆப்பிரிக்கவாழ் மக்களது (அராபிய இனத்தார் தவிர) உருவ உறுப்பு அமைப்பும் அப்படியே ஒத்துள்ளன. இரு இன மக்கள் தம் உடல், தலைமுடி, கண், கண்ணிமை முடி, புருவமுடி நிறம்-ஒத்த கருப்பு நிறமே. தலைமுடி சுருட்டையாக இருப்பதும், இதழ்கள் (சில பகுதி யினருக்கு மட்டும்) சற்றுத் தடிப்பாக இருப்பதும் ஆப்பிரிக்க மக்கள் பெற்றுள்ள வேறுபாடு. ஆப்பிரிக்கத் தட்பவெப்ப நிலை, முடி வளர இடம் தராதோ என்று எண்ண வேண்டியுள்ளது. இங்குள்ள மக்களின் முடி வளராமல் சுருண்டு அப்படியே நின்று விடுகின்றமைக்கு மண்ணியல்பு காரணம் ஆகலாம். குறிப்பாக இதழ்த் தடிப்பிற்குக் காரணம், ஈண்டுள்ள மக்கள் விழித்திருக்கும் காலம் முழுதும், அலுவலகத்தில் கூட, ஒரு வகைக் குச்சியைக் கொண்டு (தமிழகத்தில் வேம்பும், ஆலும் பயன்படுத்துதல் போலப்) பல் துலக்கிக் கொண்டே இருப்பர். இதனால் வாய் எப்போதும் திறந்திருக்க நேருகிறது. கீழ் இதழ் மேல் இதழோடு பொருந்தாமல் தொங்கிக் கொண்டிருக்கவும் நேருகிறது. வாய் திறந்து தூங்குவோர், எப்போதும் வாய்திறக்க அதன்வழி மூச்சு விடு வோர்தம் கீழ் இதழ் பருத்திருத்தல் இயல்பு. அஃது உடலியலார் ஒப்புக்கொள்ளும் உண்மை. இவற்றைப் போலவே இன்றுள்ள திராவிட மக்கள் பெற்றுள்ள மாற்றத்திற்கு இந்தியாவில் குடியேறிய ஆரியர்தம் வரவும், உறவும் காரணம் ஆகலாம். குறிப்பாகக் கேரள மக்கள், ஆரிய (நம்பூதிரி பிராமணர்) உறவால், கலப்பால் பெரிதும் நிறத்தால் மாறினர் என்று கருத இடமுண்டு.

திராவிட மக்கள் தம் தலை ஓட்டு அமைப்பு, நடுநிலக் கடலோர மக்கள், ஆப்பிரிக்க மக்கள் தம் தலை ஓட்டு அமைப்புடன் ஒத்துள்ளது. மொகஞ்சோதராவில் கண்டு எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடு, ஆப்பிரிக்க நாடுகளான, செரிக்கோ (Jericho), மேல் கலிலீ (Upper Galilee), வடக்குஈரான் (North Iran), எகிப்து (Egypt), கென்யா (Kenya), தங்கனீகா (Tankanyiga) எலும்புக் கூடுகளுடன் முற்றும் ஒத்துள்ளமை வியக்கத்தக்கது. சியால் கோட் (Sial Kot) என்ற திராவிடப் பகுதியில் கண்டறியப்பட்ட மிகுபழம் எலும்புக்

கூடும், எகிப்தில் அராபியர் வரவிற்கு முன்னது என்று கருதப்படும் எலும்புக் கூடும், மிகப் பல ஒற்றுமைகளை உடையன.

நடுத்திராவிடப் பழங்குடியினரான சித்தியர்களும் (Siddhis) of Karnataka), கேரளப் பழங்குடியினரான காதர்களும் பல்வேறு வகைகளில் ஆப்பிரிக்க நீக்ரோக் கூறுகளை உடையவர்களாகத் திகழுகின்றனர்.

## 1. தாய்த் தெய்வ வழிபாடு

தமிழகத்தில் மற்றைய கோயில்களை விட 'அம்மன்' கோயில்கள் மிகுதியாக உள்ளன இதற்குரிய காரணம் - திராவிடர் தாய்மைக்கு முதன்மை கொடுத்தமையேயாம். பண்டைக் காலத்தில், திராவிடக் குடியினர் தாய்வழித் தலை முறையைப் பின்பற்றி வந்தனர். ஆரியர்தம் வரவும் உறவும் நேர்ந்த பின்பே, தந்தை வழித் தலைமுறைக்கு மாறினர். தாய்வழித் தலை முறையை அன்னோர் போற்றியகாலத்தில் தாய்வணக்கத்தையே அன்னோர் மேற்கொண்டிருந்தனர். அதனாலேயே ஊர்தோறும் அம்மன் கோயில் எழுப்பினர்.

பெண் தெய்வத்தை, அம்மனைச் 'சக்தி' என்பர். அனைத்து ஆற்றல்களுக்கும் அவளே அதிபதி. ஆற்றலுக்கும், அழிவுக்கும் அவளே காரணம். மேற்கு ஆப்பிரிக்க மக்கள் தம் தலைமைத் தெய்வத்தைப் பெண்ணாகவே கருதுவர் ; போற்றுவர். அசாந்தி (Ashanti) என்பார், நம் தலைமைப் பெண் தெய்வத்தை 'ந்-ஆம்' (Nyame - ஆயா என்பதனுடன் ஒப்பிட்டு ஓர்க) என்று போற்றுவர். திராவிடர், 'அம்மன்' தெய்வத்துடன் சிவனை மணம் முடித்துக் 'கல்யாணச்சுந்தரராகக்' காணுதல் போல, நடுநிலக் கடலோடி நாட்டினரான சுமேரியர், அம்மனை நிலவோடு (Moon) மணம் முடித்து மகிழுவர் ; நிலவைப் போற்றுவர். இளங்கோவடிகள், தம் காப்பியத் தொடக்கத்தில் திங்களைப் போற்றுவது ஈங்கு இணைத்து நினைக்கத் தக்கது.

## 2. மருமக்கள் தாயம்

தந்தைக்குப் பிறகு அவரது உடைமைகளை, மகன் வழிப் பேரன் அடைவது இன்று திராவிட நாடுகளில் உள்ள முறை. இம் முறைக்குப் பெயர் 'மக்கள் வழி'. இம்முறைக்கு மாறாக மகள் வழிப் பேரன் அடைவது சேர நாட்டு முறை. இம்முறைக்குப் பெயர் 'மரு

மக்கள் வழி' கேரளத்தில் இம்முறை இன்றும் உள்ளது. அண்மைக் காலம் வரை தமிழகத் தென் முனையான குமரி மாவட்டத்தில் இம்முறை நடைமுறையில் இருந்தது. பின்பு சட்டம் மூலமாக மாற்றப்பட்டது. இம்மாறுதலுக்காகக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடுபட்டதும், அதற்கெனவே 'மருமக்கள் வழி மான் மியம்' என்ற அங்கத இலக்கியத்தைப் படைத்ததும், கோட்டை வினாக்களை அச்சிட்டு வழங்கியதும் இங்கே இணைத்து எண்ணத் தக்கவை. இம்முறை தற்போது மாற்றப்பட்டது எனினும் மருமக்கள் வழி முறையே தமிழர் தம் பண்டைய முறை.* இம்முறை இன்றும் கேரளாவில் உள்ளதோடு, தென் கருநாடகப் பகுதியிலும் வழக்கில் உள்ளது. இதனைப் போன்றே ஆப்பிரிக்கக் கண்டம் முழுதும், பல இனத்தாரிடையே இம்முறை இன்றும் வழக்கில் வாழ்கிறது. சகாராவில் உள்ள 'பேர் பேர்' (Berbers) என்ற குடியினர், பிரேனியர் பாசுக் (Basques of Pyrens) என்ற குடியினர் மருமக்கள் வழித்தாய முறையினர்.

### 3. முருக வழிபாடு

தமிழக மக்கள் தம் பழங் கடவுள் முருகன் என்பது வெளிப் படை. அவன் மலைநிலக்கடவுள். 'சேயோன் மேய மைவரை உலகம்' என்பது தொல்காப்பியம். மிக அருமையான குறிப்பு ஒன்று இங்கே குறிப்பிடத்தக்கது. முருகனைப் போன்றே 'முருங்கு' (Murungu) என்ற கடவுளை ஆப்பிரிக்கர் வணங்கு கின்றனர். முருங்கு வாழ் இடம், மலைகள் என்பது அன்னோர் நம்பிக்கை. கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஏறத்தாழ 25 பழங்குடியினர் 'முருங்கு' வழிபாட்டினராக இன்றும் உள்ளனர்.

### 4. நாக வழிபாடு

திராவிட நாடு எங்கும் நாக (பாம்பு) வழிபாடு இன்றும் உள்ளது. தமிழகத்தில் புற்றம்மன் கோயில்கள் புகழ் பெற்றவை. நாகர் கோயிலில் உள்ள புத்தேரி 'புற்று ஏரி' என்பதன் 'மருஉ' என்பதும் அங்குப் பெரிய பாம்புப் புற்று இன்றும் வழிபடப் பெறுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கன. வெள்ளிக் கிழமைகளில், தமிழக மகளிர், பாம்புப் புற்றிற்குப் பால் ஊற்றி வழிபாடு செய்

*. நாவலா சோமசுந்தர பாரதியின் மகனாா, இலக்குமிரதன் பாரதி எழுதிய 'சமூக இயல்' எனற நூலைப் பார்கக.

வர். சிற்றூர்ப் புறங்களில், அரசமரத்தையும் வேப்ப மரத்தையும், இணைய வளர்ப்பர் ; அம்மரத்தடியில் நாக உருவம் பொறித்த கல் நடுவர்; அதனை வழிபடுவர். குறிப்பாகத் தாய்மைப் பேற்றிற் காகப் பெண்டிர் தொடர்ந்து நாக வழிபாடு ஆற்றுவர். மணி மேகலைக் காப்பியத்தில் நாக இனம் பேசப்படுவதும் நாக (ர்) கோயில், நாகப்பட்டினம் போன்ற நகர் இருப்பதும் எண்ணத் தக்கன. சிவபெருமானுடன் பாம்பு இணைக்கப்படுவதும், திரு மாலின் உறையுளாகப் பாம்பு[1] அமைக்கப்படுவதும், பாம்பு வழி பாட்டின் அனைத்துச் சமய ஊடுருவலைக் காட்டும்.

நாகப்பாம்பு, கொல்லப்படுமானால் அதனை வறிதே தூக்கி எறியாமல் மனிதரைப் புதைப்பது போல் புதைப்பதும், புதை யிடத்தில் பால் ஊற்றுவதும் இன்றும் தமிழகத்தில் உள்ள வழக்காறுகள் ஆகும்.

தமிழ் நாட்டைப் போலவே, கேரளத்திலும், ஆந்திரத்திலும், கருநாடகத்திலும் நாக வணக்கம் நிலைபெற்றுள்ளது. கருநாடக மக்கள், 'நாக காவு'என்றும், நாக பானம் என்றும் குறிப்பர்.

திராவிடப் பகுதியில் நாக வணக்கம் செல்வாக்குப் பெற்றி ருப்பது போலவே, ஆப்பிரிக்கா எங்கும் இவ்வணக்கம் பரவி யுள்ளது. பாம்புகள் முன்னோர் ஆவி புகுந்த உயிர்கள் என்று ஆப்பிரிக்கர் நம்புகின்றனர். அதனால் சிறந்த பாம்பைப்புதைக்கப் பல சடங்குகள் ஆற்றுகின்றனர். பாம்புக் கதைகள் பல இன்னும் வழங்குகின்றன. பாம்பை ஒட்டிப் பல மூட நம்பிக்கைகளும் நன்னிமித்தத், தீநிமித்த நம்பிக்கைகளும் ஆப்பிரிக்கரிடம் பரவி யுள்ளன. அவற்றுள் பல திராவிட மாநிலங்களில் வழங்கப் பெறும் பாம்பு நம்பிக்கைகளைச் சார்ந்துள்ளன.[2]

---

1. சிவபெருமான பாம்புகளை அணிகளாக அணிந்தவன என்பதும் திருமால ஆயிரந தலைகளை உடைய ஆதிசேடன் என்ற பாம்பைப் படுக்கையாக உடையவன் எனபதும் எண்ணததககன.

2 திராவிட மாநிலங்களிலும், ஆபபிரிக்க நாடுகளிலும பரவியுள்ள நாகவணககம் பற்றி விரிவாக இந்நூல் ஆசிரியரால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 'பாமபு வழிபாடு' எனும் நூல் வெளியிடப்பட்டுளளது

## 5.பல்லாங்குழி ஆட்டம்

திராவிட மாநிலச் சிற்றூர்ப் புறங்களில் ஒவ்வொரு வீட்டிலும் 'பல்லாங்குழி' இருக்கும். மரப்பலகையால் ஆன அவ் விளையாட்டுக் கருவியில் உள்ள சிறு சிறு குழிகளில் இருவர் எதிர் எதிர் அமர்ந்து கொண்டு புளியங்கொட்டை அல்லது சோழிகளை இட்டு விளையாடுவர். சிறுவர் சிறுமியரில் இருந்து முதியவர் வரை இவ்வாட்டம் ஆடுவர். திருமணங்களில் மணநாள் மாலை, மாப்பிள்ளையையும், பெண்ணையும் எதிரும் புதிருமாக, அமர்த்திப் பல்லாங்குழி ஆடவைப்பர். யார் வெல்வார் என்பதில் போட்டி விறுவிறுப்பாகவும், சுவையாகவும் விளங்கும். இது, விளையாட்டுப் போலத் தோன்றினும் அடிப்படையில் விளையாடுவார் தம் கணக்கறிவையும் ஒரு முகப்படுதலையும் பெருக்கும் ஆட்டமாகும். தமிழகத்தில் 'பல்லாங்குழி' என்றும், 'பாண்டி' என்றும் கருநாடகத்தில் 'சென்னை மனை' என்றும் வழங்கப்படும் இவ்வாட்டத்தை ஆப்பிரிக்க நாட்டின் மூலை முடுக்கு தோறும் காணலாம். எப்படி ஆடுவது என்பது பற்றித் தனி நூலே, நைசீரியாவில் வெளியிட்டு விற்கின்றனர்.*

அவுசா (Housa) மொழியில் 'தாரா' (Dara) என்றும் யொருபா (Yoruba) மொழியில் அயோ (Ayo) என்றும், இபோ (Ibo) மொழியில் ஒக்வே (Okwe) என்றும், ஈதோ (Edo) மொழியில் ஈசே (Ese) என்றும், ஈபிக் (Efik) மொழியில் என்சா (Nsa) என்றும், செனகால் நாட்டில் வழங்கும் உலாப் (Wolof) மொழியிலும், புலார் (Pulaar) மொழியிலும் ஊரே (Vurae) என்றும் இவ்வாட்டம் குறிக்கப்படுகிறது. திராவிட, ஆப்பிரிக்க நாடுகளில் சிற்றூர்

---

*. நைசீரியத தலைநகரான இலாகோசில ஒரு பெரும் அரும் பொருள காடசி அகம் (Museum) உள்ளது. அதன கண பலலாங் குழிப பலகைகளின் பலவேறு வகைகளைக காட்சியில் வைத் துளளனர் நாம் விருமபினால் அங்குள்ள மேலாளா நமமுன் ஆடியே காடடுகினறார். தமிழகத்தில புளியஙகொடடை அலலது சோழிகளைப பயன்படுததுவதைப போல அவாகள நாடடில கிடைக்கும ஒருவகைப பழுப்பு நிறக கொட்டை களை ஆடப் பயனபடுததுகிறாாகள விரிவிற்குப பயிலுக தாயம்மாள் அறவாணன எழுதிய பல்லாஙகுழி - திராவிட ஆபபிரிக்க ஒபபீடு.

பேரூர் தோறும் பரவி இருக்கும் இவ்வாட்டம், இரு பகுதிகளின் இன ஒற்றுமையை நினைவூட்டுவதாகும்.

## 6. கும்மியாட்டம்

தமிழகத்திலும், ஏனைய திராவிட மாநிலங்களிலும் பெண்டிர் குழுமி, கும்மியடிப்பது அரிய காட்சி அன்று. குறிப்பாக, ஆடிப் பதினெட்டாம் பெருக்கு விழா நாளன்றும், பொங்கல் விழாவின் இறுதி நாளான கன்னியர் பொங்கல் நாள் அன்றும் பெண்டிர் குழுமி , குனிந்து கும்மி அடிப்பர். கும்மியடித்தலின் ஊடே, கும்மிப்பாட்டும் கூடிப் பாடுவர். இந்தப் பாட்டும், தாளமும் அவ்வப்போது வாழ்ந்த தமிழ்ப் பாவலர்களையும் கவர்ந்திருக்கின்றன. அதனால் தான், பாவலர் பலர் 'கும்மி யடியுங்களடி' என்ற முடிப்புச் சொல்லோடு, பல கும்மி பாடல்களைப் படைத்துள்ளனர். இராமலிங்க வள்ளலார் கூட, கும்மிப் பாடல்களைப் படைத்துள்ளார்* இவை கும்மி அடித்தலின் பழைய வடிவங்களே என்று கருத இடனுண்டு. இத்தகு கும்மியாட்டங்களை ஆப்பிரிக்க மக்களிடையே இன்றும் காண முடியும். இவ்வாட்டம், வேறு பிற ஈரோப்பிய இனங்களில் இல்லாதிருப்பதும், ஆப்பிரிக்கரிடையே இருப்பதும் சிந்தனைக்குரியன.

## 7. கோலாட்டம்

தமிழகத்திலும், கேரளத்திலும் கையில் சிறு வண்ணக் கம்பு கொண்டு, சிறுவர், சிறுமியர் வட்டமாக நின்று கம்புகளை ஒன்றுடன் ஒன்று அடித்து ஒலி எழுப்பி ஆடுவர். பக்கத்துப் பக்கச் சிறுவர் தம்முள் கம்புகளை அடித்து ஒலி எழுப்பி ஆடுவர்.

நடந்தும் , குதித்தும், பாய்ந்தும் மாறி மாறிப் பலவேறு வகையில் ஆடுவர். சில இடங்களில், இளைஞர் கூட இவ்வாட்டம் ஆடுவர். ஆட்டத்தின் ஊடே பாடுவர். பாட்டும், கம்புகளில் ஒத்த ஒலியும் இணையும் போது கேட்பதற்கு இன்பமாக இருக்கும். ஆப்பிரிக்க ஊர்ப்புறங்களில் விழா நாள்களில் கோலாட்டம் ஆடுதல் இன்றும் நிகழும் உண்மை.

---

*. குறவர் குடிசை நுழைநதாணடி - அநதக கோமாடடி எசசில விழைந்தாணடி, துறவா வணங்கும் புகழாண்டி - அவன தோற்றத்தைப பாடி அடியுஙகடி எனபது இராமலிங்கர் தம் புகழபெற்ற சணமுகக கும்மி பாடடின தொடக்கமாகும்

## 8. குடவோலை முறை

தமிழ் நாட்டு வரலாற்றில் பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தைப் பொற்காலம் என்பர். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தொடங்கி , கி.பி. பதினான்காம் நூற்றாண்டு வரை நீடித்த சோழர் ஆட்சியே, தமிழன் அடங்கி மாளப் பிறந்தவன் அல்லன், பிறரை அடக்கி ஆளப் பிறந்தவன் என்று நிறுவியது. வடபுல மன்னராண்ட கங்கைக் கரை வரையும். கடல்கடந்து கடாரம் வரையும் அன்னோரர் ஆட்சி - மாட்சி பரவியது. அக் காலத்தில் அதி காரங்கள் மையத் தலை நகரில் ஒருவரின் கீழ்க் குவிக்கப்படாமல், சிற்றூர் தோறும் ஊராட்சியாகப் பரவலாக்கப்பட்டிருந்தது. சிற்றூர் மக்கள் தமக்குள்ளாக, உரிய ஆட்சியாளர்களை நெறி யோடு தேர்ந்தெடுத்துக்கொள்ள வாய்ப்பமைக்கப்பெற்றிருந்தது. ஊர்க் குடிமக்கள், தம் சார்பாளர்களைத் தேர்ந்தெடுக்க ஓலை களை வாக்குச் சீட்டுகளாகப் பயன்படுத்தினர். மக்களிடும் ஓலைகள் ஒரு குடத்தில் இடப்பட்டு, நெஞ்சில் கரவுக் கறையோ, குறையோ படியாத குழந்தையைக் கொண்டு ஓர் ஓலையை எடுத்துப் படிக்கச் செய்தனர். அவ்வோலையில் எழுதப்பட்டிருக்கும் பெயருக்கு உரியாரே, ஊராளும் உறுப்பினராக அறிவிக்கப்படு வார். இவ்வாறு தேர்தெடுக்கும் முறைக்குக் குடவோலை முறை என்று பெயர். இம்முறையின் அமைப்பைப் பற்றிச்சோழர் காலக் கல்வெட்டான உத்திரமேரூர்க் கல்வெட்டு (கி.பி. 10 ஆம் நூற்றாண்டு) விரிவாக விளக்குகிறது. இம்முறை பிற்காலச் சோழர் காலத்தில் திடும் என நுழைந்தது அன்று. பண்டைக் காலம் தொட்டே இருந்து வந்துள்ளது என்பதைச் சங்க இலக்கியக் குறிப்புகள் சாற்றுகின்றன. ஓலை இடம் பெறும் குடங்களைக் 'குழிசி' என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடு கின்றன. ஊரவையில் சென்று ஒரு பெண் முறையிட்டு நீதி வேண்டுவதையும் அவை தெரிவிக்கின்றன. இத்தகு குடியாட்சி அமைப்பு முறை, தமிழகத்தில் மட்டும் அன்று, ஆப்பிரிக்க நாடு களிலும் பலவேர் (Palaver) என்ற பெயரில் வழங்கியுள்ளது. 'பலவேர்' முறையில், உரியவரைத் தேர்தெடுக்க அல்லது ஒரு கருத்துப் பற்றி முடிவெடிக்க ஊர் மக்கள் கூட்டப்படுவர். கூட்டப்

பெற்று ஒவ்வொருவர் தம் கருத்தும் அறியப்பட்டுப் பல பேர்க் கருத்தே (Majority) முடிவாக மேற்கொள்ளப்படும்.[1]

## 9. கண்ணன் கதை

கண்ணன் திருமாலின் மாற்றுருவினன், கறுப்பு நிறத்தினன்; ஆயர் பாடி வாழுநன்; புல்லாங்குழல் ஊதுநன்; குறும்புகள் ஆடுநன்; பாடுநன். இவனைத் திராவிடக் கடவுள் என்று சாற்றுவர் கில்பர்ட் சிலேட்டர்.[2] இவன் திராவிடக் கடவுளாகத் தான் இருத்தல் வேண்டும் என்பதை அவனது பிறப்பு வரலாறும் உறுதிப்படுத்தும். கண்ணனின் தாயின் பெயர் தேவகி, அவர்கள் வாழ்ந்த இடம் மதுரா. தேவகியின் தமையன் பெயர் கம்சன். அவனே மதுராவைத் தலைநகராகக் கொண்டு நாட்டை ஆண்டு வந்தான். ஒரு நாள் அவனது அவைக்களச் சோதிடன், கம்சனுக்குச் சாவு, தேவகி குழந்தையால் தான் என்று தெரிவிக்கின்றான். குறிப்பாகத் தேவகிக்குப் பிறக்கப் போகும் எட்டாவது குழந்தையால், கம்சனுக்கு முடிவு நேரும் என்று சோதிடன் கம்சனிடம் முன்னறிவுப்புச் செய்கிறான். அதனைக் கேட்ட கம்சன் அஞ்சுகிறான். தன் தங்கைக்குப் பிறக்கும் ஏழு குழந்தைகளையும் பிறந்த உடனேயே தொடர்ந்து கம்சன் கொன்று வருகிறான். எட்டாவது குழந்தை பிறப்பதற்கு முன்பே, தங்கை தேவகியைச் சிறை செய்கின்றான். தேவகியின் வயிற்றில் எட்டாவது குழந்தையாகக் கருவுற்று வளர்பவனே கண்ணன். நள்ளிரவில் கண்ணன் பிறக்கிறான். தன் தமையன் வருவதற்குள், ஆயர்பாடி யசோதை துணையாகப் பிறந்த கண்ணனை ஆயர்பாடிக்கு இடம் மாற்றுகிறாள் தேவகி. ஆயர் பாடியில் அதே சமயத்தில் பிறந்த குழந்தை, தேவகி குழந்தை போலச் சிறைக்குக் கொண்டு வரப்படுகிறது. தன் தங்கைக்குக் குழந்தை பிறந்த செய்தி கேட்ட கம்சன், ஓடோடி வருகிறான். தேவகியிடம் உள்ள போலிக் குழந்தையை வெட்டச் சொல்கிறான். துணிக்கப்பட்ட குழந்தை கம்சனைப் பார்த்து

1 Senghor, L S. Senghor Prose and poety Ed & Tr by John Read and Clive wake 1965 P.60

கயிறுபிணிக குழிசி யோலை கொணமார்

பொறிகண்டழிக்கும ஆவண மாககள,

மருதனிளநாகனாா அகம். 77.

2. Slater G. The Dravidian Elements in Indian culture - Loendon, 1924 Bern.

கம்சா! உன்னை அழிக்க இருக்கும் குழந்தை காப்பாக வளரு கிறது. அழித்து விட்டதாக ஆணவம் வேண்டா' என்று மொழிந்து மடிகிறது. அம்மொழி கேட்டு அதிருகிறான் கம்சன். அற்றை நாளில் பிறந்த அனைத்துக் குழந்தைகளையும் கொன்று விட ஆணையிடுகிறான். இடையர் பாடியில் வளரும் இனிய சிறுவன், கண்ணனைத் தவிர மற்ற குழந்தைகள் கொல்லப் பெறுகின்றனர். கண்ணனைக் கொல்லச் சென்றோர் கண்ணனாலேயே கொல்லப் படுகின்றனர். முடிவில் பெரியவனாக வளர்ந்த கண்ணன், தாய் மாமன் கம்சனைக் கொல்கிறான். மதுராபுரி ஆட்சியைப் பற்றுகிறான்.

இக்கண்ணன் கதையில் உள்ள 'மருமக்கள் தாய முறை' கூர்ந்து கவனிக்கத் தக்கது . 'தங்கை மகன் கண்ணனே ஆட்சிக் குரியவன்' என்ற அடிப்படை, மருமக்கள் வழியை (Matriarchal System) நினைவு படுத்துவதாம். மருமக்கள் வழி திராவிடர்க்கே (ஆரியர்க்கு அன்று) உரியது என்பது முன்பே நாட்டப்பட்டது. எனவே, இக் கதையாலும், கண்ணன் திராவிடக் கடவுள் என உறுதி செய்யப்படுகிறான். தொல்காப்பியர், பிற கடவுளரை விடக் கண்ணனை(மாயோனை) முதலில் குறிப்பதும் நினைக்கத்தக்கது.

திராவிடக் கடவுளான கண்ணன் கதை தடம் மாறாமல் பெயர்கள் மட்டும் திரிந்து ஆப்பிரிக்க நாடுகளில் பழங்கதையாகச் (Legend) சொல்லப்படுகிறது. இக் கதையைத் தலைமுறை தலைமுறையாக ஆப்பிரிக்கர், செவி வழிக் காப்பாற்றி வரு கின்றனர்.† கதையின் பெயர் சோனி அலி பேர் (Soni Ali ber). சோனி அலி பேர், சோங்கே (Songai) நாட்டின் அரசன். அவன் ஒரு நாளிரவு கனவொன்று கண்டான். அது அவனுக்குப் பேரதிர்ச்சி யாகவும், பேரச்சமாகவும் இருந்தது. எனவே, சோதிடனை அழைத்தான். தான் கண்ட கனாத் தோற்றத்தை அவனிடம் கூறினான். அவன் கூறினதாவது : மன்னன் கொல்லப்படுவான். அவனால் மிக நேசிக்கப்படுகிற அவனது தங்கைக் கசேக்குப்

†. இககதை வரலாறறு நாடகமாகப பெறறுப பிரெஞசு மொழி யில இலோகோசில் (Nigeria) நடந்த ஆபபிரிககப பண்பாட்டு விழாவில நடிககப பெறறது. அநநாடகத்தின் சுருக்கமே மேலே குறிககப்படுகிறது. (Festac. Jan. 19th to Feb. 12th 1979)

(Kassei) பிறக்கும் குழந்தையே அவனைக் கொல்லும் ; அவன் ஆட்சியைக் கைப்பற்றும். உடனே அரசவைக் கூட்டப் பெற்றது. கசேக்குப் பிறந்த , இனி பிறக்க உள்ள குழந்தைகளைக் கொன்று விடுவது என்று முடிவு செய்யப்பட்டது. கொன்று விடும் பணி பலாமா (Balama) என்ற நீதி அமைச்சரிடம் ஒப்புவிக்கப்பெற்றது. கொலைப் பணியைப் பத்து ஆண்டுகளுக்குள் நிறைவேற்றிவிட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கசே (தேவகி) யின் குழந்தைகள் கொல்லப்பட்டன. புதிய குழந்தை அவளுக்குப் பிறந்தது அதே சமயத்தில் அவளது பணிப் பெண்ணிற்கு (யசோதையைப் போல) ஒரு பெண் குழந்தை பிறந்தது. பணிப்பெண், கசே தேவியிடம் கூறினாள். 'நம் குழந்தைகளை மாற்றி கொள்வோம்' என்று. அப்படியே குழந்தைகள் மாற்றப்பெற்றன. கசேயின் உண்மைக் குழந்தை பர்கோ (Bargou) (கண்ணனைப் போல) , பணிப் பெண் வீட்டில் வளர்ந்தான். பர்கோவின் அற்புதச் செயல்கள் சோனி அலியை ஐயுற வைத்தன. அவனைக் கொல்விக்க மறைமுக வழிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒன்றும் பயனளிக்கவில்லை. முடிவில் ஒரு நாள் பர்கோ (கண்ணன்) , சோனி அலிபேரை (கம்சனை) க் கொன்றான். அவன் ஆட்சியையும் கைப்பற்றி ஆண்டான்.

கதையையும் கதையின் போக்கையும் கூர்ந்து கவனித்தால் இரண்டு கதைகளும் ஒன்றே என்பது தெரியவரும்.

| **கண்ணன் கதைப் பெயர்கள்** | **பர்கோ கதைப் பெயர்கள்** |
|---|---|
| 1. கண்ணன் | 1. பர்கோ |
| 2. கம்சன் | 2. சோனி அலிபேர் |
| 3. தேவகி | 3. கசே |
| 4. யசோதை | 4. பணிப்பெண் |

| **கண்ணன் கதை நிகழ்ச்சிகள்** | **பர்கோ கதை நிகழ்ச்சிகள்** |
|---|---|
| 1. மாமன் (கம்சன்) ஆட்சி | 1. மாமன் சோனி ஆட்சி |
| 2. சோதிடன் வரவு | 2. சோதிடன் வரவு |
| 3. சோதிடன் கூற்று மன்னன் மருமகனால் கொல்லப் படுவான் எனல் | 3. சோதிடன் கூற்று மன்னன் மருமகனால் கொல்லப் படுவான் எனல் |

| | |
|---|---|
| 4. தங்யையின் (தேவகி) முன்னைய குழந்தைகள் கொல்லப்படல் கொல்லப்படல் | 4. தங்கையின் (கசே) முன்னைய குழந்தைகள் |
| 5. கண்ணனைக் கொல்லும் முயற்சி | 5. பார்கோவைக் கொல்லும் முயற்சி |
| 6. கண்ணன் அற்புதக் குழந்தை | 6. பர்கோ அற்புதக் குழந்தை |
| 7. தன்னை அழிக்க வளர்பவன் இவனே என மன்னன் (கம்சன்) உய்த்துணர்தல் | 7. தன்னை அழிக்க வளர் பவன் இவன் என (சோனி) உய்த்துணர்தல் |
| 8. மருமகன் கண்ணனைக் கொல்ல மாமன் முயற்சி | 8. மருமகனைக் கொல்ல மாமன் முயற்சி |
| 9. முயற்சியில் தொடர்ந்து தோல்விகள் | 9. முயற்சியில் தொடர்ந்து தோல்விகள் |
| 10. முடிவில் மருமகன், மாமனைக் கொல்லுதல் | 10. மருமகன், மாமனைக் கொல்லுதல் |
| 11. மருமகன் ஆட்சியை கைப்பற்றுதல். | மருமகன் ஆட்சியைக் கைப்பற்றுதல். |

ஆழ்ந்து ஆராயின், ஆப்பிரிக்காவில் நாட்டுப்புறக் கதையாக வழங்கும் சோனி அலி பேர் கதை, இந்திய நாட்டுத் திராவிடக் கடவுளான கண்ணன் கதையின் மறுபதிவு என்பதில் ஐயமில்லை. இக்கதை அண்மையில் இங்கே வந்ததும் அன்று. பன்னூறு ஆண்டுகளாக இக்கதைச் சொல்லப்பட்டு வந்திருக் கிறது. கி.பி. 1450 இலேயே இக்கதை இங்கே சொல்லப்பட்டு வந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இக்கதை எங்கிருந்து தொடங்கியது? எப்படி பரவியது? யாரால் பரவியது ? எதனால் பரவியது? இவையெல்லாம் விடையிறுக்கப்பட வேண்டிய வினாக்கள். வருங்கால விரிவான ஆய்வே விடை இறுக்கும். எனினும் ஒன்று வெளிப்படையாகத் தெரிகிறது. இவ்விரண்டு கதையாளர்களும் மிகமிக நெருக்கமானவர்களாக இருந்திருத்தல் வேண்டும்.

மேற்கு ஆப்பிரிக்கப்பகுதியில் பேசப்படும் மொழிகளுள் புலானியும் ஒன்று. செனகால் நாட்டில் வழங்கும் மொழிகளுள் புலானியும்ஒன்று. இம்மொழி பேசுவோர், புலானி (Fulani) எனப்படுவர். இவர் ஏனைய நீக்ரோவரைப் போல அத்துணைக் கறுப்பர் அல்லர். இவர் இந்தியாவினின்றும் சென்றவர் என்பர் அறிஞர் புலேரா சா (Flora shaw)[1].

மலேசிய, யேலனேசிய, திராவிட மக்களுக்கும் ஆப்பிரிக்க ருக்கும் இடையே உருவ ஒற்றுமைகள் உள்ளன.

ஆப்பிரிக்கருக்கும் இந்தோனேசிய மக்களுக்கும் இடையே இரத்த அளவில் (Blood group) ஒற்றுமைகள் உள்ளன.[2] மேற்கு ஆப்பிரிக்கர் சோழிகளைப் பயன்படுத்துகின்றனர். சோழிகள் கேரளக் கடற்கரையோரத்தில் கிடைப்பன. மேற்கு ஆப்பிரிக்கக் குடிகளுள் துயாரேக் (Tuareg) என்போர் காரோ மலைகளில் வாழ் கின்றனர். அவர்கள் ஒருவகைக் காதுவளையத்தை அணிகின் றனர். இவ்வளையம் எங்கிருந்து அறிமுகமாயிற்று எனத் தெரிய வில்லை. ஆனால் அசாம் பழங் குடியினர் இது போன்ற வளையத்தையே காதுகளில் அணிகின்றனர். இருவர் அணி வனவும் ஒத்துள்ளன. படகைப் போன்ற அமைப்பின. மேற்கு ஆப்பிரிக்க குடியினர் அணியும் சிவலிங்கம் போன்ற ஒருவகைக் காதணி, இந்தியாவிலிருந்தே வந்திருத்தல் வேண்டும். மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் உள்ளகோயில் அமைப்பு, கேரள, தமிழகச் சிற்றூர்ப் புறக் கோயில்களை அப்படியே நினைவுபடுத்துவன. நைசீரியாவில் உள்ள இக்பிராசு (Igbirras) என்ற குடியினர் தலைவேட்டை ஆடுவோர் (Head hunters) தலை பலி நில

1. மொழியியல அடிபபடையிலும புலானி திராவிடத தனமை களைப பெறறுளளது மொழியியல சானறுகள எனற தலைபபில தமிழிறகும ஆப்பிரிகக மொழிகள சிலவறறிறகும உளள வேறு சில ஒற்றுமைகளுககும பால் பகுபபு போனற தலைபபையும பிறவறறையும் பாாகக

2 Some Anthropologists are prepared to accept a more less Dravidian Strain in Africa - Latters in his Individuality of the Blood indicates one map of blood group distribution found for Indonesia and just that portion of west Africa where the cultural parellels are found, K. Madhu Panikkar - The Serpant and the Crescent P. 23.

வளத்தைக் கொடுக்கும் என்று நம்புகின்றனர். தமிழகத்தில் போர்க் காலத்தில் வீரர்கள் தம் தலைகளைத் தாமாகவே காளிதேவி முன் அரிந்து கொடுப்பர்.

அடிக்கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவராலோ
அரிந்த சிரம் அணங்கின் கைக் கொடுப்பராலோ

என வரும் கலிங்கத்துப் பரணி (பாலை பாடியது) வரிகள் தலை தானத்தை நினைவுபடுத்தும். இதனை வற்புறுத்தும் சிற்பங்களும், கல்வெட்டுகளும், தமிழகத்திலும் கருநாடகத்திலும் நிரம்ப உள்ளன. அசாம் மலை மக்களிடத்தும் இப்பழக்கம் உள்ளது. ஒரு காலத்தில் தலை கொடுக்கும் பழக்கமே பிற்காலத்துத் தலைமுடி கொடுக்கும் பழக்கமாய்த் தேய்ந்தது போலும். ஆப்பிரிக்கப் பழங்குடியினரும், திராவிடப் பழங்குடியினரும் இறப்போர் ஆவியாக இருப்பர் என்று நம்பினர். அதனாலேயே நடுகல் நடும் பழக்கம், தந்தை தாயார் மறைவிற்குத் 'திவசம்' செய்யும் பழக்கம் ஆகியன தமிழகத்தில் உள்ளன. நடுகல்லில், மறைந்தோர் ஆவி தங்கும் என்று நம்பினர். நாகர்கள் இறந்தோர் எலும்புகளைத்தம் தான்யக் களஞ்சியத்தில் வைத்துக் காப்பர். இதே பழக்கம் நைசீரிய மக்களிடமும் காணப்படுகிறது. இப்படிச்செய்தால் தான்யம் நன்கு விளையும்; களஞ்சியம் நிரம்பி நிரம்பி வழியும் என்று நம்பினர். ஒரு மனிதன் உயிருடன் இருக்கும் போதே, ஓருடலை விட்டுப் பிரிந்தோர் உடலில் புகுந்து இயக்க முடியும் என்று நம்பும் பழக்கம் திராவிடப் பகுதிகளில் உள்ளது.* தமிழகத்தில் 'கூடு விட்டுக் கூடு பாய்தல்' என்றே சித்தர்கள் இதனைக் குறித்தனர். ஆவியைப் பற்றிய இது போன்ற நிகழ்ச்சிகளையும், கதைகளையும் மேற்கு ஆப்பிரிக்கா எங்கும் கேட்கலாம். தோல் தொடர்பான சில தொழில் களை இந்தியா, இந்தோனேசியா, நைசீரியா, சூடான் போன்ற ஆசிய, மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் மட்டுமே பார்க்க முடியும்.

### 10. மீன் சின்னம்

தமிழ் மூவேந்தருள் , பாண்டியர் மிகப் பழமையானவர் என்பர். பண்டு (பழைமை) என்ற சொல்லடியாகப் 'பாண்டியர்'

* இறநத காதலியின ஆவி, வாழும் மனைவியின உடலில புகுந்து ஆட்டிப படைபபது போனறு மலையாளததில 'யடசகானம்' என்ற பெயரில் ஒரு திரைபபடமே வெளியாயிற்று(1976)

என்ற சொல் பிறந்திருத்தல் வேண்டும் என்பர். மீன் சின்னத்திற்குக் காரணம் ஒரு காலத்தில் பாண்டியர் தென்புலக்குமரி நிலக் கடலோர நாட்டினராக இருந்தனர். கபாடபுரம், தென் மதுரை ஆகியன அவர் தம்பழைய நகரங்கள். அக்காலத்துக் கடலோர மக்களாக வாழ்ந்தனராதலின் 'கடல் மீன் ' அவருக்கு உணவாக விளங்கியது. சங்கத் தமிழ் இலக்கியங்கள், சிலப்பதிகாரம் ஆகியன கடல் மீனையும், கடல் மீன் உலர்த்தலையும் அழகாக எடுத்துரைக்கும். சிலம்பு கானல் வரி எனும் கடலோர மீனவப் பெண்ணின் காதல் வரி! ஆப்பிரிக்க மக்கள், மீனைப் பெரிதாகப் போற்றுவர். மீன் தான் நாட்டை ஆளுகிறது என்று நம்புவர். நாடு வாழ் மக்கள் அனைவரும் மீனாட்சிக்குக் கட்டுப்பட்டவர் என்று கருதுவர்.*

தமிழகப் பாண்டிய மன்னர் மீனவர் எனவும், மீனவர் கோன் எனவும், அவர்தம் நாடு 'மீன் நாடு' எனவும், அவர் தம் கொடி மீன் எனவும், மதுரைக் கோயிலில் உள்ள பெண் தெய்வம் மீனாட்சி எனவும், பெயர் பெற்றுள்ள பாங்கு ஒப்பிடத்தக்கது. தமிழர் ஒரு காலத்தில் பெண் தெய்வத்தையே தலைமையாக வழிபட்டனர் என்பதற்கு மீனாட்சிக் கோயிலும் ஒரு சான்று. ஆப்பிரிக்கரும் பெண்தெய்வத் தலைமை வழிப்பாட்டினர் என்பதையும் இணைத்து நினைக.

அரசனும் தலைமை நீதிபதியும் ஆப்பிரிக்காவில் ஒருவரே. தமிழகத்துப் பொற்கைப் பாண்டியன் கதை, கண்ணகி கதை போன்றன அரசனே நீதிபதி என்பதைக் காட்டுவன. தமிழக மன்னரைப் போலவே ஆப்பிரிக்க மன்னர்களும் கொற்றக்குடை வைத்திருந்தனர். அதனை அரசனுக்கு இணையாகப் போற்றினர். தமிழகத்திலும் அதே நிலை. மன்னன் 'வெற்றிலை'போட்டு உமிழ எண்ணினால், உமிழ்நீரை ஏந்த வெற்றிலைப் பணிக்கத்துடன் ஒரு தொண்டன் அருகிருப்பான். தமிழ் நாட்டில் இருந்த இதே நிலை ஆப்பிரிக்க மன்னரிடமும் இருந்துள்ளது. இதழ் சிவக்கத் தமிழர் வெற்றிலை போடுவது போன்று ஆப்பிரிக்கர் இங்கே கிடைக்கும் கூர்சி (Goorjee) மரப்பூவைக் கொண்டு இதழ் சிவப் பாக்குவர்; தமிழகப் பெண்டிர் மருதாணி போடுவது போன்று,

* K. Madhu Panikkar, The Serpant and the crescent p. 29.

ஈண்டுள்ள பெண்டிர் இன்றும் மருதாணி அரைத்துத் தம் கை, கால்களுக்குப் பூசுவர்.

### 5.7. ஆஸ்திரேலியப் பழங்குடியினர்

ஆஸ்திரேலியாவிலிருந்து பழங்குடியினர், மேற்கு நோக்கிப் இந்தியா வரை பரவினர் என்பதற்கு மாறாக, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து கிழக்கு நோக்கிப் பரவினர் என்ற கருத்திற்கு நிரம்ப ஆதரவு உள்ளது. கி.மு. 30,000 அளவில், ஆஸ்திரேலியா தொடக்கத்தில் மக்களற்ற நிலமாகவே இருந்தது. கி.மு. 30,000 அளவில், இந்தோனேசியத் தீவுகளான தைமூர்*, செலிபீஸ் என்பவற்றிலிருந்து பழங்குடியினர், ஆஸ்திரேலியா வில் நுழைந்தனர். அக்காலத்து, கடல்மட்டம், தற்போது இருப் பதை விடக் கிட்டத்தட்ட 400-600 அடிவரை தாழ்ந்திருந்தது. ஆஸ்திரேலியாவிற்கும் - நியூகினிக்கும் இடையே கடல் இல்லை; நிலமே இருந்தது. எனவே, பழங்குடியினர் நிலவழி எளிதில் சென்றிருத்தல் கூடும்.

திராவிடர் குறிப்பாகத் திராவிடப் பழங்குடிகள் கரிய நிறத் தினர்; கரிய முடியினர்; கரிய விழியினர்; கரிய இமையினர் இவ்வகையில் ஆஸ்திரேலியர் நீக்ரோய்ட் இனத்தினரோடு ஒத்துள்ளனர். எனினும் சுருளாத பறட்டைத் தலைமுடி, உடம்பில் மயிர்ப்போர்வை, நெற்றியின் வடிவம், கண்மேல் வரம்புகள், மூக்குத்தண்டு ஆகியவற்றால் ஆஸ்திரேலியக் குடியினர் நீக்ரோய்ட் கருப்பர்களிடமிருந்து வேறுபடுகின்றனர். இலங்கை யில் வாழ்ந்து அழிந்த 'வெட்டர்கள்' ஆஸ்திரேலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். உருத்தோற்ற அளவில் பார்க்கும்போது திராவிடர் ஆஸ்திரேலியப் பழங்குடியை ஒத்துள்ளனர். தென் இந்தியப் பழங்குடி மக்களாகிய மலைவேடர், குறும்பர், சோழர், பழநி மலைப்பகுதியில் வாழும் பளையர், தமிழகம் வாழ் ஆதி திராவிடர் ஆகியோர் ஆஸ்திரேலிய இனக் கூறுகளை உடையவர்.

ஆஸ்திரேலிய மக்கள் புழங்கிய சொற்கள் திராவிட மொழி களிலும் ஆரிய மொழிகளிலும் கலந்துள்ளன. சான்றாக, கங்கை (ஆறு), தாம்பூலம் (வெற்றிலை), வழுதுணங்காய் (கத்தரிக்காய்), மாதங்கம் (யானை), கஜம் (யானை) , பாணம் (அம்பு), இலிங்கம் (கந்து) ஆகியன.

---

*, கிழககுத் தைமூா 2002 மே 12 முதல தனி நாடாகிவிடடது

நெல், வெற்றிலை, கரும்பு போன்றவற்றைப் பயிரிடுதல், பருத்தியை நூற்று ஆடை நெய்தல் , கரும்பிலிருந்து வெல்லம் செய்தல், யானையைப் பழக்குதல், மஞ்சள் குங்குமம் ஆகியவற்றைப் பயன்படுத்துதல், வெற்றிலை பாக்கு கொடுத்தல், குழந்தைப் பேற்றிற்காக அரசமரத்தைச் சுற்றுதல், கண்ணேறு கழித்தல், தீட்டு விலக்கு, மதியை அடிப்படையாகக் கொண்டு காலம் கணித்தல், இறந்தோரைப் புதைத்தல், தாழியில் இட்டுப் புதைத்தல், முன்னோரை வழிபடல் ஆகியன தமிழரிடம் அன்றி ஆஸ்திரேலியரிடமும் காணப்படும் பழக்கங்களாகும். விலங்குகள் பற்றிய கதைகள், ஜாதகக் கதைகள், பஞ்ச தந்திர கதைகள், இதோபதேச கதைகள் போன்றனவும் இப்பழங்குடியினரிடம் தோன்றியனவாம். நாக வழிபாடு, நாகக் கன்னி, ஆமை, மகர மீன், முதலை, அநுமான் (?) விநாயகர் முதலான விலங்கு தெய்வ வழிபாடும் சிவலிங்க வழிபாடும், கூர்மாவதாரமும், மச்சாவதாரமும், வராக அவதாரமும் ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடமிருந்து தோன்றியவை.*

### 1. சீப்பு அன்பளிப்பு

கோயம்பத்தூர் மாவட்டம் ஆனைமலையில் காடர் எனும் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இப்பழங்குடியினரிடம் புதுமையான வழக்கம் ஒன்று தம்பதியிரிடையே இருந்து வருகிறது. கணவன் தன் மனைவிக்காக அழகிய சீப்பு ஒன்றை நுண்ணிய வேலைப் பாடுடன் செய்வான். செய்த சீப்பைத் தன் மனைவிக்கு அன்பளிப்பாக வழங்குவான். அதனைப் பெற்ற அவனுடைய மனைவி அழகுப் பொருளாகத் தலையில் அணிந்து கொள்வாள். ஆஸ்திரேலியாவுக்கு வடக்கே உள்ள நியூகினியாவில் வாழும் நீக்ரிட்டோ பழங்குடியினரிடமும் இது போன்ற சீப்பை அணியும் வழக்கம் உள்ளது.

### 2. முன்பல் உடைத்துக் கொள்ளுதல்

தமிழ்நாட்டுக் காடரும் கேரளத்து மலைவேடரும் வயது வந்த ஆணும் பெண்ணும் தம் முன்வரிசைப் பற்களைச் செதுக்கிக்

*. கமபா எனற கிழககு ஆபபிரிகக இனககுழுவினரிடமும் இப்பழககம உள்ளது.

கொள்வர்; அல்லது சூடுபடுத்திக் கொள்வர். ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடமும் இப்பழக்கம் உள்ளது.[1]

### 3. சாதிப் பிரிவு

திராவிடரிடம் இன்று காணப்படும் சாதிப்பாகுபாடு போன்று ஒருவகைப் பாகுபாடு ஆஸ்திரேலியப் பழங்குடிகளிடம் காணப்படுகிறது என்பர்.[2]

### 4. நாகமும் ஞாயிறும் குலக்குறியீடாதல்

நாகப்பாம்பின் உருவமும், சூரியனும் குலக்குறியீடுகளாக முன்னோரால் கொள்ளப்பட்டன. சோழர் குலம், சூரிய குலம் என்று கருதப்படுகிறது. சேரர் குலம், நாகர் குலத்தினர் ஆகலாம். சூரியனைக் குலக்குறியீடாகக் கொள்ளும் பழக்கம் ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடையே காணப்படுகிறது.

வாரம்முங்கா (Wuaramunga) என்ற ஆஸ்திரேலிய ஊரில் பாம்பின் உருவத்தைத் தரையிலே எழுதி அழிக்கும் வழக்கம் காணப்படுகிறது. இப்பழக்கம் கேரளத்தில் வழங்கும் வழக்கத்தை அப்படியே ஒத்துள்ளது. கேரளத்தில் 'பாம்பன் துள்ளல்' என்ற ஒரு சடங்கு நாக தோசத்தை நீக்குவதற்காக நடத்தப்படுகிறது. நாக குலத்தினர் எனப்படும் 'புல்லுவர்' இச்சடங்கை நிகழ்த்துவதற்காக அழைக்கப்படுவர். தரையின் மேல் பாம்பு சுற்றி சுற்றி இருப்பது போலப் படத்தைப் புல்லுவன் வரைவான். அரிசிமாவால் பாம்புப் படத்தை வரைந்து பாம்பின் கழுத்துப் பக்கங்களை வெவ்வேறு ஐந்து வண்ணங்களால் வரைவான். நாக தோசத்திற்கு ஆளான குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தி உண்ணாவிரதம் இருப்பாள்; நீராடித் தூய ஆடை உடுத்திக் கூட்டி முடியாத அவிழ்ந்த கூந்தலுடன் பாம்பின் தலைப்பக்கம் அமர்வாள். கையில் தென்னங் குருத்தை ஏந்தி இருப்பாள். புல்லுவன் தன்னிடம் உள்ள மண் பானையின் மூலம் கடம் வாசிப்பான். அவன் மனைவி தாளம் போடுவாள். இவர்களைச் சார்ந்து இரு வரிசைகளாக ஆடவரும் பெண்டிரும் அமர்ந்திருப்பர்.

தாளத்துக்குத்தக அன்னோர் பாடுவர். பாட்டுகள் எல்லாம் நாகத்தைப் போற்றுவனவாக இருக்கும். பக்திப் பரவசமான

1. Bagchi, Majumdar, Chatterji, quoted by K.D. Thirunavukkarasu, History of Tamil Nadu, PP. 90, 91.
2 Anthropology India, p. 3

சூழ்நிலை. பாடல்களில் ஒலிமயம் அடிக்கப்படும் தாளலயம் அனைத்தும் தென்னங் குருத்தை ஏந்தியிருக்கும் பெண்ணை மயக்குறுத்தும். அவளுக்குச் 'சாமி' வந்துவிடும். அமர்ந்தபடி முன்னும் பின்னுமாக அசைந்து ஆடுவாள். கைவசமுள்ள தென்னங்குருத்தால் தரையில் வரையப்பட்டிருக்கும் பாம்பு உருவத்தை அழிப்பாள். நூற்றுக்கணக்கான தடவை இவ்வாறு செய்வாள். இவ்வாறு பாம்பன் துள்ளல் கேரளாவில் நிகழும்.$

## 5. ஆஸ்த்ராலாய்ட் (Australoid) எலும்புக் கூடுகள்

மொகஞ்சதரோவில் கிடைத்த எலும்புக்கூடுகளுள் ஆஸத்ராலாய்ட் எலும்புக் கூடுகளும் கிடைத்துள்ளன. கோந்க்ஸ் (Gonds), பில்ஸ் (Bhils), முண்டா (Mundas), கோன்ஸ் (Khonds), கோல்ஸ் (Kols) ஆகியோர் ஆஸ்திரேலியா பழங்குடித் தோற்றத்தினர்.

## 6. திருமணத்துக்கு முற்பட்ட காலம்

கோந்த் என்ற திராவிடப் பழங்குடியினரிடம் கோட்டுல் என்ற காதல் முறை வழக்கில் உள்ளது. ஊரில் உள்ள இளைஞர்



சிந்துவெளி ஆடல் அழகி

$. உத்தரப்பிரதேசத்தின் கிழக்கு மாவட்டத்தில் பெண்கள் பாம்புப் பொம்மைகளை ஆறு அல்லது குளத்து நீரில் மிதக்கவிடுவர். சிற்றூர்ப் பையன்களை விட்டு நீளக் குச்சியினால் அப்பாம்புகளை அடிக்கச் செய்வர்.

கள் திருமணத்துக்கு முன்பு இராப்பொழுதில் 'கோட்டுல்' என்ற காதல் குடிசையில் தங்கி உறவாடுவர். இத்தகு பழக்கம் ஆஸ்திரேலியாவிலும் காணப்படுகிறது.

## 7. ஆடும் பெண்

சிந்துவெளியில் கிடைத்துள்ள அழகிய வெண்கலச் செப்புகளுள் ஆடல் அழகி சிற்பம் குறிக்கத்தக்கதாகும். இச்சிற்பம் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் உருவத்தை ஒத்ததாகும்.

## 8. தாய்மாமன் தலைமை

திராவிடச் சமுகம் தாய்வழிச் சமுகமாகும். எனவே, தாய்மாமன் மிகுந்த தலைமையுற்றிருப்பான். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. மேலனேஷியாவைச் சேர்ந்த தரோபிரியண்டர் (Trobrianders) என்ற ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடம் தாய்மாமனுக்குத் தலைமை கொடுக்கும் வழக்கம் உள்ளது. உடன் பிறந்தாளின் குழந்தைக்குக் கல்வி, கட்டுப்பாடு எல்லாம் தந்து வளர்க்கும் தலைமை தாய்மாமனிடமே உள்ளது.

## 9. விருந்து புரத்தல்

திராவிடரிடம் விருந்து புரக்கும் பண்பு மிகப் பெரிய ஒன்றாகப் போற்றப்படுகிறது. ஆற்றுப்படை இலக்கியங்களும், திருக்குறளும் முன்பின் அறிமுகம் இல்லாமல் புதிதாக வரும் விருந்தினரை வரவேற்றுச் சிறப்புச் செய்வதைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. இதனைப் போலப் புதிதாய் வரும் விருந்தினரைச் சிறந்த முன்னோரின் ஆவியாகவும், கடவுளாகவும் கருதி வரவேற்கும் போக்குப் பல பழங்குடி மக்களிடம் காணப்படுகிறது. ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடம் விருந்தினரை முன்னோர் ஆவியாகவும் கடவுளாகவும் கருதும் போக்கு இருந்தது. ஈரோப்பியர் ஆஸ்திரேலியக் கண்டத்துக்கு வந்தபோது உள்நாட்டுப் பழங்குடி மக்கள் அவர்களைக் கடவுளாகவும் ஆவியாகவும் கருதி வரவேற்றனர். வெள்ளையருக்கு ஆப்பிரிக்காவிலும் இத்தகைய வரவேற்புக் கிடைத்ததைச் 'சகா' என்ற தென் ஆப்பிரிக்க மன்னன் வரலாறு புலப்படுத்துகிறது. காப்டன் வாசுகோடகாமா கள்ளிக் கோட்டைக்கு வந்தபோது உள்ளூர் மக்களால் மிகச் சீரோடு வரவேற்கப்பட்டார்.[1]

---

[1] ஆசிய, ஆபபிரிககா, ஆஸதிரேலிய மககளிடம் காணபபடட விருநது புரககும் பணபாட்டை, வெளளையர்கள தங்கள சுய நலததிறகாகப பயனபடுத்திக கொணடனா.

### 10. மாமன்-அத்தை மகளை மணந்து கொள்ளுதல்

"சிறு பையன்களுடன் கூடி உண்பது, பெண்களுடன் சேர்ந்துண்பது, பழைய சோற்றை உண்பது, அத்தை அல்லது மாமன் மகள் அல்லது மகனை மணப்பது ஆகியன தென்னாட்ட வர்க்கே உரிய பழக்கங்கள்" என்று கூறும் போதாயனரின் தர்ம சூத்திரம் (கி.மு.600).

தாயுடன் பிறந்தவரின் மகளையோ மகனையோ அல்லது தந்தை உடன் பிறந்தாளின் மகனையோ மகளையோ மணந்து கொள்ளும் முறை (Cross Cousin Marriage) திராவிடரிடம் மேலோங்கி உள்ள மணமுறையாகும். ஆஸ்திரேலியப் பழங்குடி களும் இத்தகு மணமுறையையே பின்பற்றுகின்றனர். 'கரியரா' என்ற மேற்கு ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடம் உள்ள திருமண முறை அப்படியே தமிழரோடு ஒத்துள்ளது.[†]

### 11. ஓவிய ஒற்றுமை

ஆஸ்திரேலிய பண்டைய ஓவியங்களும் தென் ஆப்பிரிக்கா வில் புஷ்மேன் வரைந்த ஓவியங்களும் எகிப்தியப் பழைய ஓவியங்களும் ஸ்பெயினில் உள்ள தற்கால ஓவியங்களும் அப்படியே ஒத்துள்ளன.

### 12. ஒத்த கற்கருவிகள்

ஆஸ்திரேலியாவிலும் தென் இந்தியாவிலும் கிடைத்த கற்கருவிகள் ஒரே மாதிரியாக உள்ளன.

இவ் ஒப்புமைகளால் திராவிடருக்கும் ஆஸ்திரேலியருக்கும் இடையே உள்ள ஒற்றுமை புலப்படும். சிலர் இரண்டு குடியின ரும் ஆஸ்திரேலியாவில் பிறந்து மேற்கு நோக்கிப் பரவியிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். மி.நெஸ்தூர்ஹ் என்ற சோவியத் இன இயல் அறிஞர் பின்வருமாறு ஊகிக்கிறார்.

"ஆஸ்திரேலிய நீக்ரோ வகை தன்மை கொண்ட தொடக்கக் குழு, தெற்கு ஆசியாவில் எங்கோ, இந்தியாவிலோ இந்தோ சீனத்திலோ ஒரு வேளை இன்னும் மேற்கேயோ பின்தொன்மை கற்காலத்தின் ஆரம்பத்தில் வசித்தது என்றும் பிற்காலத்தில் இது மேற்குக் கிளையாகவும் கிழக்குக் கிளையாகவும் பிரிந்தது என்றும்

---

†. Louis Dumont : Dravidian and Kariera - Marriage System in south India and Australia, Paris La Haya Mouton, 1975.

அப்புறம் இந்தக் கிளைகள் தமக்குள் பிரதேச தொடர்புகள் இழந்துவிட்டன என்றும் ஊகிக்க வேண்டும் போலும்"[1]

## 13. பூமராங்[2] என்ற வளைதடி

தென் இந்திய மக்களிடமும் ஆஸ்திரேலியப் பழங்குடி களிடமும் 'பூமராங்' என்ற வளைதடி போர்க்கருவியாகப் பயன் படுத்தப்படுகிறது.

வளரி அல்லது வளைதடி எனப்படும் இக்கருவி வளைந்த ஒரு மரத்துண்டாகும். இக்கருவி அழுத்தமான மரத்தாலும் செய்யப்படும்; சில சமயம் இரும்பினாலும் செய்யப்படும். கிட்டத்தட்ட தந்தம் போன்று அடிப்பக்கம் தடித்தும் தலைப்பக்கம் கூர்மையாகச் சிறுத்தும் சற்றே பிறை போல வளைத்திருக்கும். இதனைப் பயன்படுத்த மக்கள் தனிப் பயிற்சி பெறவேண்டும். தோளில் வைத்துக்கொண்டு எதிரியை நோக்கி வேகமாக வீசுவர். முயலையும் காட்டுக்கோழியையும் இதனால் அடித்துத் துய்ப்பர். 'போலிகர்' (Poligar) போரில் இவ்வளைதடிகள் பயன்படுத்தப் பட்டன. தற்போது இவ்வளைதடி பயன்பாட்டை இழந்து விட்டது. எனினும் வீட்டில் பாதுகாக்கப்படும் பொருள்களுள் ஒன்றாகக் காக்கப்படுகிறது. ஆயுத பூசை அன்று இவ்வளைதடி கழுவப் பெற்றுப் பூசைக்கு உள்ளாகிறது. கள்ளர் குலத்தில் திருமணம் நடக்கும்போது திருமணம் முடிந்து மணப்பெண் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்றபின் இவ்வளைதடி கைமாற்றிக் கொள்ளப்படும். பின்பே விருந்து நிகழும். இப்பழக்கம் இன்று மறைந்து வந்தாலும் வளைதடியை அனுப்பிப் பெண்ணைக் கொள்ளுவார் என்ற சொல் வழக்காறாகப் புதுக்கோட்டை மாவட்டத்தில் வழங்குவதைத் தர்ஸ்டன் குறிப்பிடுகிறார்.[3]

## 14. குருதிக் குழு ஆராய்ச்சி

திராவிடருக்கும் ஆஸ்திரேலியருக்கும் இடையே மொழி, பழக்க வழக்கம் உருத் தோற்றம் ஆகியவற்றில் ஒப்புமை

1. (மனித இனங்கள ப 136)
2. Boomerang - என்ற பெயா, அப்பெயருடைய ஓா ஆஸதிரேலி யப பழஙகுடி மககளைக குறிபபதாகும். அமமககளிடம வளைதடி பயனபடுத்துவதைக கண்டோா, அபபழககத திற்கே மககளின பெயரை இடடனர்
3. Thurston, Caste & Tribes of Southern India, Introduction, p. 29.

காணப்படுகின்றது. இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களது ஒப்புமைகள் நிரம்பிக் காணப்படுவதால் ஆஸ்திரேலியரின் மூதாதையர் தென் இந்தியத் திராவிடருக்கு மிகமிக நெருங்கியவராகவே இருத்தல் வேண்டும். ஆனால், இவ்விரு மக்களிடையே நிகழ்த்தப்பட்ட குருதி ஆராய்ச்சி மேற்கண்ட முடிவுக்கு ஒத்ததாக இல்லை. மாறாக, 'பணியன்' போன்று திராவிடர் அல்லாத தென் இந்திய மலைவாழ் மக்களுடன் குருதிக் குழு ஒத்துச் செல்கின்றது.[1]

## 15. மண்டையோட்டு ஆய்வு

சர் வில்லியம் டெர்னர் (Sir William Turner) என்ற ஆய்வாளர், திராவிடர், ஆஸ்திரேலியர் மண்டையோடுகளை ஒப்பிட்டு ஆராய்ந்தார். இரு பிரிவார் இடையேயும் ஒற்றுமை இணைவுகள் இல்லை என்பது அவர் கருத்து.[2]

மேற்கண்ட இருகருத்துகளும் மேலும் ஆராயத்தக்கன. இருகுடியினரையும் வேறுபடுத்தும் சான்றுகளை விட ஒன்றுபடுத்தும் சான்றுகளே மிகுதியாக உள்ளன. வலுவாகவும் உள்ளன.

## 16. ஆஸ்திரேலியப் பழங்குடியினர் மொழியும் தமிழும்

ஆஸ்திரேலியப் பழங்குடிகளுள், குறிப்பாக 'கார்பெண்டாரியன்' என்ற பழங்குடியினர், உருவத்தில் முழுவதுமாகத் தமிழரை ஒத்தே உள்ளனர். தமிழோடு தொடர்புடையன என எண்ணத்தக்க சில சொற்களையும் அன்னோர் பயன்படுத்துகின்றனர். அவையாவன.

| | | |
|---|---|---|
| ஞாம் புல | - | என் கண் |
| ஞுங்கு புல | - | உன் கண் |

1. For instancc, some historians and research scholars have postulated that the Tamils of south India have racial affinity with the aborgines of Australia. But this can be categorically disproved through blood tests. The borgines blood, it turns out, is differenc for that of true Dravidians though it bears great resembliance to that of certain non Dravidian hill tribes of South India known as Panjyans - Dr. Kameswaran, INDIA TODAY, MAY 1st 1981.

2 Sesha Iyengar T R. Dravidian India, p. 26

| | | |
|---|---|---|
| அம்புல | - | அவன் கண் |
| ஞிங்ஙூ புல | - | அவள் கண் |
| இஞ்ஞா | - | இவன் |
| இனோ | - | உவன் |
| ஙுரு | - | அவன் |
| ஞாரெண்டு | - | நீயும் நானும் |
| ஆரெண்டு | - | அவனும் நானும் |
| ஞுஞ்ஞா | - | தாய் |
| இறைய | - | தந்தை |
| இனையரு | - | இளைஞர் |
| பள நாளி | - | பழங்காலம் |
| மன்றோ | - | மன்று |
| பூய் | - | போ |
| கலம் | - | கட்டு மரம் |
| உஞ்ஞான் குரு | - | ஆறு தோன்றும் இடம் |
| உமிஞ்ஞாங் குரு | - | ஆறு கடலில் சேரும் இடம் |
| ஆன்மா நின்னின் இஞ்ஞார நோங்கு | - | மகிழ்ச்சி, உன்னை இங்கே பார்ப்பதில் |
| [1]யாள் வோங்க | - | யார் சொன்னது? |

## 17. ஆஸ்திரேலியாவைக் கண்டுபிடித்தவர் தமிழர்?

தற்கால வரலாற்றின்படி கேப்டன் கூக் என்ற ஆங்கிலேயர் ஆஸ்திரேலியாவைக் கண்டுபிடித்தார். ஆனால் பதினெட்டு அல்லது பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட பெரிய மணி ஒன்றை, ஆஸ்திரேலியாவிற்குக் கிழக்காக நியூசிலாந்திற்கு மேற்காக உள்ள நாரத் அய்லண்டில், கி.பி.1836-இல் நியூசிலாந்தைச் சேர்ந்த கிறித்துவ

1. பி. இராமநாதன, ஆஸதிரேலியப் பழஙகுடி மக்கள் மொழிகளும் தமிழும், செநதமிழச செலவி, மே. **1984**. ப. **361-362**.

மிஷினரி அருள்திரு குளான்சோ (Rev. Colenso) கண்டுபிடித்தார். இம்மணியின் அடி முகப்பில் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. அது வருமாறு: "மொகயத்தீன் பக்கூஸ் உடைய கப்பலுடைய மணி" ("This is the bell of the ship of Mohayathin Bakkus"). இம்மணி இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழர் அல்லது தமிழர்களுடைய கப்பல், தமிழ்நாடு, மலேயா, தென் கிழக்கு ஆசியா வழியாக ஆஸ்திரேலியாவைத் தாண்டிப் பயணஞ் செய்ததை எடுத்துக் காட்டுகிறது.*



ஆஸ்திரேலியாவில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் மணி.

*. Indian Express, 10th January 1968.



நியூசிலாந்து நாட்டு வெலிங்டன்நகரத் தேசிய அருங்காட்சியகத்தில் தமிழ்மணி. அருகில் திருமதி கலையரசி சின்னையா, மலேசிய இர.ந.வீரப்பர் 28-9-1992 அன்று.

## 5.8. கடல்வழியாக வந்தவர்

இந்தியாவிற்கு அப்பால் இருந்து தமிழர் வடமேற்கு இந்தியா வந்து மேற்குக் கடற்கரை வழியாகத் தென் இந்தியாவை அடைந்தனர் என்ற கருத்தை ஒட்டியே வேறொரு கருத்தும் கூறப்படுகிறது. வடமேற்கு இந்தியாவில் இருந்து அரபிக் கடல் வழியாகத் திராவிடர் தென்னிந்தியாவை அடைந்திருக்கலாம் என்பது ஒரு கருத்து. எய்மெண்டார்ப் (Heimendorf), குருக் (Crook) முதலானோர் இக்கருத்தினர். கி.மு. 2000-1000-குள்ளாக மேற்கு ஓரக் கடல் வழியாகத் திராவிடர் தென்னிந்தியா வந்திருக்கலாம் என்பது எய்மெண்டார்ப் ஊகம். தாழியில் பிணங்களை வைத்துப் புதைக்கிறபோது அவற்றுடன் அன்னோர் பல பொருள்களை வைத்துப் புதைக்கும் பழக்கத்தை ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு புலப்படுத்துகிறது. இப்பழக்கம் பாபிலோனியாவில் காணப்படுவதாகும். திராவிடர் தம் கடல் வழிப் பயணத்தால் பாபிலோனியரிடமிருந்து இப்பழக்கத்தை அறிந்திருக்கலாம் என்பது குருக்குடைய கருத்து.

## 5.8.1. எகிப்தில் கிடைத்த கல்வெட்டு

அண்மையில் எகிப்தில் கிடைத்த தமிழ் பிராமி கல்வெட்டு ஒன்று தமிழர் தம் கடல் தாண்டிய உறவை வலுப்படுத்துகிறது. கெய்ரோ நகரத்துக்குத் தெற்கே செங்கடல் கடற்கரை ஓரமாய் இருக்கும் கியூசேயில்-அல்-கடிம் என்ற துறைமுகத்துக்கு அருகே சில இடங்களைத் தோண்டியபோது கொல்லன் பட்டறை ஒன்றும் இரண்டு பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. இப்பானை ஓடுகளில் தமிழ் பிராமி எழுத்துகளில் கல்வெட்டு குறிக்கப்பட்டிருக்கின்றது. 'சாதன்' என ஒரு பானை ஓட்டிலும் 'கணன்' என இன்னொரு பானை ஓட்டிலும் தமிழ் பிராமி எழுத்துகளில் சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

'சாதன்' என்பது 'சாத்தன்' என்பதாகலாம். வெளி ஊர்களிலும் வெளிநாடுகளிலும் சென்று வாணிகம் செய்வோரைச் சாத்தன் என்றும் அவர்தம் வாணிகக் குழுவைச் சாத்து என்றும் பழந்தமிழ்ப் புலவர் குறித்தனர். மாசாத்துவான், கூலவாணிகன் சீத்தலைச் சாத்தன் ஆகிய பெயர்கள் இப்பொருளிலேயே பண்டைய இலக்கியங்களில் வழங்குகின்றன. எனவே, எகிப்துக்குச் சென்றிருந்த வாணிகன் அங்குத் தாதுப் பொருள்களை உருக்கி உலோகம் எடுக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தான். அவன் பெயரையே பானை ஓட்டில் சாத்தன் என்று குறித்திருந்தனர் என உய்த்து உணரலாம்."*

## 5.8.2. கடல்வழிக் குடி பெயர்வு

ஒரு சில தமிழ் வணிகர் தமிழகம் விட்டுத் திரைகடல் ஓடித் திரவியம் தேடியதற்கான குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. மாறாகத் தமிழர் வெகு தொலைவில் உள்ள வேறு நாட்டில் இருந்து தென் இந்தியாவுக்குக் கூட்டமாகக் குடி பெயர்ந்தார்கள் என்பதற்கு அழுத்தமான ஆதாரம் இல்லை. இவ்வாறு முடிவு செய்வதற்குக் காரணங்கள்:

---

*. அமெரிககத் தொல இயலார் கணடுபிடிபபு : 'குங்குமம்', *29-4-84*



சா த ன்
caa ta n



க ண ன்
ka nQ n



Fig -1



Fig -2

எகிப்தில் கிடைத்த தாமிழி கல்வெட்டு காலம்: கி.மு. 3-கி.பி. 2-நூற்றாண்டு

## 1. கடல் கண்டு அஞ்சியது

பொங்கிப் பெருகி அலைமோதும் நீரைப் பார்த்த தமிழர்கள் அந்த நீருக்கு வைத்த பெயர் கடல் என்பதாகும். கடத்தற்கு இயலாதது - அல்லாதது என்ற பொருளைக் கடல் என்ற பெயர் தாங்கி இருக்கிறது. வாரி என்பது கடலுக்கு வழங்கிய மற்றொரு பெயர். உயிர்களையும் பொருள்களையும் விழுங்கிக்கொண்டு வாரிச் செல்வது என்ற பொருளில் இந்தப் பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். இப்பெயரீடுகள் தொல்பழம்தமிழர் கடலைப் பார்த்து அஞ்சிய குறிப்பை உணர்த்துவன ஆகும்.

## 2. நெய்தலே சோகம்

புணர்தல் குறிஞ்சி என்றும், இருத்தல் முல்லை என்றும், ஊடல் மருதம் என்றும், பிரிதல் பாலை என்றும் அமைத்த பண்டைத் தமிழர் **இரங்கல் நெய்தல்** என்றும் குறித்தமை ஆழ்ந்த சிந்தனைக்குரியது. கடல் என்றாலே துன்பந்தரும் இரங்கலுக்கு உரியது என்ற கருத்து தமிழ் முன்னோர் நெஞ்சில் மூண்டுவிட்டிருந்ததையே இரங்கல்-நெய்தல் என்ற உரிப்பொருட் பாகுபாடு காட்டுகிறது.

## 3. கடல் வழி நெடும் பிரிவு

பல்வேறு பிரிவுகளைப் பேசும் தமிழ் இலக்கியங்கள் கடல் பிரிவைக் காட்டும் பாடல்களைப் படைக்கவில்லை. சான்றாகக் கடல் கடந்து தலைவன் செல்ல விரும்புவது போலவும் தலைவியோ, தோழியோ தடுத்து நிறுத்துவது போலவும் அமைந்த பாடல்கள் இல்லை. நெய்தல் நிலப் பாடல்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் குறுங்காலப் பிரிவைக் காட்டுகின்றனவே தவிர கடல் தாண்டி வேறு நாட்டுக்குச் செல்லும் குறிப்புச் சங்க இலக்கியங்களில் இல்லை. இத்தகு குறிப்பு பின்னே வந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, காரைக்கால் அம்மையார் ஆகியோர்தம் பாடல்களில்தான் கிடைக்கின்றது. கடல் பிறக்கோட்டிய வேல் கெழுகுட்டுவன், கடலில் தவிக்கும் ஊமன் போன்று குறிப்புகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருப்பது உண்மையே. எனினும் இவை கடல்தாண்டி தமிழர் குடியெர்ந்த நிகழ்ச்சியைக் காட்டுவன அல்ல.

### 4. கடற்படை இன்மை

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் நான்கு படைகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இங்கே குறிக்கப் பட்டுள்ள நான்கு படைகளுள் கடற்படை இடம் பெறாமை கருதத்தக்கது.

### 5. கடல் பிரிவு குற்றமாகக் கருதப்பட்டமை

முற்காலத்தில் ஆணோ பெண்ணோ கடல்தாண்டி பிரிந்து செல்லுவது விலக்கத்தக்க பழக்கமாகக் (taboo) கருதப்பட்டது. காலப் போக்கில் ஆண் மட்டும் கடல் தாண்டிப் போக அனுமதிக் கப்பட்டது. இவ்வழக்கத்தை 'முந்நீர் வழக்கம் மகடூஉவொடு இல்லை' என்ற தொல்காப்பிய நூற்பா (பொருள் அதிகாரம், அகத்திணை இயல் 37) எடுத்து உணர்த்துகிறது.

மேற்கண்ட குறிப்புகள் தமிழர் கடலைக் கண்டு அஞ்சியதை யும், கடற் பயணத்தைக் கண்டு கலங்கியதையும் கடற் பய ணத்தையே விலக்கத்தக்கப் பழக்கமாகக் கொண்டிருந்தலையும் மிகப் பிற்காலத்தில் கூடப் பெண்டிரை உடன் அழைத்துச் செல லக்கூடாது என்று கருதியிருந்ததையும் காட்டுகின்றன. இவற் றைக் கொண்டு ஆராயும்போது முற்காலத் தமிழர் ஆயிரக் கணக்கான கிலோ மீட்டர் கூட்டங்கூட்டமாக நடுநிலக் கடல் நாடுகளில் இருந்து குடி பெயர்ந்தார்கள் என்பதை ஒப்புக்கொள்ள இயலவில்லை.[†]

---

*. தமிழரிடம, பிறகாலததுக கபபலியல அறிவு மிகப பெருகியது பொனீசியரிடமிருநதும், எகிபதியரிடமிருந்தும் புதுபபுதுக கபபல படகு கட்டும் அறிவைப் பெறறனர் வரலாறறிறகு முறபட்ட காலததிலும, அதனை ஒட்டிய காலததிலும, தமிழர் கடலியல அறிவைப பெறத் தொடங்கியிருந்தனர் பெறறு முடிததிருககவிலலை

**James Hornell** - The origins and ethnological Significance of Indian Boat designs memoris of the astatic society of Bengal Vol vii No. 3, 1920.

# 6

# தமிழர் பிறந்தகம் பற்றிய பலவேறு கொள்கைகள் - ஓர் ஆய்வு

தமிழர்களுடைய பிறந்தகம் பற்றி இதுவரை வந்துள்ள ஒன்பது கொள்கைகள் மேலே காட்டப்பட்டன. அவற்றைப் பின்வருமாறு சுருக்கி வகைப்படுத்திக் கொள்ளலாம்.

தமிழர்கள் வட இந்தியப் பகுதியினர் இந்தியாவிற்கு அப்பால் உள்ள பகுதியில் தமிழ் நாட்டினர்.

## 6.1. தமிழர் தமிழகத்தைப் பிறந்தகமாகக் கொள்ளாதவர் - காரணங்கள்

தமிழர் தமிழகத்தைப் பிறந்தகமாகக் கொண்டிராதவர். அவர் வேறு குலத்தில் இருந்து வந்தவர் என்ற கொள்கையே இன்று மேலோங்கிய கொள்கையாக உலக அறிஞர்களிடமும், இந்திய அறிஞர்களிடமும் காணப்படுகிறது. இவ்வாறு அன்னோர் ஒருமித்துக் கூறக் காரணம் என்ன என்பது ஆராயப்பட வேண்டும். பின்வருவனவற்றை மேற்கண்ட முடிவுகளுக்கு உரிய காரணங்களாக உய்த்தறியலாம்.

### 1. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட சான்றின்மை

தமிழ்நாட்டில் வரலாற்றுக்கு முற்பட்ட கற்காலம், பழங்கற்காலம் ஆகியவற்றைச் சார்ந்த சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றால் மனிதன் கி.மு.35000-10000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் வாழத் தொடங்கி விட்டனர் என்று உய்த்துணரலாம். இதிலிருந்து மூன்று செய்திகள் சிந்திக்கத்தக்கன.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறிஞர்கள் பின்வருமாறு பகுத்துள்ளனர்.

| | |
|---|---|
| இரும்புக் காலம் | கி.மு. 1,500 |
| வெண்கலக் காலம் | கி.மு. 3,000 |
| செம்பொன் காலம் | கி.மு. 4,000 |

| | |
|---|---|
| புதுக் கற்காலம் | கி.மு. 10,000 |
| கடைக் கற்காலம் | கி.மு. 25,000 |
| இடைக் கற்காலம் | கி.மு. 50,000 |
| தலைக் கற்காலம் | கி.மு. 1,000,000 |

கி.மு.35,000-10,000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் மாந்தர்கள் வாழ்ந்தார்கள் என்று கூற முடியுமே தவிர அவர்கள் தமிழ் பேசிய தமிழர் என்பதற்கு எந்தவிதச் சான்றும் இல்லை. கற்காலத்தில் மொழி தோன்றியிருக்கவும் வாய்ப்பில்லை.

### 2. மனித முன்னேற்றம், எலும்புக் கூடுகள் தமிழகத்தில் கிடைக்காமை

பழங்கற்காலத்தின் காலம் மற்றைய நாடுகளில் கி.மு. 35,000க்கு முற்பட்ட காலமாக உள்ளது. தமிழ்நாட்டில் கி.மு. 35,000-10,000த்திற்குட்பட்ட காலமாகத்தான் உள்ளது. மனிதனினும் முற்பட்ட ஓமோசேப்பியன் (Homosapien) தோன்றி வாழ்ந்ததற்கான சான்றுகள் கிழக்கு ஆப்பிரிக்கா, ஜாவா, பீக்கிங் ஆகிய இடங்களில் கிடைத்திருக்கின்றன. இத்தகைய மனித முன்னோர்தம் எலும்புக் கூடுகள் எதுவும் தென்னிந்தியாவிலோ, தமிழகத்திலோ கிடைக்கவில்லை என்பது சுட்டத்தக்கது.

### 3. செம்பொன் காலம் இன்மை

பழங்கற்காலம், புதுக்கற்காலம், செம்புக்காலம், இரும்புக் காலம் என்று நிரல்பட அமையவேண்டிய கால அளவு தமிழ் நாட்டைப் பொறுத்தவரை கருங்கற்காலம், கற்காலம் என்பதை அடுத்து இரும்புக்காலம் எனத் தொடங்குகிறது. இதனால் இரும்புக் காலத்தையும், இரும்புக் கால நாகரிகத்தையும் வெளியிலிருந்து வந்த திராவிடர் கொண்டு வந்தனர் என்று சிலர் வாதிட நேர்ந்தது. ஹெய்மண்டார்ப் போன்ற அறிஞர்கள், தமிழர்கள் கி.மு.1500 அளவில் மேற்கு ஆசியப் பகுதியிலிருந்து தரைவழியாகவோ, கடல் வழியாகவோ தென்னிந்தியாவை அடைந்திருக்கலாம் என்று ஊகித்தனர்.

### 4. தொல் பழம் எழுத்து முத்திரைகள் இன்மை

எகிப்து, சுமேர், சிந்து ஆகிய நாகரிகங்களுள் கிடைத்த எழுத்து முத்திரைகள் போல எதுவும் தமிழரிடத்தில், தமிழகத்தில் கிடைக்காமை கருதத்தக்கது. ஐயத்துக்கு இடமற்ற தமிழ்க் கல்

வெட்டுகள் தமிழ் நாட்டில் பல்லவர் காலம் தொடங்கித்தான், கி.பி.4-ஆம் நூற்றாண்டில் இருந்துதான் வரிசையாகக் கிடைக்கின்றன. தமிழ் பிராமிக் கல்வெட்டுகளின் (மாங்குளம்) முன் எல்லை கி.மு.2-3-ஆம் நூற்றாண்டு என்பது மனத்தில் கொள்ளத் தக்கது.*

### 5. வடக்கிருந்து தெற்கு நோக்கிய வரவு

அரசியல், மொழி, பண்பாட்டு வரவுகளும் ஆதிக்கங்களும் இந்தியாவைப் பொறுத்தவரை வடக்கே இருந்து தெற்கு வந்தவையே மிகுதி. எனவே, திராவிட மக்களும் வடக்கே இருந்து வந்தவர் என்று ஊகிப்பது எளிதாகிறது.

### 6. சிந்து வெளி நாகரிக இருப்பிடம்

திராவிடத் தமிழரோடு தொடர்பு படுத்தப்படும் சிந்துவெளி நாகரிகம் தோன்றி வளர்ந்து செழித்து, அழிந்த இடமான மொகஞ்சதாரோவும், ஹரப்பாவும் வடமேற்கு இந்தியாவில் (இன்றைய பாகிஸ்தானில்) இருப்பதும் அதன் காலம் கி.மு. 1500க்கு முற்பட்டதாக அமைந்திருப்பதும் மேற்கண்ட ஊகத்தை வலுப்படுத்துகின்றன.

### 7. பிராகுவி பேசப்படும் இடம்

பிராகுவி மொழி பேசப்படும் பலுசிஸ்தானமும் (Baluchistan) வடமேற்கு இந்தியாவில் அமைந்துள்ளது.

### 8. வட இந்தியத் திராவிட மொழிகள்

தமிழோடு தொடர்புடைய திராவிட மொழிகள் (14 திராவிட மொழிகள்) நடு இந்தியாவிலும் வட இந்தியாவிலும் பேசப்படுகின்றன.

பீகாருக்கும் வங்காளத்துக்கும் இடையே உள்ள காடுகளிலும், மலைகளிலும் கூய், குவி, குருக், மால்டோ ஆகிய திராவிட மொழிகள் பேசப்படுகின்றன.

இவற்றால் தமிழர் வட இந்தியாவிலிருந்து தென் இந்தியா நோக்கி ஒரு காலகட்டத்தில் நகர்ந்திருக்கக்கூடும் என்று பலர் ஊகிப்பது எளிதாகிவிட்டது.

---

*. ஐ மகாதேவன், Early Tamil Epigraphy From the Earlier Times to the Sixth Century, A.D., 2003.

## 9. பழங்கற்காலக் கருவிகள் - தெற்கில் கிட்டாமை

தமிழ் நாட்டில் நிகழ்ந்த அகழ்வாய்வுகளால் தலைக்கற் காலப் பொருள்கள் நிரம்பக் கிடைத்துள்ளன. இவை பெரும்பாலும் தமிழ்நாட்டு வடமாவட்டங்களில் கிடைத்திருப்பதும் தென் மாவட்டங்களில் கிடைக்காமையும் சிந்திக்கத்தக்கன.

பாலாற்றுக்கு வடக்கே, செங்கற்பட்டு மாவட்டத்திலும் வட ஆற்காடு மாவட்டத்திலும் தலைக்கற்காலக் கருவிகள் கிடைத்துள்ளன. கற்கருவிகள் செய்யப் பயன்படும் 'குவாட்சைத்' (Quartzite) என்ற கல்வகை பாலாற்றுக்கு வடக்கே கிடைப்பது தான் காரணம் என்பர். எனினும் தொல்முது மனிதனின் வாழ் வினைக் காட்டும் தலைக்கற்காலக் கருவிகள் தென் மாவட்டங் களில் கிடைக்காமை அக்காலத்தில் மக்கள் மதுரைக்குத் தெற்கே வாழ்க்கையைத் தொடங்கவில்லை என்று சில வரலாற்று அறிஞரை ஊகிக்க வைக்கிறது.*

## 10. மேற்காசிய நடுநிலக்கடல் நாடுகளோடு ஒற்றுமை

திராவிடருக்கும் வடமேற்கு இந்தியா (பாகிஸ்தான்), ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், சிரியா, இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய பகுதிகளில் அன்றிருந்த சுமேர், மெசபோட்டோமிய, பாபி லோனிய மக்களுக்கும் இடையே ஒரு சில மொழி ஒற்றுமைகளை யும், பழக்க வழக்க ஒற்றுமைகளையும் அறிஞர்கள் காட்டுகின் றனர். இதனைப் போலவே நடுநிலக்கடலுக்கு வடக்கே உள்ள தென் ஐரோப்பிய நாடுவாழ் மக்களுக்கும், மொழிக்கும், திராவிடர் தம் மக்களுக்கும், மொழிக்கும் ஒற்றுமைகள் உள்ளன. நடுநிலக் கடலுக்குத் தெற்கே உள்ள எகிப்து உள்ளிட்ட ஆப்பிரிக்க மக்க ளுக்கும், திராவிட மக்களுக்கும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்டு நடுநிலக்கடல் பகுதியில் இருந்து திரா விடர்கள் கிழக்காக நகர்ந்து வடமேற்கு இந்தியாவை அடைந்து, பிறகு மேற்குக் கடற்கரை வழியாகத் தென் இந்தியா சேர்ந்தனர் என்று சிலர் ஊகித்தனர்.

## 11. தமிழர் - ஆஸ்திரேலியப் பழங்குடியை ஒத்திருத்தல்

தமிழர் தம் உடல் தோற்றம் குறிப்பாக அவர் தம் தலை, முடி, உடல், கண் இவற்றின் தோற்றமும், நிறமும் ஆஸ்திரேலியப்

*. கே கே பிள்ளை, தமிழக வரலாறு - மககளும் பணபாடும், 1983 ப 33.

பழங்குடி மக்களை ஒத்துள்ளதாலும் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மொழியும், திராவிட மொழிகளும் ஒரு சில கூறுகளில் ஒத்துள்ளமையாலும் திராவிடரின் மூலப் பிறந்தகம் ஆஸ்தி ரேலியா என்று சிலர் ஊகித்தனர்.

ஆஸ்திரேலியப் பழங்குடிகள், நியூ கினியாவின் பாப்பு வான்கள் பிலிப்பைன்சின் ஈட்டாக்கள், மலேசியாவின் செமாங்கு கள், அந்தமான் ஓங்கி முதலான பழங்குடிகள், தென் இந்தியா வின் காடர், இருளர்கள், இலங்கையின் வெட்டர்கள் ஆகியோர் ஆஸ்தி ரேலிய இணைவையும் நீக்ராய்த் இணைவையும் நினைவுபடுத்து கின்றனர்.

## 6-2. இந்தியாவுக்கு அப்பாலிருந்து வந்தவர் அல்லர் தமிழர்

### 1. உலக மக்கள் அனைவரும் பிறந்த இடம் ஒன்று

உலக மக்கள் ஓரிடத்தில் தோன்றித்தான் பிறகு உலகெங் கும் பரவினர் என்பது ஒரு பழைய கோட்பாடு. பைபிளின் பழைய ஏற்பாட்டில் உள்ள கதையை மெய் வரலாறாகக் கொண்டு மனிதர் அனைவரும் இஸ்ரேல், பாலஸ்தீன் உள்ளிட்ட மேற்கு ஆசியப் பகுதிகளில் இருந்து பரவினர் என்ற மையக் கருத்துத் திராவிடரையும் மேற்கு ஆசியா வரை கொண்டு செல்ல வைத்தது.

உயிர்கள் ஒரே இடத்தில் தோன்றிப் பரவின என்ற கருத் துத் தற்போதைய அறிவியல் பார்வையில் வற்புறுத்தப்படுவது இல்லை. சான்றாக, ஒரு சமயம் வெவ்வேறு இடத்தில் மழை பொழிந்ததாக வைத்துக் கொள்ளலாம். பெய்த மழை பல இடங் களில் தேங்கிக் கிடந்தது; குமரியிலும் தேங்கிக் கிடந்தது; கோவை யிலும் தேங்கிக் கிடந்தது; நாகையிலும் தேங்கிக் கிடந்தது; இவ்வாறு தேங்கிக் கிடக்கும் நீரில் சில வாரங்களில் வார்வா உற்பத்தியாகி அடுத்த சில நாள்களில் வார்வா அனைத்தும் தவளைகளாகிவிடும். குறிப்பிட்ட தட்பவெப்பச் சூழல்கள் அமை யும்போது ஒரே சமயத்தில் வேறு வேறு இடங்களில் உயிர்கள் தோன்ற முடியும். இது போலவே, வேறு வேறு நாடுகளில் குறிப் பிட்ட தட்ப வெப்பச் சூழலில் ஒன்றுடன் ஒன்று தொடர் பில்லாமல் மனித இனம் தோன்றித் தழைக்க முடியும். எனவே, மேற்கு ஆசியப் பகுதியில் மட்டும்தான் மனித இனம் தோன்றியது, பின்பு பரவியது என்ற கோட்பாடு பொருத்தமற்றதாகி விடுகிறது.

## 2. நடுநிலக் கடல் - நெடுந்தொலைவு

நடுநிலக்கடல் நாட்டில் இருந்து தமிழ்நாடு சுமார் 8,000 கி.மீ. தொலைவுடையது. இடையே வேறுவேறு முற்றும் மாறான தட்பவெப்ப நிலைகள் உள்ளன. கிடைக்கும் உணவுப் பொருள்களும் வேறுவேறானவை. இடையே பெரும் ஆறுகள், மலைகள், காடுகள் அவற்றில் கொடும் விலங்குகள், பாலை வனங்கள் ஆகியன இருந்தன. 8,000 கி.மீ. பயணஞ் செய்து நேர்மாறான வேறுவேறு தட்பவெப்ப நிலைகளைச் சந்தித்து இடையிலுள்ள பேராறுகளைக் கடந்து கொடு விலங்களுக்குத் தப்பிப், பலவேறு மலை முகடுகளில் ஏறி இறங்கி 5,000 ஆண்டு களுக்கு முன்பு தமிழர்கள் நடுநிலக் கடலோர நாடுகளிலிருந்து புறப்பட்டு மேற்கு ஆசியாவைக் கடந்து கைபர் கணவாயைத் தாண்டி, வடமேற்கு இந்தியாவுக்கு வந்தனர்; பெரும் நாகரிகத் தைச் சமைந்தனர் என்பது நம்பும்படியாக இல்லை. 8,000 கி.மீ. கடந்து நாடு தேடிச் செல்லும் துணிச்சலான ஆர்வலர் தமிழர் என்பதை அவர்தம் பிற்கால வரலாறும் உறுதி செய்யவில்லை. ஆறு, மலை, விலங்கு ஆகியவற்றைக் கடந்து வந்த வல்லமை பெற்றவர்களாக இருந்திருந்தால் சிந்துவழி ஆரியப் படை யெடுப்புக்கு அஞ்சி, அழிந்தா ஓடி இருப்பர்? தமிழர் ஆரியரைப் போன்ற போர்க்குண மக்கள் அல்லர்.*

தமிழர் மார்கழிப் பனி தவிர, மலைக் குளிர் தாங்காதவர். ஈரோப்பியர் வரும் வரை ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்கள் மனித வாழிடங்களாகக் கொள்ளப்படவில்லை. நமக்கு முன்பு விண் உயர நிமிர்ந்திருக்கும் பெரும் கல்மேடுகளைப் பார்த்து மலைத்து நின்றனர். அதனால்தான் அவற்றை மலை என்று அழைத்தனர். முருகனைக் குன்றின் உச்சியில் அமைத்தனரே அன்றி மலையின் முகட்டில் அமைத்தனர் இல்லை. பெரும் பெரும் மலையில் ஏறிக் கடந்தமை பற்றிய குறிப்புகள் பழைய தமிழ் இலக்கியங்களில் காணவில்லை. எனவே, நடுநிலக் கடல் நாடுகள் ஆகிய குளிர் நாடுகளில் இருந்து பெயர்ந்து இடையிலுள்ள

*. The Dravidians were not war-like, like the Aryans; they lacked the mobility so charateristic of the great warrior people of history - 'Anthropology in India' p. 91.

மலைகளையும், ஆறுகளையும் தாண்டி 8,000 கி.மீ. நடந்து தென்னிந்தியா வந்து சேர்ந்தனர் என்பதை ஏற்பதற்கில்லை.*

அங்கிருந்து வந்தவராக இருப்பின் கோதுமை, பார்லி போன்ற வட இந்தியக் குளிர்காலப் பொருட்களைக் கொண்டு வந்திருப்பர். அத்தகைய பொருள் பற்றிய எத்தகைய குறிப்பும் பண்டைய தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லை.

## 3. தட்பவெப்ப வேறுபாடு

தமிழர் பெரும்பொழுதை ஆறாகவும், சிறு பொழுதை ஆறாகவும் வகுத்துள்ளனர். இப்பகுப்புகளுள் பெரும்பொழுது கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் என ஆறாக அடங்கும். இவற்றுள் வேனிற்காலம் என்பது தமிழ்நாட்டுத் தட்பவெப்பச் சூழலில் தாளமுடியாதது. எனவேதான், வேனிற்காலத்தில் குறிஞ்சி, முல்லை நிலங்கள் திரிந்து பாலை நிலங்கள் ஆகின்றன. இதற்கு நேர்மாறாக இமயமலை அடிவார இந்தியரும், ஈரோப்பியரும் அவர்தம் நாட்டு வேனிற்காலத்தை மிக விரும்புவர். எனவே, வேனிற் காலத்தை வெறுக்கும் மக்களும், விரும்பும் மக்களும் ஒரே இடத்தில் உள்ளவராக இருக்கமுடியாது.

நடுநிலக் கடலுக்கு வடக்கே உள்ள நாடுகளிலும் இமய மலை அடிவாரத்தைச் சார்ந்த வடமேற்கு இந்தியப் பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் கூதிர்காலத்தில் கொடும்பனியால் துன்புறுவர். தெருவும் பிறவும் ஐஸ்கட்டிகளால் நிறைந்திருப்பது மிகச் சாதா ரணம். 'ஐஸ்' என்பதற்குத் தமிழிலோ திராவிட மொழியிலோ சொல்லே இல்லாமை எண்ணத்தக்கது. நடுநிலக்கடல் அல்லது மேற்கு ஆசிய மக்களாகத் திராவிடர் இருப்பின் 'ஐஸ்' போன்ற

---

* சில நோயகள் சில இன மககளுககு வருவதிலலை சான்றாக, சிஙகபபூரில மாணடரின நோய (Mandarın Dısease) இந்தியா, மலாயககாரரை விடச சீனருககே மிகுதியும் வருகிறது. Sickle-cell anaemia, Otosclerosıs, Submucons fıbrosıs, Nasopharyngeal angıofıbrona, Retınıtıs, Pıgmentosa ஆகிய நோயகள நீகரோயத், மங்கோலாய்த், ஆஸ்தரோலாய்த் இன மககளுககு வருவ தில்லை. பிற இன மககளுககு வருகின்றன. எனவே நோய் வரவு கொணடு இனததைத் தீர்மானிகக முடியும என்பது, மேலும ஆய்விறகுரியது - India Toady, May 1 1981.

பொருளுக்குச் சொல்லைப் பெற்றிருப்பர் அன்றோ. எஸ்கிமோ மொழியில் ஐஸ் என்பதற்குப் பத்திற்கும் மேற்பட்ட சொற்கள் உள்ளன.

## 4. தமிழர்க்குத் தாயக உணர்வு மிகுதி

தமிழர் பொதுவாகத் தம் நாடு தாண்டி நிலையாகச் சென்று தங்காதவர். தம் வீட்டு உணர்வும் (Homesick) நாட்டு உணர்வும் மிகுதியாகப் பெற்றவர். வேறு நாடு செல்ல நேரிடினும் உறுதியாக ஒரு சில மாதங்களில் அல்லது ஒரு சில ஆண்டுகளில் திரும்பியே வந்து தீர்வது என்ற கொள்கையினர். எனவேதான் வெளிநாடு செல்லும்போது தம்முடன் மனைவியையோ, குழந்தையையோ, உறவினரையோ தமிழர் உடன் அழைத்துச் செல்வதில்லை. அவ்வாறு அழைத்துச் செல்வதை வேண்டாப் பழக்கமாகத் (taboo) தமிழர் கொண்டிருந்தனர். இதனைப் பிரிவு என்ற பொருளை உணர்த்தும் பாலைப் பாடல்களும், சிலப்பதிகாரமும், தொல்காப்பியமும் மிகத் தெளிவாக எடுத்து ஓதுகின்றன. இது காரணம் பற்றியே ஈரோப்பியக் குடியேற்றக் காலத்தில் தமிழர்கள் வேறு நாடுகளுக்குச் சென்று தங்க நேரிட்டபோதும் மற்றைய இனத்தாரைப் போலச் சென்ற நாடுகளில் அன்னோரரால் நிலையாகத் தங்கியிருக்க முடியவில்லை. இத்தகு மக்கள் எட்டாயிரம் கி.மீ. தொலைவில் இருந்து புறப்பட்டு வந்து தென் இந்தியாவில் தங்கினர் என்பது பகுத்தறிவுக்குப் பொருத்தமானதாக இல்லை.

## 5. சில வரலாற்று நிகழ்ச்சிகள்

தென்னிந்தியா, கி.பி. பதினைந்தாவது நூற்றாண்டிற்குப் பின் காலனி நாடாகியது. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் பெரும் பாலனவும், ஈரோப்பியர் குடியேற்ற ஆதிக்கத்தின் கீழ் வந்தன. அப்போது, பல இடங்களில், அவ்விரு நாடுகளின் தட்பவெப்ப நிலைக்கேற்ப, ஐரோப்பிய முதலாளியர், காபி, தேயிலை, கரும்புத் தோட்டங்களை உருவாக்கினர். தென்னப்பிரிக்கா போன்ற இடங்களில், வைரம் தங்கச் சுரங்கங்கள் தோண்டப்பட்டன. தோட்டங்களிலும், சுரங்கங்களிலும் வேலை செய்ய ஆட்கள் தேவைப்பட்டனர். தேவைப்படவே, வெள்ளை முதலாளியர், தென்னிந்தியாவில் அதுவும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் இருந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை, உலகின் பல்வேறு பாகங்களில் உள்ள தோட்டங்களுக்கும், சுரங்கங்களுக்கும்

அனுப்பினர். அப்போது தென்னிந்தியாவில் ஆட்களை எடுத்தனர். ஆனால், தமிழர் உள்ளிட்ட தென்னிந்தியர், வெளிநாடு செல்ல விரும்பவில்லை. வெளிநாட்டில் உள்ள தற்காலிகத் தொல்லைகள் ஓரளவு காரணம். எனினும், தமிழ்நாட்டை விட வெளிநாட்டு வாழ்க்கை அவர்களுக்குக் கூடுதல் பொருளாதார வழியைத் தந்திருக்கும் என்பதில் அய்யமில்லை. எனினும், தமிழர், கடல்கடந்து வெளிநாடு செல்லுதலை விரும்பவில்லை. ஆள் எடுக்க, வெள்ளைக்கார முகவர் வருகிறார் என்று கேள்வியுற்ற அளவிலேயே ஓடிஒளிந்தனர். அம்மட்டுமன்றி, தர்ஸ்டன் போன்ற மானுடவியல் வெள்ளையர், தம் ஆய்விற்காக, இம்மக்களை அணுகியபோது கூடத் தம்மை வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்ல வந்தவர் எனத் தவறாகப் புரிந்துகொண்டு திராவிடர் ஓடி மறைந்தனர்.

"During a long tour through the Mysore province, the Natives mistook me for a recruiting sergeant bent on seizing them for employment in South Africa, and fled before my approach from town to town"

P XVI

"My arrival at one important town was Co-incident with a great annual temple festival, where at there were not sufficient coolies left to drag the temple car in procession So I had perforce to move on, and leave the Brahman heads unmeasured. The head official of another town, when he came to take leave of me, apologised for the scrubby appearance of his chin, as the Local barber had fled One man, who had volunteered to be tested with lovibond's lintometer, was suddenly seized with fear in the midst of the experiment, and throwing, his body cloth at my feet, ran for all he was worthy, and disappeared *"

P. XVIII.

ஆக, மேற்கண்ட செய்திகள், தமிழர் வெளிநாடு செல்வதில் அதுவும் குறிப்பாகக் கடல் கடந்து செல்வதில் அன்று பேரார்வலராக இல்லை என்பதைக் காட்டுவனவாகும்.

*. Thurston, Vol. 1 p. XVI
பார்கக· க. ப அறவாணன, தமிழர் அடிமையானது ஏன்? எவவாறு (2002), பக். 139-152

## 6.3. வட இந்தியாவிலிருந்து தென் இந்தியாவுக்கு வந்தவரா தமிழர்?

இற்றைத் திராவிடத் தமிழர்தம் தொன்மைப் பிறப்பிடம் சிந்துவெளி சார்ந்த வட இந்தியா என்ற ஒரு கருத்து உண்டு.

### 6.3.1. சிந்துவெளி திராவிடர்தம் தொல் இடம்

ஆரியர் சிந்துவெளிக்கு வந்து திராவிடருடன் போரிட்டனர். போரிடவே அங்கிருந்த திராவிடர் தென்புலத்தை நோக்கி நடந்தனர் என்பது ஆனந்த குமாரசாமி முதல் பலராலும் பரவலாகப் பேசப்படும் கருத்து. சிந்து, திராவிடர் உறைவிடம் என்பதும் திராவிடரும் ஆரியரும் அங்கே பொருதனர் என்பதும் உண்மைகள் ஆகலாம். ஆனால் இன்று தமிழகம் வாழ் மக்கள் அனைவரும் சிந்துவெளியிலிருந்துதான் வந்தனர் என்பது ஆழ்ந்த ஆராய்ச்சிக் குரியது.

#### 1. தமிழிலக்கியச் சான்றின்மை

திராவிட இலக்கியங்களில் மிகத் தொன்மையான இலக்கியங்களைப் பெற்றிருக்கும் தமிழில் தமிழர் வடபுலத்திலிருந்து தென்புலம் வந்ததற்கு ஒரு சான்றும் கிடைக்கவில்லை.

#### 2. சிந்து ஆறு பற்றித் தமிழிலக்கியம் பேசாமை

கங்கை, யமுனை ஆறுகளைப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்றன. பெரிதாகப் பேசப்படும் சிந்து ஆற்றைப் பற்றியோ அவ் ஆற்றங்கரை நாகரிகம் பற்றியோ தமிழ் இலக்கியங்களில் குறிப்பு இல்லை. பாடலி, அயோத்தி போன்ற நகரங்களைத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அழிந்த சிந்துவெளி நகரம் பற்றித் தமிழ் இலக்கியங்களில் பேச்சு மூச்சே இல்லை.

#### 3. அயற்புலத்தார் என்ற குறிப்பின்மை

பன்னெடுங்காலமாகப் பழமையும், தலைமுறை தலைமுறையாகச் செழித்த இலக்கியங்களைப் பெற்றும் வந்திருக்கும் தமிழில் தமிழர் வடபுலத்தார் என்று குறிப்பு இல்லாமை போல, அயல் புலத்தார் என்னும் குறிப்பும் குறிப்பாகக்கூட இல்லாமை எண்ணத்தக்கது.

## 4. குளிர்காலப் பயிர் பற்றிய குறிப்பின்மை

சிந்துவெளி அல்லது பிற வட இந்தியப் பகுதி தமிழர்தம் தாயகமாக இருப்பின் அந்நாடுகளில் மட்டுமே விளையும் கோதுமை போன்ற இன்றியமையா உணவுப் பொருட்களைப் பற்றிய பேச்சு தமிழ்ப் பாக்களில் இடம் பெற்றிருக்கும். அரிசியை யையும், தினை போன்ற இன்ன பிறவற்றையும் குறிப்பிடும் சங்க இலக்கியங்கள் மருந்திற்குக்கூட வடபுலத்திற்கே உரிய குளிர் காலப் பயிர்களைக் குறிக்கவில்லை. வடபுலப் பாலை விலங்கா கிய ஒட்டகம் பற்றி மிகமிக அருகிய குறிப்பே பண்டைத்தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. யானையும், எருமையும் இன்ன பிற விலங்குகளும் சுட்டப்பெறும் அளவுக்கு ஒட்டகம் சுட்டப் பெறவில்லை. எனவே, செடி, கொடி விலங்கின குறிப்பு களும் தமிழர் தம் பண்டை இடம் சிந்துவெளி என்றோ, அதற்கு வெளியே உள்ள இடம் என்றோ உய்த்துணர இடம் தரவில்லை.*

## 5. தமிழ்த் திசைப் பெயர்கள் வடமேற்கு இந்தியாவிற்குப் பொருந்தாமை

தமிழர் வழங்கும் திசைப்பெயர்கள் ஆராயத் தக்கவை. மேற்கு, கிழக்கு, வடக்கு, தெற்கு ஆகிய பெயர்களுள், மேற்கு என்பது மேல்-மேட்டு - நிலம்-மலை ஆகியவற்றையும், கிழக்கு-கீழ்-பள்ளம்-தாழ்வு என்பதனையும் உணர்த்தி மேடானது, தாழ்வானது என்ற பொருள் படைத்தன. மேற்கு, கிழக்கு என்ற திசைப் பெயர்கள் திராவிடத் தமிழர் வடமேற்கு இந்தியப் பகுதிக்கு உரியவராக இருப்பின் பொருந்தி இருக்கவேண்டும். தமிழ்நாட்டில் ஆறுகள் எல்லாம் (தாமிரபரணி போன்ற ஓரிரு ஆறுகள் தவிர) மேட்டு நிலமான மேற்கு மலைத் தொடரில் உற் பத்தியாகி, தாழ்வு நிலமான கிழக்குக் கடற்கரையில் கடலோடு கலக்கிறது. வடமேற்கு இந்திய நிலஅமைப்பு இதற்கு நேர்மாறான தாகும். சிந்து, சீலம், செனாப், சட்லஜ், ரவி முதலான ஆறுகள் வடக்கே உள்ள இமய மலையிலும், இமய மலைத் தொடர்ச்சி

1. சிங்கம திராவிட விலங்கன்று அரிமா எனபது சிஙகததிறகுத தமிழா இடட பெயா. அரிதான விலஙகு எனறு பொருள் எனவே, சிஙகச சினனததைத தம குறியீடாகக கொணடுள்ள சிங்களவா, ஈழ மண்ணிற்கு உரியவர் அலலர் என்பதும இதனால புலபபடும

யிலும் உற்பத்தியாகி, தெற்கு நோக்கி ஓடி அராபியக் கடலில் சங்கமமாகின்றன. வடமேற்கு இந்தியாவின் மேட்டு மலைப்பகுதி, மேற்கு அன்று. வடக்கு ஆகும். தமிழரைப் போல, வடமேற்குப் பகுதி-மேற்குத் திசை, மேட்டுத்திசை அன்று. எனவே, உயர மானது, மேடானது என்று பொருள் படைத்த மேற்கு என்ற திசையை வைத்திருக்கும் தமிழர்களுடைய பிறந்தகம் வடமேற்கு இந்தியாவாக இருப்பதற்கு இல்லை. நடுநிலக்கடல் பகுதிக்கும், இப்பெயர் சிறிது கூடப் பொருந்துவதாக இல்லை.

### 6. மழை தரும் கொண்டல்

தமிழ் நாட்டில் கிழக்கிலிருந்து அடிக்கும் காற்று 'கொண்டல்' (சிலம்பு 14-110) எனப்படும். 'கொண்டல்' என்றால் தமிழில் 'மேகம்' என்று பொருள். தமிழ் நாட்டுக்கு மிகுதியான மழையைத் தருவது கிழக்கிலிருந்து வீசும் காற்றே என்பதால் கீழ்த்திசைக் காற்று கொண்டல் என அழைக்கப்பட்டுக் கொண்டல் என்ற பெயருக்கு மேகம் என்ற பொருளும் பொருந்தி நின்றது. இற்றைய மழை பெறும் அளவும் இச்செய்தியை உறுதி செய்கின்றது. தமிழ் நாட்டுக்கு மழையைக் கொண்டு வரும் காற்று இரண்டு ஆகும். அவையாவன: தென் மேற்குப் பருவக் காற்றால் தமிழ்நாடு பெறும் மழையின் அளவு மிகவும் குறைவு. இக்காற்றால் வரும் மழை அனைத்தும் மேற்குத் தொடர்ச்சிமலை தடுத்துக் கேரளத்தில் பெய்யச் செய்துவிடுகிறது. சூன், சூலை, ஆகஸ்டு ஆகிய மாதங்களில் தென்மேற்குப் பருவக்காற்று வீசும். இதனால் தமிழகம் பெறும் மழை மிகக் குறைவு.

அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவக்காற்று வீசும். தமிழ்நாடு இதனால் நல்ல மழையைப் பெறுகிறது. ஆக இன்றைய நிலையிலும் 'மேகம்' என்ற பொருள் படைத்த கொண்டல் என்னும் சொல் கிழக்குக் காற்று என்று பொருளை உணர்த்தி நிற்கிறது.

தமிழகத்துக்கு மழையைத் தந்து வளம் தரும் திசை ஆகை யால் கிழக்குத் திசை 'குணதிசை' என்று தமிழ் இலக்கியங்களில் போற்றப்படுகிறது.

இந்த இயற்கை நிலையை வடமேற்கு இந்தியாவின் இயற்கை நிலையோடு பொருத்திப் பார்ப்பின் பொருந்தாமை,

புலப்படும். வடமேற்கு இந்தியாவுக்கு மழையையும் நீரையும் மிகுதியாகக் கொணர்வது கிழக்குத் திசை அன்று. வடக்குத்திசை ஆகும். வடக்கே இருந்து வரும் ஆறுகளாலும் பெரும் மழையாலும் வட மேற்கு இந்தியா செழிக்கிறது. இந்தப் பகுதியைச் சேர்ந்தவ ராகத் தமிழர் இருப்பின் கொண்டல் என்ற பெயரையும், குணக்கு என்ற பெயரையும் கிழக்குத்திசைக்கு வைத்திரார். வடக்குத் திசைக்கே வைத்திருப்பர்.

ஒரு மொழியில் திசைப் பெயர்கள் எளிதில் மாறாதவை. தலைமுறை தலைமுறையாகச் சொல்லப்பட்டுப் போற்றப்படு பவை. எனவே, தமிழ்த் திசைப் பெயர்களின் பொருத்தம் வடமேற்கு இந்தியாவுக்குப் பொருந்தாமல் இருப்பது மிகுந்த கவனத்துக்கு உரியது.

## 7. வடதிசை பற்றித் தமிழர் கருத்துகள்

வடக்கில் இருந்து வரும் காற்றைத் தமிழர் வாடைக் காற்று (சிலம்பு 14-96) என்பர். வாடைக் காற்று ஆகாது. ஊதலைக் கொடுக்கும். உடம்பைக் கெடுக்கும் என்பது தமிழர் நம்பிக்கை. வட இந்தியாவுக்கு வளமெல்லாம் தருவது வடதிசை என்பதால் குபேர திசை எனப்பட்டது. இத்திசைப் பெயரிலும் இருவருக்கும் நேர் முரண் உள்ளது.

தமிழ் நாட்டில் சிற்றூர்ப் புறங்களில் உள்ள காவல் தெய் வங்கள் பல வடதிசை நோக்கி இருப்பதும், சில கீழ்த்திசை நோக்கி இருப்பதும் கவனத்திற்கு உரியன. பொது எதிரி வடக்கே உள்ளான் என்ற கருத்தில்தான் இக்காவல் தெய்வங்கள் வடக்கு நோக்கி வைக்கப்படுகின்றன போலும்.

## 8. தென்திசை பற்றி வடவர் - தமிழர் கருத்துகள்

வடவர் தென் திசையை 'எமதிசை' என்று குறித்து விலக்கு கின்றனர். வடவர் தென்திசையை 'அவாக்' என்று குறிப்பர். அவாக் என்றால் தம் வாக்கு அல்லாத புறவாக்குப் புழங்கும் திசை என்று பொருள். தமிழரோ தென்திசையை இன்திசை என்று கருதுகின்றனர். இனிய காற்று என்ற பொருளில் தெற்கில் இருந்து வரும் காற்று 'தென்றல்' என்று அழைக்கப்படுகிறது (சிலம்பு 24-115). தெற்கு நோக்கியே வீடுகளின் தலைவாயில்கள் அமைக்கப்படுகின்றன. சிற்றூர் மக்கள் பாடும் இனிய பாட்டு,

தெம்மாங்கு (தென்பாங்கு) என்று போற்றப்படுகிறது. மூவேந்தருள் மிகுதொன்மை வாய்ந்த பாண்டிய மன்னன், தெற்கில் உள்ளான் என்ற கருத்தில் தென்னவன் என்று அழைக்கப்படுகிறான். இறந்துவிட்ட முன்னோர்கள் தெய்வத்துக்கு நிகராகி நன்மை செய்வர். அவர் தெற்கே தெய்வத்துக்கு நிகராக வாழ்கின்றனர் என்ற கருத்தில் 'தென்புலத்தார்' என்ற பெயர் வழங்குகிறது.[1] ஆக தமிழர்க்குத் தெற்குத் திசை நன்மை நல்குவதாய் இருக்க வடவர்க்கோ உயிரை வாங்கும் எமதிசையாக இருக்கிறது. 'தென்' என்ற சொல், வடமொழியைப் போல 'எமன்' என்ற அச்சப் பொருளில் தமிழில் வழங்கவில்லை. மாறாக அழகு (தேவாரம் 1155), இனிமை (திருவிளையாடல், (திருவால 567), இசை (சிலம்பு, அடியார்க்கு நல்லார் உரை, வேனிற்காதை) ஆகிய நற்பொருளில் அச்சொல் வழங்கிற்று. எனவே, நேர் எதிர்கருத்தில் திசைப் பெயரை வைத்திருக்கும் தமிழ் மக்கள் வடஇந்தியாவைச் சேர்ந்தவர் என்பது பொருந்துவதாக இல்லை.[2]

### 9. தென்னையின் தோற்றம்

தெற்கு என்ற திசைக்கும், தென்னை அல்லது தெங்கு என்ற பெயருக்கும் தொடர்புள்ளது. தெற்கிருந்து வந்தமை பற்றியே தென்கு-தெங்கு என்ற பெயர் வர நேர்ந்தது. தென்னையின் பிறப்பகம் பசிபிக்தீவுகளே. அவை தமிழகத்திற்குத் தெற்கேயே யுள்ளன. இப்பெயரும் தமிழரின் தொல்லிடம் தமிழகமே என்று உய்த்துணர இடந்தருகிறது.

தென்னையின் தோற்றம் பற்றி ஒருமித்த கருத்து அறிஞர்கள் இடையே இல்லை. எனினும் அண்மை ஆராய்ச்சியாளர், அஃது இந்தியப் பயிர் அன்று என்பதை உறுதி செய்வர். ரெசினால்டு சைல்டு என்ற இலங்கை அறிஞரும், வாவிலோவ் என்ற உருசிய அறிஞரும், கண்டோல் என்ற ஆங்கில நாட்டு அறிஞரும்

1 தெனபுலததாா, தெயவம விருநதொககல தான எனறாங்கு ஐமபுலததாறு ஓமபல தலை - திருககுறள 43

2. கேரள மலையாளிகள் 'படிநாயிறு' எனற சொலலுடன 'மேறகு' எனற சொலலையும மேறகுபபுறததைக குறிககப பயன்படுததுகினறனர் (DED 417) மலையாளிககு மேறகுப புறம், பளளமானதனறு, தாழவானது, கடறபுறம தமிழ நாட்டுத தமிழரே அஙகும போய்த தஙகினா எனவே 'மேறகு' எனற பெயா, மலையாளததிலும் இடம பெறுவதாயிற்று

தென்னை இந்திய அல்லது இலங்கைப் பயிர் அன்று என்பதை நிறுவுவர். ஆதலின் தென்னை வெளிப்புலத்தினின்று தமிழ் நாட்டிற்கு வந்த மரமே ஆகும்.

### தென்னை - பெயர் விளக்கம்

தெற்கிலிருந்து வந்தது என்ற கருத்தைத் 'தென்னை' 'தெங்கு' என்ற தமிழ்ப் பெயர்கள் உணர்த்தும். தமிழ்ப் பெயர்களே பிற இந்திய மொழிகளிலும் பரவியது என்று அறிஞர் கருதுவர். புன்கு, புங்கு, புங்கமரம் என்பது போலத் தென்திசையினின்று வந்தது என்ற கருத்தினது தென்+கு தெங்கு என்ற சொல் வழக்கு ஆகும். இளந்தேங்காயைக் குறிக்கும் 'இளநீர்' என்ற பெயர் நியூகினி என்ற பசிபிக் தீவின் பெயர்த் திரிபு என்பர். (நியு-தென்னை, கினி-நிற்பது, நியுர்-நிய-நீர்) ஆக, இவை யனைத்தும் தென்னையின் வரவை எடுத்துக் காட்டுவன.

### தென்னையின் காலம்

தென்னை எக்காலத்தில் இந்தியாவிற்கு வந்திருக்கக் கூடும்? மூவாயிரம் ஆண்டிற்கு முன்னதாகத் தென்னை இந்தியா விற்கு வந்திருத்தல் வேண்டும் என்று அறிஞர் கருதுவர். பழங் கால இந்தியப் பயணிகள் தென்னையை அக்காலத்தில் நுக்சு இண்டிகா (Nux Indica) என்று குறித்தனராம். ஆதலால் தமிழ கத்தில் தென்னையின் வரவு கி.மு.என்பது தெளிவாகும்.*

### 6.3.2. சிந்து வெளியில் இருந்து வந்தவர்

வடமேற்கு இந்தியாவில் இன்றைய பாகிஸ்தானில் ஓடு கிற ஆறு 'சிந்து' ஆகும். இவ் ஆறு சீன எல்லையில் தொடங்கி ஜம்மு காஷ்மீர் வழியாக ஓடி பாகிஸ்தானின் நடுப்பகுதியைத் தாண்டிக் கொண்டு அராபிக் கடலில் சங்கமம் ஆகிறது. சிந்து ஆற்றின் கரையில் சுக்கூர், கரிப்பூர் என்ற ஊர்களுக்குச் சுமார் 100 கி.மீ. மேற்காக அமைந்த நாகரிகம்தான் 'மொகஞ்சதாரோ' நாகரிகம். இதற்குப் பல நூறு கி.மீ. வடக்காக இலாகூருக்கும் முல்டான் என்ற ஊருக்கும் நடுவே 'கரப்பா' அமைந்துள்ளது. இந்நாகரிகத்தின் தொடர்ச்சி குசராத்து வரை பரவி இருப்பது அண்மை அகழ்வு ஆய்வுகளால் புலனாகிறது. சாணுடாரோ, கோட்டிஜி லோக்தால், காலிபங்கன் ஆகிய இந்தியப் பிரதேசங்

*. அறவாணன க.ப, அற்றை நாடகாதலும வீரமும, ப 28

களில் சிந்துவெளி நாகரிகத்தின் தொடர்ச்சியைக் காணமுடிகிறது. சிந்துவெளி மொழி அமைப்பு, திராவிடத்தோடு தொடர்புடையதாக இருக்கலாம் என்பர் சோவியத், பின்னிஷ், இந்திய ஆராய்ச்சியாளர். அங்குக் கிடைத்த பொருள்களிலிருந்தும் முத்திரைகளில் பொறிக்கப்பட்ட உருவங்களிலிருந்தும் சிந்து வெளிப் பண்பாட்டிற்கும் திராவிடப் பண்பாட்டிற்கும் தொடர்பு இருக்கலாம் என்பர். சிந்துவெளி நாகரிகத் தோற்றுநராக இருந்த தமிழர் பிற்காலத்துத் தெற்கு நோக்கிப் பரவினர் என்பர்.

மேற்கண்ட கருத்து மிகுந்த ஆராய்ச்சிக்கு உரியது.



செங்கல்லால் கட்டப்பட்ட சிந்துவெளி சிட்டாடல்

"Larousse : Encyclopedia of Archaeology" Gen Editor, Gilbter Chrles - Picard
Hamlyn, London, 1972, pages 372, 379 & 380

## 1. தமிழகத்தில் சிந்துவெளிக் கட்டடத் தொடர்ச்சி இல்லாமை

சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட கட்டட அமைப்புகள் கருதுதலுக்கு உரியவை. சுட்ட செங்கல்லால் அங்குள்ள கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தன. இக்கட்டட அமைப்பின் அழிவு கி.மு. 1500-இல் நிகழ்ந்திருக்கலாம். சிந்துவெளி மக்களே திராவிடத் தமிழர் எனின் கி.மு.1500ஐ ஒட்டியும் தொடர்ந்தும், சிந்துவெளி போன்ற கல் கட்டட அமைப்பு தமிழ் நாட்டில் கிடைத்திருக்க வேண்டுமல்லவா? அப்படி எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. தமிழ்நாட்டில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட கட்டட அமைப்புகளுள் மிகத் தொன்மையானவை காவிரிப்பூம்பட்டினத்தில் கண்டறியப்பட்டனவும், உறையூரில் கண்டறியப்பட்டனவும் ஆகும். காவிரிப்பூம்பட்டினத்தில் கி.மு.250 (இருநூற்றைம்பது) ஆண்டு அளவில் கட்டப்பட்ட படகு மேடை ஒன்று கண்டுபிடிக்கப் பட்டது. இப்படகு மேடை சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டது. நன்கு பதப்படுத்தப்பட்ட களிமண்ணைக் கொண்டு செய்யப் பட்டுச் சுடப்பட்ட செங்கற்களால் கட்டப்பட்ட படகு மேடை இது. உறையூரில் நிகழ்ந்த அகழ்வு ஆய்வில் கண்டறியப்பட்ட கட்டடத்தின் காலம் கி.பி. முதல் மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டாகும். ஆக, கி.மு.1500 அளவில் சீரழிந்த சிந்துவெளிப் பகுதியில் இருந்து புறப்பட்டவராகத் தமிழர் இருப்பின் சிந்து வெளியில் கட்டியமை போன்ற அழகிய, அரிய கட்டடங்களை 1500 ஆண்டுகளாகத் தமிழகத்தில் எங்கும் தமிழர் ஏன் கட்ட வில்லை என்பது ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு உரியது.

## 2. சிந்துவெளிக் குளியல் அறை தமிழகத்தில் இல்லாமை

சிந்துவெளிக் கட்டட அமைப்பைக் கண்டு வியக்கும் அறிஞர்கள் ஆங்குள்ள வாழ்விடங்களில் குளியல் அறை அமைந்திருப்பதைப் பார்த்து வியந்து எழுதுகிறார்கள். இதிலிருந்து சிந்துவெளி அரண்மனைகளிலும் வீடுகளிலும் குளியல் அறைகள் அமைக்கப்பட்டிருந்தன என்பது தெளிவாகிறது. குளியலறையில் சென்று குளிப்பது பற்றித் தனியே குறிப்பு எதுவும் தமிழ் இலக்கியங்களில் தென்படாமை சிந்திக்கத் தக்கது. ஆறுகளில் ஆடவரும் மகளிரும் சென்று நீராடுவதைத் தமிழ் இலக்கியங்கள் பரந்து பேசுகின்றன. குறிப்பாகப் பரிபாடல், வையை ஆற்றில் மக்கள் நீராடுவதை விரிவுபட எடுத்துரைக்கிறது.

இந்திர விழாவை ஒட்டி நடந்த கடல் விழாவைச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்கள் விரித்து எழுதுகின்றன. சங்க கால இலக்கியங்களிலோ, சங்கம் மருவிய கால இலக்கியங் களிலோ 'குளியல் அறை' பற்றி எவ்விதக் குறிப்பும் இல்லை.

### 3. சாய்க்கடை அமைப்பு

சிந்துவெளித் தெருக்களில் சாய்க்கடை அமைப்பு மிகச் சிறப் பாக அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடிப்புகள் காட்டுகின்றன. கி.மு.2500 அளவிலேயே இத்தகு அமைப்பு இருந்ததைக் கண்டு தொல் இயலார் வியக்கின்றனர். பலருடைய வியப்புக்குரிய இச் சாய்க்கடை அமைப்புத் தமிழ்நாட்டில் எங்கும் இருந்ததாகத் தெரிய வில்லை. அகழ்வாய்வுகளும் காட்டவில்லை. அன்றியும் விரிந்த தமிழ் இலக்கியப் பரப்பு எங்கும் சுட்டிக்காட்டவில்லை. மாறாகப் பத்துப்பாட்டுள் ஒன்றான பட்டினப்பாலை சாய்க்கடை அமைப் பிற்கு எதிரான ஒரு காட்சியைப் படம்பிடித்துக் காட்டுகிறது. அரண்மனையில் சோறு சமைத்து வடிக்கப்பட்ட கஞ்சி கரிகாலச் சோழனின் தலைநகரான காவிரிப்பூம்பட்டின நடுத்தெருவில் ஓடி வெயிலில் காய்ந்து வெண்பொடியாகி, காற்று பட்டுப் பரந்து சோழன் அரண்மனை கோபுரத்தையே வெள்ளை அடித்து அழுக் காக்கி விட்டது.† இச்சான்று சோழ மன்னர்தம் வளப்பத்தைக் காட்டுவதாக இருப்பினும் சாய்க்கடையில் ஊற்றப்படவேண்டிய கஞ்சி நடுச்சாலையில் ஊற்றப்பட்டதை எடுத்துக் காட்டுகிறது. இக்காட்சி, மறைமுகமாகக் காவிரிப்பூம்பட்டின நகரில் சாய்க் கடை இல்லாமையை எடுத்து உணர்த்துகிறது. சாய்க்கடை

---

† சாயககடை இனமை படடினபபாலை அடிகள 41-50
திருததுஞசும திணகாபபின
புகழ நிலைஇய மொழி வளர
அறம நிலைஇய அதன அடடில
சோறு வாகைிய கொழுங் கஞசி
யாறு போலப பரந்து ஒழுகி
ஏறு பொரச சேறாகி
தேர் ஓடந் துகள் கெழுமி
நீறு ஆடிய களிறு போல
வேறுபடட வினை ஓவதது
வெணகோயில மாசூடடும,

இல்லாத ஒரு பெரும் பேரரசின் தலைநகர மக்கள், சாய்க்கடை அமைப்பு மிகச் சிறந்து விளங்கிய சிந்துவெளி நாகரிகத்திற்கு உரிமையாளராக இருத்தல் முடியுமா? ஆராய்க.

## 4. மக்கள் முத்தர நிலை

சிந்துவெளியில் வாழ்ந்த மக்களின் நிலையை ஆராய்ந்த அறிஞர்கள், அங்கே மூன்று தரத்தினராக மக்கள் இருந்தனர் என்று ஊகிக்கின்றனர். மேல் நிலையில் குருமாரும், அவருக்கு அடுத்த நிலையில் பொதுமக்களும், அவருக்கு அடுத்த நிலையில் அடிமைகளும், என மக்கள் பிரிந்திருந்தனர் என்பது சிந்துவெளி ஆய்வாளர்தம் ஒருமித்த கருத்து.



சிந்துவெளி மதகுரு அரசன்

திராவிடத் தமிழர் சிந்துவெளி மக்களின் பின் தலைமுறையினராய் இருப்பின் மேற்கண்ட முத்தர நிலையை உடையவராக இருக்கவேண்டும் அல்லவா? குருமார், மக்கள், அடிமை என்ற பாகுபாடு பண்டைத் தமிழ் நாட்டில் இருந்ததற்கான மறைமுகமான குறிப்புக்கூட பழைய தமிழ் இலக்கியங்களில் இல்லை.

எகிப்தைப் போலச் சிந்துவெளி குருமார் மதச்சடங்கின் தலைவராக இருந்தார். அதனுடன் மக்களை ஆளும் அரசராகவும் இருந்தார் (Priest cum King) மதத்திற்கும் மக்களுக்கும் பொதுவான அரச-புரோகித நிலைமையில் தமிழ் அரசர்கள் இருந்ததற்கான சான்று எங்குமே இல்லை.

ஆக, மேற்கண்டவற்றை நோக்கச் 'சிந்துவெளி நாகரிகத்தை தோற்றுவித்துவிட்டு ஆரியப் படையெடுப்பால் தென்புலம் நோக்கித் தமிழர் நகர்ந்தனர். ஆங்கே மூவேந்தர் அரசை உருவாக்கினர். முத்தமிழ் இலக்கியத்தைத் தோற்றுவித்தனர்' என்பதை ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.

எனவே, தமிழர் இந்தியாவுக்கு அப்பாலிருந்தோ அல்லது வடமேற்கு இந்தியாவில் இருந்தோ தரை வழியாகத் தென்புலம் போந்தனர் என்ற கருத்தை ஏற்க இயலவில்லை.

### 6.4. தமிழரின் பிறந்தகம் தமிழகமே!

தமிழர் வட இந்தியாவில் இருந்தோ அல்லது வடமேற்கு இந்தியாவிலிருந்தோ அல்லது வடமேற்கு இந்தியாவிற்கு அப்பாலுள்ள ஆசியப் பகுதிகளில் இருந்தோ நடுநிலக்கடல் பகுதிகளில் இருந்தோ வந்தவர் என்று ஊகிப்பதற்கு வலுவான சான்று எதுவும் இல்லை. மாறாகத் தமிழர் தென் இந்தியாவில் தொன்றுதொட்டு வாழ்ந்து வரும் பழங்குடிகள் என்பதற்குச் சான்றுகளும், வாதங்களும் துணையாக நிற்கின்றன.

#### 1. தெற்கும் வடக்கும்

உலகம் முழுதுமே வடபகுதி மிகத் தொல்பழங்காலத்தில் வாழத் தகுதி அற்றதாகவும் குளிர்பனிக்கட்டிக் கொட்டுவதால் கொடுங்குளிர் வாட்டுவதாகவும் இருந்தது. வடபகுதியை விடத் தென்பகுதி நாடுகள் குளிர் குறைந்தனவாகவும் மனிதர் ஓரளவு தாங்கக்கூடிய தட்பவெப்பம் உடையனவாகவும் இருந்தன. எனவே, மக்களின் குடிப்பெயர்ச்சிப் பெரும்பாலும் தெற்கில்

இருந்து வடக்காக அமைந்தது. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் தெற்கில் இருந்து மக்கள் குடிபெயர்ச்சி வடக்கு நோக்கிச் சென்றதை வரலாறு காட்டுகிறது. இந்தியாவைப் பொறுத்தும் இதே நிலை பண்டைய நாளில் இருந்திருக்க வேண்டும். இமயமலையும், அம்மலையைச் சார்ந்த வடஇந்தியப் பகுதிகளும் கொடும் குளிருடையனவாக இருந்தன. அதே காலத்தில் இந்தியாவின் தென்பகுதி மக்கள் வாழ்வதற்கு ஏற்ற தட்ப வெப்பத்தையும், உழைப்பதற்கு ஏற்ற நிலபுலங்களையும் பெற்றிருந்தது. எனவே, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி மக்கள் குடிபெயர்ச்சிகள் அமைந்தன என்பது இந்தியாவைப் பொறுத்த வரை சரியானதாகும்.

## 2. உத்தரப்பிரதேசத்தில் மீனக்கொடி

இன்றுள்ள இந்திய மாநிலங்களுள் பெரிய மாநிலமாக விளங்கும் உத்தரபிரதேசத்தில் அரச இலச்சினை இரட்டை மீன்களும் வில்லும் உடையதாக இருப்பது கருதத்தக்கது. வில் தமிழ் மூவேந்தர்களுள் ஒருவராகிய சேரர் தம் குடி இலச்சினை! கொடி இலச்சினை! மீன் பாண்டிய மன்னர் தம் குடி இலச்சினை! கொடி இலச்சினை! இச்சான்றுகள் அற்றைத் தமிழ் மன்னர்தம் எச்சங்களல்லவா!

## 3. கிள்ளி குடியினர்

கிள்ளி, கிள்ளி வளவன் என்ற பெயர்கள் சோழர்க்கே உரிய பெயர்களாம். பீகார் மாநிலத்தில் 'அசூர்' என்ற பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். அசுரர் என்ற சொல்லின் தேய்ந்த வடிவம் 'அசூர்' என்பதாகும். அசூர், அசுரர்[1] என்பவற்றின் பொருள், 'வலிமை வாய்ந்தோர்' என்பதாகும். ஆரியர் தம் வேதங்களில் தம்மை எதிர்த்த மக்களை 'அசுரர்' என்று குறிப்பிடுவர். திராவிடர் உடன் வாழ்ந்த முண்டா பழங்குடி மக்களுள் ஒரு பிரிவினரே அசூர் என்ற இனம். இப்பழங்குடி மக்கள் சிந்து வெளியிலிருந்து பீகாருக்குக் குடியேறியோர் என்று கருதப் பெறுகின்றனர். இவர்கள் தம் குடி அமைப்பினைக் 'கிள்ளி' என்று குறிப்பிடுகின்றனர். இவர் தம் குடியில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஐம்பெருங்குழு

1 விரிவிறகுப பார்க்க · தேவநேயப பாவாணா செந்தமிழச் சொறபிறபபியல பேரகர முதலி, ப. 85.

இன்றும் இருந்து வருகின்றது. ஏனைய மக்களைப் போல வெளுத்த நிறத்தினராய் இல்லாமல் திராவிட இனத்தினரைப் போலக் கரிய நிறத்தினராய் இவர்கள் உள்ளனர். இவர்கள் வாழுமிடம் சோடா நாகபுரியாகும். சோடா என்பது சோழா என்பதின் ஆரிய வடிவமாகும். 'ழ' கரம் 'டகர' மாகத் திரிதல் இருமொழி இயல்பு. கோழி, கோடி முதலானவற்றை ஒப்பிட்டு நோக்குக. அசூர் பழங்குடிப் பெண்கள், தமிழச்சியரைப் போல, இடுப்பில் சேலையணிந்து அச்சேலையையே மாராப்பாக அணிந்து கொள்கின்றனர். ஆக, கிள்ளி என்ற பெயர், இவர் தம் கறுப்பு நிறத் தோற்றம், ஐம்பெருங்குழு என்பதன் அமைப்பு, சிந்து வெளித் தொடர்பு, முண்டா மொழிப்பேச்சு, ஆரியரை எதிர்த்த வேதகால அசுரரின் தொடர்பு, சோடா என்ற நிலப்பெயர் ஆகியன வட புலத்தில் தமிழ்ச் சோழர் பண்டைய வாழ்வை நினைவுறுத்து கின்றன.

**4. சோழர் - சோடர்**

பனிமலையில் பல கணவாய்கள் உள்ளன. அவற்றுள் ஒரு கணவாயின் பெயர் 'சோடா' என்று வழங்குகிறது இது 'சோழா' என்பதன் திரிபு ஆகும்.

**5. போண்டோ பழங்குடியினர்**

திராவிட மொழிகளைப் பேசும் சில பழங்குடி மக்கள் இந்தியாவின் நடுப்பாகத்தில் வாழ்கின்றனர். இவர்கள் பேசும் மொழிகள் 'நடுத்திராவிட மொழிகள்' என்று அழைக்கப்படும். ஒரிசா மாநிலத்தில் 'மார்ச் குண்டு' என்ற ஆற்றுக்கு வடமேற்கே 'போண்டோ' என்ற பழங்குடியினர் வாழ்கின்றனர். வடபுலத்தில் வாழும் பழங்குடி மக்களுள் இம்மக்கள் மிக்க வலிமை வாய்ந்தோர் என்று மாந்த இயல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இம்மக்கள் பனைமரத்திற்கு மிகுந்த முதன்மை அளிக்கின்றனர். இவர் தம் நிறம், தோற்றம் ஆகியன திராவிடரை நினைவுபடுத்துவன. குறிப்பாகத் தமிழ்நாட்டுப் பாண்டியர் தம்மை மறவர் என்று அழைத்துக் கொள்வதும், பாண்டிய நாட்டு மறக்குல மக்கள், 'பாண்டிய' என்ற பெயரைப் பட்டப் பெயராக வைத்துக் கொண்டிருப்பதும் வடபுலத்தில் ஒருசார் பழங்குடி மக்கள் தம்மை 'போண்டோ' என்று அழைத்துக் கொள்வதும் முரட்டுத்தன்மை உடையராய்

இருப்பதும் இணைத்து நினைக்கத்தக்கன. அன்றியும் தமிழ்நாட்டில் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் பாண்டிய நாட்டுப் (மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம்) பகுதிகளிலேயே பனை மரங்கள் மிகுதியாக இருக்கின்றன. இங்கே வாழும் மக்கள் தம் வாழ்வு பனை மரத்தைச் சார்ந்து அமைந்திருக்கின்றது. இதனைப் போலவே போண்டா பழங்குடி மக்கள் பனை மரத்தோடு ஒன்றிய வாழ்க்கை உடையராய் வாழ்ந்து வருகின்றனர். எனவே போண்டோ பழங்குடி மக்கள் பண்டைய இனத்தின் எச்சமோ என்று கருத வேண்டி உள்ளது.

### 6. வடஇந்தியாவில் வாழ் கூய் (Kui) என்ற திராவிடப் பழங்குடி

வட இந்தியாவின் நடுப்பகுதியில் (Northern Circars) 'கூய்' என்ற பழங்குடியினர் வாழுகின்றனர். அவர்தம் மொழி, திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. கூய் மக்கள் வாழ் சிற்றூர் ஒவ்வொன்றின் நுழைவுப் பகுதியிலும் தமிழகச் சிற்றூரைப் போன்று எல்லை அம்மன் என்ற பெண் தெய்வத்தை அமைத்து வணங்குகின்றனர். அத்தெய்வத்தின் பெயர் 'திசான் பெண்ணு' என்பதாகும். 6 அல்லது 9 அங்குல உயரக் கல்லை அம்மனாக உருவகித்து ஒரு மரத்தின் கீழ் நட்டிருப்பர். அதனை மனிதரோ, விலங்குகளோ அண்டி அழிக்கா வண்ணம், சுற்றிலும் கற்குவியல்களால் வேலி இட்டிருப்பர்.

### 7. வடபுலம் வாழ் குருக் என்ற பழங்குடியினர்

நடு இந்தியாவில் வடகிழக்குப் பகுதியில் 'குருக்' என்ற பழங்குடியினர் வாழ்கின்றனர். அன்னோர் திராவிட மொழி பேசுபவர். அவரிடம் வழங்கும் புராணக் கதையின்படி அவர்தம் முன்னோர் தெற்கிலிருந்து வந்தவர் என்று தெரிகிறது.

### 8. சோவியத் அறிஞர் கருத்து

இந்திய இயல் வல்லுநரான ஜி.ஜோதிராப் என்ற சோவியத் அறிஞர் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாள மொழிகளை ஆராய்ந்து, திராவிட மக்கள் வடக்கில் இருந்து தெற்காக அல்ல, தெற்கில் இருந்து வடக்காகப் பரவினார்கள் என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது என்று குறிப்பிடுவர்.*

---

*. அலெகஸாநதர் கோந்தரநோவ, 'மாககடல மாமங்கள' ப.69

### 9. பிராகுவி பிறந்தகம்

பலுசித்தானத்தில் வாழும் பிராகுவி மொழி பேசுவோர் தம் பிறந்தகம், தென்னிந்தியாவிலுள்ள தெல்லிசேரி என்பர்.[1]

### 10. திசைப் பெயர்களின் பொருத்தம்

தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு என வழங்கும் தமிழ்த் திசைப் பெயர்களும் இத்திசைகளை ஒட்டி வழங்கும் தென்றல் வாடை, கொண்டல், கோடை என்ற காற்றின் பெயர்களும் தமிழ் நாட்டு நில அமைப்பின் அடிப்படையில் பெயரிடப்பட்டவை. குறிப்பாக 'இனிமை' என்ற பெயரைத் தரும் 'தென்றல்' என்ற பெயரும், 'மேடு' என்ற பொருளைத் தரும் 'மேற்கு' என்ற பெயரும், 'தாழ்வு' என்ற பொருளைத் தரும் 'கிழக்கு' என்ற பெயரும் தமிழ் நாட்டு நில அமைப்புக்கு முற்றும் பொருந்துவன. இத்திசைப் பெயர்களை வடஇந்தியாவில் திராவிட மொழிகளைப் பேசும் பழங்குடி மக்கள் பயன்படுத்துவது ஆழ்ந்த கவனத்துக்கு உரியது. கோண்டி, கோயா, கோண்டா, குவி, கூய், கொலாமி, நாயகி, பர்ஜி, குடுத், மால்டோ, பிராகிரி ஆகிய திராவிட மொழிகள் வட இந்தியாவில் குசராத், மகாராட்டிரம், மத்தியபிரதேசம், ஒரிசா பலுசித்தான் ஆகிய இடங்களில் பேசப்படுகின்றன. இம்மொழி களில் இடம் பெற்றுள்ள திசைப் பெயர்களைக் காண்க.[2]

1 Devanesan D V Deductions on the origin of the Tamils part II p 31 But the authour has not given any evidence for this information.

2. Refer Burrow and Emeneau - A. Dravidian Etymological Dictionary (1961) an Supplement. (1968)

Tamil and Malayalam

Kota - Memul - Higher Place, up, High, Western side,
mecim - Western part of Nilgiris.

Toda - west - mel - up, west

**East**

Kota - Ki-Lower East
Kirm - Monsoon clouds which lie on the hills as mist

Kodagu - Keki - the East
Kekie - Eastern

Kuwui - Far west - Kui-up, About, west
Kuita - in the west (DED 18, 11)

**South**

DED 2839

இந்தியாவில் நில அமைப்பில் வட இந்தியாவை விடத் தென் இந்தியா பள்ளமானது. பண்டும் (இமய எழுச்சிக்குப் பின்பு) இப்படியே இருந்தது என்பதனை அகத்தியர் தட்சணத்தைத் 'தாழ்த்த வந்தார்' என்ற புராண வரலாறு நினைவுபடுத்துகிறது.

**11: நாகர் வரலாறு**

திராவிடர் நாக வழிபாட்டினராக இருந்தனர். எனவே, அவர் நாகர் என அழைக்கப்பட்டனர்.

சோழ அரசன் ஒருவன் நாக இளவரசி பீலிவளை என்பவளுடன் உறவு கொண்டான். அதனால் தோன்றி வளர்ந்த பரம்பரையே தொண்டைமான் பரம்பரை என்பது மணிமேகலையால் (காதை 24 வரி 30-61) தெரிய வருகிறது. மணிமேகலையில் வரும் சாதுவன் கலம் கவிழ்ந்து நாகர்கள் வாழும் தீவை அடைந்ததையும் அவர்கள் மொழியில் பேசியதையும் மணிமேகலை எடுத்துரைக்கிறது. வட இந்தியரால் நாகர் தெற்கத்தியர் என்று அழைக்கப்பட்டதை நாகருக்கு உரிய 'தட்சகர்' என்ற பெயர் காட்டுகிறது.* இதனால் இந்தியாவின் தென்பகுதியான திராவிடத்தில் வாழ்ந்தவர் நாகர் என்பது புலப்படும்.

உயர்திணை மாந்தராகக் குறிக்கப்படும் தேவர், மக்கள், நாகர் (நன்னூல் 262) என்ற நூற்பாவில் குறிக்கப்படும். நரகர் என்பது நாகர் என்பதைப் பிறழ உணர்ந்த பாடமே ஆகும்.

பேரின்பத்துக்குப் பெயர் போன நாடாக நாகர் நாடு தமிழ் இலக்கியங்களில் சிறப்பிக்கப்பட்டது (பரிபாடல் 1-59).

பீலிவளை என்ற பெண் நாகர்குல அழகி. இவள் சோழ இளவரசனை மணந்தாள். இச்செய்தியைப் பெரும்பாணாற்றுப் படை உரையும் (வரி31), மணிமேகலையும் (24:54-58), விக்கிரம சோழன் உலாவும் (நாகர் குலமகளைக் கைபிடித்த கோ-வரி 10) தெரிவிக்கின்றன.

நாக வழிபாட்டுக்குப் பெயர் போன கேரளம்-வாழ்மக்கள் 'நாயர்' என அழைக்கப்பட்டனர். நாகர் வீடுதோறும் நாக வழிபாட்டுக்கு உரிய 'சர்ப்பகா' என்ற ஒன்றைப் போற்றிக் காப்பர். நாயர் குல ஆடவரும் பெண்டிரும் தம் தலைமுடியைத் தலைக்கு முன்பக்கம் நெற்றிக்கு மேலாக முடிப்பது நாகப்பாம்பு

* உ வே சாமிநாத ஐயா, மணிமேகலை, **1949**, ப **100**.

படம்பிடித்த உருவத்தை நினைவு கூர்வதாகும் (எகித்தியா தம் நெற்றியில் படம் எடுத்தாடும் நாகப் பாம்புச் சின்னத்தை அணிந் திருப்பர்). எனவே, நாயர் என்ற குலப்பெயரீடு நாகர் என்ற குலப்பெயரீட்டின் திரிபு ஆகலாம். நாயரின் முன்னோரான சேரர் பாம்போடு தொடர்புடையவர். அவர் குடிச்சின்னமான வில் பண்டைய நாக உருவின் தேய்ந்த வடிவமே. நாகமே வில்லின் அஸ்திரமாக நாகாஸ்திரமாகப் பயன்படுத்தப்பட்ட நிகழ்ச்சி இங்கே இணைத்து நினைக்கத்தக்கது

**நாகப் பெயர் பெற்ற புலவர்கள்**

நாகன் என்ற பெயருடைய பழம்புலவர்கள் பலர் சங்க காலத்தில் பாவலர்களாக இருந்துள்ளனர்.

1. அஞ்சியத்தை மகள் நாகையார் - அகம். 352
2. அம்மெய்யன் நாகனார் - நற். 252
3. இளநாகனார் - நற். 151, 205, 231
4. இனி சந்த நாகனார் - நற். 66
5. எழு பன்றி நாகன் குமரனார் - அகம். 138, 240
6. நன்னாகனார் - புறம். 381
7. புறத்திணை நன்னாகனார் - புறம். 176, 376, 379, 384
8. நன்னாகையார் - குறு. 118, 325
9. கச்சிப்பேட்டு நன்னாகையார் - குறு. 30, 172, 180, 192, 197, 257
10. நாகம் போத்தன் - குறு. 282
11. பொன் நாகன் - குறு. 114
12. மதுரைக்கள்ளிற் கடையத்தன் வெண்நாகனார் - அகம். 170, புறம். 316
13. மதுரைக் கொல்லன் வெண்நாகனார் - நற். 285
14. மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்நாகனார் - அகம். 363
15. மதுரைத் தமிழக்கூத்தன் நாகன் தேவனார் - அகம். 164
16. மதுரைப் பூதன் இளநாகனார் - புறம். 276

17. மதுரைப் பூலண்ட நாக வேட்டனார் - நற். 317

18. மதுரைப் பெருமருது இளநாகனார் - நற். 251

19. மருதன் இளநாகனார் - நற். 21, 39, 103, அகம். 77, புறம். 52, 138, 139

20. மதுரை மருதன் இளநாகனார் - நற். 194, 216, 283, 290, 302, 326, 341, 362, 392, குறு. 77, 279, அகம். 34, 90, 104, 131, 184, 193, 206, 220, 245, 255, 269, 283, 297, 312, 343, 358, 365, 368, 380, 387, புறம். 55, 349

21. மதுரை மருதன் இளநாகன் - குறு. 160, 367, அகம். 59, 121

22. உப்பேர் நாகனார் - நற். 314

23. முரஞ்சியூர் முடிநாகராயர் - புறம். 2

24. விரிச்சியூர் நன்னாகனார் - புறம். 292

25. வெள்ளைக்குடி நாகனார் - நற். 158, 196, புறம். 35

அருவா நாட்டுக்கு அண்மையில் ஒய்மான் நாடு இருந்தது. இந்நாட்டை நல்லியக் கோடன் என்பவன் ஆண்டு வந்தான். கார்க்கோடகன் (கோடகன்-பாம்பு) என்பது கார்க்கோடன் என்று ஆனது போல நல்லியக்கோடகன் என்பது நல்லி யக்கோடன் என்று திரிந்து வழங்கியது. $

நாலை கிழவன் நாகன் என்பவன் பாண்டிய நாட்டுக் குறு நில மன்னனாக இருந்தான் (புறம் - 179).

**நாகர் பெயரில் ஊர்கள்**

நாகப்பட்டினம், நாகர்கோயில் என்ற ஊர்கள் பண்டு நாகர்களின் நகரங்களாக விளங்கியிருக்க வேண்டும். நாகர் கோயிலில் புகழ்பெற்ற நாகரம்மன் கோயில் இன்றும் இருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இலங்கை நாகர்களின் நிலமாகவே இருந்தது. இலங்கை வரலாற்று நூல்கள் நாகர்களைப் பற்றிய சிறப்புச் செய்திகளைத் தாங்கி உள்ளன. இலங்கைத் தீவே ஒரு காலத்தில் நாகத் தீவு என்று அழைக்கப்பட்டது.

$ டாகடா மா இராசமாணிககனார், பததுபபாடடு ஆராயசசி, 1971, ப 399.

ஆக, திராவிடமும், இலங்கையும் ஒரு காலத்து நாக வழி பாட்டில் தலைமை பெற்றிருந்தன. தென் இந்தியாவுக்கே உரிய குடிகளாக நாகர் விளங்கினர். அவர்தம் நாகவழிபாடும் விளங்கியது. இந்நாகரே தன் வலிமையால் தென் இந்தியாவிலிருந்து வட இந்தியாவில் பரவினர். நாகர்களால் நாகவழிபாடும் வட இந்தியாவில் பரவியது. தென் இந்திய நாகரைச் சார்ந்து வடகிழக்கு இந்தியாவில் வாழ்ந்த மங்கோலிய இன மக்கள் நாகவழிபாட்டினர் ஆயினர். எனவேதான் அன்னோர் வாழ்ந்த இடம் 'நாகநாடு' என்று பெயர் பெற்று இன்றும் 'நாகாலாந்த்' என்றே அழைக்கப்படுகிறது. வட இந்தியாவிலுள்ள நாகபுரி (Nagpur) என்ற நகரப் பெயர் பண்டு அங்கு இருந்த நாகர் தலைமையை எடுத்துக்காட்டுகின்றது. திராவிட நாகரிடமிருந்து கற்றுக்கொண்ட வட இந்திய எழுத்துமுறை தேவநாகரி எனப்பட்டது. நாகரால் பரவிய இயல்பே நாகரிகம் எனப் பட்டது.

### பாம்படம்

முற்காலத்தில் ஆடவர் பெண்டிர் இருவரும் காதுகளில் துளை இட்டு அணிகலன்கள் அணிந்திருந்தனர். ஒரு சில பகுதிகளில் பனை ஓலையோ அல்லது தங்கத்தால் ஆன தோட்டையோ காதுகளில் தொங்கவிட்டுக் காதுகளைத் தாழ வளர்ப்பது வழக்கம். இப்பழக்கம் குறிப்பாகத் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இன்றும் இருந்து வருகிறது. முன்பும் அங்கே இருந்ததை மதுரைக்குத் தெற்கே உள்ள கோயிற் சிற்பங்கள் காட்டுகின்றன. ஆடவர் பெண்டிர் என்ற இரு பாலாரும் பின்பற்றி வந்த இப்பழக்கம் காலப்போக்கில் பெண்டிர் மட்டும் பின்பற்றும் வழக்கமாக எஞ்சியது. பெண்டிர் காதுகளில் அணிந்து கொண்டிருக்கிற காதணி நாகப்பாம்பு படம் எடுத்த வடிவில் அமைந்திருக்கும். எனவே இவ்வணி பாம்புப்படம் என்று கூறப்பட்டுக் காலப் போக்கில் 'பாம்படம்' என்று சுருங்கியது.

காதுகளில் பாம்பு போன்ற நாகவடத்தை அணிவதன் உள் பொருள் அன்னோர் நாகர் இனத்தைச் சார்ந்தவர்கள் என்று காட்டுவதற்கே ஆகும். ஆந்திர மாநிலத்தில் 'நாகா' என்ற இன மக்கள் நாகவடம் அணிந்து கொண்டு காது வளர்ப்பதை தர்ஸ்டன்

குறிப்பிட்டுள்ளார்.* தென் இந்தியாவிற்கே உரிய இப்பழக்கம் வட இந்தியாவிலும் பரவியுள்ளதை ஆங்குள்ள நாகர் உருவச் சிலைகள் காட்டுகின்றன. கி.மு. 599-527- இல் வாழ்ந்த இருபத்து நான்காவது தீர்த்தங்கரரான மாகவீரர் வர்த்தமானருடைய காதுகள் வளர்க்கப்பட்டுள்ளன என்பதை அவர் தம் சிலைகள் காட்டுகின்றன. தென் இந்தியாவிலிருந்து நாகர்களும், நாகர் பழக்க வழக்கங்களும் வட இந்தியாவிற்குப் பரவின என்பதற்குக் காது வளர்ப்பு நிகழ்ச்சி ஒரு சாட்சி

## 12. தமிழக அகழ்வாய்வு முடிவுகள்

தமிழர் தமிழ் நாட்டினராகவே இருத்தல் கூடும் என்பதைத் தமிழ் நாட்டில் கிடைத்துள்ள அகழ்வாய்வுகள் ஓரளவு உறுதி செய்கின்றன. தலைக்கற்காலப் பொருள்கள், தமிழ்நாட்டு வட மாவட்டங்களிலும் இடைக்கற்காலப் பொருள்கள் வடமதுரை, அத்திரம்பாக்கம், காஞ்சிபுர வட்டம் , மதுரை திருமஙகல வட்டம் ஆகியவற்றில் கிடைக்கின்றன. கடைக்கற்காலக் கருவிகள் திருநெல்வேலிப் பகுதியில் மிகுதியாகக் கிடைக்கின்றன இடை, கடை கற்காலத்துக்கு இயல்பான தொடர்பும் காணப்படுகிறது. கடைக் கற்காலத்தில் கடற்கரையோரமாக மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதைக் கண்டுபிடிப்புகள் காட்டுகின்றன.

புதிய கற்காலத்தைச் சார்ந்த கருவிகள் திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், வடஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் கிடைத்துள்ளன. 'பையம்பள்ளி' என்ற சேல மாவட்ட ஊரில் கண்டுபிடிக்கப்பட்ட புதுக்கற்காலக் கருவிகள் வரலாற்று முதன்மை வாய்ந்தவை.

இக்காலத்திலேயே பிணங்களைப் புதைக்கும் பெருங்கற்கள் தமிழகம் எங்கும் பரவலாகக் காணப்படுகின்றன. கார்பன் 14 என்ற புதிய சோதனை மூலம் தமிழகப் புதை குழிகள் கி.மு. 1000 ஆண்டளவு ஏற்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது. புகழ் பெற்ற ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு இக்காலத்தைச் சேர்ந்ததே, ஆதிச்சநல்லூரில் கிடைத்த முதுமக்கள் தாழிகள் திராவிட

* Nagavadam is the name of a sub-division of the Pallis who wear an ornament called Nagavadam shaped like a cobra's head, in the dilated lobes of the ears.

ருடையனவே! தமிழருடையனவே! ஆதிச்ச நல்லூரில் கிடைத்த வேல்கள், கோழி உருவங்கள் ஆகியன தமிழருக்கு நெருக்கமான முருக வழிபாட்டோடு தொடர்புடையவை. 'தாழிகள்' என்ற பெரும்பானையில் பிணங்களை இட்டுப் புதைக்கும் பழக்கத்தைத் தமிழர் கொண்டிருந்தனர். இப்பழக்கத்தைச் சங்க இலக்கியங்கள் தெளிவாகப் பல இடங்களில் குறிப்பிடுகின்றன. நற்றிணை (271), பதிற்றுப்பத்து (44), புறநானூறு (2-8), மணிமேகலை (6:66-68) ஆகியன தாழிப் புதையலைப் பேசுகின்றன.

ஆதிச்ச நல்லூரில் தமிழகத்திற்கே உரியவையான நெல், கொள், சோளம், கேழ்வரகு முதலான தானியங்கள் மக்கிய நிலையில் கிடைத்துள்ளன. இங்கே கிடைத்த சில வெண்கலப் பாத்திரங்கள் மீது அப்பியபப்படி பருத்தித் துணி எச்சங்களும் காணப்பட்டன. எனவே ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு, தமிழ் மொழியைக் குறிக்கும் நேர்முகக் குறியீடு எதனையும் பெறாவிடினும் தமிழர் தம் பழக்கவழக்கத்தைக் குறிக்கும் சான்றுகளைத் தருகிறது. ஆதிச்சநல்லூரில் கிடைத்த இரும்புக்கால நாகரிகம் அதற்கு முன்பு தமிழ்நாட்டில் கிடைத்த பழங்கற்காலப், புதுக்கற்காலங்களின் தொடர்ச்சியாகவே காணப்படுகிறது. தமிழகத்தில் புதுக்கற் காலத்தை அடுத்துச் செம்புக்காலம் தொடங்குவதற்குப் பதிலாக இரும்புக் காலம் தொடங்கியது. சிலர் இந்தக் கால மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டிலிருந்து வந்த திராவிடர் இரும்பைத் தம்முடன் கொண்டு வந்து அறிமுகப்படுத்தினர் என்பர். இதற்கு மாறாகப் புதுக்கற்காலத்தின் இறுதியிலேயே தமிழர் இரும்பைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். நடுநிலக் கடலோரத்திள்ள 'கிரித்' (crete) என்ற தீவிலும், பாலத்தீனத்திலும் ஆதிச்சநல்லூரைப் போன்றே கற்கருவிகளுடன் இரும்புக் கருவிகள் காணப்படுகின்றன. செங்கற்பட்டில் 'பெரும்பேயர்' என்ற இடத்திலும், கேரளத்தில் 'தலைச்சேரி' என்ற இடத்திலும், கற்கருவிகளும் இரும்புக் கருவிகளும் கிடைத்துள்ளன. எனவே, கற்காலம் நிறைவுறும் போதே தமிழகத்தில் இரும்புக்காலம் தொடங்கி விட்டது.

## 13. வளை நா (ழகர) ஒலி வட்டம்

ழகரம் தமிழில் வழங்கும் வளைநா ஒலியாகும். இவ்வொலி தமிழுக்குரிய (சமஸ்கிருதத்தில் இல்லாத) சிறப்பொலியாகத்

தமிழிலக்கண ஆசிரியரால் போற்றப்படுகிறது (நன்னூல் ...). இவ்வொலி, தமிழில் மட்டும் அன்றி மலையாளத்திலும் ஒலிக் கப்படுகின்றது. அந்தமான் பழங்குடியினரான நிகோபாரிகளி டமும் இவ்வொலி வழங்குகிறது. தமிழின் உரிமை எழுத்தான, ழகரம், சற்றும் ஒலிக்கப்படாத வடமேற்கு இந்தியா அல்லது வேற்றுப்புலநாடுகள் தமிழரின் பிறந்தகமாக இருக்க இயலுமா? கி.மு. மூன்றாம் நூற்றாண்டினதான 'தாமிழ' என்ற தமிழ்-பிராமிக் கல்வெட்டிலும் ழகரம் இடம் பெற்றுள்ளமை, அவ்வெழுத்தின் தொன்மையைக் காட்டுகிறது.* வளைநா ஒலி வழங்கும் ஒலி வட்டமான தென்னகமே தமிழர்தம் ஆதியிடமாக இருந்திருத்தல் வேண்டும்.

ஆக, தமிழர் தோன்றிய இடம், தமிழ் நாட்டிற்கு வெளியே இல்லை. தமிழ்நாட்டிற்கு அகத்தேயே இருந்தது. இருத்தல் வேண்டும்.

*. Mahadevan, Tamil Brahmi Inscriptions of the Sangam Age, Tamil conference, 1968 Madras p 39.

# 7
# குமரிக் கண்டம்

குமரிக்கண்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நேரடி ஆராய்ச்சிகள் தொடர்ந்து நிகழவில்லை. இப்போது எடுத்துக் காட்டப்படும் மேனாட்டு அறிஞர்களின் கூற்றுகள் பத்தொன் பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்திலும் ஊகங்களாகச் (Inference) சொல்லப்பட்ட வையே. இவற்றைத் தொடர்ந்து பலதுறை அறிஞர்கள் குமரிக் கண்ட ஆய்வில் அக்கறைகாட்டியிருத்தல் வேண்டும்; அரசும் பேரூக்கம் காட்டியிருத்தல் வேண்டும்; இரண்டுமே நிகழவில்லை. இதனால் குமரிக் கண்டம் என்ற ஒன்றில்லை என்று பேசு வோரும், பேசப்படும் கருத்துகளும் அனைத்துலக அரங்கில் இடம் பெற்று விட்டனர்; பெற்று விட்டன. அவர்களைத் தமிழ்யல் பற்றைக் கொண்டோ, ஆர்ப்பரிப்புக் கொண்டோ விழிக்க வைத் திடல் முடியாது. ஆக்கவடிவமான ஆராய்ச்சியின் (Constructive Research) வழியாகவே ஏற்கச் செய்தல் இயலும்.

இத்தகு ஆய்வுக்குமுன், இதற்கு முன் நடந்துள்ள ஆக்க வடிவு ஆராய்ச்சிகளை நினைவு கூர்தல் வேண்டும். அவற்றைக் காலவாரியாகப் பார்ப்போம்.

எர்னசுடு எக்கல் (Ernest Haecket) என்பவர் 'இந்து மாக் கடலிலிருந்து, ஆப்பிரிக்கக் கடற்கரை வரை ஒரு பெரிய நிலப்பரப்பு இருந்தது; முதன் மாந்தன் அங்கே தோன்றியிருத்தல் கூடும்' என்று தமது 'படைப்பின் வரலாறு' (History of Creation) என்ற நூலின் கருத்தறிவித்தார்.

சர். யோவான் இவான்சு (Sir John Evans) என்ற அறிவிய லறிஞர், 'மாந்தன் முதலாகத் தென்னகத்தில் தோன்றியிருக்க லாம்' என்று கி.பி. 1897-ல் எடுத்துக் கூறினார்.

காட் எலியட் (W.Scott Eliot) என்பவர், மறைந்து போன இலெமுரியா (Lost Lemuria) என்ற நூலில், குமரிக் கண்டத்தைப் பற்றிப் பல செய்திகளை வெளியிட்டார். மேலும் உலகம் தோன்றியது தொடங்கி, ஐந்து கடல்கோள்கள் நடந்திருக்கின்

றன. அவற்றுள் முதல் நான்கும், பத்து இலக்கம், எட்டு இலக்கம், இரண்டு இலக்கம், எண்பதாயிரம் ஆண்டுகட்கு முன்னர் முறையே நடந்தன. ஐந்தாம் கடல் கோள் கி.மு. 9564-ல் நிகழ்ந்திருத்தல் கூடும். ஒவ்வொரு கடல் கோள்களின் போதும் நிலப்பகுதிகள், கடலுக்குள் மூழ்கி அழிந்திருக்கின்றன என்று விளக்கினார்.

சர். தாமசு ஒல்டர்னசு, தான் எழுதிய 'இந்திய மக்களும் சிக்கல்களும (Peoples and Problems of India) எனும் நூலில் (பக். 23, 24) வடஇந்தியாவும் , இமயமலையும் கடலுக்குள்ளிருந்தன என்று வரைந்திருக்கிறார்.[1]'

28-12-71 அன்று இல் டாக்டர் கே. எஸ். வால்டியா தலைமையில் கூடிய மண்ணியல் அறிஞர் குழுவும், புதுதில்லியில் இம் முடிவை அறிவித்து உறுதி செய்திருக்கிறது. தொடர்ந்து இது தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டும் வருகிறது.

தமிழியல் அறிஞர்களுக்கு மேற்கண்ட ஆங்கில நூற்களின் செய்திகளே மூலம் ஆனால் அவற்றுடன், தமிழிலக்கிய உரைகளது சான்றுகளையும், மகாவம்சம், இராசவழியில் வந்துள்ள கடலழிப்புச் சான்றுகளையும் மையமாக வைத்து விளக்கினர். இப்போது குமரிக் கண்டத்தை அறிவியல் வழி ஊகித்த அறிஞர்களின் கருத்துகளே மறுக்கப்படுகின்றன. இதனால் தமிழியல் அறிஞர்களின் கருத்தும் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. அண்மையில், ஒருபெரும் மேனாட்டுத் திராவிட இயலறிஞர் 'குமரிக் கண்டம் கட்டுக் கதை' (Fabulous) என்று குறித்திருக்கிறார்.[2] அறிஞர் ஆசுகோபோலாவின் கருத்தைக் கண்மூடிப் போற்றுவதோ அல்லது தூற்றுவதோ ஆராய்ச்சிப் பார்வையில்

---

1. புது திலலியில 1971, திசமபா 27 ஆம நாள் கூடிய மணணியல அறிஞா மாநாடு இசசெய்தியை உறுதி செயதிருககிறது டாகடா கே எஸ வாலடியா தலைமையில இயங்கும ஆறு மண்ணியல் அறிஞா குழு இது தொடாபான ஆராயசசியைத தொடாநது செயது வருகிறது ஆபபிரிக்க, ஆசிய, ஆஸதிரேலியாக கணடஙகள சநதிதத இடமும, இமயமலை இலலாத போது 3500 இலடச ஆணடுகளுககு முனபு இருநத சநதிபபு மண் முனையும இககுழுவினரால ஆராயநது அறியப் படடிருககினறன. Hindu 28.12 77.
2. Journal of Tamil - Studies - 1970
   PP 103 & 109 By Asko Parpola

முறையன்று. நாம் மேற்கொள்ளும் உண்மை ஆராய்ச்சியே உண்மையை நிலை நிறுத்தும்.

### 7.1. குமரிமுனைக் கள ஆய்வு

குமரிக் கண்ட அழிவைப் பற்றி இலக்கிய உரைகளைச் சான்றுகளாகக் காட்டுதல் முதல்தரச்சான்றுகள் (Major evidences) ஆகா என்று வரலாற்றாளர் ஒதுக்கித் தள்ளி விடுகின்றனர். ஆதலால் வேறு வழியில் உண்மை காணமுயன்றதன் வடிவமே இந்நேரடி ஆராய்ச்சிக் குறிப்புகள். வரலாற்றுத் துறையில் ஒரு கருத்தை உறுதிப்படுத்த வலிய சான்றுகளாவன :

1. கல்வெட்டுகள், காசுகள் ...........
2. மண்ணியல் (Geology) சான்றுகள்
3. கடலியல் (Oceanography) சான்றுகள்
4. நாட்டுப் புறக் கதைகள்
5. நாட்டுப் பாடல்கள்.

மேற்கண்டவற்றுள் மண்ணியலும், கடலியலும் தனி மாந்தனால் அறியத்தக்கன அல்ல. அரசோ, அல்லது பல்கலைக் கழக அறிவியல் துறைகளோ ஈடுபட்டால்தான் இயலும். ஏனைய, தனிமாந்த உழைப்பால் ஓரளவு இயல வல்லன. அத்தகு முயற்சியே மாணவ நண்பர்களின் துணை கொண்டு மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

குமரி முனையில் ஒரு கிழமை தங்கி என் பணிகளைத் தொடர்ந்தேன். துணையாக அவ்வூரையே சார்ந்த ஐந்துமாண வர்களைக் கூட்டிக் கொண்டேன். அவர்களின் உதவியால், வயதான பெரியவர்களைக் கண்டு உரையாடினேன். பெரும் பாலும் மீனவக் குடும்பத்தினர், கத்தோலிக்கக் கிறித்துவர். வெள்ளை உள்ளம் வாய்ந்த அவர்கள் பல செய்திகளைச் சொன்னார்கள்: சில இடங்களைச் சென்று காணும் படி பணித்தார்கள். மாணவர் களின் உதவியால், குமரிமுனை கீழைக்கரைப் பகுதியில் மூன்று கல்தொலைவும் மேலைக் கரைப் பகுதியில் மூன்றுக் கல்தொலை வும் நடந்தே சென்று பல இடங்களைப் பார்வையிட்டேன்; பல இடங்களைத் தோண்டிப் பார்த்தேன்; பல இடங்களில் பேசிப் பார்த்தேன். அவ்வாறு கண்டும், கேட்டும் திரட்டியவற்றைக் கீழே தருகிறேன்.

### 7.1.1. நாட்டுப்புற இலக்கியச்சான்று

குமரிக் கண்ட அழிவு பற்றியோ அதன் தொடர்பு பற்றியோ, குமரி முனையில் வழங்கும் தாலாட்டு, ஒப்பாரி, படகோட்டப் பாட்டுக்களில் எவ்விதக் குறிப்பும் கிடைக்கவில்லை

### 7.1.2. மேய்ப்பு நிலங்கள்

கன்னியாகுமரிக்குத் தெற்கே நிலப்பகுதி இருந்தது என்றும், விவேகானந்தர் பாறை, முன்பு குமரி முனையோடு சேர்ந்திருந்தது என்றும், அப்போது அப்பகுதி மேய்ப்பு நிலமாகப் பயன்பட்டு வந்தது என்றும் பேச்சு வழக்கில் வழங்குகிறது.

### 7.1.3. நாடோடிக் கதை

மேய்ப்பு நிலத்தில் மேய்ந்த மாடுகளின் சாணத்தை ஒரு கிழவி பொறுக்கப் போயிருந்தாள். அப்போது, ஆங்கே குமரி அம்மனின் சிலை ஒன்று கிடந்தது. அதைப் பார்த்த கிழவி, ஊரில் வந்து கோயில் கட்டி கும்ப விழா நடத்தினார்கள். அக்கிழவியின் தலைமுறையினர் இன்றும் கோயில் அறக் குழுவினரால் போற்றப் படுகின்றனர். இன்றும் கொடியேற்றத் தூணுக்கு, அந்தக் குடும்பத்தினரே கயிறு முறுக்கித் தருதல் வேண்டும். அதற்கு அன்பளிப்பும் உண்டு. அக்குடும்பத்தினர் தற்போது, கத்தோலிக்கக் கிறித்துவச் சமயத்திற்கு மாறிவிட்ட போதிலும் மேற்கண்ட கயிறு தரும் வழக்கமும், பொருள் பெறும் வழக்கமும் இன்றும் இருந்து வருகின்றன.

### 7.1.4. கல்லா? கட்டடமா?

இப்போதுள்ள, குமரி காந்திமண்டபத்திற்குத் தெற்கே இரண்டரை கல் தொலைவில் ஒரு பெரும் வெற்றுப் பரப்பு , கடலடியில் உள்ளது. இப்பரப்பின் ஆழம் ஏழு பாகங்கள் தாம் (குமரி மீனவர் மொழியில் :- பாகம் இரண்டு கைகளின் விரிப் பளவு). ஆனால் அதன் பக்கத்தில் ஆழமோ இருபது பாகங்கள். இந்தக் குறைந்த ஆழமுள்ள கடலாழ்ந்த பரப்பு, பழைய கட்ட டத்தின் தளமாக இருக்கலாம் என்கின்றனர்.

### 7.1.5. சரவணப் பாறை

கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள 'முட்டம்' என்ற ஊரில் கடற்கரையை ஒட்டி, கடல் நடுவே ஒரு பாறை உள்ளது. இதன்

பெயர்தான் சரவணப் பாறை. இது முன்பு ஒரு கோயிலாக இருந்தது என்கின்றனர் இவ்வூரார்.

### 7.1.6. குமரியாறும், பஃறுளியாறும்

இன்றுள்ள நாஞ்சில் நாட்டுக்குத் தெற்கே இருந்த நாடு தான் குமரி நாடு. இவ்விரு நாடுகளையும் தழுவிச் சில ஆறுகள் ஓடின. இவற்றுள் குமரியாறும், பஃறுளியாறும் குறிக்கத்தக்கன. இவ்விரு ஆறுகளும் கடலினுள் கலந்தமைக்கான அடையாளங் கள் உள்ளன. கடலோட்டம் அறிந்த மீனவர்களே அவற்றை உணர முடியும். மேற்குக் கடற்கரையிலுள்ள 'மணல் திட்டை' என்ற ஊரின் பக்கத்திலிருந்து இவ்வாறுகள் புறப்படுகின்றன. குமரியாறு வளைந்து சென்று கிழக்குக் கரையிலுள்ள 'இடிந்த கரை' என்ற ஊர்ப் பக்கம் முடிவுற்றது. பஃறுளியாறு மேற்குக் கடலில் மிக்க தொலைவு ஓடுகின்றது. அதனது நீரோட்டத்தை இன்றும் அறிய முடிகிறது. இப்பகுதிகளில் கடல் நீரில் மட்டும் வாழக் கூடிய மீன் வகைகள் காணப்படுவதில்லை இதனைச் சொன்னவர், வயதான ஒரு முதிய கிறித்துவக் கிழவர்.

### 7.1.7. நன்னீர் ஊற்றுகள்

'மணல்திட்டை' என்ற ஊரையடுத்துக் கடற்கரையோ ரத்தில், அலை மோதலின் ஊடே சில நன்னீர் ஊற்றுகள் காணப் படுகின்றன. இவை குமரியாறு பஃறுளியாற்றுண்மைகளை வலியுறுத்தும் துணைச் சான்றுகள். இவற்றை நான் நேரே தோண்டிப் பார்த்துச் சுவைத்து உணர்ந்தேன்.

காந்தி மண்டபத்திற்கு மேற்கே மூன்றரை பர்லாங்குத் தொலைவில், பாறை நடுவே உள்ள மணல் பரப்பில் தோண்டிச் சோதித்த போது, நல்லநீர் அங்கே ஊறுவதையும் கண்டேன்.

குமரிமுனைக்கு மேற்கே, கோவளம் எனும் ஊருக்குக் கிழக்கே கடலோரத்தில் ஒரு நன்னீர்க் கிணறு இன்றும் உள்ளது. இக்கிணற்று நீரையே அவ்வூர் மக்கள் குடிநீராகப் பயன்படுத்து கிறார்கள்.

விவேகானந்தர் பாறை கடல் நடுவில் உள்ளது. அதிலே நீர் ஊற்று ஒன்றுண்டு எனக் கேள்வியுற்று நானும் என் மாணவர் களும் படகில் அப்பாறைக்குப் போனோம். விவேகானந்தர் கால் சுவடுகள் எனக் கருதப்படும் பீடத்திற்கு வலப்புறத்தே, ஒரு

பள்ளத்தில் அவ்வூற்றைக் கண்டேன். ஆவல் மீதூர எடுத்துச் சுவைத்துப் பார்த்தேன் நன்னீர் என்பதை உணர்ந்து களி கொண்டேன். இன்று அவ்விடத்தில் சுவர் எழுப்பப்பட்டு ஊற்றைத் தூர்த்து மறைத்துவிட்டார்கள். விவேகானந்தர் பாறை கட்டு-நர்களைக் கண்டு உசாவினேன். 'அது ஊற்றன்று, மழைநீர்த் தேக்கம் ; அதனால் தான் சுவர் எழுப்பினோம்' என்று மழுப்பி-னார்கள்.

மேற்கண்ட நன்னீர் ஊற்றுக்கள் வேறு இடங்களிலும் காணப் படலாம். தரங்கம்பாடியில் ஒரு கிணறே இருக்கிறது. ஆனால் குமரிமுனையின் முப்புறத்திலும், தொடர்ச்சியாக, கடல் நடுவே பாறையின் ஊடே கூட நன்னீர் ஊற்றுக்கள் காணப் படுவது போலக் காணப்படுவதில்லை.

### 7.1.8. கடல் நடுவே தெரியும் கதவம்

கடலில் சில சமயம், நீர் பெருகும் ; பொங்கும்; சில சமயம் சுருங்கும்; வடியும். இவ்வாறு சுருங்கி வடியுங்காலத்தில், கடல் நடுவே ஒரு மாபெரும் கதவு தெரிகிறதாம். இச் செய்தியை அங்குள்ள மீனவர்கள் கண்டதாக, காண்பதாகச் சொல்கிறார்கள். (இதே செய்தியை மேலப் பாளையம் எம்.எல்.ஏவாக இருந்த திருமிகு. பீர் முகம்மது, 1970ல் சட்டப் பேரவையில் எடுத்துச் சொன்னார்.)

### 7.1.9. இடிந்த கரையா? இழந்த கரையா?

குமரிமுனையின் கடலோரப் பகுதிகள் தொடர்ந்து இன்றும் அழிக்கப்படுகின்றன. அரிக்கப்படுகின்றன. இதற்குத் தெளிவான சான்று, 'இடிந்த கரை' என்ற பெயர்படைத்த ஊர் இன்றும் உள்ளது. பெயரில்லாமலே இடிந்த கரைகளும் இடியும் கரைகளும் பல இன்று உள்ளன.

### 7.1.10. ஏடுகளும் பிறவும்

அங்குள்ள பெரியவர்களை, ஏதேனும் ஏட்டுச் சுவடிகள் உள்ளனவா என்று கேட்ட போது, அவர்கள் அளித்த பதில் இது தான் 'பல இருந்தன அவையெல்லாம் கரையான்களால் அழிக்கப் பட்டு விட்டன.'

மேற்கண்ட நேரடிச் சோதனைக் குறிப்புகள், குமரிக்கண்ட 'அழிவை வற்புறுத்தும் துணைச் சான்றுகள். இவையன்றிக்

கடலியல், மண்ணியல், தொல்பொருளியல் ஆய்வுகள் அரசாலோ, பல்கலைக் கழகத்தாலோ தொடர்ந்து நிகழ்த்தப் பெறின் மேற்குறித்த செய்திகள் தெளிவு பெற்று, இறுதி செய்யப்பெறும்; உறுதி செய்யப்பெறும்.'

## 7.2.குமரிக் கண்டம் அழிந்தமை

தமிழிலயக்கியங்களில் 'குமரி' பற்றியும், அஃது கடல் கோளால் அழிந்தது பற்றியும் குறிப்புகள் உள்ளன. அக்குறிப்புகள், வெறும் இலக்கியப் புனைந்துரைகள் என்றே வரலாற்றாசிரியர்களால் இதுகாறும் புறக்கணிக்கப்பட்டு வந்தன. ஆனால் சோவியத் அறிஞர் அலக்சாந்தர் கோந்தரதோவ், தம் நூலான 'The Riddles of three oceans' என்ற நூலை வெளியிட்டபின், குமரி பற்றிய ஆய்வு புத்துயிர் பெற்றுள்ளது. இந்நூலில் குமரிக் கண்டம் இருந்து அழிந்திருக்கலாம் என்பதையும், திராவிடர், தென்புலம் இருந்தே வடபுலம் நகர்ந்து நோக்கிப் பரவியிருக்க வேண்டும். என்பதையும் ஆசிரியர் அரண் செய்கிறார்.

### 7.2.1. உயிரியல் ஒற்றுமைகள்

வெப்பத்தை நாடும் மண்புழு இனங்கள் ஒரே மாதிரியாகத் தென்மேற்கு ஆஸ்திரேலியாவிலும், இந்தியாவிலும், இலங்கையிலும் காணப்படுகின்றன. ஆஸ்திரேலியாவிலும், தென்னமெரிக்காவிலும் வயிற்றில் குட்டிகளைத் தாங்குவனவும், பை போன்று உறுப்புடையவனவும் ஆன குட்டிப் போட்டுப் பால் கொடுக்கும் விலங்குகள் உள்ளன. இவ்வுயிரினங்கள், மேற்கண்ட நிலப்பகுதிகள் ஒன்றாக இணைந்திருந்த காலத்தில் பரவினவாதல் வேண்டும்.

### 7.2.2. குமரியில் நாகரிக மாந்தர்

தென்னிந்தியாவில் கிழக்கு, மேற்குக் கடற்கரைகளை ஒட்டி நிலம் மூழ்கியதற்குத் தடயங்கள் உள்ளன. மறைந்த குமரி நிலத்தில் வெமூர்களும், ஆந்த்ரபி குரங்குகள் மட்டுமின்றி உயர்ந்த நாகரிகத்தை அடைந்திருந்த மனிதர்களும் வாழ்ந்தனர் என்று கொண்டால் தான் புதிர்கள் விடுபடும்.

### 7.2.3. விடுபட்ட உயிரினம்

தொல்பழம் மானுட இயலார் ஆதிமனிதத் தோற்றத்துக்கு முதலிடம் குமரிக்கண்டம் என்கின்றனர். ஆதி குரங்கு நிலைக்கும் ஹோமோசேப்பியன் நிலைக்கும் இடையே உள்ள சங்கிலித் தொடர் போன்ற உறவு அறுபட்டுப் போயிருப்பதனை நோக்கி அந்த விடுபட்ட நிலையிலிருந்த உயிரனம் குமரிக் கண்டத்தில் தோன்றி வட கிழக்கில் இந்தியாவுக்கும், தென்கிழக்காசியா வுக்கும், மேற்கு ஆப்பிரிக்காவுக்கும் பரவியது.

### 7.2.4. முக்கண்ட இணைவும், பிரிவும்

ஆப்பிரிக்கா, தென் இந்தியா, ஆஸ்திரேலியா ஆகியன ஒரு நிலப்பாலத்தால் இணைந்து நின்று மக்களின் குடிபெயர்ச்சிக்கும் விலங்கு, செடி கொடிகளின் பெயர்ச்சிக்கும் காரணமாக அமைந்து பின் நேர்ந்த கடல்கோளால் குலைந்து போனது.

### 7.2.5. தமிழ் இலக்கியச் சான்றுகள்

1. குமரிக் கண்டத்திலுள்ள பஃறுளி ஆறும், குமரி மலையும் அதன் மலைத் தொடர்ச்சியும் கொடுங்கடலால் அழிக்கப்பட்டன என்று மொழிகிறது சிலப்பதிகாரம் (11:20-21)

2. பாண்டியனின் நிலத்தைக் கடல் தன் மிக்க அலைகளால் வவ்விக்கொண்டது என்று குறிப்பிடுகிறது கலித்தொகை (104)

3. கடலின் பேரிரைச்சலில் மலையே அசைந்தது என்று குறிப்பிடுகிறது குறுந்தொகை (52)

4. அழிந்த பஃறுளி ஆற்றைப்பற்றிப் புறநானூறு (9) பேசுகிறது.

5. இறையனார் களவியல் உரைகாரர் நக்கீரர், அடியார்க்குநல்லார் ஆகிய உரையாசிரியர்கள் குமரிக் கண்டத்திலிருந்த நாடுகள் பற்றியும், தமிழ்ச் சங்கம் பற்றியும் எடுத்து மொழிகின்றனர் (சிலப்பதிகாரம் 8:1-2; 11: 18-20). முதல் உரையாசிரியராகிய இளம்பூரண அடிகள் குமரி கடலால் கொள்ளப்பட்டதைத் தம் உரையில் குறிப்பிடுகிறார்.

இவ் இலக்கியச் சான்றுகளை உறுதிசெய்யும் புதிய சான்றுகள் இந்தியாவிலிருந்தும், ஆப்பிரிக்காவிலிருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும் கிடைத்திருக்கின்றன.

## 7.2.6. புதிய சான்றுகள்

### 1. இந்தியாவில்

வங்கக் கடலுள், கடல்கோளுக்குப் பிறகு எஞ்சிய தீவுகளாக அந்தமான், நிக்கோபார், பசிபிக் தீவுகள் முதலியவை கருதப்படுகின்றன. அந்தமான் தீவுகளுள் ஒன்பது வகைப் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் திராவிடரைப் போன்று கருப்பு நிறமும், கருப்பு முடியும் உடையவர்கள். ஏனைய வட இந்திய மக்களைப் போன்ற நிறத்தினரும் இயல்பினரும் அல்லர். பர்மா, வங்காள தேசம், இந்திய வங்க மாநிலம் என்பவற்றுக்கு அருகிருந்தும் அம்மாநிலமக்களோடு இணைப்புகள் இருந்தும் இவர்கள் கருப்பராக இருப்பது வியப்பு.

இவர்கள் பெற்றோரிடமும் மற்றோரிடமும் காட்டும் மதிப்பு முறைகள் தமிழர், தெலுங்கர் மதிப்பு முறைகளோடு ஒத்துள்ளன. இவர்கள் பேசும் மொழிகள் திராவிட மொழிகளைப் போல ஒட்டு நிலை மொழிகள். திராவிட மொழிகள் சில கூறுகளில் இந்திய மொழிகளை ஒத்திருப்பதுபோல இவர்தம் மொழிகளும் இந்திய மொழிகளுடனும், ஆஸ்திரேலிய மொழிகளுடனும் ஒத்துள்ளன. திராவிடருக்கும், ஆப்பிரிக்கருக்கும் இடையே ஒற்றுமை இருப்பது போலவே அந்தமான் பழங்குடியினருக்கும், ஆப்பிரிக்கர்களுக்கும் இடையே ஒற்றுமைகள் உள்ளன.

கடல்கோளைப் பற்றிய நாட்டுப்புறக் கதைகள், நம்பிக்கைகள் இம்மக்களிடமும் வழங்குகின்றன. இவர் தம் கடவுளின் பெயர் 'புளுக' (Puluga) என்பதாகும். கடல்கோளுக்கு முன்பு புளுகவின் இடம் 'செட்டில்' (Saddle) சிகரத்தில் இருந்தது எனவும் பிறகு கடல் கோள் அழிவால் கடவுளின் தங்குமிடம் மாற்றப்பட்டது என்றும் இம்மக்கள் நம்புகின்றனர்.

### 2. தெலுங்கு வேளமர்களின் வரலாறு

'குணவேளமர்கள்' என்ற தெலுங்கு பேசும் பிரிவினர் ஆந்திராவில் வாழுகின்றனர். அவர்களுடைய பூர்வீகம் பற்றி ஒரு கதை வழங்குகிறது. பல காலத்திற்கு முன்பு வேளமர்கள் நீரில் தள்ளப்பட்டு மாட்டிக் கொண்டார்கள் என்றும், பள்ளர்கள் படகுகளைக் கொண்டு அவர்களைக் காப்பாற்றினார்கள் என்றும் கதை வழங்குகிறது. இதன் காரணமாகக் குணவேளமரிடையே

திருமணம் நடக்கும் போது பள்ளர்கள் இருவருக்கு அன்பளிப்பு நல்குகின்றனர். இதன் நினைவாகத் திருமணத்தின் போது திருமண வீட்டில் மீன் வலைகளைத் தொங்கவிடுவதும் இவர்களது வழக்கமாகும்.[1]

தெலுங்கு பேசும் ஆதி வேளமர்களைப் பற்றி ஆராய்ந்த சோவியத் இந்திய வல்லுநர் நிக்கித்தாகுரோவ்[2] ஆதிவேளமர்கள் கடல் வழியாக வந்தவர்கள் என்று குறிப்பிடுகிறார். குமரிக்கண்ட வரலாற்றை வேளமர் வரலாற்றோடு இணைத்து நினைக்கிறார்.

### 3. சந்தால் பழங்குடி மக்கள்

சந்தால் (ஒரிசா) என்ற பழங்குடி மக்களிடம், உலகம் கடலில் இருந்து தோன்றியது என்ற கருத்து வழங்குகிறது. 'தாக்கூர்' (Thakur) என்ற அவர்களுடைய கடவுள் ஆமையின் உதவியோடும், புழு அரசன் உதவியோடும் நீரிலிருந்து உலகத்தை மேலே எழுப்பியதாகக் கருதுவர். நீரிலிருந்து உயர்த்தப்பட்ட நிலத்தில் இரண்டு அன்னங்களுக்கு கடவுளால் இடம் அளிக்கப்பட்டது. அவ் அன்னங்கள் இரண்டு முட்டைகள் இட்டன. அந்த முட்டைகளிலிருந்தே மனித இனம் தோன்றியது. முதலில் தோன்றிய மாந்தரின் பெயர்கள்[3] 1. பிலு ஆரம் 2. பிச்சுபுதி.

### 4. பில்மக்கள் நம்பிக்கை

குசராத், இராஜஸ்தான் மாநிலத்தில் 'பில்' என்ற பழங்குடியினர் உள்ளனர். இப் பழங்குடியினர் கருப்பு நிறத்தினர். வில்லாற்றலில் வல்லவர் . 'வில்லவர்' என்ற பெயரே 'பில்லவர்' என்று குறிக்கப்படுகிறது. சான்று வங்காளம் - பங்காளம்; இப் பழங்குடி மக்கள் ஒரு காலத்துத் திராவிட மொழி பேசுவராக இருந்தனரென்றும், பிற்காலத்தில் சுற்றுச் சூழலின் தாக்கத்தால் தம் மொழியினை மறந்து ஆரிய மொழி பேசுநராக மாறினர் என்றும் அறிஞர் கருதுகின்றனர்[4]. அவர்தம் கருப்பு நிறம், திருமண முறை (Cross Cousin marriage) சாவுப்பறையடித்தல், பெண்ணிற்குத் தரப்படும் மதிப்பு, முலைக்கூலி கொடுத்தல் முதலாய

1. Thurston, Caste and Tribes of Southern India Vol. 7 P. 337-341.
2. Dr Nikita Gurov's lecture on 20 th April, 1978 Hindu, Madras 21st April 1978
3. Anthropology in India, P 182.
4. Anthropology in India, P. 54.

அவர்தம் பழக்கங்கள் பில் மக்கள் திராவிடர் என்று சாற்று கின்றன. இம் மக்களிடமும் தம் மூதாதையார் நீரிலிருந்து வந்ததாகக் கதை வழங்குகிறது. அவர்களிடம் வழங்கும் கதை யாவது,

ஆதியில் ஒரு வேடுவரும், வேடுவச்சியும் இருந்தனர். வேடு-வச்சி நாள்தோறும் தானியங்களைக் கழுவ ஒரு நீருற்றுக்குச் செல்வாள். நீரூற்றில் உள்ள மீன்களுக்கும் கொஞ்சம் தானி-யத்தை எடுத்துப் போடுவாள். தானியத்தை உண்ட மீன்கள் மகிழ்ந்தன; வேடுவச்சிக்கு நன்றி கூற விரும்பின. நன்றியின் அடையாளமாக மீன்கள் அவளுக்குப் பின்வரும் நிகழ்ச்சி பற்றி விரிச்சி கூறின.

'உலகத்தில் பிரளயம் வரப்போகிறது. ஒரு மரப்பெட்டி செய்து கொஞ்சம் சாமான்களைச் சேகரித்துக் கொண்டு அவற்-றோடு நீயும் உன் கணவனும் அமர்ந்து கொள்ளுங்கள்'. மீன் களின் அறிவுரையின் படியே அவர்களும் செய்தனர். பிரளயத்தில் இருந்து தப்பினர். தப்பிய அன்னோர் தம் பெட்டி மிதந்த படி ஒரு சிறு நிலப்பகுதியை அடைந்தது. அந்நிலப் பகுதியில் அவர்கள் தங்கினர். அன்னோரிடமிருந்து எங்கள் தலைமுறை தோன்றித் தழைத்தது.

## 5. திரைவழி வந்த இனம்

சோழ இளவரசனுக்கும் நாக நாட்டு இளவரசிக்கும் காதல் நேர்ந்தது. சோழ மன்னனைக்கூடி மகிழ்வித்த இளவரசி அவனை அறியாமலே அவனைவிட்டுப் பிரிந்து சென்றாள். தாயகத்தில் குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தையைத் தொண்டைக் கொடியில் சுற்றிப்பாதுகாப்பாகக் கடலில் மிதக்க விட்டாள். திரை என்ற அலைகளால் அலைக்கழிக்கப்பட்ட குழந்தை தமிழ் நாட்டுக் கடற்கரையில் கரையேறியது. திரை வழி வந்தவன் திரையன் என்று அழைக்கப்பட்டான். 'திரையர் குடி' என்ற ஒரு குடியே இவனுக்குப் பின்னால் தழைத்தது எனலாம். 'திரைதரு மரபின் உரவோன் உம்பல்' என்று பெரும்பாணாற்றுப்படை (வரி 31) அலை வழிவந்த குலத்தைக் குறிப்பிடுகிறது. பெரும்பா-ணாற்றுப்படைக்கு உரை எழுதியுள்ள நச்சினார்க்கினியர் இவ்-வரலாற்றை விரித்து உரைக்கிறார்.*

*. சஙககாலச சிறபபுப பெயாகளா, ப 346-348

இவ்வரலாற்றைப் பழங்குடி மக்களிடையே வழங்கும் கடல் வழி வரலாற்றோடு இணைத்து நோக்குக. தமிழரசரின் ஒரு பெரும் தலைமுறையான சோழ தலைமுறை கடல்வழி வந்து தழைத்தது என்ற செய்தி கடல்கோள் செய்திக்கு உரம் ஏற்றுகிறது.

## 6. நேபாளில் குமரி வழிபாடு

அண்மையில் நேபாளில் வழங்கும் மொழிக்கும், திராவிட மொழிக்கும் இடையே உள்ள ஒற்றுமைகள் அறியப்பட்டுத் தொடர்ந்து ஆராயப்பட்டு வருகிறது. திராவிடரைப் போன்று நேபாளப் பெண்கள் திருமண அடையாளமாக வளையல்களை அணிகின்றனர். கணவன் இறந்தால் விதவையர் மொட்டை அடித்துக் கொள்கின்றனர். பெற்றோர் இறந்தால் ஆண்பிள்ளைகள் மொட்டை அடித்துக் கொள்கின்றனர். தமிழ் நாட்டைப் போலவே தை மாதம் திருமண மாதமாகக் கருதப்படுகிறது. நேபாளம், கேரளம், தென் கருநாடகம் ஆகிய இடங்களில் உள்ள சிற்பங்களிடையே ஒற்றுமைகள் கண்டறியப்பட்டுள்ளன. இங்குக் கட்டப்பட்டுள்ள வீடுகளில் கட்டட அமைதியில் ஒருமைப்பாடு உள்ளது. குறிப்பாகத் தாழ்வாரங்களுக்கு மேல் உள்ள மோட்டின் இறைவராங்கள் ஒன்றுபோல உள்ளன. நேபாளில் வாழும் நேவர் (Newars) என்ற பெயரும், கேரளத்தில் வாழும் நாயர் என்ற பெயரும் ஒத்துள்ளன. சிறப்பாகப் பெண்களின் கற்பு நெறி பற்றிய விசித்திரக் கோட்பாடு இரண்டு இனத்தாருக்கும் பொதுவாக உள்ளது. இவை அனைத்துக்கும் மேலாக இங்குள்ள இந்து மதக் கோயில்களில் குமரித்தெய்வ வழிபாடு, தென்குமரியை அப்படியே நினைவுபடுத்துவதாகும்.

### நேபாளில் வழங்கும் குமரித்தெய்வ வழிபாடாவது

நேபாளில் வணங்கப்படும் பெண் தெய்வத்தின் பெயர் 'குமரி' என்பதாகும். குமரி சிவனின் மனைவியான 'தலஜீ' (Taleju) என்ற அம்மனின் அவதாரம் ஆவாள். குமரி என்ற இந்தப் பெண் தெய்வம் பொது மக்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறாள். காத்மண்டு என்ற நேபாளத் தலைநகரத்தில் வாழும் நேவர் (Newars) என்ற பழங்குடி மக்களிடமிருந்து குமரி தேர்ந்தெடுக்கப்படுகிறாள். தேர்ந்தெடுக்கப்படும்போது பெண் ஐந்து வயதுக்கு மேற்பட்டவளாய் இருக்க வேண்டும். அவள் உடலில் எவ்வகை காயமோ தழும்போ இருத்தல் கூடாது.

சோதிடர்களால் குமரிப்பெண் தெய்வப் பதவிக்காக ஒரு சிலர் முன் தேர்வு செய்யப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் ஓர் இருட்டறையில் அமர்த்தப்படுவர். அச்சமூட்டும் விசித்திர விலங்கு உருவங்களின் தலைகளை அணிந்து ஒரு சிலர் இருட்டறையில் உள்ள குமரிப்பெண்களுக்கு முன் பயமூட்டும் பேரிரைச்சலை உண்டாக்கிக் கத்துவர். இதற்கு அஞ்சும் பெண்கள் வெளியேற்றப் படுவர். அஞ்சாது கடைசிவரை இருக்கும் பெண் குமரிப்பெண்ணாகத் தேர்ந்தெடுக்கப்படுவாள். இவள் குமரி தெய்வமாகச் சிறப்பிக்கப்படுவாள்; குமரித் தெய்வமாக தெய்வ பீடத்தில் அமர்த்தப்படுவாள். அமர்த்தப்படும் நிகழ்ச்சி மிகச் சிறப்பானதாக இருக்கும். அக்டோபர் மாதத்தில் நேபாளியர், 'தசை' (Dasai) என்ற பெரும் விழாவை மிக முதன்மையாகக் கொண்டாடுவர். இவ்விழா பதினைந்துநாட்கள் நீடிக்கும். இவ்விழாவின் பொழுதே தேர்ந்தெடுக்கப்பட்ட குமரி, தெய்வமாகப் பீடம் ஏற்றப்படுவாள். அம்மனின் ஆன்மா மேற்கண்ட அமர்த்தலுக்குப் பிறகு இளம் பெண்ணோடு இரண்டறக் கலந்து விடும் என்பது அன்னோர் நம்பிக்கை.

குமரிப்பெண் பருவம் எய்தும் வரைதான் பெண் தெய்வ-மாகப் போற்றப்படுவாள். பருவம் எய்தியவுடன் தெய்வ நிலையில் இருந்து இறக்கப்பட்டுப் புதிய இளம் பெண் தெய்வப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு விழா நாளில் அமர்த்தப்படுவாள். தெய்வ நிலையை இழந்த குமரிப் பெண் அதன் பின் தன் பெற்றோரோடு திருமணக் காலம் வரை தங்கியிருப்பாள். ஆனால், இந்த பெண்களை ஆடவர் திருமணஞ் செய்ய விரும்புவதில்லை. காரணம், குமரிப் பெண்ணை மணந்து கொண்ட ஆடவன் மண-மாகிய ஆறு மாதத்திற்குள் இறந்து விடுவான் என்ற நம்பிக்கை ஆகும். இந் நம்பிக்கை - இளைஞர்களை, இப்பெண்டிரைத் திருமணஞ் செய்வதிலிருந்து தடுக்கிறது.*

சிறிய உருவில் தாய்த் தெய்வ உருவங்கள் சிந்து நாகரி-கத்தில் காட்டப்பட்டுள்ளன. தாய்த் தெய்வமாக (நேபாளம் போன்று) ஒரு பெண்ணே கோலம் பூண்டு சடங்கு செய்ததை இது காட்டுகிறது.

*. Jai Nepal I B.M.F Mission 352, Kennington Road, London SE II 4 L F. p. 6.

வேட்டுவச் சிறுமி ஒருத்தி தாய்த் தெய்வமாகக் கோலம் புனைந்து தேவராட்டியாகச் சடங்கு செய்வதைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது.

'சவரர்' என்ற இந்தியப் பழங்குடியிடம் குமரிப் பெண்ணைத் தேவராட்டியாகத் தொழும் வழக்கம் உள்ளது. 'முதுகுடிப் பிறந்த முதிராச் செல்வியை மதி முடிக்க அளித்த மகட்பால் காஞ்சி' என்ற வரியிலுள்ள 'முதிராச் செல்வி' என்பது இளம் பெண்ணையே குறிக்கிறது. முதிராச் செல்வியைக் கீழுள்ள ஓர் ஆவிக்குக் கொடுப்பதும் அவளே தேவராட்டியாக மாறுவதும் சவரர் என்ற பழங்குடியினர் இடையே உள்ள பழக்கம்.

நேபாள வழிபாட்டில் உள்ள குமரி, தமிழகத்தின் தென் முனையில் உள்ள குமரி அம்மன் வழிபாட்டின் மறுபதிப்பு ஆகும். தென் இந்தியாவிலிருந்து வட இந்தியா நோக்கிச் சென்ற மக்களோடு தென்னிந்திய மக்களின் பழக்கமும் வடக்கு நோக்கிச் சென்றது என்பதற்கு நேபாள குமரி வழிபாடு ஒரு சான்று.

### 7. இருளர் நம்பிக்கை

தமிழகத்தில் வாழும் இருளர் மொழி பேசும் திராவிடப் பழங்குடியினர். இவர்களிடம் கடல்கோள் பற்றிய நம்பிக்கை நிலவுகிறது. பெரும் கடல் கோளிலிருந்து தப்பிப் பிழைத்த ஒரு பெரும் குறவரிடமிருந்து இருள இனம் தோன்றியதாக இருளர்கள் நம்புகிறார்கள்.

### 8. தமிழ்ச் சொல் வழக்காறு

'ஊர் பட வெள்ளத்தை ஊற்றி விட்டாள்' என்று குமரி மாவட்டத்திலும் 'ஊர்ப்பட்ட தண்ணீரை ஊற்றி விட்டாள்' என்று தமிழகத்தில் பல பகுதிகளிலும் வழங்கும் சொல் வழக்காறுகளை உற்று நோக்கின் ஓர் உண்மை புலப்படும். இரண்டு வழக்காறுகளிலும் உள்ள 'ஊர்பட' என்ற சொல்வழக்காறு 'ஊர் அழிந்துபட' என்ற பொருளில் இருக்கிறது. தண்ணீரால் ஒரு காலத்தில் தமிழ் ஊர்கள் அழிந்துபட்டமையை இவ்வழக்காறு எடுத்துக் காட்டுகிறது.

தமிழ்நாட்டின் கடற்கரை ஓரத்தில் சிற்றூர்களும், நகரங்களும் தொடர்ந்து கடலால் அழிந்து வருவதை இராமேஸ்வரம் உள்ளிட்ட கடலோர அழிவுகள் காட்டுகின்றன. தமிழ்நாட்டைப்

பொறுத்த அளவிற்குக் கடல், மண்ணை அரிப்பதுடன், ஊர்களையும், மரங்களையும் அரித்து விடுகின்றது. குமரி மாவட்டத்தில் 'கலிங்க ராஜபுரம்' என்ற கடற்கரை ஊரை அடுத்த பைங்குளத்தில் ஒரு சிறு கோயிலும் ஆஞ்சனேய அனுமான் உருவமும் மண்ணிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டன. இக் கோயில் கி.பி. ஒன்பதாவது நூற்றாண்டில் பாண்டியர்களால் கட்டப்பட்டது.*

இந்நிகழ்ச்சி பைங்குளத்தில் கட்டப்பட்டிருந்த கோயிலைக் கொடுங்கடல் ஒரு காலத்தில் அலைகளால் விழுங்கியது; மண்ணால் மூடியது. பின்பு ஒரு காலத்தில் முன் வந்த கடல், பின் வாங்கி விட்டது என்பனவற்றைக் குறிக்கிறது.

அலைகள் மண் மேல் பாய்ந்து விழுங்குவதுடன், பெருநகரங்களின் ஓரத்தில் அமர்ந்து அந்நகரங்களைப் புகழ் பெற்ற துறைமுகங்களாகப் பொலியச் செய்து, பின்பு ஒரு காலத்தில் நெடுந் தொலைவுக்குப் பின் வாங்கி விடுவதால் துறைமுகப் பெருமையை அந்நகரங்கள் இழக்கச் செய்து, வெறும் சிற்றூர்களாக ஆக்கி விடுவதும் உண்டு. காவிரிப்பூம்பட்டினம், சீர்காழி, கொற்கை ஆகியன கடலின் பின்வாங்கும் கொடுமையால் அழிந்த நகரங்களே.

### 7.2.7. அயல் நாட்டுச்சான்று

#### எதியோப்பியா

கிழக்கு ஆப்பிரிக்காவின் கொம்பு நாடாக இருப்பது எதியோப்பியா. எதியோப்பியா உலக மக்களினம் தோன்றிய இடமாகக் கருதப்படுகிறது. எதியோப்பியருக்கும், திராவிடருக்கும் உருவ அளவில் மிகுந்த ஒற்றுமைகள் உள்ளன. பஞ்ச திராவிடங்களுள் ஒன்றான குசராத் கடற்கரை ஓரத்தில் திரிந்த திராவிட மக்களை 'ஹெரோடொட்டஸ்' என்ற வரலாற்று ஆசிரியர் கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் 'ஆசிய எதியோப்பியர்கள்' என்று குறிப்பிடுகின்றார். எதியோப்பியரிடமும் தமிழரைப் போன்று கடல்கோள் கதை வழங்குகிறது. ஷாம (Sham) என்பவர் எதியோப்பியருக்கு முதாதையர். அவர் தம் மகன் அர்ப்பஸாத் (Arphaxad). பெருங் கடல்கோளால் அர்ப்பஸாத் அவதிக்கு உள்ளானார்.

*. Times of India, Delhi, 20-2-80

எனவே உள்நோக்கி எகிப்து வரை சென்றார். நைல் நதியைக் கடந்தார். நூபியா (Nubia) என்ற இடத்தில் எதியோப்பியப் பேரரசை நிறுவினார்.

பாண்டிய அரசில் தொன்மை அரசியாகப் 'பண்டையா' என்பவள் அமைந்தது போல, நூபியாவில் அமைந்த எதியோப்பிய அரசில், அரசியாக மகதா (Makeda) ஆட்சி செலுத்தினாள்.

**சூடான்**

வடகிழக்கு ஆப்பிரிக்காவின் உள் நாடாக எகிப்தையும், லிபியாவையும் அடுத்து அமைந்திருக்கும் நாடு சூடான். இவர்களிடமும் கடல்கோள் பற்றிய கதை வழங்குகிறது. போர்னுபகர் எல் மு (Bornu Bahar El Nuh) என்ற இடத்தில் உள்ள சா (Chaa) என்ற ஏரியில் பெரு வெள்ளம் பெருகி பக்கத்து ஊர்களை அழித்தது என்பது சூடானியரிடம் வழங்கும் வரலாறு.

**குமரித் தீவுகள்**

மடகாசுகர் என்ற இன்றைய தீவின் முன்னைய பெயர் 'குமர்' என்பதாகும். அங்கு வாழும் மக்கள் கொம்ரி (Komri) என்று அழைக்கப்பட்டனர். மடகாசுகருக்கும், தென் ஆப்பிரிக்கா, மொசாம்பிக்கிற்கும் இடையே உள்ள கடல் 'கொமோர்' (Comores) என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பகுதியில் உள்ள தீவு 'கொமோரொ' (Comoro) என்று குறிக்கப்படுகிறது. ஈண்டு உள்ள தீவுகளின் கூட்டம் 'கொமொரோ தீவுகள்' என்று சுட்டப்படுகின்றன. பிரஞ்சு முன்னாள் காலனியாக இங்கு இருக்கும் ஒரு நாடு, கொமோர் குடியரசு (The Republic of Comores) என்று வழங்கப்படுகிறது. கி.பி.1208 - 1286 ஐச்சார்ந்த இபான்சேத் (Iban Sait) என்ற அரபு எழுத்தாளர் இந்தப் பகுதியைத் தம் பயணக் குறிப்பில் கொம்ரு (Komr) என்று குறிப்பிடுகிறார். இந்தப் பகுதியின் அரசன், கொமரையா (Komorriyya) என்ற நகரில் வாழ்ந்ததாக இபான்சேத் குறிப்பிடுகிறார். இந்தப் பகுதியில் மிகப் பரவலான பெயராக வழங்கும் கொமோர் என்பதற்கான காரணம் இதுவரை சரியாகக் கண்டு பிடிக்கப்படவில்லை.

**மடகாசுகர் தீவிற்குக் குமரி என்ற பெயர்**

According to an The Arab writer, Ibn said, who lived 1208-1286 (quoted by Perrand, "Le k' oven - Louen" Journ Asiat Vol XIII

pp. 445-6) the impelling motives of the migration to Matagascar are to be found in the following sequence of events: The people of Komr are the brethren of the Chinese .... The Komr Lived with the Chinese in the eastern region of the earth (i,e,to the west of present - day China). Strife having arisen between there, the Chinese drove the Komr towards the isles (Jordoneia), where they remained some time....

Afterwards discord breaking out among them, the people who did not side with the Royal family departed towards the Great Isle (Komr -Madagascar) and their Sultan lived in the town of Kommorriya'

*Ibn said adds that as they increased, in numbers they split up into a number of independent states and eventreally a great number migrated to south (west), to the beginning of the habitable world, to settle in the neighbourhood of the mountain which bears their name (Komr).*

By this is meant Ptolemy's "Mountain of the moon". The fabled source of the Nile for Komr, the Arabic name of Madagascar is here equated by Ibn said with the Arabic Kamar, Kumr or Kumr, moon.

Actually Ibn said makes a false equation. When he identifies the Arabic term Komr, as designating the Malagasy people, with the Arabic name of the moon, Komr of Kumr. The former is a corruption of Khmer, the appellation of an ancient people of south east Asia, the main stock probably from which an important section of the Indonesians have sprung, whereas Komr, as the Arabic name of the mountains adjoining the fabled sources of the vile, is a direct translation of the Latin name 'lunoe montes' of else of the equivalent Greek designation.

This confusion need not, however, invalidate the truth of Ibn said's definite statement that a migration of Malagasy people once took place from Madagasear to the uplauds of east Africa.[1]

1. James Hournell- Indonesian Influence on east African culture, Journal of the Royal Anthropological Institute. Vol. LXIV, 1934, p. 317.

நிலவு என்ற பொருளைத் தரும் அராபியச் சொல்லுடன், 'கொம்' என்ற சொல்லை, ஒரு சிலர் பொருத்த முனைந்தனர். இச்சொல்லுக்கும், சொல்லப்படும் நிலவு என்ற பொருளுக்கும், இந்தத் தொடருக்கும் ஒரு தொடர்புமில்லை என்பது வெளிப்படை. இபான்ஸேத், இங்கு இருந்த மலை ஒன்றின் பெயராக கொம்ரு (Komr) என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். இம்மலையின் பெயரும் சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படும் குமரிக்கோடு என்ற மலையும் ஒன்றே என்பதில் ஐயமில்லை. இங்கு வழங்கும் கொம்ர் என்ற பெயர், குமரி என்ற தமிழ்ப் பெயரின் திரிபு.[1]

**கீல்வா (Kilwa)**

கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரை ஓரத்தில் உள்ள 'கீல்வா' என்ற பகுதியில் ஒரு கதை வழங்குகிறது. ஆங்குள்ள மக்களின் மூதாதையர் கடல்வழி வந்து கரையேறினர் என்பது அவரிடம் வழங்கும் கதையின் கருத்து. பாரசீகத்தைச் சேர்ந்த சீராஸ் (Shiraz) என்ற இடத்திலிருந்து ஏழு கப்பல்கள் கீல்வாவிற்கு வந்தன. முதல் கப்பல் மடகா (MadaKha) என்ற இடத்தில் நின்றது. இரண்டாவது கப்பல் சகு ( Shagu) என்ற இடத்திலும், மூன்றாவது கப்பல் யாபு (Ywbu) என்ற நகரிலும், நான்காவது கப்பல் மௌபசா (Mowuvosa) என்ற இடத்திலும், ஐந்தாவது கப்பல் பெல்வா(Pewba) என்ற பச்சைத் தீவிலும், ஆறாவது கப்பல் கீல்வாவிலும்(Kilwa). ஏழாவது கப்பல் அன்சா(Hanzua) என்ற இடத்திலும் நின்றன. ஏழு கப்பலில் வந்தவர்களில், முதல் ஆறு கப்பலின் தலைவர்கள் உடன் பிறந்தவராவர். ஏழாவது கப்பலின் தலைவர் அவர்கள் தந்தை என்று இக்கதை குறிப்பிடுகிறது.

**செனகால்**

ஆப்பிரிக்கர் கடலை ஒரு பயங்கர கடல் தெய்வமாகக் கருதுகின்றனர். (சிலப்பதிகாரம் கடலைக் 'கொடுங்கடல்' என்று குறிப்பது காண்க. காதை: 11) துன்பம் தரும் கடல் தெய்வத்தை இன்புறுத்துவதற்காகப் பல சடங்குகள் ஆப்பிரிக்கரால் கடல் தெய்வத்திற்குச் செய்யப்படும். ஊர் மக்கள் தாளமுடியாத துன்பம்

1. K.P. Araavanan - Recent Findings on the Lost Lemuria (Kumari) in India, Africa and Australia- All India Tamil Teacher Association Proceeding, Volume 3. pp. 32-35

எய்தும் போது கடல் தெய்வத்தைச் சாந்தப் படுத்துவதற்காக விழா எடுப்பர். மனிதர்களையே கூட உயிர்ப்பலி இடுவர். செனகால் மக்கள் கடலைப் பயங்கர பெண்தெய்வமாக உருவகிக்கின்றனர். கடல் பெண் தெய்வத்தை 'மாம் கும்பா பாங்' (Mam-Kumba Bang) என்றும். 'டேக் தாவூர்' (Ndeek Daawur) என்றும் பெயரிட்டு அழைக்கின்றனர். கடல் பெண் தெய்வங்கள் ஓயாமல் நிலத்தோடு சண்டையிடுகின்றன; நிலத்தை விழுங்குகின்றன என்பது அன்னோர் கருத்து. இவ்வாறு கடலைக் கொடுமையின் உருவமாகக் கருதுவது ஊரையும், உயிரையும் அழித்த கடல் கோள்களின் எஞ்சுதலே ஆகும்.

பண்டைய தமிழர் சுறவுக்கோடு (சுறா எலும்பு) நட்டுக் கடல் தெய்வத்தை வணங்கினர். ஆப்பிரிக்கர் கடலில் ஆற்றலுள்ள ஆவிகள் உறங்குததாக நம்பினர். 'யொருபா' (Yoraba) என்ற மேற்காப்பிரிக்கா இனக் குழுவினர் கடல் கடவுளை 'ஒலக்கூ' (Olukuu) என்று பெயரிட்டுப் போற்றினர். இக்கடல் கடவுளுக்கு வெங்கலப் படிமத்தில் உருவம் சமைத்துக் கடலிலிருந்து, சில கற்கள் உள்ளே தள்ளி வைத்து வழிபட்டனர். கடலில் மீன் பிடிப்பதற்குச் செல்லும்முன் இப்படிமத்தை வணங்கி வழிபட்டனர். பல சடங்குகள் செய்தனர். பூசையின் அடையாள மாக கோழிகளையும், மாடுகளையும் பலியாகக் கடலில் தூக்கி எறிந்தனர். மிகப் பழங்காலத்தில் மனிதர்களே கூட பலியாகக் கடலில் எறியப்பட்டனர்.

## ஆஸ்திரேலியா

கடல் கோளால் ஏற்பட்ட கண்ட நிலப் பிளவு (Continental rift) ஆஸ்திரேலியாவின் பிரிவிற்குக் காரணமாயிற்று என்பது நிலவியலார் கொள்கை. ஒரு சில மொழி வழக்காறும், பழக்க வழக்கத்தாலும் திராவிடரோடு ஒத்திருக்கும் ஆஸ்திரேலியரிடம் திராவிடரைப் போன்றே கடல் கோள் கருத்து வழங்குகிறது. விக்டோரியாவிலுள்ள ஜிப்ஸ்லாந்து (gippsland) என்ற இடத்தில் குர்னை (Kurni) என்ற ஆஸ்திரேலியப் பழங்குடிகள் வாழுகின்றனர். அன்னோரிடம் கடல்கோள் பற்றிய கதை வழங்குகிறது. அக்கதையின்படி நெடுங்காலத்திற்கு முன்பு பெரும் கடல் கோள் நிகழ்ந்தது. அந்தக் கடல்கோளால் நிலம் விழுங்கப் பெற்று அழிந்தது. அவ்வழியிலிருந்து தப்பியவர் ஒரு சிலரே. ஒரு கருப்பு

மனிதனும் இரண்டு அல்லது மூன்று பெண்களும் கடல் கோளிலிருந்து தப்பினர். அன்னோர் வழியாகவே அப்பழங்குடித் தோன்றித் தழைத்தது.

### பிஜித்தீவு

ஓசியானியாவில் உள்ள பல தீவுகளில் பிஜித்தீவும் ஒன்று. இங்கும் கடல்கோள் பற்றிய கதை வழங்குகிறது. ஆனால் கடல் கோளால் உலகமே அழிந்ததா! அல்லது உலகத்தின் ஒரு பகுதி அழிந்ததா! என்பதை அக்கதையைக் கொண்டு முடிவு செய்ய முடியவில்லை.

### சுமத்ரா

ஓசியாவில் உள்ள சுமத்ராவில் 'பட்டக்ஸ்' (Battaks) என்ற பழங்குடியினர் வாழ்கின்றனர். அவர்களிடம் கடல்கோள் பற்றிய கதை வழங்குகிறது. அக்கதையாவது.

ஒரு காலத்தில் நிலத்திற்கு மிக வயதாகி விட்டது. நிலத்தின் மேற்பரப்பு ஒரே அழுக்காகிவிட்டது. இதனைக் கண்ட 'தெவத்தா' (Devata) என்ற படைப்புக் கடவுளுக்கு மிகுந்த சினம் ஏற்பட்டது. எனவே மிகப் பெரும் வெள்ளத்தை அனுப்பினாள். அவ்வெள்ளம் உலகையே அழித்துவிட்டது. ஆணும், பெண்ணுமாகச் சேர்ந்த ஒரே ஓர் 'இணை'மட்டும் ஒரு மலையின் சிகரத்தில் ஏறித் தப்ப முயன்றனர். கடல் வெள்ளமோ அவர்கள் கால்களைத் தொட்டு மேலும் ஏறிக் கொண்டே இருந்தது. மனித குலத்தை முற்றுமாக அழிவதிலிருந்து தடுக்கப் படைப்புக் கடவுள் தெவத்தா விரும்பினாள். எனவே கடல் வெள்ளம் மேலும் பெருகுவதைத் தடுத்து நிறுத்தினாள்.

### 9. இந்தோ- சீனா - கம்போச்சியா

இந்தோ சீனாவிலும், கம்போச்சியாவிலும் கி.பி. 6-ஆம் நூற்றாண்டளவில் 'குமரி' என்ற பெண் தெய்வம் வழிபட-ப்பட்டது. கம்போச்சியாவின் ஒரு முனைக்குக் 'குமரி' என்றே பெயர். இம்முறையில் குமரி என்ற பெயருடைய ஆறும் ஓடுகிறது. இந்த ஆற்றையும், முனையையும், தாய்த் தெய்வத்தையும் இங்கு உள்ளோர் 'குமரி' என்றே அழைக்கின்றனர் ஈண்டு உள்ள மக்களின் பெயர் 'கொமர்' (Khomers) என்பதாகும். இப்பகுதியைச் சுற்றி உள்ள நாட்டை கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரபு

பயணி அபு சையத் 'கொமரி நாடு' என்றே தம் பயணக் குறிப்பில் குறிப்பிடுகிறார்.[1]

**இலங்கை**

இலங்கை வரலாற்றை உரைக்கும் இராஜாவழி, மகாவம்சம் ஆகிய பழம் நூல்களில் கடல்கோள்களைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. அந்நூல்களுள் இடம் பெற்றுள்ள செய்தி வருமாறு :

**இராஜா வழியில் வரும் செய்தியாவது**

திஸ்ஸா ராஜா கல்யாணியில் அரசு புரியும் போது, கடல் ஏழு லீக் தூரம் கல்யாணிக்கு அப்பால் இருந்தது. திஸ்ஸா ராஜா தம் மனைவி பால் முறை பிறழ்ந்த நடப்பு உடையவள் என்று ஐயுற்று, 'தீரு நான்சீம்' என்னும் பௌத்த ஆசிரியனைக் காய்ச்சிய எண்ணெய்க் கொப்பரையில் இட்டுக் கொன்றான். இலங்கைத் தீவைக் காத்த தேவர் வெகுண்டு பூமி மேல் கடல் பொங்கி எழச் செய்தனர். துவாபர யுகத்து இராவணன் கொடுமையால் அவரது 25 அரண்மனைகளும் அடங்கிய மன்னர் புரத்து நிலம் கடலால் விழுங்கப்பட்டது போல, இப்போது கல்யாணியை ஆண்ட திஸ்ஸா ராஜாவிற்குரிய ஒரு இலட்சம் ஊர்களும், தொள்ளாயிரம் மீன் வலைஞர் சிற்றூர்களும், நானூறு முத்துக் குளிப்போர் கிராமங்களும் ஆக அவன் நிலத்து முக்காலே அரைக்கால் பாகம் அழிந்தது. அப்போது பலர் அக்கடல்கோளுக்குத் தப்பி ஓடியதுமுண்டு. மாதம்பை முதலிய சில ஊர்கள் மட்டும் இக்கடல்கோளுள் தப்பின.[2]

**மகாவம்சம் காட்டுவது**

'துட்டக் காமினி' என்னும் அரசன் வரலாற்றில் கல்யாணியை ஆண்ட திஸ்ஸா ராஜா, துறவி வேடம் பூண்ட வேடன் ஒருவனை அவனுடன் வந்தவனோடு தம் மனைவி பால் முறை பிறழ்ந்த செயலைத் தூது புக்கதாக நினைந்து அவரைக் கொன்று கடலில் எறியச் செய்தான் என்றும், கடல் தெய்வங்கள் இதற்குச் சினந்து பொங்கியெழுந்து நிலத்தை அழித்தன என்றும் கூறுகிறது.

1. Researchers on Ptolemy Geography of eastern Asia, Quoted by P.L Samy, தாய்த தெய்வ வழிபாடு, ப. *161*,
2. இராஜாவழி, ப, *188*,

மேற்கண்ட இலங்கை வரலாற்று நூல்கள் தரும் செய்திகள் கடல்கோள் பண்டு நிகழ்ந்தது என்பதைக் காட்டும்.

### 7.2.8. கடல்கோள் வரைபடம்

செர்மானியைச் சேர்ந்த டாக்டர் ஜோகன் ரியம் (Johennes Riem) என்ற அறிஞர் உலகில் நேர்ந்த வெள்ளப் பெருக்கு, கடல்கோள் இவற்றை ஒரு வரைபடமாகத் தயாரித்திருக்கிறார். அவ்வரைபட நூலின் பெயர் "Die Sint flut in sage und wis sens chaft." இந்நூலில் எங்கெங்கே வெள்ளப் பெருக்கும், வானவில் மரபுகளும், உள்ளனவோ அவை குறிக்கப்பட்டுள்ளன. இப் படத்தின் படி உலகத்தின் பிற பகுதிகளை விட ஆசியாவிலேயே அதுவும் குறிப்பாகத் தென் கிழக்கு ஆசியத் தீவுகளிலும், வட அமெரிக்கக் கண்டத்திலும் வெள்ளப் பெருக்குப் பற்றி மரபு முறைகள் மிகுதியாக வழங்குகின்றன. ஆப்பிரிக்கக் கண்டத்தில் வெள்ளப் பெருக்கு நிகழ்ச்சிகள் காணப்படுதல் குறைவு. அவை மற்றைக் கண்ட நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்க்கையில் மிகுதி யானவை அல்ல. இந்நூலின்படிப் பண்டை நாகரிக நாடுகளான பாபிலோனியா, அசீரியா, சுமேரியா ஆகிய இடங்களில் வழங்கும் வெள்ளப் பெருக்குப் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன. வெள்ளப் பெருக்குப் பற்றிப் பிறிதொரு செர்மனியர் ரிச்சர்டு ஆந்திரே (Richard Andhree) எழுதிய "Die Flutensagen, ethnologisch betrachtet" என்ற நூலும் ஆசியாவில் இருந்த வெள்ளப் பெருக்கு வாய்மொழி மரபுகளைச் சுட்டிக் காட்டுகிறது.

இவற்றை நோக்கப் பண்டு வெள்ளப் பெருக்குகள் நேர்ந்தன என்பதும் அவற்றால் ஊர்களும், நகரங்களும் அவற்றில் வாழ்ந்த மக்களும் அழிக்கப்பட்டார்கள் என்பதும் கருதத்தக்கன. அதிலும் குறிப்பாகத் தென் கிழக்கு ஆசியாவில் கடல்கோள் நடந்தது என்ற தமிழ் இலக்கியச் செய்திகளைச் செர்மானிய அறிஞர்களின் ஆராய்ச்சி உறுதி செய்கிறது.

இன்றைய கன்னியாகுமரிக்குத் தெற்கே குமரிக்கண்டம் என்ற ஊர் இருந்தது. அது கடல்கோளால் அழிந்தது என்ற செய்தியை மறுப்பதற்காகக் கூறப்படும் கருத்துக்களுள் வலிமை-யானவை இரண்டு. ஆப்பிரிக்கா, தென்னிந்தியா, ஆஸ்திரேலியா,

ஆகியன ஒன்று சேர்ந்த கண்டம். கண்ட நிலப்பிளவால் வேறு வேறாகப் பிரிந்து சிதறியது உண்மை. ஆனால் மனிதனே பிறக்காத வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டு இந்நிலப் பிளவு நடந்ததாகும். எனவே மனிதர்கள் இதைப் பார்த்தும் இருக்கமுடியாது. பார்த்ததை நினைந்து எழுதியும் இருக்க முடியாது என்பதாகும்.

### இதற்கு மறுப்பு

மேற்கண்ட கருத்து உண்மை. ஆனால் தமிழ் இலக்கியங்களில் இலங்கையின் வரலாற்றில், தென்னிந்தியப் பழங்குடி மக்களிடத்து ஆப்பிரிக்க, ஆஸ்திரேலிய கடலோரத்தில் அந்தமான் மக்களிடையே பேசப்படும் கடல்கோள்களையும், நில அழிவையும் மிக முற்பட்ட காலத்தில் நடந்த கண்ட நிலப் பிளவோடு இணைத்துப் பார்ப்பது பிழை. கண்ட நிலப் பிளவு வேறு. அது மாந்தர் பார்வையில் நடக்காதது. பின் நேர்ந்த கடல்கோள் வேறு. மனிதன் தோன்றி, அவனிடம் பேச்சு மொழியும் தோன்றி, எழுத்து மொழி தோன்றாத காலத்தில் நிகழ்ந்த கடல் பெருக்கையும் நில அழிவையும் தமிழ் இலக்கியம் குறிக்கும் கடல்கோள் சுட்டுவதாகக் கொள்ளவேண்டும். இவ்வாறு கொள்ளுவதற்குக் காரணங்களாவன :

தமிழரிடம் வட இந்தியாவிலிருந்தோ, வடமேற்கு இந்தியாவிலிருந்தோ, அல்லது வடமேற்கு இந்தியாவிற்கு அப்பாலுள்ள நடுநிலக்கடல் நாடுகளிலிருந்தோ, மேற்கு ஆசிய நாடுகளிலிருந்தோ தமிழகம் வந்து சேர்ந்து, தங்கியதற்கான சான்று தமிழ்வக்கியங்களில் காணப்படாமை. இதற்கு மாறாகப் புனைவுரைகள் குறைவான சங்க காலக் கவிதைகளில் தம் தாயகம் தெற்கே இருந்து கடலால் அழிந்தது என்ற குமுறல் கேட்கப்படுகிறது. குறுந்தொகையில் (52) கடல் எழுந்து ஆரவாரித்து மிதித்தலால் நீரில் நின்ற மலையில் கொடுமுடி அசைந்ததைச் குறிக்கும் நிகழ்ச்சி ஒரு பாவலனின் நேர் பார்வையில் கண்ட நிகழ்ச்சிபோல் வருணிக்கப்படுகிறது. 'காரியின்நாட்டைக்கடலால் கொள்ளமுடியாது'என்று கபிலர் பாராட்டும் புறப்பாட்டுப்பகுதி (122) அக்காலத்துக் கடலால் ஏற்பட்ட நில அழிவுச் செய்தியை நினைவூட்டுகிறது. இவற்றுடன் சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, கலித்தொகை, இறையனார் களவியல் உரை ஆகியன கடல்கோள் நிகழ்ச்சியை வழிமொழிகின்றன. இவற்றுள்

அடியார்க்கு நல்லாரும், இறையனார் களவியல் உரைகாரரும் விரிவாக விளக்கும் முச்சங்க வரலாறுகள், உண்மையோடு கட்டப்பட்ட புனைவுகள் கூடியதாக இருக்கலாம். ஆனால் அப் புனைவைக் காரணமாகக் கொண்டு, கடல்கோளே இல்லை என்று காட்டுவது பொருத்தமின்று.

குமரிமலை, குமரி ஆறு, பஃறுளி ஆறு, ஏழு நாடுகள் ஆகியன கடல் கோளால் அழிந்தன என்று சொல்லப்படுகின்றன. இன்று இவை இல்லை. புறநானூற்றில் (67) குமரியைப் பற்றி ஒரு குறிப்பு வருகிறது.

'குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி' என்பதாகும்.

அயிரை என்பது ஒருவகை சிறுமீன். இச்சிறு மீன் ஆறு களிலும் குளத்திலும் வாழ்வதாகும். நாரை, கொக்கு போன்ற பறவைகள் இம்மீனை மிக விரும்பும். பறவையொன்று குமரியில் அயிரை மீனைத் தின்றதை மேற்கண்ட பாட்டுவரி எடுத்துரைக்கிறது. அயிரை மீன், கடல் மீன் அன்று, எனவே, இன்றிருக்கும் குமரிக்கடல் துறையில் இம்மீனைப்பறவை எடுத்து மாந்தியிருக்க இயலாது. ஆக இன்றைய குமரி முனைக்குத் தெற்காகக் குமரி ஆறு ஒன்று இருந்திருக்க வேண்டும் என்பதை 'அயிரைமீன்' வரலாற்றைக் கொண்டு உய்த்துணரலாம்.

குமரி என்பது ஆற்றின் பெயராகவே இருக்க வேண்டும் என்பது பின்வரும் செய்தியால் உறுதியாகிறது. ஆற்றின் பெயரையே பெண்பாற் பெயராகக் கொள்வது தமிழ் மரபு. இப் பெயர்களைப் பெண் குழந்தைகளுக்குச் சூட்டுவதும் தமிழ் வழக்கம். சான்றாக காவேரி, கங்கை, யமுனா என்ற பெயர்களைப் பெண்களுக்குப் பெயரிடுவது மிகப் பரவலாக உள்ள பழக்கம். எனவே, காவிரி, கங்கை, யமுனா என்பன போலப் பெண்ணின் பெயராக இருக்கும் குமரி என்பதும் ஓர் ஆற்றின் பெயராகவே இருத்தல் வேண்டும்.

மக்களின் ஆதிப்பழக்கம் கடலில் நீராடுவதன்று. ஆற்றில் நீராடுவதே இயல்பு . வையை ஆற்றில் நீராடுவதைப் பரிபாடல் விரிவாகப் பேசுகிறது. கடல் நீராட்டு இருந்தது. எனினும் அது பழமையானதாக இருத்தற்கில்லை. ஆடவர் பெண்டிர், குழந்தைகள் ஆகியோர்க்குப் பொதுவாக இருத்தற்கில்லை. காரணம்

நீராடுவதிலுள்ள சிக்கலே ஆகும். எனவே 'குமரி ஆடுதல்' என்ற குறிப்பு ஆதியில் குமரி ஆற்றில் நீராடியதையே குறிக்கும். குமரி ஆறு கடல் கோளால் அழிந்தபின் எஞ்சிய முனை குமரித்துறை எனக் குறிக்கப்பட்டுப் பாவம் கழுவும், நீராடும் தலமாக மாறி-யிருக்க வேண்டும். இது இன்னொரு பார்வையிலும் உறுதியா-கிறது. வடக்கே புனித நீராடுமிடம் கங்கை என்ற ஓர் ஆறாக இருக்க தெற்கேயும் புனித நீராடுமிடம் குமரி என்ற ஆறாகவே இருந்திருக்கவேண்டும். காவேரியில் புனித நீராடும் விழா இன்றும் காணப்படும் பழக்கம். எனவே வடக்கே கங்கையாறு என்று கொள்வதற்குத்தக, தெற்கேயும் குமரியாறு என்று கொள்ளுவதே பொருத்தம்.

தெற்கு நாடு என்பது தெங்கு நாடு என்பதன் திரிபு. தெங்கு என்பது தென்னையைக் குறித்த பண்டைய சொல். தமிழ் நாட்டிற்குத் தென்னை தெற்கிலிருந்துதான் அறிமுகமாயிற்று. குமரிக் கண்டத்துள் இருந்ததாகக் குறிக்கப்படும் நாடுகளுள் தெங்க நாடும் ஒன்றாகும். அது 'ஏழ் தெங்க நாடு' என்று சுட்டப் படுகின்றது.[1] தெற்கு, தெங்க நாடு, தென்றல், தென் புலத்தார், தென்பாங்கு ஆகிய சொற்களை ஆழ்ந்து பார்க்கிறபோது தமிழர்தம் ஆதியிடம் தெற்கில் இருந்தது என்று ஊகிப்பது பிழையாகாது (பார்க்க: அற்றை நாள் காதலும் வீரமும்).

நாடு என்பது அன்றைய தமிழில் கிட்டத்தட்ட இன்றைய தாலுகாவிற்குச் சமம். இடைக்காலக் கல்வெட்டுகள் தமிழ்ப் பேரரசுகள் - மண்டபம், நாடு எனப் பிரிக்கப்பட்டுள்ளதைச் சுட்டு கின்றன.[2] இப்பிரிவு இன்றைய மாவட்டம், வட்டத்திற்குச் சமம். எனவே, நாற்பத்தொன்பது நாடுகள் என்று கேட்ட அளவில் மிக் விரிந்த பரப்பு கடலுள் அழிந்தது என்று கருத முடிவதில்லை. 49 தாலுகாகள் என்பதே கருத்து. இவற்றுள் குறிக்கப்படும் முன் பாலை, பின்பாலை என்ற பாலை நாடுகள் எங்கிருந்தன,

1. குமரிக கணடததில இருநததாகக கூறபபடும் நாடுகளையும ஏழ தெஙகம, ஏழ் மதுரை, ஏழ முன்பாலை, ஏழ் பின்பாலை, ஏழ குன்றம, ஏழ குணககரை, ஏழ் குறுமபனை எனற படடி யலில இறையனாா உரைகாரர் கூறும 49 நாடுகளையும் இனறைய வழககொடு இணைத்துப பெரும பரபபினதாகக கருதுதல பிழை
2. தமிழநாடடு வரலாறு, V 283.
'Gems from pre-Historic Past' pp. 136-37.

ஆப்பிரிக்காவில் வட பகுதியிலுள்ள சகாராவை இவை சுட்டின என்று கொள்ளலாமா என்பது ஆராய்ச்சிக்குரியது. சகாரா ஆப்பிரிக்காவில் அமைந்த நிலையான பாலைவனமன்று. சகாரா ஒரு காலத்தில் வளமான நாடாக இருந்து அங்கு ஆறுகளின் மாற்றத்தால் சகாரா பாலைவனம் தோன்றியது. தோன்றிய காலம் கி.மு.4000 என்று ஊகிக்கின்றனர். கி.மு. 4000 க்குப் பின் ஏற்பட்ட சகாரா பாலைவனத்தில் முன்பாலை, பின்பாலை என்று உணர்த்துவதைக் கண்டால் குமரியின் அழிவு கி.மு. 4000க்குப் பிற்பட்டது என்பதை உய்த்துணரலாம்.

தமிழ் இலக்கியம் குறிக்கும் குமரிக்கண்டம் நிலஇயலார் குறிப்பிடும் நிலப் பிளவுக்கு முற்பட்ட ஆப்பிரிக்க, தென்னிந்திய, ஆஸ்திரேலிய இணைப்பான பரந்த நிலப்பகுதி அன்று.

தென்கிழக்கு ஆசியாவில் காணப்படும் தீவுத் தொடர்களைப் போன்று தீவுத் தொடர்கள் தென் ஆப்பிரிக்கா, மடகாசுகர், கொமர் தீவுகள், அமீரான், செய்சல், மால்டிம், இலங்கை, தென்னிந்தியா, அந்தமான் தீவுகள், சுமத்திரா, இந்தோனேசியா, நியூகினி, ஆஸ்திரேலியா என அமைந்துள்ள தீவுகளையும், நாடுகளையும், விடுபாடில்லாத பாலம் போன்ற நிலம், இணைத்திருக்க வேண்டும். இந்நிலப் பாலத்தின் வழியாகக் கறுப்பு இன மக்களின் குடிப்பெயர்ச்சி ஆப்பிரிக்கா, தென்னிந்தியா, அந்தமான், சுமத்திரா, ஆஸ்திரேலியா என்று பரவியிருக்க வேண்டும். அதனாலேயே இந்த மூன்று பகுதி மக்களிடையேயும் மொழி, பழக்க வழக்கங்கள், உடல் தோற்ற ஒப்புமைகள் மிக நெருக்கமாக உள்ளன. தென்னிந்தியா, ஆதிமனிதரின் பிறந்த இடம் என்ற அறிஞர் கூற்றும் இதனால் பொருத்தமாகிறது. மடகாசுகர், தென்னிந்தியா என்ற இரண்டு இடங்களில் ஒரேவிதமான செடி, கொடிகள், மணற்பாறைகள், விலங்குகள், மக்களின் பழக்க வழக்கங்கள் ஆகியன அமைந்திருப்பதும் இதனால் பொருத்தமாகிறது.

தென்னிந்தியாவைப் பற்றி முதன் முதல் கிடைத்துள்ள குறிப்பு ஹெரோடெட்டசுடையது. கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இவருடைய குறிப்புக் கறுப்பு முகமும், சுருட்டை முடியுமுடைய ஆசிய, எதியோப்பியர்களை வடமேற்கு இந்தியக் கடற்கரையில் கண்டதாக மொழிகிறது. ஆப்பிரிக்கரின் ஒத்த தோற்றமுடைய மக்கள் திராவிடத்தில் வாழ்ந்தனர் என்பதற்கு

இது முதன்மைச் சான்றாகும். இந்தியாவை ஒட்டி இருந்த நில மண்டலம் தனித் தீவா! அல்லது ஆப்பிரிக்காவோடு இணைந்த ஒரு கண்டமா! என்ற ஐயம் தாலமி (கி.பி.5-ஆம் நூற்றாண்டு), பெரிபுளூஸ் (கி.பி.முதல் நூற்றாண்டு) நூலாசிரியர்கள் காலத்தில் இருந்திருக்கிறது. இந்த நிலத்தீவை இலங்கை என்று கருதுவதைக் காட்டிலும், தமிழ் இலக்கியங்களில் வருணிக்கப் படும் குமரி நிலம் என்று கருதுவதற்குப் பிளைனியின் குறிப்புகள் இடம் தருகின்றன. 'தப்பிரபானை' என்று இந்நிலம் பிளைனி-யால் குறிக்கப்படுகிறது. அதனுடைய நீளம் 7000 ஸ்டேடியா (1,400-கி.மீ. 5 ஸ்டேடியா - 1 கி.மீ.). அதன் அகலம் 5000 ஸ்டேடியா (1000 கி.மீ.). இலங்கைத் தீவோ தெற்கு வடக்காக 4.37 கி.மீ. நீளமும், கிழக்கு மேற்காக 224 கி.மீ. அகலமும் உடையது. இது மட்டுமின்றித் தப்பிரபானை பற்றிப் பிளைனி வருணிக்கின்ற செய்திகளும் மேற்கண்ட எல்லையை உடையது இலங்கை அன்று என்பதை ஊர்சிதம் செய்கின்றன. பிளைனியின் விளக்கப்படி தப்பிரபானையில் 5000 நகரங்கள் இருந்தன. 'வலிஸி உண்டஸ்' என்னும் நகரம் மிகவும் புகழ் பெற்றிருந்தது. வேந்தன் அங்கேதான் தங்கியிருந்தான். நகரின் மக்கள் தொகை 2 இலட்சம். உள்நாட்டில் 'மெகிசிபா' என்ற ஏரி இருந்தது. அதன் சுற்றளவு 600 கி.மீ. அந்த ஏரியிலிருந்து 2 ஆறுகள் தோன்றிப் பாய்கின்றன. ஒன்றின் பெயர் வலீஸ் ஒண்டல், அந்த ஆறு அதே பெயருடைய நகரைக் கடந்து, அருகில் உள்ள துறைமுகத்தை அடைகிறது. துறைமுகத்தைச் சேருதற்கு முன் அவ்வாறு மூன்று கிளைகளாகப் பிரிகிறது. அவற்றுள் ஒரு கிளை ஆற்றின் அகலம் 5 ஸ்டேடியா. அதுவே மிகக் குறுகியது. 15 ஸ்டேடியா அகலமுள்ள சைதா என்ற ஆறே மிக அகலமுடையதாகும். அஃது இந்தியாவை நோக்கி வட திசையில் ஓடுகிறது (குமரி ஆறு அல்லது பஃறுளி ஆறு இதுவாதல் கூடும்). தப்பிரபானைக்கு மிக அருகில் உள்ள இந்தியப் பகுதியைப் பிளைனி 'கொலி அகம்' என்று குறிக்கிறார். இது குமரி முனையைக் குறிக்கலாம். 'குமரி அகம்' என்பது கொமரி அகம், கொலி அகம் என அயல் நாட்டாரான பிளைனிக்குக் காதில் விழுந்தது போலும். அபுல் பேட்டா (கி.பி.1976) குமரியைக் 'கொங்காரி' என்பர்.

மெகஸ்தனிஸ் எழுதியுள்ள குறிப்பும், பிளைனி குறிப்பை உறுதி செய்கிறது. அவர் தப்பிரபானையின் நீளம் 9000 ஸ்டேடியா என்றும், அகலம் 5000 ஸ்டேடியா என்றும் குறித்துள்ளார்.

அந்நிலம் மிகவும் நீளமானது என்றும், மணல் பாங்கானது என்றும் குறிப்பிடுகிறார். 'குமரிக்கோடு' என்ற குமரிமுனை இதுவாதல் கூடும். மெகஸ்தனீஸ் குறிப்பிடும் மேலும் சில குறிப்புகள் குமரி மலையின் உண்மையை வற்புறுத்துகின்றன.

"தப்பிரபானைக்கும், தலைநிலத்துக்கும் (தமிழகம்) இடையே ஒரு ஆறு ஓடுகிறது. அதனால் தப்பிரபானை தலை நிலத்திலிருந்து பிரிந்திருக்கிறது. அங்கு வாழும் மக்கள் 'பலயோ கோனாய்' என்று குறிப்பிடப்படுகின்றன."

மெகஸ்தனிஸ் குறிப்பிடும் ஆறு குமரி ஆறு போல் அவர் சுட்டிக் காட்டும் பலயோ கோனாய் என்ற மக்களினம், 'பழைய கோனார்' என்பதின் திரிபு போலும். கோனார் என்பது கோன் + ஆர் என்று அரசர்களைக் குறிப்பிடும் மதிப்புச் சொல். குமரி நாட்டை இழந்த பாண்டியர் எனும் சொல் தொன்று தொட்டு வரும் பண்டைய குடியைக் குறிக்கும். பாண்டியர் என்றால் மிகப் பழைய மக்கள் என்பது பொருள். பலயோ என்ற மெகஸ்தனீஸ் குறிப்புப் பழைய என்ற சொல்லின் எதிரொலி போலும். சங்க இலக்கியத்தில் 'பழையர்' என்ற அரசரின் பெயரும் இங்கே இணைந்து நினைக்கத் தக்கது. பாண்டிய நாட்டைப் 'பண்டையர் நாடு' என்ற மெகஸ்தனீஸ் குறிப்பும் கருதத்தக்கது.

இணைந்த குமரி கி.பி.75-க்கு முன்பே கடலால் விழுங்கப் பட்டுக் குமரி முனையாக எஞ்சி நின்றதைப் பெரிபுளூஸ் என்ற நூல் குறிப்புக் காட்டுகிறது. பெரிபுளூசின் குறிப்பு வருமாறு:

"கொமாரி என்னும் இடம் இருக்கிறது. அங்கேதான் குமரி முனையின் துறைமுகம் இருக்கிறது. தங்களின் வாழ்நாளில் எஞ்சியுள்ள பகுதியைத் தூய தொண்டிற்காகப் பயன்படுத்த எண்ணிய மாந்தர், குமரி முனையில் குடியேறுவர். குமரிக் கடலில் நாள்தோறும் நீராடுவர். பெண்டிருடன் உடல் உறவு கொள்ளாது வாழ்வர். பெண்டிரும் அத்தகைய தூய உறவு வாழ்க்கையை மேற்கொள்ளுவர். குமரி முனையில் ஒரு பெண் தெய்வம் அப்படி வாழ்ந்ததாகக் கூறுவர்." என்ற பெரிபுளூசின் குறிப்பைக் "குமரியைப் பெருந்துறை ஆடி வடதிசைக்கு ஏகுவீராயின்" என்ற பிசிராந்தையின் புறநானூற்று அடிகளும், மணிமேகலையில் இடம் பெற்றுள்ள குமரிக்குத் தூய நீராடச் செல்லும் பார்ப்பன வாழ்க்கையும் உறுதிப்படுத்துகின்றன.

# 8

# தமிழ் இனம் தோன்றிப் பரவிய வரலாறு

தென் இந்தியாவிற்குக் கிழக்கே, தென் கிழக்கு ஆசியா, ஆஸ்திரேலியா, தென்இந்தியாவிற்குத் தென்மேற்கே ஆப்பிரிக்கா என்ற மூன்று பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள், வாழும் மக்கள் ஏறத்தாழ இனத்தால் ஒன்றுபட்டவர். சிலர் கறுப்பு நிற முடியினர், கறுப்பு நிற விழியினர்; கறுப்பு நிற இமையினர்; கறுப்பு நிறத் தோலினர்; கூரிய மூக்கு அற்றவர்; மென்மையான கீழ் உதடுகள் வாய்க்கப் பெறாதவர்; உடம்பில் பேரளவு முடி தழைக்கப் பெறாதவர்; ஓரளவு முகவாய் நீட்டமுடையவர் . இந்த உடலியல் கூறுகள் இவர்கள் அனைவரும் 'நீக்ரோயட்' என்ற இனத்தினர் என்று காட்டும். வடகிழக்கு ஆப்பிரிக்காவில் இருந்து முன் ஆசியா, இந்தியா, இந்தோனேசியா வழியாக ஆஸ்திரேலியா செல்லும் நிலப்பரப்பு மக்களின் நீக்ரோ வகையினருக்கும், ஆஸ்திரேலிய வகையினருக்கும் இடையே ஒற்றுமைகள் தொடர்ந்து இருந்து வந்திருக்கின்றன.

இம்மூன்று நிலப்பகுதிகளும் வெப்ப மண்டலத்தில் உள்ளன. கிட்டத்தட்ட பல்லாயிரம் கிலோ மீட்டர் கடலால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் ஆங்காங்கே உள்ள தட்ப வெப்ப இயற்கைச் சூழலுக்கு ஏற்ப, உடல் மாற்றங்கள் நேர்ந்துள்ளன. சான்றாக, நீக்ரோக்களின் உடம்பில் முடி பெரும்பாலும் தழைப்பதில்லை. ஆனால் ஆஸ்திரேலியருக்கு முடி நன்கு வளர்கிறது. நீக்ரோக்களின் தலைமுடி சுருண்டது. கம்பளிச் சுருள் போன்றது. ஆஸ்திரேலியர்களின் முடி அலை படிந்தது. திராவிடர் தம் முடியும் இத்தகையதே.

நீக்ரோக்களின் நெற்றி நேரானது; நன்கு தெரியும் மேடுகள் கொண்டது. ஆஸ்திரேலியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நெற்றி சற்றே சாய்வானது. ஆஸ்திரேலியர்களுக்கும், திராவிடர்களுக்கும் கண் மேல் வரம்புகள் நன்கு வளர்ந்தவை. நீக்ரோக்களுக்கு அவை நன்கு வளர்வதில்லை, ஆஸ்திரேலியர்களுக்கும், திராவிடர்களுக்கும் மூக்கு தண்டு ஓரளவு சப்பையானது. நீக்ரோக்களின் மூக்கு முற்றும் தட்டையானது.

மேற்கண்ட வேறுபாடுகள் இருப்பினும் இன அடையாளங்கள் மற்றைய இனங்களிடமிருந்து வேறுபடும் அளவுக்கு இம்மூன்று இனத்தாரிடையே வேறுபாடு இல்லை எனலாம்.

திராவிடரை ஆசிய எதியோப்பியர் (நீக்ரோக்கள்) என்று ஹெரோடட்டஸ் கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் நேரில் பார்த்துக்குறிப்பிட்டார். மார்க்கோ போலோ (கி.பி. 1254-1324) என்ற வெனீசியப் பயணி தென் இந்தியாவுக்குப் பயணஞ்செய்து தன் பயணக் குறிப்பை விரிவாக எழுதியுள்ளார். தன்னுடைய குறிப்பில் திராவிடர்களைக் கறுப்பர் என்று குறிப்பிடுகிறார். அவர் குறிப்பாவது :

இந்த நாட்டில் பிறக்கும் குழந்தைகள் கறுப்பாய் இருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு கறுப்பாய் இருக்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு உயர்வாய்க் கருதப்படுகின்றனர். அதனால்தான் அவர்கள் பிறந்தநாளில் இருந்து வாரத்துக்கு ஒருமுறை அவர்களுடைய பெற்றோர்கள் குழந்தைகளுக்கு நல்லெண்ணெய் தேய்த்து விடுகிறார்கள். எண்ணெய் தேய்க்கத் தேய்க்க குழந்தைகள் பிசாசு போல் கறுப்பு நிறம் அடைகின்றனர். இந்த நாட்டு மக்கள் தங்கள் கடவுள் சிலையையும் கறுப்பாக்குகிறார்கள்.$

இவை அன்றி, பண்டைத் தமிழ் இலக்கியக் குறிப்புகளும் திராவிடர் கறுப்பு நிறத்தர் என்று காட்டுகின்றன.

### 8.1. திராவிடர் கறுப்பு நிறத்தினர்

#### 1. தலைமுடி

நன்கு நீரோடு ஆற்றில் நீர் குறையவே ஆறு ஊடே, ஊடே மணல் இட்டு மேடாகிறது. இம்மேடு அலை அலையாகக் கருமை படர்ந்து காணப்படும். இந்த ஆற்று அறலின் அலை போன்ற தோற்றத்தைக் கூந்தலுக்கு உவமையாக வர்ணிக்கின்றனர். 'ஆற்று அறலன்ன கூந்தல்' என்பது இலக்கிய வரி (பெண்ணையம் பேரியாற்று நுண்அறல் கடுக்கும் நெறிஇருங் கதுப்பின் - அகம் - 35-16-17). பொது மக்களிடையே, 'சுருட்டை முடி சோறு போடும்' என்ற பழமொழி வழங்குகிறது. கூந்தல் கறுகறு என்று இருக்க வேண்டும் என்பது தமிழ் மக்களின் விருப்பம்.

---

$ தெனனிந்தியாவைப் பற்றி அயல நாடடாா குறிபபுகள, ப 283.

### 2. கண்

கருவிழிகளே அழகியன என வரையறுக்கப்படுகின்றன. விழிகள் அகன்றிருப்பது அழகு, நீண்டிருப்பது அழகு. அல்லியைப் போன்றும் தாமரையைப் போன்றும் மலர்ந்திருப்பது அழகு எனச் சொல்லப்படுவதால் இத்தகு விழிகள் காகேசிய (Cacausoid) இனத்திற்கும் (ஆரிய இனத்திற்கும்) மங்கோலாய்த் என்ற மஞ்சள் நிற சீன இனத்திற்கும் மலர்விழி இருப்பதில்லை. மாறாக ஆப்பிரிக்கரின் விழிகள் தமிழ் இலக்கிய வருணையோடு பொருந்தி இருப்பவை.

### 3. உதடுகள்

'செவ்விதழ்கள் முருக்கம் பூ விதழ்களைப்' போன்றுள்ளன என முருக்கம் பூ, இதழ்களுக்கு உவமிக்கப்படுவதால் இதழ்கள் சற்றே சிவந்திருக்க, இவர் தம்மேனி நன்கு கருத்திருக்கும் என்று தெரிகிறது.

### 4. கொங்கைகள்

பெரியவை என்றும் மலைபோன்றவை என்றும் உவமிக்கப்படுவதால், இந்த இயல்பும் நீக்ரோய்ட் இயல்பையே நினைவுபடுத்துகிறது.

### 5. உடல் நிறம்

'மாமை நிறம்' என்றும், மாந்தளிர் மேனி என்றும் வரும் இலக்கிய வரிகள் அன்னோர்தம் கறுப்பு நிறத்தை நினைவுறுத்துவன. தமிழ்ப் பொது மக்களிடையே கறுப்பண்ண சாமி, கறுப்பையன், கறுப்பாயி, கறுப்பஞ் சாமி, இருளாண்டி என்ற பெயர்களில் சிறுதெய்வங்கள் வணங்கப்படுகின்றன. கேரள மாநிலத்தில் வாழும் முல்லைக் குறும்பர், குறும்பர் தம் தெய்வத்தைக் 'கரியப்பன்' என்று குறிப்பர். கேரள வடநாட்டில் வாழும் காடர் 'கரியத்தன்' என்ற தெய்வத்தை வழிபடுகின்றனர். அம்மனின் நிறம் கறுப்பு.

இருளர் (இருளை போன்ற கரிய நிறத்தர்) என்றும், இருளப்பள்ளர் (இருட்டைப் போன்ற கரிய நிற பள்ள சாதியினர்) என்றும் பழங்குடியினர் குறிக்கப்படுகின்றனர். 'கறுப்பில் கண் அழகு' என்பது தமிழ்ப் பழமொழி. எனவே, தமிழர் கரிய நிறத்தினர் என்பதில் ஐயமில்லை.

உடலில் முடி தழைப்பது காகேசிய இனத்தின் இயல்பாகும். நீக்ரோக்களுக்கு முடி தழைக்காது. பண்டைத் தமிழர் தம் மேனியில், அதுவும் குறிப்பாகப் பெண்டிர் மேனி மேல் முடி தழைப்பதில்லை என்பதை 'அரிமயிர் திரள் முன்கை' என்ற புறநானூற்று வரி, அரிதாகக் கண்ணுக்குப் புலப்படும் வண்ணம் முடி கையில் புலப்படாது நின்றது என்பதை உணர்த்தி நின்றது. தோளை மூங்கிலுக்கு உவமிப்பதும், தொடையை வாழைத் தண்டுக்கு உவமிப்பதும் முடியற்ற வழவழப்புத் தன்மையைக் காட்டுவதற்கே ஆகும்.

எனவே தமிழ் இலக்கியச் சான்றுகளும் தமிழரைக் கறுப்பு இன மக்களுடனேயே சேர்க்கின்றன. திராவிடர், ஆஸ்திரேயர், ஆப்பிரிக்கர் என்ற மூன்று கறுப்பு இனத்தாரும் ஒரு பொது மூதாதையரில் இருந்து பிறந்திருக்க வேண்டும். இப்பிரிவு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்து விட்டது. இம்மூவரின் பொது முன்னோர் அழிந்த குமரிக்கண்டத்தில் இருந்தவர் ஆதல் வேண்டும். கடல்கோளுக்கு முன்பே இப்போது **மூதாதையர் வாழ்ந்த குமரி நிலத்தில் இருந்து திராவிடர் வடக்காகவும், ஆஸ்திரேலியர் கிழக்காகவும், ஆப்பிரிக்கர் தென் மேற்காகவும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பிரிந்து விட்டனர்.**

**நீக்ரோய்த் மக்களின் பரவுதல்**



தொலைவும், கடல் பிரிவும் இவர்களிடம் பல ஒற்றுமைகள் இருந்தும் காலநீட்சி இடச் சூழலுக்கு ஏற்பச் சில வேற்றுமைகளும் இவர்கள் இடையே நேர்ந்து விட்டன. அந்த ஒரு சில வேற்றுமைகளை வைத்துக் கொண்டு இவர் வேறுவேறு இனத்தவர் எனக் கொள்வது பொருத்தமாகாது. இம்மூவரின் பொது மூதாதையர் வாழ்ந்த இடம் எதுவாகக் கூடும்? அவ்விடம் இன்றைய தென்னகமும் இல்லை; ஆப்பிரிக்காவும் இல்லை; ஆஸ்திரேலியாவும் இல்லை. ஆனால், இம்மூன்றும் சந்தித்த ஓர் இடமாக அது இருந்திருத்தல் வேண்டும். அந்த இடத்தின் பெயரையே பண்டைய தமிழர் 'குமரி' என்றனர். ஆப்பிரிக்கர் 'கொமுர்' என்றனர். ஆஸ்திரேயர் 'கொம்ரி' என்றனர்.

## 8.2. எகிப்தியச் சுருளேட்டில் பாம்பரசன் வரலாறு

எகிப்திய இயல் வல்லுநரான 'கொலனிஷேவ்' என்ற சோவித் அறிஞர் 1115 எண்ணுடைய எகிப்தியச் சுருளேடு ஒன்றுக்குப் புது விளக்கம் கண்டிருக்கிறார். இந்துமாக் கடலில் பயணம் செய்த எகிப்தியக் கப்பல் ஒன்று புயலில் சிக்குண்டு தவித்துக் கடலில் மூழ்குகிறது. அக் கப்பலில் இருந்து ஒருவன் மட்டும் தப்புகிறான். மூன்று நாள்கள் கழிகின்றன. தீவு ஒன்றில் கரையேறி அவன் தனியே சுற்றித் திரிகிறான். அத்தி, திராட்சை, வெங்காயம், பழவகைகள், காய்கறிகள், மீனினங்கள், பறவைகள் ஆகியவற்றைக் கண்டான். அத்தீவில் செல்வம் கொழித்தது. தீவின் அரசனான பாம்பைச் சந்தித்தான். பாம்பரசனுக்கு நீண்ட தாடி, பொன்னாடை, ஒளிவிடும்கரிய இரப்பை ஆகியன இருந்தன. பாம்பரசனிடம் தன் வரலாற்றை எடுத்துரைக்கிறான் எகிப்திய மாலுமி. வரலாற்றைக்கேட்ட பாம்பரசன் மாலுமியைப் பரிவோடு வரவேற்கிறான். நன்கு விருந்தோம்பி, ஆடைகள், தந்தங்கள், வாசனைத் திரவியங்கள் அனைத்தையும் பாம்பரசன் மாலுமிக்குப் பரிசுகளாகத் தருகிறான். விடைதரும் போது பாம்பரசன், இவ்விடமிருந்து நீங்கியதும் இந்நிலம் **உன் கண்களுக்குத் தோற்றமளிக்காது. காரணம் அது அலைகளாக மாறிவிடும்** என்று சொல்லி வழி அனுப்புகிறான்.* இங்குக்

* அலெகஸாந்தர் கோந்தரதோவ், 'மாககடல மர்மங்கள ப. 87'

குறிக்கப் பெறும் பாம்பரசன் கடலில் சிக்கிய கப்பல், கப்பலில் இருந்து தப்பிய ஒரே ஒருவன், பாம்பரசன் சந்திப்பு, பாம்பரசன் விருந்தோம்பல் ஆகியன மணிமேகலையில் இடம்பெற்றுள்ள சாதுவன் வரலாற்றை அப்படியே நினைவுபடுத்துகின்றன. பாம்பரசன் என்ற பெயரீடும், நிகழ்ச்சி நடந்த இடமாக இந்து மாக்கடல் குறிக்கப்படுவதும் தமிழ்இலக்கிய நாகர் வரலாற்றையும் எகிப்தியப் பாம்பரசன் வரலாற்றையும் ஒன்றோ என நினைக்க வைக்கின்றன.

## 8.3. மணிமேகலையில் இடம்பெற்றுள்ள சாதுவன் வரலாறு

ஆதிரை என்பாள் பூம்புகாரில் வாழ்ந்த பத்தினிப் பெண். அவளுடைய கணவனின் பெயர் சாதுவன். சாதுவன் தன் மனையாளை மறந்து பரத்தை ஒருத்தியின் 'பாவை' ஆனான். சேர்த்த பொருளை எல்லாம், பெண்ணோடு உறவாடியும், வட்டாடியும், சூதாடியும் தீர்த்தான். இதனால் அவன் ஏழையாகிவிடவே உற்ற உறவினரும் விட்டு விலகினர். பரத்தை மகளும் துரத்தி விட்டாள். வெளிநாட்டுக்குச் செல்லும் கப்பல் ஒன்றில் பயணஞ் செய்தான். வழியில் பெரும்புயல் அடித்தது. கப்பல் கவிழ்ந்தது, சாதுவன் தத்தளித்தான். பாய்மரத்தின் ஒடிந்த துண்டம் ஒன்றைப் பற்றி நாகர் வாழ் மலை என்ற தீவைச் சென்று சேர்ந்தான். அங்கு நிர்வாண மக்கள் வாழ்ந்தனர். ஒரு மர நிழலில் சாதுவன் களைப்பால் அயர்ந்து தூங்கி விட்டான். உள்ளூர் நாகர், உறங்கும் சாதுவனைக் கண்டனர். அவனை அடித்து உண்ண எண்ணினர். அவனை எழுப்பினர். சாதுவனோ நாகர் மொழி அறிந்திருந்தான். அம்மொழியிலேயே அவன் பேசினான். நாகர் மகிழ்ந்தனர். தம் தலைவனிடமும் அழைத்துச் சென்றனர். நாகர் தலைவன் இங்கு வந்த காரணம் என்ன என்று வினவினான். நடந்ததைச் சாதுவன் விளக்கினான். சாதுவன் மேல் பரிவுகொண்ட நாகரசன், பெண்ணும், கள்ளும் , இறைச்சியும் கொடுத்து விருந்தோம்பினான். அவற்றை நுகரச்சாதுவன் மறுத்தான். ஏன் என்று கேட்ட மன்னனுக்கு நல்லுரை புகன்றான் சாதுவன். பின்னர் நாகரசன் நிரம்ப பொருள்கள் சாதுவனுக்கு அளித்து வழியனுப்பி வைத்தான். மேற்கண்ட வரலாற்றை மணிமேகலை எடுத்துரைக்கிறது (ஆதிரை பிச்சையிட்ட காதை). எகிப்தியக் கப்பலோட்டி

யின் கதையும் சாதுவன் கதையும் இந்து மாக்கடலிலிருந்த 'நாகத் தீவு' ஒன்றை நினைவுபடுத்துகின்றன.

எகிப்திய மாலுமியிடம் பாம்பரசன் தான் தங்கியிருந்த நிலம் அவன் கண்ணுக்குத் தோற்றமளிக்காது என்று கூறுவதையும் குறிப்பாகத் தீவு அலைகளாக மாறிவிடும் என்று கூறுவதையும் ஆராயும் அறிஞர் பாம்பரசன் கூற்றுக்கு உரிய இடம் இந்துமாக்கடலில் மூழ்கிவிட்ட நிலமாகவோ, தீவாகவோ இருக்கலாம் என்பர். அவர் தம் ஊகம் சரியானது ஆகலாம் என்று உறுதி செய்ய இடம் தருகிறது மணிமேகலையில் வரும் ஒரு நிகழ்ச்சி.

'கடல் நடுவே நாக நாடு என்ற ஒன்று உள்ளது. அந்நாட்டு மன்னனின் பெயர் வளைவணன். அரசியின் பெயர் வாசமயிலை. இவர்களுக்கு எழிலான மகள் ஒருத்தி. அவள் பெயர் பீலிவளை. பீலிவளை, சோழ நாட்டுப் பூங்கா ஒன்றில் தனியாக உலாவிக் கொண்டிருந்தாள். சோழன் நெடுமுடிக் கிள்ளி அவளைக் கண்டு காதல் கொண்டான். ஒரு திங்களுக்கு மேலாக இருவரும் நெருங்கிப் பழகினர். தன்னைப் பற்றிய செய்திகளைச் சோழனிடம் சொல்லாமல் ஒரு நாள் பீலிவளை மறைந்து விட்டாள். நாகநாடு சென்ற பீலிவளை ஓர் அழகிய மகனை ஈன்றெடுத்தாள். மகனைத் தீவுக்கு வந்த தமிழ்நாட்டு வாணிகர்களிடம் கொடுத்துச் சோழனிடம் சேர்ப்பிக்குமாறு வேண்டினாள். ஆனால், திரும்பி வந்து கொண்டிருந்த வணிகர்களுடைய கப்பல் புயலில் சிக்கிச் சிதறியது. இச்செய்தி சோழன் காதில் எட்டியது. அதனால் மிக வருந்திய சோழன் இந்திர விழா கொண்டாட மறந்துப் போனான். இதற்கிடையில் சோழனின் தலைநகரம் கடலால் அழிந்து ஒழிந்தது.! மேற்கண்ட வரலாற்றை மணிமேகலை 24, 25, 29 ஆகிய காதைகள் தருகின்றன. இவ்விரண்டையும் சேர்த்து நினைக்கும் போது கடல்கோள் உண்மை உறுதியாகிறது.* அழிந்த நாகர் நாடு இன்றைய நாகப்பட்டினத்துக்குத் தென்கிழக்காக இருந்திருக்

* குமரிகுத் தெறகேயுளள பகுதியை அழித்த கடல கோள முன் னது; பூம்புகார்ப் பகுதியை அழிதத கடல் கோள் பினனது. இவ்விரண்டின் வேறு வேறு காலத்தை ஆயவதை விட, கடல கோள் உண்மை என்று நாட்டுவதே இநநூலின நோக்கம்

கலாம். குமரி என்ற மடகாசுகர், குமரோ தீவிகள், செய்சல், மால் தீவ், கொழும்பு, குமரி இவற்றை இணைத்த பகுதியுள் ஓரிடத்திலிருந்து திராவிட, ஆஸ்திரேலிய, ஆப்பிரிக்கருக்கு முதல்வரான பொது மூதாதையர் வாழ்ந்திருக்கலாம். அவர் வாழ்ந்த பகுதியில் கிழக்கு விரிவாக்கமே நாகர் நாடு. கடல்கோளுக்கு முன்பே இம்மக்கள் வேறுவேறு திசைக்குப் பிரிந்து சென்று விட்டனர். கடல்கோளின் பேரழிவையும் முழு அழிவையும் நேரே பார்த்தவர் தமிழர் ஆகலாம். எனவேதான் மக்களும் உயிரும் அழிந்த அவலச் செய்தியைத் தம் நினைவு ஏடுகளில் எழுதச் செய்து பின்வந்த சந்ததியினருக்குத் தந்தனர் போலும்.

கடலில் தென்புறத் தாக்குதலைப் பொறுக்கமுடியாமல் புது நாடு கண்டாக வேண்டும் என்ற காலக் கட்டாயத்தில் பாண்டிய மன்னர் வடக்கு நோக்கித் தம் அரசை விரிவுபடுத்த எண்ணினர்.



Kumari
Proto Dra, Afr & Australian
(PRODAA)

மலிதிரை ஊர்ந்து மண்கடல் வவ்வலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடு இடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கொண்டை
வலியினான் வணங்கிய வாடாச்சீர்த் தென்னவன்
- கலி. 104

எனவரும் கலித்தொகை, பாண்டியன், தான் இழந்த நாட்டிற்கு ஈடாகச் சோழ நாட்டையும் சேர நாட்டையும் தன் நாடுகளாக ஆக்கிக் கொண்டான் என்று கூறுகிறது. தமிழ் மன்னன் பாண்டியன் தெற்கிலிருந்து வடக்காகத் தன் நாட்டை விரிவடையச் செய்தான் என்பதை இந்தப் பகுதி மிகத் தெளிவாகக் காட்டுகிறது. இதற்கு மேலாக இன்னொருபடிமேலே போய்த் தென்திசை இழப்பை ஈடுசெய்ய வடதிசைக் கங்கையையும், இமயத்தையும் சேர்த்துக் கொண்டான் பாண்டியன் என்று சிலப்பதிகாரம் மொழிகிறது (11:20-21).

'பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடும் கடல்கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவ வாழி'
(சிலம்பு. காதை : 11)

தமிழர் தேவை கருதி தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பரவினர் என்பதை இப்பகுதி தெளிவுறக் கூறுகிறது.

### 8.4. சிந்துவெளி நாகரிகம்

சிந்துவெளி நாகரிகம் திராவிடருடையது என்று முடிவு செய்யப் பெறின் கி.மு. 2500ரைச் சேர்ந்த அந்நாகரிகத்தைப் படைத்துவிட்டு ஆரியர் தாக்குதலால் தென்புலம் போந்தனர். திராவிடத் தமிழர் என்பதை விடத் தென்புலத்திலிருந்து ஒரு கிளையினர் வடக்கு நோக்கிச் சென்று சிந்துவெளி நாகரிகம் போன்றவற்றை அமைத்துக் கொண்டனர் என்பதே பொருந்துவது.

மொகஞ்சதாரோவில் கிடைத்த மனித எலும்புக் கூடுகள் இருபத்திரண்டினை ஆராய்ந்ததில், ஒரு பகுதி எலும்புக் கூடுகள் தமிழக ஆதிச்ச நல்லூரில் கிடைத்தவற்றை ஒத்துள்ளன.*

* திரு. க.சி கமலையா, திராவிடாகளா ப 440, செந்தமிழ்ச செலவி, சூன் 81. ப 440).

தொடர்ந்து கடல் தரும் நில இழப்பையும் நீரிழப்பையும் தவிர்ப்பதற்காகத் திராவிடர் வடக்கு நோக்கி நகர்ந்தனர். பல காடுகளைக் கெடுத்து நாடாக்கினர். தமிழரசர்கள் காடு கெடுத்து நாடாக்கியதைத் தமிழர்கள் பெருமையாகப் பேசிய தற்கு இதுவே காரணம். கடம்பவனம் (மதுரை), தில்லைவனம் (சிதம்பரம்), ஆர்க்காடு முதலான ஊர்ப் பெயர்கள் 'காடு'என்ற சொல்லைத் தாங்கியிருப்பதற்கும் இதுவே காரணம். மன்னர்கள் காடு கெடுத்து நாடாக்கினர் என்று கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டதற்கும் இதுவே காரணம். தெற்கே நிகழ்ந்த குமரி ஆற்றின் இழப்பு வடதிசைக் கங்கையைக் கொள்வதற்குக் காரணமாயிற்று. தெற்கே நேர்ந்த குமரிமலை இழப்பு வடக்கே இமயத்தைக் கொள்வதற்குக் காரணம் ஆயிற்று.

## 8.5. சிந்துவெளிக்கு அப்பால்

தென்னகத் திராவிடப் பழங்குடியினரும் பொது மக்களும் சிறுசிறு கிளையாகத் தம் மொழி, பழக்க வழக்கப் பண்பாடு களுடன் வடஇந்தியாவில் பரவினர். எனவேதான், வட இந்தியாவில் திராவிடப் பழங்குடிகளும் அவர் தம் பழக்க வழக்கங்களும் இன்றும் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன. வடமேற்கு இந்தியாவுக்கு ஆரியர் வருகிற காலத்துக்கு முன் வரை வட இந்தியப் பகுதியினில் துண்டுதுண்டாகத் திராவிட ரும் திராவிடப் பழங்குடிகளும் சிதறிக் கிடந்தனர்.

சிந்துவெளிக்கு அப்பாலுள்ள ஆசியா மைனர், பாபி லோனியா, சுமேர், மெசபடோமியா, கிரேத், நடுநிலைக்கடலுக்கு வடக்கும் தெற்கும் உள்ள நாடுகளில் உருவான பண்டைய நாகரிகங்களில், ஆங்கே பேசப்படும் மொழிகளில் திராவிடத் தொடர்புகள் அமைந்துள்ளமை பல அறிஞர்களாலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இத்தொடர்புகள் எவ்வாறு நேர்ந்தன? இவை, மூன்று வகையாக நேர்ந்திருக்கலாம்.

1. மேற்கண்ட நாடுகளில் திராவிடப் பகுதிகளில் இருந்து கூட்டங்கூட்டமான குடிப்பெயர்ச்சி நிகழவில்லை; நிகழ்வதற் கான வாய்ப்பில்லை. ஆனால், திராவிடர் வணிகத்துறையில் மிகச் சிறந்து விளங்கினர். எனவே, வணிக நிமித்தம் திராவிடத் திலிருந்து மேற்கண்ட நாடுகளுக்குச் சென்ற வணிகர் தம்

மொழியையும் பழக்க வழக்கங்களையும் அந்தந்த நாடுகளில் அறிமுகப்படுத்தியிருக்கலாம்.

2. ரோம் , எகிப்து, மெசபடோமியா, பாபிலோனியா, பொனிசியா போன்ற இடங்களிலிருந்து வாணிகர்கள் தம் வாணிபம் நிமித்தமாகத் திராவிடத்திற்கு வந்தனர். அரிக்கமேடு போன்ற இடங்களில் நிலையாகத் தங்கினர். திராவிட மக்களோடு சேர்ந்து பழகும் இவர்களால் தத்தம் தாயகத்துக்குச் சொற்களும் பழக்க வழக்கங்களும் எடுத்துச் செல்லப்பட்டுப் பரவியிருக்கலாம்.

3. ஈரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களில் உள்ள நாடுகளிடையே சீன, அராபியப் பயணிகளும் வணிகர்களும் இணைப்புப் பாலமாகப் பல நூற்றாண்டாக இயங்கிக் கொண்டிருந்தனர். இவர்கள் வழி, ஓரிடத்தில் உள்ள சொற்கள், பழக்கவழக்கங்கள் ஆகியன வேறுவேறு இடங்களுக்குப் பரவி இருக்க வாய்ப்பு உண்டு.

மேற்கண்ட மூன்று வழிகளிலும் ஒரு மண்டலத்தில் வழங்கும் பொருளின் பெயர்களும், மக்களின் பழக்க வழக்கங்களும் பிறிதொரு பகுதியைச் சென்று அடைவது எளிதே. சில சமயத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வணிக மக்கள், கூட்டமாகப் பிறிதொரு நாட்டுக்குப் பயணஞ் செய்யும்போது ஆங்காங்கே சிறுசிறு குடியிருப்புகள் (Colony) ஏற்படுத்தப் பட்டன. தமிழகத்தில் அமைந்த ரோமக் குடியிருப்புகள், உலகெங்கும் அமைந்த போனீஷியக் குடியிருப்புகள் இத்தகையனவே. சுமேரின் 'ஊர்' என்ற பெயர் தாங்கிய தேக்குமரக் குடியிருப்புகள் திராவிடர்களால் தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம்; ஆனால், அயல்நாட்டார் குடியிருப்புகள் ஓர் அயல் நாட்டில் அமைவது மிக அரிதானதாகவே ஈரோப்பியக் குடியேற்றப் பெருக்கத்துக்கு முன்வரை இருந்தது. ஈரோப்பியர் வரவுக்கு முன்வரை வணிகக் குடியிருப்புகள் அரசியல் குடியிருப்புகளாகவோ, ஆதிக்கக் குடியிருப்புகளாகவோ ஆகவில்லை.




*K- Kumari Parent of D- Dravidians, Africans and Australians*

* குமரி அழிவிறகு முனபே மூவரும் பிரிந்து விடடனர் எனவே தான, இம்மூவினததாரிடமும் மொழி, உருவ, பழகக வழக்க ஒறறுமைகள உளளன
‡ மூவரின பொது மூதாதை '*குமரியர்*' ஆவா
※ மூவரில, காககேசிய (ஆரிய) மககளின முதல தாககுதலைப பெற்றவர் திராவிடரே இந்தியப பணபாடு. மறற இரணடு இனததாரிடஙகளை விட, இநதியாவில பேரொளி பெற்றமைககு இததாககுதல ஒரு காரணம.

## முதன்மை நூற்பட்டியல்


அப்பாதுரை. கா., தென்னாடு - மலர் நிலையம், 133, பிராட்வே, சென்னை-1. 1957

அலெக்ஸாந்தர் கோந்த்ரதோவ்,மாக்கடல் மர்மங்கள் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600098; 1981

அறவாணன் க. ப., செந்தமிழ் செனகால் செங்கோர், பாரி நிலையம், பிராட்வே, சென்னை-1977

______ திராவிட-ஆப்பிரிக்கர் (கட்டுரை) தென்மொழி, சென்னை 600005. மார்ச்- ஏப்பிரல் 1979

______ பனிமலையின் நெற்றியில் தமிழர் (கட்டுரை), தென்மொழி, சென்னை 600005, திசம்பர் - சனவரி 1979

______ சில புதிய, செய்திகளும் பார்வைகளும் (கட்டுரை), தென்மொழி, சென்னை 5 சூன்-சூலை 1979

______ அயல்நாட்டார் குறிப்புகளும் அருந்தமிழிலக்கியச் சான்று களும் (கட்டுரை), செந்தமிழ்ச் செல்வி பரல் 5, சென்னை-1. சனவரி 1978

______ புரட்சிப்பொறிகள், தமிழ்க் கோட்டம், புதுச்சேரி - 5; 1972

அன்தோனவா கொ.அ. (போன் காரத்லேவின் கி.ம. கத்தோவ்ஸ்கி கி.கி) இந்தியாவின் வரலாறு முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ 1979

இந்தியப்பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், பதின் மூன்றாவது கருத்தரங்கு, ஆய்வுக் கோவை (தொகுதி 3), இந்தியப் பல்கலைக்கழகத் தமிழ் ஆசிரியர் மன்ற வெளியீடு 1981

இன்னாசி சூ.,வீரமாமுனிவர் அருளிய சதுரகராதி,வீரமா முனிவர் ஆய்வுக் கழகம், தூய சவேரியர் கல்லூரி பாளையங் கோட்டை - 627002; 1979

இராகவன் வி.எஸ்.வி, மெகஸ்தனிஸ் (கி.மு.302-296), மணிவாசகர் நூலகம், 241 ,லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600 001; 1978

_____ பிளினி (கி.பி. 23-79), மணிவாசகர் நூலகம், 241, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை - 600001; 1977

இராகவையங்கார் ரா., தமிழ் வரலாறு, திருப்பனந்தாள் திருமட நிதிய, வெளியீடு, 1979

இராமன் கே. வி., தொல்லியல் ஆய்வுகள், சேகர் பதிப்பகம், 66, பெரியார் தெரு, எம்.ஜி. ஆர். நகர், சென்னை 600 083; 1977.

இலக்குமிரதன் பாரதி சோ, நமது சமுகம் (சமூக இயல்), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை; 1969.

இளங்குளம் குஞ்சன் பிள்ளை, பண்டைய கேரளம், தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராபட்ஸ் ரோடு, சென்னை 5; 1970

கமலையா க சி. ஆரியர்கள் (கட்டுரை), செந்தமிழ்ச்செல்வி பரல் 1,2, சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 600 001; 1981

_____ திராவிடர்கள் (கட்டுரை), செந்தமிழ்ச்செல்வி பரல் 10,11, சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 600 001; 1981

கனகசபை வி., ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-1; 1962

கன்னா கே. சி., அவர்கள் கண்ட இந்தியா- நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா புது தில்லி 1971

சாமிநாதையர் உ.வே., மணிமேகலை, புரசவாக்கம் வீனஸ் அச்சுக்கூடம், சென்னை, 1949

சண்முகசுந்தரன் க. வன்னியர் வரலாறு, பல்லவநாடு, தமிழ் மறைப்பள்ளி, 61, பஜனை கோயில் தெரு, சூளைமேடு, சென்னை 24; 1971

சிவகாமி வி. ஆரியர் ஆதி வரலாறும், பண்பாடும், கலைவாணி பிரிண்டிங் வர்க்ஸ்,ஜாவ்னா, ஸ்ரீலங்கா; 1976

தமிழ் வளர்ச்சிக் குழு தமிழ்நாட்டு வரலாறு, தமிழ்நாடு அரசு வெளியீடு; 1975

திருநாவுக்கரசு க. த. தமிழர் நாகரிக வரலாறு, தொல்காப்பியர் நூலகம், 202, ஜானிஜான் தெரு, சென்னை-14; 1962.

துரை அரங்கசாமி (மொ.அ.), சங்காலச் சிறப்புப் பெயர்கள், பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை - 1; 1960

தெய்வநாயகம் மு, திராவிட சமயம் (கட்டுரை), மெய்ப்பொருள் அச்சகம், சென்னை 600 023; பிப்ரவரி 1984

தேவ ஆசிர்வாதம் இரா., வேளாளர் யார்?, இராம தேவன் பதிப்பகம், 180, யாகப்பா நகர், தஞ்சாவூர் 7; 1981

தேவநேசன் பிள்ளை தா.வி., தமிழரின் உதயத்திற்கடுத்த சித்தாந்தங்கள், பாளையங்கோட்டை; 1945

தேவநேயன் ஞா., தமிழ் வரலாறு, நேசமணி பதிப்பகம்,ஆ 1135, 2 ஆம் மேற்குக் குறுக்குச் சாலை, காட்டுப்பாடி விரிவு, வா. ஆ. மாவட்டம்; 1967

——— திராவிடத் தாய், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-1; 1959.

——— தமிழனின் பிறந்தகம் (கட்டுரை), செந்தமிழ்ச் செல்வி பரல். 6, சென்னை-1; பிப்ரவரி 1981

நெஸ்தூர்ஹ், மனித இனங்கள், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ; 1974.

பிள்ளை கே. கே, தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை; 1972.

மல்லானா எம்.கே.ஏ, சேது முதல் சிந்துவரை (பூர்வ மனித இன ஆய்வு), பசுங்கதிர் பதிப்பகம், 43, முத்துமாரிச் செட்டித்தெரு, சென்னை-600 001, 1982

மோசஸ் பொன்னையா, நாடார் வரலாறு, அருள்நாதர் பதிப்பகம், 2, வைகை காலனி, அறிஞர் அண்ணாநகர், மதுரை - 625020; 1978

வானமாமலை நா., தமிழர் வரலாறும் பண்பாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பிலிட்) 6/30, மவுண்ட் ரோடு, சென்னை-2; 1966

Aravaanan K.P , Anthropological Studies on the Dravido -Africans, Paari Nilayam, Madras 103, 1980

——— Notable Negroid Elements in Dravidian India, Journal of Tamil Studies, International Institute of Tamil Studies Madras- 600 020;

______ Dravidians and Africans. Paari Nilayam, Madras 600101 1977

Arokiasawmi M, The Classical Age of the Tamils, University of Madras, Madras-5; 1967

Bahadur K P, Caste, Tribe Culture of India, (Vol 4) Karnataka Kerala & Tamil Nadu, Ess Publications, 483 124, Govind Lane, Ansari Road, New Delhi - 110002, 1978

Burrow T E. Emenean M B A., Dravidian Etymological Dictionary, Oxford University Press, Ely House London w 1, 1961

Chopra, Ravindran M Subraman, History of South India Vol 1 Ancient Period, S Chand Company Ltd, New Delhi 110055,

John Lewis, Anthropology Made Simple, W H Allen & Company, Essex Street, London W C 2, 1969

Joseph P, The Dravidian Problem in the South Indian Culture Complex, Orient Longman Ltd., Bombay-1;1972

Krishna Iyer L A Bala Ratnam L K Anthoropology in India Bharatiya Vidya Bhavan Champathy, Bombay - 7, 1961

Lahovary N, Dravidian Origins and the west Orient Longmans Ltd Bombay, 1963

Laurence Urdang, The Random House Dictionary of the English Language, Allied Publishers Pre Ltd, 15, Graham Rd, Ballard Estate Bombay 400001, 1975

Mahalingam N., Gems from Pre. historic Past, International society for the Investigation of Ancient Civilization, 31, Poes Garden, Madras 600 086, 1981

Majmudar D.N Madan T.N, An Introduction to Social Anthropology, Asia Publishing House, Bombay, 1970

Mahadevan Iravatham, Early Tamil Epigraphy, cre-A, The Dept of Sanskrit and Indian Studies, Harward University, U S A., 2003.

Nilakanta Sastri K.A, A History of south India, Oxford University Press, Ely House, London w. 1, 1966 Foreign Notices of Southern India.(Tamil Translation) 1939

Pannikkar K M , A History of Kerala (1498-1801), The Annamalai University, Annamalai Nagar, 1960

Ramachandra Dikshitar V R., Origin Spread of the Tamils, The South India Saiva Siddhanta works Publishing Society, Madras - 1, 1971.

Sarkar H , Monuments of Kerala, Archaelogical Survey of India, New Delhi, 1973

Sesha Iyengar T R , Dravidian India, Asian Educational Services, C2/ 15 S D A P O Box 4534New Delhi 110 016; 1982

Srinivasa Iyengar, P T , History of the Tamils, Asian Educational Services, C2/15 S D A P O Box 4534 New Delhi 116 016, 1983

Suniti Kumar Chatterji, Dravidian, Annamalai University, Annamalai Nagar, 1965

Thurston, Edgar and Castes Tribes of Southern, India vol. I, assisted by Rangachari, Cosmo Publications, Delhi, India, 1975

# பொருளடைவு


அகத்தியர் 131
அகரி ஆறு 35
அகழ்வாராய்ச்சி 72, 110, 124, 135
அசாந்தி 79
அசாம் 89
அசிரியன் 68
அசிரியா 160
அசுர் 127
அஞ்சியத்தை மகள் நாகையார் 132
அடிமை 125
அடியார்க்கு நல்லார் 58, 161
அத்திரம்பாக்கம் 135
அந்தமான் 137, 147, 164
அந்தோனியா மால்பந்த் 66
அநாச 63
அநுமான் 93
அபுசையத் 159
அம்மெய்யன் நாகனார் 132
அமிழ்ந்தோர் 19
அமிரான் 164
அமெரிக்கத்தொல் இயலார் 109
அயிரியாறு 23, 35
அயிரை 35, 162
அயோ 82
அயோத்தி 116
அர்ப்பஸாத் 153
அரச-புரோகிதர் 126
அரசஞ்சண்முகனார் 39
அரபிக்கடல் 101, 118
அரபுப்பயணி 158
அராபியர் 64
அராபியா 72
அரிக்கமேடு 73
அரிசி 117
அரியன் 59
அருஞ்சுரம் 31
அருவா நாடு 42, 133
அருவாளர் 37
அலெக்சாண்டர் 64, 77
அலெக்சாண்டிரியா 63
அலெக்சாந்தர் 129
கொந்தரதோவ் 145
அவந்தி சந்தரிகதை 21
அவாக் 119
அவுசா 82
அன்சா 156
ஆங்கிலேயர் 100
ஆசிய எதியோப்பியர் 168
ஆசியமைனர் 176
ஆசியா 58,90,177
ஆசுகோபோலோ 140
ஆஞ்சனேயன் 153
ஆடல் அழகி 95
ஆதனுங்கன் 34
ஆதி குரங்கு 146
ஆதிச்சநல்லூர் 76, 135,175
ஆதிசேடன் 81
ஆதிமனிதன் 164
ஆதிரை 172
ஆதிவேளமர் 147
ஆந்த்ரபி 145
ஆந்திரம் 42, 45
ஆப்கானிஸ்தான் 59, 111
ஆப்பிரிக்கா 63, 69, 90
ஆப்பிரிக்கர் 64, 165, 177
ஆயர் 85
ஆர்க்காடு 175
ஆரியர் 47, 52
ஆவி 90
ஆற்றுப்படை 96
ஆனந்த குமாரசாமி 116
ஆனைமலை 93
ஆஸ்த்ராலாய்ட் 95, 113
ஆஸ்திரேலியா 92, 164
ஆஸ்திரேலியர் 92
இக்பிராசு 89
இங்கிலிஷ் 20
இசுலாமியர் 65, 158
இடிந்த கரை 144
இடைக்கற்காலம் 108, 135

இண்டிகா 120
இதோபதேச கதை 93
இந்தியா 52, 129
இந்திய இயல் 122
இந்திர விழா 124
இந்துமாக்கடல் 139, 171
இந்தோனேசியா 90, 164
இந்தோ - சீனா 158
இபான்சேத் 156
இபோ 82
இமயமலை 113, 117, 127, 140
இயற்கை நாயனார் 54
இராசவழி 140, 159
இராமநாதபுரம் 39, 129
இராமானுசர் 26
இராமேஸ்வரம் 39
இராஜவழி 159
இராஜஸ்தான் 148
இரும்புக்காலம் 107
இருளர் 111, 152
இலக்கண விளக்கம் 44
இலங்கை 111, 133, 159, 164
இலாகூர் 121
இலெமூரியா 139
இளங்கோ 23, 79
இளநாகனார் 132
இளம்பூரணார் 57
இறையனார் களவியல் 57, 161
இனிசந்த நாகனார் 132
இஸ்ரேல் 58, 111
ஈசே 82
ஈட்டா 111
ஈதோ 82
ஈபிக் 82
ஈராக் 58
ஈரான் 58
ஈரோப்பியா 177
ஈரோப்பியர் 57, 69, 96, 114
உடல் இயல் 47
உத்தரமேரூர்க் கல்வெட்டு 84
உத்தரப்பிரதேசம் 95, 127
உதடுகள் 48
உப்பேர் நாகனார் 133
உயிரியல் 145
உரோம் 70
உலாப் 82
உறையூர் 123
ஊட்டி 112
ஊர் 76, 177
ஊராளி 62
ஊரே 82
எகிப்தியச் சுருளேடு 171
எகிப்தியர் 62, 132
எகிப்து 62, 72, 78, 108, 171, 126
எட்ரிசீ 64
எதியோப்பியா 153
எதியோப்பியர் 165, 168
எம திசை 119
எமனோ 44
எர்னசுடு எக்கல் 139
எருமை நன்னாடு 35
எருமை நாடு 34
எருமைக்குடநாடு 34
எருமையூர் 35
எருமை வெளி 35
எழுபன்றி நாகன் குமரனார் 132
எல்சுமதி 64
எலாமிட் 59
என்சா 82
எஸ்கிமோ 114
ஏமன் 64
ஏழ் தெங்கம் 163
ஏழ் மதுரை 163
ஏழு லிக் 159
ஒக்வே 82
ஒய்மான் நாடு 133
ஓரிசா 130, 148
ஒலக்சவ 157
ஓங்கி 62, 111
ஓமோசேப்பியன் 108
கங்கை 92, 116, 175
கச்சிப்பேட்டு நன்னாகையார் 132
கசித் 59
கசே 86, 87
கடம் 31
கடம்பவனம் 176

கடல்கோள் 161, 173
கடலனார் 37
கடைக் கற்காலம் 108, 135
கண்ணகி 91
கண்ணன் 85
கண்டோல் 120
கதங்கா 66
கபிலதேவர் 27
கபிலர் 161
கம்சன் 85
கம்பர் 23, 93
கரந்தை 74
கம்போச்சியா 158
கரிகாலன் 71, 124
கரிப்பூர் 121
கரியரா 97
கருங்கற்காலம் 108
கருநாடகம் 19
கல்வெட்டு 1
கலிங்கத்துப்பரணி 90
கலிங்கம் 39
கலித்தொகை 161, 175
கல்யாணி 159
கல்லணை 71, 124
கல்லாடனார் 24
கலிலி 78
கள்ளிக்கோட்டை 96
கள்ளில் ஆத்திரையனார் 24
களவர் கோமான் 32
கற்கருவி 63
கற்காநாடு 40
கன்னடம் 42, 44, 72
கன்னியாகுமரி 142
கனகசபை 39, 58
கனபர்த்தி 34
காக்கைப்பாடினியார் 23, 37
காகேசியர் 50, 169
காஞ்சிபுரம் 135
காட்எலியட் 139
காடர் 62, 111
காது வளர்த்தல் 135
காந்திமண்டபம் 142
கார்னிலியன்சும் 67
கார்கோடன் 133
கார்பெண்டாரியன் 99
காரி 161
கால்டுவெல் 43, 58
காலிபங்கன் 121
காளிதேவி 90
காவிரிபூம்பட்டினம் 123
காஷ்மீர் 121
கிரித் 59, 136
கிருட்டிணை ஆறு 31
கிரேக்கர் 63
கிரேத் 176
கிள்ளிவளவன் 127
கிறித்தவர் 141
கிறித்துவ மிஷினரி 100
கில்வா 66, 156
குசராத் 121, 130
குசைத் 68
குடகு 19
குடநாடு 36, 40
குடவோலை 84
குடிப்பெயர்வு 126, 176
குடுத் 130
குணதிசை 118
குணவேளமர் 147
கும்மியாட்டம் 83
குமர் 154
குமரி 45
குமரி ஆறு 143, 166
குமரிக் கண்டம் 57, 69, 139
குமரிக்கோடு 166
குமரியர் 178
குமரோ தீவு 174
குர்னை 157
குரங்குச் சிலை 70
குரூக் 109, 129
குறும்பர் 62
குழிசி 84
குவாட்சைத் 110
குவி 109, 130
குறுந்தொகை 30, 57
குறும்பர் 62
கூஉக் 100

கூடுரு 33
கூய்ப 109, 129, 130
கூர்ச்சரம் 40
கூர்சி 91
கூர்மாவதாரம் 93
கெர்வாசு 66
கென்யா 78
கேரளம் 23, 45, 131
கேழ்வரகு 136
கைக் கோடரி 63
கொங்காரி 166
கொச்சின் 39
கொடைக்கானல் 112
கொண்டல் 118
கொம் 156
கொம்ர் 156
கொம்ரி 154, 171
கொம்ரு 154
கொமர் 158
கொமர் தீவு 164
கொமரையா 154
கொமாரி 165
கொமுர் 171
கொமோர் 154
கொமோரோ 154
கொலனிஷேவ் 171
கொழும்பு 174
கோலாமி 130
கோலி அகம் 165
கோழி உருவம் 136
கோட்டாறு 40
கோட்டிஜிலோக்தால் 121
கோட்டுல் 96
கோண்டா 130
கோண்டி 130
கோண்டு 75
கோதுமை 113
கோந்க்ஸ் 95
கோந்த் 95
கோயம்புத்தூர் 39, 93
கோயா 130
கோல்ஸ் 95
கோலாட்டம் 83
கோவளம் 143
கோன்ஸ் 95
சகா 96
சகாரா 29, 75
சங்கரநமச்சிவாயர் 39
சஞ்சே யா கடி 76
சட்லெஜ் 117
சபேனிஸ் 65
சமஸ்கிருதம் 20, 136
சர்ப்பகா 131
சர்பில்லியம் டெரனர் 99
சல்லேகனா 73
சவுரர் 152
சா 154
சாஞ்ச் 62, 66
சாட்டர்சி 69
சாதி 94
சாதுவன் 172
சாமி 95
சாமுண்டேசுவரி 36
சாய்க்கடை 124
சானுடாரோ 121
சிகண்டியாசிரியர் 23
சிங்களவர் 117
சிசிளைச்சு 76
சித்தியா 58
சித்தியர் 79
சிந்து 20, 64, 96, 175
சிம்பாவ்வே 67
சிரியா 58, 110
சிலப்பதிகாரம் 114, 161, 175
சிவலிங்கம் 93
சிற்பம் 70
சிப்பு 93
சிலேட்டர் 69
சீதநாடு 42
சீர்காழி 153
சீராஸ் 59
சீலம் 117
சீன் வெர்குத்தர் 68
சீனா 97, 158
சுக்கூர் 121
சுகிடாச்சு காரியந்தா 64

சுமத்திரா 158, 164
சுமேரியா 60, 76, 108
சுமேரியர் 60
சூசியன் 59
சூடான் 90, 154
சூரியகுலம் 94
செங்கடல் 63
செங்கல்பட்டு 135
செட்டில் 147
செண்டினல் 62
செந்தமிழ்ச்செல்வி 175
செம்புக்காலம் 107, 136
செம்பொன்காலம் 110
செமாங்கு 111
செமிடிக் 59
செய்சல் 164
செர்வாசு மாத்யூ 76
செரிக்கோ 78
சென்னை மனை 82
செனகால் 156
செனாப் 117
சேம்பியா 66
சேரர் 94
சேலம் 39, 135
சைனா 67
சொபாலா 64
சோங்கே 86
சோங்கோமாரா 77
சோசு 70
சோடாநாகபுரி 128
சோடா 128
சோதிடர் 85
சோமாலி 75
சோழர் 92
சோழி 89
சோளம் 136
சோவியத் 122
சோனி அலி பேர் 86
ஞாயிறு 94
டிரிம்லே 59
டேக்தாவூர் 157
டைகிரிஸ் 59
தங்கனிகா 67, 76, 78
தசை 151
தட்சகர் 131
தப்பிரபானை 165
தம்பழ 21
தம்பளு 21
தம்மில் மொழி 20
தமிரிக்கா 21
தமிரிகே 21
தமிரிசி 21
தமிழ்ச் சங்கம் 146
தமிழ் பிராமி கல்வெட்டு 109, 137
தமிழ்நாட்டு எல்லை 23
தமிழ 21
தமுணா 21
தமுளு 21
தமோலிக்கா 21
தர்ம சூத்திரம் 97
தர்ஸ்டன் 115
தரோபிரியண்டர் 96
தலஜு 150
தலைகற்காலம் 108
தலைச்சேரி 136
தலைவேட்டை 89
தன்சானியா 72
தாக்கூர் 148
தாமசு ஓல் டர்னசு 140
தாமிழி 137
தாமிரபரணி 117
தாய் தெய்வ வழிபாடு 79
தாயங் கண்ணனார் 24
தாரா 82
தாழ்த்த வந்தார் 131
தாழி 72, 136
தாலமி 71,165
திசான்பெண்ணு 129
திபேத் 58
திரமிட 20
திரமிலர் 21
திரமிள 20
திராவிடர் 47
திருச்சி 39, 60
திருநெல்வேலி 39,129, 135

திருப்பதி 26
திருமங்கலம் 135
திருமால் 71
திருவள்ளுவர் 77
திருவாங்கூர் 39
திராவிடக் கடவுள் 85
திரையன் 33
திரையர்குடி 149
தில்லைவனம் 175
திஸ்ஸாராஜா 159
தீர்த்தங்கரர் 73
திருநான்சிம் 159
துங்கபத்திரை 31
துட்டக்காமினி 159
துயாரேக் 89
துவாபரயுகம் 159
துளுவர் 21
துளுமொழி 42
தெல்லிசேரி 130
தெர்மலை 59
தெலுங்கு 42, 147
தெவத்தா 158
தென்ஆப்பிரிக்கா 164
தென் கருநாடகம் 80
தென்கிழக்கு ஆசியா 145
தென்கிழக்கு ஆப்பிரிக்கா 65
தென்புலத்தார் 120, 163
தென்னை 120
தேசிய விநாயகம் பிள்ளை 80
தேவகி 85
தேவநாகரி 134
தேவனேயப் பாவாணர் 127
தைமூர் 92
தொண்டை நாடு 38
தொண்டைமான் 131
தொபில் 21
தொல்காப்பியம் 114
தொல்காப்பியர் 29, 86
தோடர் 44, 61
நக்கிரனார் 24
நச்சினார்க்கினியர் 25, 28
நடுகல் 73
நடுநிலக்கடல் 61
நடுவண் ஐந்திணை 29
நபதா 68
நம்பூதிரி 54, 78
நர்மதை 52
நரந்தை 24
நல்லியக்கோடன் 133
நற்றிணை 136
நன்னாகனார் 132
நன்னாகையார் 132
நன்னீர் ஊற்று 143
நன்னூல் 44
நாகக்கன்னி 93
நாககாவு 81
நாகதீவு 133, 173
நாகதோசம் 94
நாகப்பட்டினம் 81, 133
நாகபுரி 134
நாகம் 94
நாகம்போத்தன் 172
நாகர் 90, 131, 172
நாகர்கோயில் 133
நாகரம்மன் 133
நாக வழிபாடு 80
நாகா 134
நாகாலந்த் 134
நாயகி 130
நாயர் திருமணமுறை 53
நார்த் அய்லாண்டு 100
நாலாயிரத் திவ்விய பிரபந்தம் 45
நாலைகிழவன் நாகன் 133
நியார்கசு 76
நியார்சு 64, 77
நியூகினி 164
நியூசிலாந்து 100
நீக்ராய்த் 62, 92, 167
நீக்ரிட்டோ 93
நீக்ரோ 50
நீக்ரோ ஆஸ்திரேயர் 47, 167
நீலகண்ட சாஸ்திரி 61
நீலகிரி 39, 61
நீமலை 42
நுங்கராயன் 34
நுங்கதேவ மகாராயன் 34

நூபியன் 68, 154
நெல் 136
நெல்லூர் 34
நெஸ்தூர்ஹ் 51, 97
நேபாளம் 129, 150
நேமிநாதம் 44
நேவர் 150
நைசீரியா 90
ந்- ஆம் 79
பஃறுளி 143, 165
பஞ்ச தந்திர கதை 93
பஞ்ச திராவிடம் 62
பசிபிக் தீவுகள் 147
பட்டக்ஸ் 158
பட்டினப்பாலை 124
படிநாயிறு 120
படைப்பின் வரலாறு 139
பண்டையர் 166
பணியர் 62
பத்துப்பாட்டு 133
பதிற்றுப்பத்து 136
பர்கோ 87
பர்மா 69, 147
பர்ஜி 130
பரிபாடல் 123
பருத்தித் துணி 136
பலயோகோனாய் 166
பலவேர் 84
பலுசிஸ்தான் 130
பவத்திரி 33
பழங்கற்காலம் 108, 136
பழையர் 166
பன்றி நாடு 40
பாகிஸ்தான் 110, 129
பாசில் டேவிட்சன் 66, 69
பாடலி 116
பாண்டிய 128
பாண்டியன் 91
பாண்டி நாடு 40
பாண்டு 66
பாப்புவான் 94
பாபிலோனியா 176
பாம்படம் 134
பாம்பரசன் 171
பாம்பன் துள்ளல் 95
பார்லி 113
பாரதியார் 23
பாலஸ்தீன் 58
பாலாறு 110
பாளையம் 20
பாஸ்க்மொழி 62
பிசிராந்தை 166
பிராகிரி 130
பிராக்கிருதம் 20
பிராகுவி 109, 130
பிரிட்டன் 76
பிரெஞ்சு 86
பிரேனியர் பாசுக் 80
பில்மக்கள் 148
பிளினி 38, 71, 165
பின்னிஷ் 122,
பிஜித் தீவு 158
பிக்கிங் 108
பிகார் 109
பீர் முகம்மது 144
பீலிவளை 131, 173
புது கற்காலம் 108, 136
புதுக்கோட்டை 98
புதுச்சேரி 73
புல்லி 32
புல்லுவர் 94
புலாணி 68
புலார் 82
புளுக 147
புளோராசா 68
புற்றம்மன் 81
புறநானூறு 136, 162, 166
புனல் நாடு 40
புஷ்மேன் `97
பூதத்தாழ்வார் 26
பூம்புகார் 172
பூமராங் 98
பூழி நாடு 40
பெண்ணையாறு 42
பெர்மிங்காம் 69
பெரிபுளுசு 64, 71, 166

பெரும்பாணாற்றுப்படை 131
பெரும்பேயர் 136
பெஸ்வா 156
பெஸ்போலிஸ் 60
பேர் பேர் 80
பைபிள் 111
பையம்பள்ளி 135
பொய்கையாழ்வார் 26
பொன்நாகன் 132
போண்டோ 128
போமான் 72
போர்னுபகர் எஸ்மூ 154
போலிகர் 98
போனிஷியா 177
மக்கள் தாயமுறை 53
மகதா 154
மகரமீன் 93
மகாராட்டிரம் 40, 130
மகாவம்சம் 140, 159
மகாவீரர் வர்த்தமானர் 135
மகிஷன் 35
மகிஷாசுரமர்த்தினி 35
மங்கல திசை 28
மங்கோலாய்த் 169
மங்கோலிய 51
மச்சாவதாரம் 93
மதூதி 66
மடகா 156
மடகாசுகர் 73, 154, 164, 174
மடைப்பள்ளி 60
மண்டை ஓடுகள் 49, 99
மணல் திட்டை 143
மணிமேகலை 81, 166, 172
மத்திய பிரேதசம் 130
மதகுரு 125
மதச் சடங்கு 125
மதுரா 85
மதுராபுரி 86
மதுரை 129, 135
மதுரைக் கணக்காயனார் 24
மயிலைநாதர் 39
மருமக்கள் தாயம் 53, 79, 86
மருமக்கள் வழிமான்மியம் 80
மல்பான்ட் 72
மலாடு 40
மலேசியா 69, 89
மலையாளம் 39, 45
மலைவேடர் 93
மாக்கடல் மர்மங்கள் 171
மாங்குளம் 109
மாசாத்துவான் 26
மாடல மறையோன் 26
மாதம்பை 159
மாம்கும்பா பாங் 157
மாமூலனார் 24
மாயயூத் 76
மாயோன் 87
மார்கோ போலோ 168
மார்ச் குண்டு 128
மால்டிம் 164
மால்டோ 109, 130
மால்தீவ் 174
மாவண்புல்லி 31
மிசோவா 74
மீன்கொடி 127
மீன் சின்னம் 90
முக்குவர் 19
முட்டம் 142
முண்டா 95
முதுமக்கள் தாழி 135
முருகன் 26, 80, 112
முருங்கு 80
முல்லைக் குறும்பர் 62
முன்பல் உடைத்தல் 93
மூக்கு அமைப்பு 47
மெகிசிபா 165
மெகஸ்தனீஸ் 166
மெசபடோமியா 75, 176
மெறோ 68, 71
மேத்யூ 67
மேலனேஷியா 96
மேலுகா 62
மேற்கு ஆசியா 58
மேற்கு ஆப்பிரிக்கா 89
மொகஞ்சதாரோ 109, 121, 175
மொகயத்தின்பக்சுஉஸ் 100

மொம்பசா 72, 76
மௌபசா 156
யசோதை 87
யட்சகானம் 90
யமுனா 116
யாபு 156
யுவான்சுவாங் 21
யூட்ரடீச 59
யேலனேசியா 89
யொரூபா 82, 157
யோவான் இவான்சு 139
ரவி 117
ரிக்வேதம் 52
ரிச்சர்டு ஆந்திரே 160
ரெசினால்டு 120
ரெய்னர் கிரிப்பித் 68
ரோம் 177
லார்வா 111
லாவாகோரி 69
லாவோரி 61
லிசியர் 59
வங்காளம் 147
வச்சிரநந்தி 21
வட ஆற்காடு 135
வட இந்தியா 58, 131
வட எல்லை 23
வடமதுரை 135
வடக்கு ஈரான் 78
வட வேங்கடம் 23
வடுவர் 30
வம்சம் 47
வராக அவதாரம் 93
வலிஸ்உண்டஸ் 165
வளரி 98
வழுதுணங்காய் 92
வாசுகோடகாமா 63, 72, 96
வார்லினி 66
வாரம் முங்கா 94
வாஸ்டியா 140
வாலிலோவ் 120
வானியலாளர் 31
விக்கிரமசோழன் உலா 131
விக்டோரியா 63
விநாயகர் 93
விரிச்சியூர் நன்னாகனார் 133
வில் 127
விவேகானந்தர் பாறை 43
வீரசோழியம் 44
வீரன்சாமி 74
வெட்சி 74
வெட்டர் 92, 111
வெண்கலக் காலம் 107
வெண்கலப்படிமம் 70
வெள்ளைக்குடி நாகனார் 133
வேகுஞ்சுரம் 30
வேங்கடம் 23
வேங்கடவரை 29
வேணாடு 40
வேதம் 20
வேளமர் 147
வேற்றான் 52
வேனிற்காலம் 113
வையை 123
ஜம்முகாஷ்மீர் 121
ஜாதகக் கதை 93
ஜாரவா 62
ஜாவா 108
ஜிப்ஸ்லாந்து 157
ஜோகன்ரியம் 160
ஜோதிராப் 129
ஷாம் 153
ஸ்பெயின் 97
ஹெய்மண்டர்ப் 108
ஹெரோடெட்டஸ் 164

# தமிழர் பிறந்தகம்



க.ப.அறவாணன்